


# பெருந்தகை மு.வ.

கழக வெளியீடு

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# பெருந்தகை மு. வ

டாக்டர் சி பாலசுப்பிரமணியன்
எம் ஏ, எம் லிட், பிஎச் டி

© சின்னசாமி பாலசுப்பிரமணியன் (1985)

1976 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

கிளைகள் :

திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
கும்பகோணம் திருச்சிராப்பள்ளி-2

கழக வெளியீடு : ககOO

முதற்பதிப்பு : ஏப்பிரல் 1976

O31, 6N12w
N76

PERUNTHAGAI MU VA

அப்பர் அச்சகம், சென்னை-600 001. (I/6)

# அணிந்துரை

பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு, எம்.ஏ., பி.டி.,

துணைவேந்தர், மதுரைப் பல்கலைக்கழகம்

'வரலாறு' மனித முன்னேற்றத்திற்குப் படிப்பினை யாகும் தகுதி உடையது. அதிலும் 'வாழ்க்கை வரலாறு' முறைப்படி எழுதப்படுமானால், மனித இன வளர்ச்சிக்கு வழிகாட்டும் சிறப்பினைப் பெறும். கற்பனையில் முகிழ்க்கும் கதைகளைவிட, உண்மைகளில் மலரும் 'வாழ்க்கை வரலாறு' வாழ்க்கை அனுபவங்களை நேரடியாக உதவி, மனிதனை நல்வழிப்படுத்தும் ஆற்றலுடையதாகிறது.

ஆங்கிலத்தில் பேரறிஞர் பாஸ்வெல் எழுதிய டாக்டர் ஜான்சனின் 'வாழ்க்கை வரலாறு' ஒப்புயர்வற்றது; மிகப் பெரியது. காந்தியடிகள் படைத்துதவிய 'தன் வரலாறு' ஈடிணையற்றது; ஒளிமயமானது.

இவ்வகையில் மக்களனைவரும் எடுத்துக் காட்டாகக் கொள்ளக்கூடிய அரிய பல திறன்களும் பண்புகளும் படைத்த டாக்டர் மு. வ. அவர்களின் வாழ்க்கை வரலாறு இந்நூல் வடிவில் வெளிவருகிறது. மு. வ. அவர்களுடன் மாணவராகவும், உடனாசிரியராகவும், அணுக்கமாய், உட னுறை வாழ்வு பெற்றவர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியம். அவர் இந்நூலினைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் யாத்துத் தந்திருத்தல் போற்றுதற் குரியதாகும். ''நம்மைப் பார்த்துப் பிறர் கற்குமாறு, நாம் ஒரு நூலகம்போல் பயன் படுவோம்'' என்பது மு.வ. வின் திருவாக்கு. அதற்கேற்ப இந்நூல் எளிமையும் அருமையும் பொருந்தச் செப்பமாய் அமைந்து, அனைவரும் கற்றுப் பெருமையுறுமாறு, நன்கு எழுதப்பெற்றுள்ளது. 'பெருந்தகைமை பெருந்தகை

மையைத் தூண்டும்' (Nobleness Enkindleth Nobleness) என்பர் மேனாட்டுக் கவிஞர். அதேபோல், தாமும் பெருந்தகைமையுடன் வாழ்ந்து, பிறரையும் அவ்வாறு வாழத்தூண்டிய சான்றோர் மு.வ. அவர்தம் வரலாற்றினை இளமை தொட்டு இறுதிவரை பத்துத் தலைப்புகளில் இந் நூல் விளக்குகிறது. அவரது நாட்காலைக் கடனாற்றும் பழக்க வழக்கங்கள், அயரா உழைப்பு, எழுத்தாற்றல், இயற்கை மருத்துவப்பற்று, தெளிவுடைமை, கண்டிப்பு எல்லாமே செவ்வனம் தீட்டப்பட்டுள்ளன. பின்னிணைப் பாக மு.வ. வின் சில கடிதங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

ஒரு பெருந்தகையாளரைப் பற்றி எழுதுகிற நினை வோடு இந் நூலில் நிகழ்ச்சிகள் விவரிக்கப்பட்டுள்ளன. அகல் விளக்காய்த் தோன்றிக் குன்றின்மேலிட்ட விளக்காய்த் திகழ்ந்த 'ஒளிவளர் விளக்கா'கிய மு. வ. வின் பொலிவினை நினைவூட்டும் மொழிநடையும், கருத் தோட்டமும் இந் நூலினை அணிசெய்கின்றன. யாண்டும் மிகைபடக் கூறலுக்கு இடமளிக்கவில்லை. எளிமையின் ஏற்றம், படிப்பின் உயர்வு; உழைப்பின் உறுதி, கலைஞனின் ஆற்றல், பண்பாளரின் சான்றாண்மை என இவை இந் நூலைப் படித்து முடித்ததும் நம் நெஞ்சில் நின்று ஒளி வீசு கின்றன. டாக்டர் மு. வ. அவர்களின் நூல்களைப் பெரிதும் வரவேற்று மகிழ்ந்த தமிழகம், அவரது வாழ்வையே படிப் பினைக்கேற்ற நூலாக்கித் தரும் இதனையும் ஏற்றுப் போற்றும் என்பது உறுதி.

# பதிப்புரை

பேராசிரியப் பெருந்தகை மு. வ. அவர்கள் இந்த நூற்றூண்டின் இணையற்ற செம்மலாய் விளங்கியவர். தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்கும் தமிழ்மொழியும் தமிழர் இனமும் தழைத்தோங்குவதற்கும் மட்டுமன்றி மக்கள் இனத்துக்கும் வழிகாட்டிய பேரறிஞர் என்று அவரைக் கூறின் மிகையாகாது.

சிற்றூரிற் பிறந்து படிப்படியாக வளர்ந்து தமிழ்த்துறைப் பேராசிரியராக விளங்கியவர். மதுரைப் பல்கலைக்கழகத் துணை வேந்தராய் அமர்ந்து யாவரும் பாராட்டும் வண்ணம் செய்ய வேண்டிய பணிகளனைத்தும் செம்மையுறச் செய்து புகழ் பெற்றவர். இயற்கையறிவின் துணை கொண்டு கலைத்துறைகள் பல வற்றிலும் தேர்ச்சியும் தெளிவும் பெற்று விளங்கினர். அவர் எழுதியுள்ள நூல்கள் அனைத்தும் பல நூற்றூண்டுகள் நிலை பெற்று நின்று மக்களுக்குப் பயன்படுவதோடு அவர் புகழை வளர்த்து விளங்கும்.

திருவள்ளுவர், காந்தியடிகள், தாயுமானவர், மணிவாசகர், இராமதீர்த்தர், திரு. வி. க. முதலிய பெரியோர்களின் நூல்களைக் கற்றதோடு அவர் கருத்துரைகளைத் தம் வாழ்க்கையில் கடைப் பிடித்து வாழ்ந்தார். அவருடைய வரலாறு இக்கால மக்களுக்கு மட்டுமன்றி வருங்காலத் தமிழ் மக்களுக்கும் மிக்க பயன் தருவதாகும்.

இத்தகைய சிறந்த வரலாற்று நூலைப் ''பெருந்தகை மு. வ.''—என்னும் பெயரமைத்து எழுதி உதவிய தமிழ்ப் பேரறிஞர் டாக்டர். சி. பாலசுப்பிரமணியம் M.A., M. Litt., Ph. D. அவர்கட்கும் இந்நூலை உருவாக்குவதில் அவர்கட்கு உறுதுணையாயிருந்து செம்மைப்படுத்திக் கொடுத்த புலவர் இரா. இளங்குமரன் அவர்கட்கும் கழகத்தின் நன்றியுரியதாகும்.

## பெருந்தகை மு. வ.

பெருந்தகை மு.வ. அவர்கள் அணிசெய்த அதே மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக இன்று பதவியிலிருக்கும் பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு, M.A., B.T அவர்கள் இந் நூலுக்குச் சீரிய அணிந்துரை வழங்கியுள்ளமை சாலப் பொருத்த முடைத்தாகும். அன்னாருக்கும் எமது மகிழ்ச்சியையும் உளமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந் நூல் தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் பயன் படும்படி செய்ய நூலகத் தலைவர்களும், பள்ளி, கல்லூரிகளின் தலைவர்களும் ஆவன செய்யுமாறு வேண்டுகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்

# முன்னுரை

"வாழ்க்கை மிகப்பெரிய கலை. அதில் தேர்தல் கடமை. வாழத் தெரிந்தவர்களாக விளங்குதலே சமுதாயத்திற்கு நாம் செய்யத்தக்க நல்ல தொண்டு; எப்படி எனின் நம்மைப் பார்த்துப் பிறர் கற்குமாறு, நாம் ஒரு நூலாகப் பயன்படுவோம்".

இவ்வாறு டாக்டர் மு. வ. அவர்கள் என் அருமை நண்பர் திரு. ஈ. ச. விசுவநாதன் அவர்களுக்கு 14-10-1959 இல் கடிதம் எழுதியுள்ளார்கள்.

இவ் வகையில் டாக்டர் மு. வ. அவர்கள் எளிய குடியில் பிறந்தார்கள்; உயரிய எண்ணங்கொண்டு எளிய வாழ்வு வாழ்ந்தார்கள். உழவர் மைந்தராகப் பிறந்த அவர்கள் படிப்படியே உயர்ந்து பல்கலைக் கழகத் துணைவேந்தராக விளங்கினார்கள். கல்லூரியில் பயில வாய்ப்பில்லாத அவர்கள் அமெரிக்க நாடும் அன்போடு அழைத்து 'டி. லிட்' பட்டம் வழங்கும் தகுதியினைப் பெற்றார்கள். இளமையில் 'யாப்பருங்கலக்காரிகை' என்னும் நூலினை வாங்கிப் படிக்க இயலாத மு. வ. தம் வாழ்நாளில் எண்பதிற்கும் மேற்பட்ட நூல்களை எழுதித் தமிழ் கூறு நல்லுலகிற்குத் தலையாய தொண்டாற்றினார்கள். இந் நூற்றாண்டில் எழுத்துப் பணியால் பொருளும் புகழும் ஒருங்கே சேர்த்த தனிப்பெருந் தகவுடையோராய்த் திகழ்ந்தார்கள். தமிழுக்கு 'மு. வ.' என்று இரண்டே எழுத்துகளில் உரிமை பாராட்டி, அவர்களைத் தமிழகம் அன்போடும மதிப்போடும் அழைத்து மகிழ்ந்தது.

டாக்டர் மு. வரதராசனார் விழுமிய வாழ்வு வாழ்ந்தவர். 'சான்றாண்மைக்கு ஆழி' என விளங்கியவர்; ஊழிபெயரினும் தாம் பெயராக் குறிக்கோள் நெறியினர். அவர்தம் வாழ்வு பிறர்க்கு வழிகாட்டும் பெருமை மிக்கது எனவே அவர்தம் வாழ்க்கை வரலாற்றினை நூலாக எழுத முற்பட்டேன்.

என் வணக்கத்திற்குரிய ஆசிரியப் பெருந்தகை உயிரோடு இத் திருவிடத்தில் உலவிய காலத்திலேயே அவர் வாழ்க்கை வரலாற்றினை வடிக்க வேண்டுமென்று எண்ணினேன். ஆனால், அடக்கத்திற்கு இருப்பிடமான அவர்கள், கரை புரண்டோடும் பேராற்றின் சின்னஞ்சிறு நீர்த்திவலை போன்றதே தம் வாழ்வு எனக் கூறித் தம் வாழ்க்கை வரலாற்றினை எழுதவேண்டா என மறுத்து வந்தனர்.

1961ஆம் ஆண்டில் அவர்கள் பச்சையப்பர் கல்லூரிப் பணியினை விடுத்துச் சென்னைப் பல்கலைக் கழகப் பணியினை மேற்கொண்டு சென்றபோது அருமைப் பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் கட்டளைப்படி, பச்சையப்பர் கல்லூரி மலரில் 'உழைப்பால் உயர்ந்த உத்தமர்' என்ற தலைப்பில் அவர் தம் வாழ்க்கை வரலாற்றினைச் சுருக்கமாக ஒருவாறு எழுதியிருந்தேன். அதனை அவர்கள் படித்துப் பார்த்தார்களோ இல்லையோ யானறியேன்.

நில்லாமையினையே நிலையாகவுடைய இவ்வுலகியல்பினைக் காட்டி, மன்னுவுலகத்து மன்னுதல் வேண்டித் தம் புகழ் நிறுவித் தலைசாய்ந்த தமிழ்த்தாயின் தலைமகனார் வாழ்க்கையினை யான் வடித்துத் தரவேண்டுமென்று திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் பெரியவர் தாமரைச் செல்வர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள் விரும்பினார்கள். தம் மருகரும் என் உடன்பயின்ற நண்பருமான திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களை அனுப்பி இப் பணியினை மேற்கொள்ள வேண்டும் என்றார்கள். முதலில் யான் முற்றிலும் தயங்கினேன். என் வாழ்விற்கு உற்ற துணையாகவும், என்னை நெறிப்படுத்திய சான்றோராகவும், ஒப்பற்ற வழிகாட்டியாகவும் ஒருங்கே திகழ்ந்த அவர்கள் மறைந்து இரண்டு மூன்று நாள்களே அப்போது ஆகியிருந்தன. ஆனால், பேராசிரியர் மு. வ. அவர்கள் குடும்பத்தினர் குறிப்பாக அவர்தம் மூத்த மகனார் டாக்டர் அரசு இப் பணியினை என்னை ஏற்குமாறு கூறினர். என் துறைத் தலைவரும் எனக்கு ஆதரவு காட்டிவரும் அருந்திறற் பேராசிரியருமான செந்தமிழ் இலக்கியச் செம்மல்

நூலறி புலவர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களும் இப் பணியினை யான் ஒருவனே சிறப்புறச் செய்து முடிக்க இயலும் என்று வற்புறுத்தினர்கள். எனவே இப் பணியினை ஏற்றேன்.

நூலினைத் திருத்தமுறப் பதிப்பிப்பதில் தமிழன்பர் திருநகர்ப் புலவர் திரு. இரா. இளங்குமரன் அவர்கள் துணை நின்ருர். அவர்தம் பணி, உற்றவிடத்து உற்ற காலத்து உதவிய சால்புடைச் செயலாகும். அவர்களுக்கு நன்றி.

இந் நூல் உருவாவதற்கு மு. வ. அவர்களின் இளமைக் கால நிகழ்ச்சிகளைக் கூறிய அவர்தம் தமக்கையார் வேலம் ராஜாம்பாள் அவர்களுக்கும், திருப்பத்தூர் வாழ்க்கையினை வகையுறக் கூறிய அண்ணன் திரு. கா. அ. ச. ரகுநாயகன்; M. A. அவர்களுக்கும், மதுரை வாழ்க்கையினை வகையுறச் சொன்ன துணைவேந்தரவர்களின் நேர்முகச் செயலர் திரு. ஆர். ஆர். சத்தியமூர்த்தி B.A., அவர்களுக்கும், பெரும் பகுதி வாழ்க்கைச் செய்திகளைக் கண்ணீருடன் சொன்ன, அப்பா அவர்களுடன் உடனுறை வாழ்க்கைப் பேறு பெற்ற ராதா அம்மையார் அவர்களுக்கும் என் நன்றி உரியதாகும்.

இந் நூல் எழுத இசைவு வழங்கிய சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னுள் துணைவேந்தரும், சிற்றூர்ச் சிருரும் சீரிய உயர் கல்வி கற்கத் துணை நின்றவருமான கல்வி நெறிக் காவலர் தாமரைச் செல்வர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர் களுக்கும், சீர்சால் ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கும் என் நன்றி உரியது.

இறுதியாக - ஆனுல் முதன்மையாக - இந் நூலினைப் பதிப்பித்து வெளியிடும் திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்க்கு என் உளம் நிறைந்த நன்றியினை உரிமையாக்குகின்றேன்.

தமிழகம்
சென்னை
25—4—76

சி. பாலசுப்பிரமணியன்

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தோற்றுவாய் | 1 |
| 2. | முன்னோர்கள் | 6 |
| 3. | இளமையும் கல்வியும் | 17 |
| 4. | வேலம் தந்த பெருவாழ்வு | 27 |
| 5. | திருப்பத்தூர் சேர்த்த திரு | 33 |
| 6. | ஒளிவளர் விளக்கு | 47 |
| 7. | சென்னை வாழ்க்கை | 57 |
| 8. | துணைவேந்தர் | 136 |
| 9. | வெளிநாட்டுச் செலவுகள் | 151 |
| 10. | பெரும் பிரிவு | 161 |
| 11. | பின்னிணைப்பு | 170 |

# பெருந்தகை மு. வ.

## 1. தோற்றுவாய்

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்பது பொருள்பொதிந்த பொன்மொழி; செந்தமிழ்ச் சான்றோர் சீருற ஆய்ந்து கண்ட செம்மொழி.

உலகம் இடையறவுபடாது இயங்குவதற்குரிய அடிப் படையை, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்த, கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதி என்னும் பாண்டிய மன்னன் எண்ணிப் பார்த்தான்.

"உயிர் வளர்க்கும் அமுதமே கிடைப்பது எனினும் இனிமையானது என்று தாமே உண்ணாதவராகவும், எவரையும் வெறுக்காதவராகவும், சோர்வு இல்லாதவராகவும், சான்றோர் அஞ்சத் தக்கனவற்றுக்கு அஞ்சுபவராகவும், புகழ் வருமாயின் தம் உயிரையும் கொடுப்பவராகவும், பழி வருமாயின் இவ்வுலகம் முழுமையுமே பெறுவதாயினும் கொள்ளாதவராகவும், செய்த செயலைப் பின்னே எண்ணி வருந்தாத செயல்மாண்பினராகவும், தமக்கென வாழாத் தகைமையராகவும், பிறர்க்கென வாழும் பெற்றியராகவும், சிலர் வாழ்வதால்தான் இவ்வுலகம் இடையறவு படாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது" என்று துணிந்தான். அத் துணிவு ஒரு பாட்டாக வெளிப்பட்டது.

"உண்டால் அம்மஇவ் வுலகம்; இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்

அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே''

என்பது அப் பாட்டு.

உலகில் வாழ்ந்தவர் எனப் பெறுவார், புகழொடு வாழ்ந்தவரே ஆவர். புகழாளர், தாம் வாழ்ந்து காட்டும் வாழ்வால் வையகத்தையே தம்பால் நோக்க வைக்கும் மாண்புடையர். அவர்கள் இறந்தும், இறவாப் புகழினர்; செத்தும் சாவா உடம்பினர். இத்தகையவரையே,

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''

என்றார் பெருநாவலர்.

**வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை :**

வாழ்வாங்கு வாழும் வாழ்க்கையாவது யாது? சான்றோர் சென்ற நெறியிற் செல்லும் கருத்தும், கடைப்பிடியும் கொண்டு இலங்குவதே வாழ்வாங்கு வாழும் வாழ்க்கையாகும். 'எவ்வாறும் வாழலாம்' என்று எண்ணி மனம்போன போக்கில் போகாமல், 'இவ்வாறுதான் வாழவேண்டும்' என வரையறுத்துக் கொண்டு அறநெறியில் அஞ்சாமல் செல்லும் வாழ்க்கையே வாழ்வாங்கு வாழும் வாழ்க்கையாம். இத்தகு வாழ்வுடையவரே, உலகோரால் போற்றி வணங்கப் பெறும் தெய்வ வாழ்வினர் என்னும் நிலைக்கு உயர்ந்தோர் ஆதல் உறுதி.

**உரையும் பாட்டும் உடையோர் :**

இவ்வுலகில் நாள்தோறும் எண்ணற்ற உயிர்கள் தோன்றுகின்றன; வாழ்கின்றன; மடிகின்றன. 'பிறந்தான், இருந்தான், இறந்தான்' என்பதே மிகப் பலருடைய வாழ்வாகும். அத்திப் பழத்தில் தோன்றி மடியும் புழுப்போல, யாருக்கும் தெரியாமல் மடிவோரே எண்ணற்றோர். ஆனால், மிகச் சிலருடைய வாழ்வே உலகம் உள்ள அளவும் அழியாத வாழ்வினதாகவும், எடுத்துக் காட்டான வாழ்வினதாகவும் அமைகின்றது. இதனையே,

"உரையும் பாட்டும் உடையோர் சிலரே;
மரையிலை போல மாய்ந்திசினோர் பலரே"

எனப் புறநானூறு கூறுகின்றது. ஆம்! தாமரை மலரின் தோற்றமும் ஏற்றமும் தெய்வத் திருத்தகவும் அத் தாமரை இலைக்கு இல்லையே! நீருள் கிடந்து 'வாளா' அழுகியன்றோ போயொழிகின்றது! மரை இலைபோல மாயும் வாழ்வைக் கருதாமல், மரைமலர் போல மாயா வாழ்வை விரும்பிய சான்றோர் உரைக்கு எடுத்துக் காட்டாக விளங்குபவர் டாக்டர் மு. வ.

**மு. வ. ஒரு மந்திரமொழி :**

'மு. வ.' என்னும் இரண்டெழுத்தினைத் தமிழ்கூறும் நல்லுலகம் நன்கு அறியும். "மு. வ. என்பது தமிழ்நாட்டில் ஒரு மந்திர மொழியாக வழங்கப் பெறுகிறது" என ஓர் ஆங்கிலப் பேராசிரியர் ஒருமுறை குறிப்பிட்டார். அத்தகு ஆற்றல் மிக்க பெயர் மு. வ. என்பது.

எளிய குடும்பத்தில் பிறந்து, உழைப்பால் உயர்ந்து, சிந்தனைச் சிறப்பால் பிறர் நெஞ்சில் நிறைந்து, வாழ்வால் பலர்க்கும் பயன்பட்டு, தொண்டால் என்றும் நின்றுவாழும் பெருந்தகையர் மு. வ.

'மும்மைசால் முத்தமிழ்' என்றும், 'தெய்வத்தமிழ்' என்றும், 'ஞாலம் அளந்த மேன்மைத் தமிழ்' என்றும் பல்லாற்றானும் பாராட்டப்பெறும் பைந்தமிழ் வளர்ச்சிக்குத் தம் எழுத்தால், பேச்சால், வாழ்வால் ஏற்றந் தந்த பெருமகனார் மு. வ.

இயற்றமிழில் நிறை புலமை எய்தி, இசைத்தமிழ் வளர்ச்சியிலும் ஆராய்ச்சியிலும் இனிதே ஈடுபட்டு, நாடகத்தமிழ் வளர்ச்சியில் நாட்டங் கொண்டு, முத்தமிழ் வாழ்வினரின் நெஞ்சங்களில் முழுதுற நிறைந்து நிற்பவர் மு. வ.

இறந்தும் இறவாத தன்மையர் உலகில் ஒரு சிலரே; மறைந்தும் உலகம் மறவாத மாண்பினர் ஒரு சிலரே; பொன்னுடல் மறையினும் புகழுடலுடன் வாழ்வோர் ஒரு சிலரே;

பருவுடல் வீழினும், வாழ்ந்த வாழ்க்கையால் நுண்ணுடல் கொண்டு வாழ்வோர் ஒரு சிலரே. அவ்வொருசிலருள் ஒருவர் மு. வ.

**மூவாத்தமிழ் மு. வ.**

தமிழ்மொழி, பழைமைக்கும் பழைமையது; புதுமைக்கும் புதுமையது; "முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே" எனப் பெறும் 'செம்மேனி அம் மானைப்' போன்ற பெற்றியது; வரம்பிலா மொழிகள் உலகில் பிறந்து இறந்தொழிய, என்றுங் குன்று வீறுடன் விளங்குவது; ஆகலின், இதனைச் 'சாவா மூவாத் தமிழ்' என்பது சாலவும் பொருந்துவதே யாகும். இத்தகு தமிழ், இளமை எழிலுடன் என்றும் விளங்க உழைத்தவர் எண்ணற்றோர். அவர்களில் இவ்விருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்தோர் சிலருள் குறிப்பிடத்தக்க ஒருவர் மு. வ. எனவே சாவாமூவாத் தமிழுக்கு மு. வ. என்பது தகும்.

**குன்றின் மேலிட்ட விளக்கு:**

'குடத்துள் விளக்காகவும் தடத்துள் (உறையுள்) வாளாகவும்' அமையாமல் குன்றின்மேல் இட்ட சுடர்விளக்காகவும், களத்தில் துலங்கிய கூர்வாளாகவும் விளங்கிய வாழ்வு மு. வ. அவர்களின் வாழ்வு. அவர்தம் வாழ்வினைக் குறித்து அவரே எழுதியுள்ள சில வரிகள் கருதத்தக்கன.

"என் வாழ்க்கை படிப்படியான முன்னேற்றங்கள் உடையது. திடீர் மாற்றங்களோ சரிவுகளோ இல்லாதது.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருப்பத்தூரில் பிறந்தேன்.

பாட்டனார் உழவர். பெரிய தனக்காரர். தந்தை வியாபாரம் செய்தவர். நானே குடும்ப வட்டாரத்தில் முதல் பட்டதாரி."

**எடுத்துக் காட்டான எழில்வாழ்வு:**

"எளிய குடியிற் பிறந்தவரும் உழைப்பால் உயர முடியும்" என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டும் உயர்வாழ்வு மு. வ.

அவர்களின் வாழ்வு. சிற்றூரில் பிறந்தவரும் பேரூரும் விழா வெடுத்துப் போற்றும் பெருநிலைக்கு வளர முடியும் என்பதற்கு எடுத்துக் காட்டான வாழ்வு மு. வ. அவர்களின் வாழ்வு. உயர்நிலைப் பள்ளிப் படிப்புடன் தம் பள்ளிப் படிப்பிற்கு முற்றுப் புள்ளி வைத்துக் கொண்டவரும் தாமே முயன்று கற்றுப் பலப்பல உயர்நிலைப் பட்டங்களையும், மேம்படு பதவிகளையும் பாராட்டுதல் களையும் பெறமுடியும் என்பதற்கு எடுத்துக் காட்டான வாழ்வு மு. வ. அவர்களின் வாழ்வு. சுருங்கக் கூறினால் இளைஞர்கள் பின்பற்றிப் பெருவாழ்வு கொள்ளத்தக்க எடுத்துக்காட்டான வாழ்வு மு. வ. அவர்களின் வாழ்வு.

# 2. முன்னோர்கள்

**நாடு :**

''முடியுடை வேந்தர் மூவர் தண்பொழில் வரைப்''பாகத் திகழ்ந்தது தமிழகம். அவற்றுள் சேர நாடு யானைக்குப் பெயர் பெற்றது; சோழ நாடு வளமான சோறுடையது; பாண்டிய நாடு முத்துவளம் சான்றது. மேலும் சேர நாடு வில்லோடு வீரம் விளங்க நின்ற மண்; சோழநாடு நீதி நிலைபெற்று நின்ற நிலம்; பாண்டிய நாடு தமிழ் கெழீஇய தண்டமிழ்ச் சாயலர் வாழ்ந்த புவி. இம் முந்நாடுகளே அன்றிப் பின்னாளில், பெருமை பிறங்கப் பேசப்பெற்ற நாடு 'தொண்டை நாடு' ஆகும். இதனைத்,

''தெண்ணீர் வயல் தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து'' என்று தொண்டை மண்டல சதகம் புகழ்கின்றது. அப் புகழ்க்கு ஏற்பவே சான்றோர் பலர் தோன்றிச் சால்புறக் கண்ட தவநாடு தொண்டை நாடாகும். இத் தொண்டை நாட்டில் தொண்டைமண்டல துளுவ வேளாளர் குடியில் பிறந்தவரே இவ் வரலாற்றின் எழிற் செல்வர் டாக்டர் மு. வரதராசனார் ஆவர்.

**ஊர் :**

சென்னை மாநகரில் இருந்து பெங்களூர் செல்லும் பெருவழியின் இடையே வரும் ஓர் ஊர் 'வாலாசாப் பேட்டை' ஆகும். 'வாலாசா ரோடு' என்னும் தொடர் வண்டி நிலையத்திற்கு வடக்கே ஒரு கல்லில் அமைந்துள்ளது அவ்வூர். அவ் அம் மூருக்கும் வடக்கே மூன்று கல் தொலைவில் அமைந்திருக்கும் சிற்றூர் வேலம். சென்னை மாநகரிலே சீரும் சிறப்பும் எய்தவும், பெங்களூரிலே இருந்து பைந்தமிழ்க் கதைகள் தீட்டவும் வளர்ந்த மு. வ. அவர்களின் சொந்த ஊர் இவ் வேலம்

என்னும் எழில் மிக்க சிற்றூரேயாம். 'சென்னை-பெங்களூர்' பெருவழி செய்த பேரிணைப்பு இது போலும்!

வேலம் மு. வ. அவர்களின் சொந்த ஊரேயாகும். பிறந்த ஊர் அன்று; தம் சொந்த ஊரைப் பற்றி அவ்வூருடையாரே கூறுகின்றார்:

''ஆர்க்காட்டில் இருந்து ஐந்தாவது மைலில் சோளிங்கபுரம் போகும் சாலையில் அமைந்த கிராமம் அது. ஊரின் முகப்பிலேயே ஒரு நல்ல குளம் (ஊருணி) அமைந்து அழகான காட்சி தருகிறது. அதன் உயர்ந்த கரையின் மேட்டில் ஆலமரங்கள் பல சூழ்ந்து விளங்கும். குளத்திற்கும் ஊர்க்கும் இடையே நீரற்ற ஓடையும் பெரிய ஆலமரமும் அரசமரமும் உள்ளன. அந்த மரங்களே ஊர்ப் பெரியவர்களுக்கு அரசியல் அரங்கம்; இளைஞர்களுக்கு ஆடும் களம்; அரட்டை மன்றம்; இவை எல்லாம் ஊர்க்கு மேற்கே உள்ளன. கிழக்கே உள்ள சத்திரம் பலருக்கு ஒதுக்கிடம்; சிலருக்கு ஊர்வம்புக் கூடம். வடக்குப் பகுதியில் உள்ள தெருவில் எங்கள் வீட்டின் திண்ணைமேல் இருந்து பார்த்தால் வேலத்துமலை ஒருமைல் தொலைவில் தெரியும். இளமையில் அந்த மலையின் உச்சிப் பகுதி மட்டுமே தெரியும். மலைக்கும் எங்கள் தெருவுக்கும் இடையே அவ்வளவு மரங்கள் அடர்ந்திருந்தன. இப்போது வீட்டில் இருந்து பார்த்தால் மலையின் முழு வடிவமும் தெரிகிறது. மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டுப் போயின.

''வேலத்து மலையில் இரண்டு சிகரங்கள் உள்ளன. ஒன்று 'சட்டக்கல்' எனப்படும். மற்றொன்று 'கூசுமலை' (கூர்ச்சுமலை) எனப்படும். ஆர்க்காடு, வாலாஜா, ராணிப்பேட்டை எங்கே இருந்து பார்த்தாலும் அந்த இரண்டு சிகரங்களும் எடுப்பாகத் தோன்றும்; கூசுமலை சிவலிங்கம் போல் தெரியும்; சட்டக்கல் பலிபீடம் போல் தோன்றும். இரயிலில் செல்லும் போதோ, பெங்களூர்ச் சாலையில் காரில் செல்லும் போதோ அந்த இரண்டு சிகரங்களின் பெருமிதமான அழகையும் நான் தவறாமல் பார்த்து மகிழ்வது உண்டு. ஊரிலிருந்து பார்க்கும்போது சட்டக்கல் உயரம் குறைந்ததுபோல் தோன்றும். ஆனால், ஆர்க்காடு

முதலான இடங்களில் இருந்து பார்த்தால் அதுதான் மற்றதை விட உயரமானது என்ற உண்மை விளங்கும். ஒரு பொருளின் உண்மையான மதிப்பு அல்லது ஒருவரின் உண்மையான சிறப்பு நெருங்கிப் பழகுகின்றவர்களுக்குத் தெரிவதில்லை என்பதற்கு நான் அதை அடிக்கடி எடுத்துக் காட்டாகச் சொல்வது உண்டு. சட்டக்கல்லின்மேல் நான் ஏறி நின்று வானத்தையும் நிலத்தையும் கண்டு வியந்திருக்கிறேன். கூசுமலையின்மேல் ஏற முயன்றேன். துணிவு வரவில்லை. அதன் உச்சியில் எப்படியோ பெரிய நெய்விளக்கு (தீபம்) ஏற்றுகிறார்கள். அவர்களின் அஞ்சாமையை என்ன என்று சொல்வது?[1]'' கதையால் தமிழ் உலகளக்க வந்த மு. வ. அவர்கள் வேலத்து மலையைக் கதைக் கருப்பொருளாக்கி எழுதுகின்றார். தம் சொந்த ஊரைத் தம் நண்பர் ஊராக்கி உவகை கொள்கிறார்.

''நண்பனுடைய சிற்றூர் என் உள்ளத்தைக் கவர்ந்தது. அந்த ஊரின் வளமோ, ஊராரின் வாழ்வோ என் உள்ளத்தைக் கவரவில்லை. அந்த ஊரின் அமைப்புத்தான் என் உள்ளத்தைக் கவர்ந்தது. வடக்கிலும் மேற்கிலும் மலைகள் சூழ்ந்து, வானுற ஓங்கிய மதில் சுவர்களாக நின்றன. அவற்றில் பெரிய மரங்கள் இல்லை; ஆனால் பச்சைப் பசேலென மஞ்சம் புல் வளர்ந்து போர்த்திருந்தது. மேற்கே நின்ற மலைகள் மண் மலைகள்; வடக்கில் ஓங்கிய மலைதான் கல்மலை; அந்த மலையே உயரமான மலையுமாகும். அந்த மலையின் அழகுக்கு அழகு செய்வன போல் அதில் இரண்டு குவடுகள் இருந்தன. ஒன்று தட்டையாய் அமர்ந்திருந்தது; மற்றொன்று குவிந்து ஓங்கியிருந்தது. இந்த இரண்டுக்கும் ஊரார் சட்டக்கல் என்றும் கூர்ச்சுமலை என்றும் வழங்கும் பெயர்கள் மிகப் பொருத்தமாக இருப்பது அறிந்து மகிழ்ந்தேன். மலையின் தோற்றத்தைச் சங்கப் புலவர் ஒருவர் கண்டால், அதன் குவடுகள் இரண்டையும் இரண்டு கைகளாகப் புனைந்து பாடியிருப்பார். இந்த மலையைச் சங்கப் புலவர் ஒருவரோ பலரோ அந்தக் காலத்தில் பார்த்திருக்கக் கூடும்; பாடல்களும் பாடியிருக்கக் கூடும். ஆனால், அந்தப் பாடல்கள் காலவெள்ளத்தை நீந்திக் கரையேற முடியாமல் அடித்துக்

1. எங்கள் ஊர்: வேலம். (ஆனந்த விகடன் : 3-8-1969.)

கொண்டுபோகப்பட்டிருக்கலாம். யார் கண்டார்கள்? கால வெள்ளம் எத்தனையோ நூல்களை அடித்துக்கொண்டு ஓடுவதை இருபதாம் நூற்றாண்டிலும் நாம் கண்ணாரக் காண்கின்றோமே! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அச்சுப் பொறியும் மற்றக் கருவிகளும் இல்லாத பழங்காலத்தில் அந்த வெள்ளத்தில் அழிந்தவை எவ்வளவோ? பாடல்கள் போனாலும், மலை போகவில்லை; நிற்கின்றது; ஓங்கி நிற்கின்றது; ஒரு கையை வானுறச் சுட்டிக் கொண்டு அந்த மலை இன்னும் இறுமாந்து நிற்கின்றது.

"அந்த மலையின் பெருமையெல்லாம் அமைப்பில்தான்; மற்ற மலையில் வேறு என்ன பெருமை காணமுடியும்? அதைக் குறிஞ்சி என்று கூறுவதை விட்டு, பாலை என்றுதான் கூறவேண்டும். மலையடியில் உள்ள தரைக்காடு, காரைச் செடிகளும் கருவேல மரங்களும் அங்கொன்றும் இங்கொன்றுமாய் உள்ள சிறிய காடுதான். மாலை வேளைகளில் சில மான்களைக் காணலாம். காலை வேளையில் சில முயல்களைக் காணலாம்; பறவைகளின் பாடலும் உண்டு என்று கூறலாம். இவ்வாறு வளம் குறைந்திருந்தாலும் கண்ணுக்கு விருந்து தரும் காட்சி வானத்தில் இருந்து அந்த மலை வழியாக இழிந்து வருவது போலிருந்தது. நீர் அற்ற ஓடைகளில் உட்கார்ந்து சுற்றியுள்ள மணலின் தூய்மையைக் கண்டு பிறகு வடக்கு நோக்கி நிமிர்ந்து கூர்ச்சு மலையைக் கண்டபோது அந்த இயற்கையின் அழகு மேலும் சிறந்திருந்தது."[1]

வீட்டை வெறுத்து, நாட்டைத் துறந்து, வேற்று நாட்டுக்குப் பிழைக்கப் போனவருக்கும் பிறந்த மண்ணின் பற்று அகலாது என்பதைக் குறிப்பிடும்போதும் மு. வ. அவர்களுக்கு 'வேலம்' முற்பட நிற்கிறது.

"என் சொந்த ஊரும் உங்கள் ஊர்ப்பக்கம் தான். அங்கிருந்து இருபது மைல் இருக்கும். நீ சொன்னது சித்தூர். என் சொந்த ஊர் ஆர்க்காட்டுக்குப் போகிற வழியில் வேலம்" என்றார்.

---

1. குறட்டை ஒலி; அந்த மனம் வருமா? (5-7)

"வேலம் என்று என் சொந்த ஊரை அவர் சொன்னவுடன் எனக்குத் திடுக்கிட்டாற்போல் ஆனது. 'எந்தத் தெரு? எந்த வீடு? என்று கேட்கலாமா என்று வாயெடுத்தேன். அதற்குள், 'உனக்கு அந்த ஊர் தெரியுமா?' என்று அவர் கேட்டுவிட்டால் என்ன செய்வது என்று எண்ணிப் பேசாமல் இருந்தேன். "அது நல்ல ஊர்தானே? நீங்கள் ஏன் விட்டு விட்டு வந்தீர்கள்?" என்றேன்.

"ஊர் நல்ல ஊர்தான். வீடு நல்ல வீடு அன்று" என்றார்.[1]

வேலம் மு. வ. அவர்களைத் தாங்கியிருந்த மண் என்பது மட்டும் அல்லாமல், அவர்கள் ஆராய்ச்சிக்கும் இயற்கைப் பற்றுக்கும், எளிமை போற்றலுக்கும் கருத்தாங்கி நின்ற இடமுமாகும்.

அகநானூற்றின் ஒன்பதாவது பாடலின் விளக்கம் மு. வ. அவர்களின் அறிவு நுட்பத்தினால் ஏறத்தாழ இருநூறு பக்கங் கொண்ட நூலாக விரிந்துள்ளது. இவ் வாராய்ச்சி விளக்கத்திற்கு இடமாக இருந்தது வேலத்துச் சிற்றோடைச் சூழலேயாம்.

தமிழகத்து வறண்ட சிற்றோடையும் வண்டமிழ் வளர்க்கும் என்பதற்கு வேலத்துச் சிற்றோடை ஒரு சீரிய சான்றும்.

"ஒருபாட்டு; அதைக் குறித்துப் பலநாள் போராட்டம்; இரண்டுநாள் இரவும் பகலும் ஏக்கம்; மூன்றும் நாள் மாலையில் வேலத்து மலையை அடுத்து அழகிய ஓடையில் உலவும்போது எதிர்பாராத விளக்கம்; நல்ல தெளிவால் பிறந்த பேருவகை — இவைகளே இந் நூலாக உருப்பெற்றன."[2]

ஓவச் செய்தி மட்டுமே அல்லாமல் தமிழகம் எத்துணையோ உவகைச் செய்திகளைக் கொள்வதற்கு இடமாக இருந்ததும் வேலத்துச் சூழல் ஆகும்.

"ஊர்க்கு மேற்கே காட்டில் இன்னொரு பெரிய குளம் உள்ளது. அதன்நீர் தெளிவானது. (இப்போது கெடுத்து

1. குறட்டை ஒலி. (இறந்த சிற்றப்பா)
2. ஓவச் செய்தி. நன்றியுரை.

வருகின்றனர்) அரசங்குளம் என்பது அதன் பெயர். நீர், இளநீர்போல் இனிக்கும். காலையில் பலநாள் நான் நீந்திக் குளித்த பொய்கை அது. அய்யோ! முயல்களும் குள்ளநரிகளும் பயமின்றி விளையாடித் திரியும்.

''நான் விரும்பிக் குளித்து வந்த மற்றோர் இடம் ஊர்க்கு வடக்கே மலையடிவாரத்தில் உள்ள பெரிய ஓடை என்னும் அருவியாகும். 'சலசல' என்ற ஒலியோடு வரும் அந்தக் குளிர்ந்த நீரில் குளித்து, பக்கத்தே ஓர் அத்தி மரத்தின் கீழே உள்ள பாறைமேல் அமர்ந்து நல்ல நூல்களைப் படிப்பது வழக்கம். என் வாழ்வில் பலநாள் மனம் அமைதியில் மூழ்கிய இடம் அது. பாடல்களை வாய்விட்டுப் பாடி மகிழ்ந்த இடம் அது.

''மாலைவேளையில் அங்கிருந்து காட்டில் மேயும் மான்களைப் பார்த்திருக்கிறேன். ஒரு சின்ன நாகப்பாம்பு படமெடுத்து ஆடியபோது அந்த இடத்தில் நான் தன்னந்தனியாக இருந்திருக்கிறேன். பத்தடித் தொலைவில் தரையில் உட்கார்ந்தபடியே அந்த அழகிய காட்சியைச் சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தேன். தன் ஆட்டத்தை முடித்துக்கொண்டு அது ஓடி விட்டது. மலையிலிருந்து வரும் வழியில் உள்ள ஓடையின் மணலில் நடந்து மாலைப் பொழுதைப் போக்குவது வழக்கம். அப்போது பல புதிய சிந்தனைகள் எழுவதுண்டு! 'ஓவச் செய்தி' என்ற என் நூலின் புதிய கருத்துக்குப் பிறப்பிடம் அதுவே. இரண்டு புதினங்கள் நெஞ்சில் உருவான இடமும் அதுவே.

''மலையில் சில சுனைகள் உண்டு. சுனைகளின் கரையில் பாறைகளின் சிறு பள்ளங்களில் மஞ்சள் நிறமான தூகள் காணப்படும். 'தேவலோகத்துப் பெண்கள் (அரமகளிர்) வந்து சுனைகளில் குளிக்கும்போது பூசிக் கொள்வதற்காகத் தேய்த்த மஞ்சள் அது' என்பார்கள். அங்கே வளரும் நுண்ணிய பாசிகள் உலர்ந்தபின் அவ்வாறு மஞ்சள் நிறம் பெறுவது இயற்கை. அதுவே உண்மை என்பதை வளர்ந்தபின் உணர்ந்தேன். முருகன் வேல்பட்ட காரணத்தால் அந்த மலை, வேலம் என்று பெயர் பெற்றது என்பார்கள். ஏழு மைலில் வள்ளிமலை இருப்பதையும் சுட்டிக் கூறுவார்கள். காட்டில் வேல மரங்கள்

இருப்பதை அறிந்தும், இவ்வாறு கற்பனை செய்து மகிழ்ந்தார்கள்.

''மலையின் அந்தப் பக்கத்தில் தாழை ஓடை என்ற ஓடை உண்டு. அங்கே உள்ள தாழைமரங்கள் அழகான காட்சியாக இருக்கும். சங்க இலக்கியங்களில் வரும் இயற்கைக் காட்சிகளையும், காந்தள் முதலான மலர்களின் அழகையும் உவமைச் சிறப்புக்களையும் பாராட்டுவதற்கு இந்த அனுபவம் எனக்குப் பயன்பட்டது.''[1]

முன்னோர் :

இனி, வேலத்தில் வாழ்ந்த மு. வ. வின் முன்னோர்களைப் பற்றிக் காண்போம்:

வேலத்தைச் சுற்றி அமைந்த ஏழு ஊர்களைக் கொண்ட சமீன் ஒன்று முன்னே விளங்கியது. அந்த ஏழூர் சமீன்தாரராக மு. வ. வின் முன்னோர் வழி வழியாக விளங்கி வந்தனர். செல்வ வளமும் செல்வாக்குச் சிறப்பும் ஒருங்கே கொண்ட இவ் வழியில் வந்தவர் வரதராச முதலியார் என்பார். அவருடைய தம்பியார் சபாபதி முதலியார் என்பார். இவர் ஊரின் மணியக்காரராகப் பெரும்புகழுடன் விளங்கியவர். ஊரில் இருந்த ஒரு பங்களா வீடு இவர்தம் முன்னோருடையது. எனவே, இவர்தம் வீட்டினைப் 'பங்களா வீடு' என்றே அனைவரும் அழைத்தனர். இவர்தம் பேரனார் மு. வ. ஆகலின், 'ஏழூர் சமீன் பங்களா வீட்டார்' என்றால் அது மு. வ. வீட்டாரையே குறிக்கும்.

தம்முடைய ஊரைக் குறித்துப் பெருமிதம் கொள்ளும் மு. வ. தம் முன்னோரைக் குறித்தும் பெருமிதம் கொள்கிறார். அப் பெருமித உணர்வை நாம் அறிந்து கொள்ளும் வாய்ப்பும் நமக்கு வாய்த்துள்ளது.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்பது மறக்க முடியாத பெரிய உண்மையே. உள்ளம் அதை எவ்வளவு தெளிவாக உணர்ந்திருந்தாலும் இளமை முதல் பழகிய சொந்த ஊர்

---

1. *எங்கள் ஊர்—வேலம், ( ஆனந்தவிகடன்; 3-8-'69)*

பற்றிய எண்ணமும், முன்னோர்கள் பற்றிய எண்ணமும் நெஞ்சத்தில் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்துகின்றன.

சென்னையில் ஒரு திருமணத்தின்போது, ஒரு பெரியவரைக் கண்டபோது அதை நன்றாக உணர்ந்தேன். அவர் தொண்ணூறு வயதை எட்டிய முதியவர். புதுக்கோட்டையில் நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்றுத் திருச்சியில் வாழ்ந்தவர். யாரோ என்னை அவர்க்கு அறிமுகப்படுத்தினார்கள்.

''எந்த ஊர் சொந்த ஊர்'' என்று பெரியவர் என்னைக் கேட்டார்.

''ஆர்க்காட்டுப் பக்கம், வேலம்'' என்றேன்.

''வேலமா? அப்படியா?'' என்று கேட்டார், ஒருவகை வியப்புணர்ச்சியோடு என்னை உற்றுப் பார்த்தார்.

''நாங்களும் வேலமே. இப்போது திருச்சி சொந்த ஊர் ஆகிவிட்டது. என் தகப்பனார் வேலத்தில் பிறந்து வளர்ந்தவர். சின்ன வயதிலேயே திருச்சிக்கு வந்துவிட்டார். நான் சின்னப் பையனாக இருந்தபோது ஒருமுறை என்னை அழைத்துக் கொண்டு போய் ஊரைக் காட்டினார். சின்ன ஊர். அழகாக இருந்தது'' என்றார்.

வியப்புணர்ச்சி என் உள்ளத்தில் குடி புகுந்தது. ''வேலமா உங்கள் சொந்த ஊர்? அப்படியா?'' என்றேன். ''யார் உறவினர்?'' என்றேன்.

''சபாபதி என்று ஒருவர் மணியம் செய்தார். அவருடைய அண்ணன் ஒருவர்; உங்கள் பெயர்தான் அவருக்கு'' என்றார்.

''அப்படியா? நம்ப முடியாத கதையாக இருக்கிறதே. அவர்கள் என் தாத்தாவும் அவருடைய அண்ணாவும்'' என்றேன். என் உள்ளத்தில் புதுமழை பொழிந்ததுபோல் அன்பும் ஆர்வமும் நிரம்பின.

பிறகு அந்தப் பெரியவரின் அன்புக்கை என் தோள்மேல் நெடுநேரம் இருந்தது. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற உண்மையை இருவருமே மறந்து விட்டோம். ''எங்கள்

தந்தையர் நாடு என்ற பேச்சினிலே, ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே'' என்ற உணர்வுதான் அப்போது மேலிட்டது![1]''

**முனிசாமி முதலியார் :**

மு. வ. அவர்களின் பெரிய பாட்டனார் வரதராச முதலியார், 'படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்' பான்மையர். 'அஞ்சல் என்ற சொல்லும் அடையா நெடுங்கதவும்' உடையவர். அவர் பேச்சுக்கு மறுபேச்சு இல்லை. அவர் ஒரு வழக்கில் ஒரு தீர்ப்பு வழங்கிவிட்டால் அதற்கு மேல் முறையீடே இல்லை. அவ்வளவு செல்வாக்குடையவர். 'சுற்றத்தாற் சுற்றப் பட ஒழுகிய' அவர்தம் மாண்பு, குடும்பச் சொத்தாக அமைந்தது. அவர்தம் இளவலார் ஆகிய சபாபதி முதலியாரும் அத் தன்மையராகவே விளங்கினார். அவர்தம் திருமகனாராகத் தோன்றியவர், மு.வ. அவர்களின் தந்தையார் ஆகிய முனிசாமி முதலியார் ஆவர்.

சபாபதி முதலியார்க்கு மனைவியர் இருவர் வாய்த்தனர். அவருள் மூத்த மனைவியார் திருவயிற்றிலே தோன்றியவர் முனிசாமி முதலியார். இளைய மனைவியார் மணிவயிற்றில் பிறந்தவர் முத்துசாமி முதலியார். இவர் சிறந்த கலைஞராக விளங்கியவர். இவரிடத்து மு. வ. அவர்களுக்கு இணையற்ற அன்பு உண்டு. 'சித்தப்பா' 'சித்தப்பா' என்று அன்பு பெருக ஆர்வம் மீதூர அழைத்து மகிழ்வார். இவர்தம் மகனாரும் இப்பொழுது இசைக் கலைஞராகத் திகழ்கிறார்.

**தந்தையார் தமிழறிவு :**

முனிசாமி முதலியார் கூரிய அறிவு வாய்ந்தவர்; கணக்கில் தேர்ச்சி மிக்கவர்; ஆனால், தமிழறிவு வாய்க்காதவர். அதற்கு அவர் வாழ்ந்த காலமும் இடமும் காரணமாக அமைந்தன.

அந் நாளில் தெலுங்குமொழிப் பயிற்சி அப் பகுதியில் வாணிகத்திற்குப் பயன்பட்டது. அதற்கெனத் தமிழ்நாட்டில் தெலுங்குப் பள்ளிகளும் இருந்தன. அவர் தெலுங்குப் பள்ளியில் பயின்றார். தமிழ்மொழிப் பயிற்சி பெறுதற்கு வாய்ப்பு இல்லாமல் போயினார். முத்தமிழுக்கு மு. வ. என்று பாராட்டப் பெறுதற்

1. எங்கள் ஊர்—வேலம். (ஆனந்த விகடன் : 3-8 '69.)

குரிய பெருமகனாரின் தந்தையார், தமிழறிவு வாய்க்காதவராக இருந்தது பெரு விந்தையே! அவர் எழுதும் கடிதங்களைக் கண்டு மு. வ. அவர்களின் உள்ளம் கலங்கியதும், கனிவோடு உருகியதும் உண்டு. 'மொழிப்பற்று' என்னும் நூலிலே இதனை வெளிப்படுத்துகிறார். (பக். 4—8).

"எனக்கு ஒரு பெரிய குறை உண்டு. நான் வெளியூர்க்குச் சென்ற பிறகு அவர் எழுதிய கடிதங்களைப் படிக்கும் போதெல்லாம், என் தந்தையாரைப்போல் தமிழ்க் கொலை செய்கின்றவர் எவரும் இல்லை என்று எண்ணி வருந்துவேன். 'ருமசாமி, நண்ராக, இருக்கிரார்கள், வன்து போறார், எண்று சொண்ணார்' என்றெல்லாம் அவர் கடிதங்களில் எழுதியவற்றைக் கண்டு ஆத்திரம் கொள்வேன். 'அந்தக் காலத்துப் படிப்பு அவ்வளவு தான் போலும்' என்று ஒருவாறு ஆத்திரம் அடங்குவேன்".

**மு. வ. வின் அன்னையார் :**

முனிசாமி முதலியார் வேலூரில் இருந்த உறவினர் ஒருவரின் மகளாரை மணந்தார். அம் மனைவியார் ஒரு மகளையும் பெற்றார். பின்னர், விரைவில் இறந்து போனார். குழந்தையும் இறந்து போனது. இந் நிலையில் முனிசாமி முதலியார் காவேரிப் பாக்கத்தைச் சேர்ந்த சேரி என்னும் ஊரில் இரண்டாம் திருமணம் செய்து கொண்டார். மனைவியார் 'அம்மாக் கண்ணு' என்பார். அவர்தம் அன்னையார் 'நரசம்மாள்' என்பார். மகளை வேலத்து முனிசாமி முதலியார்க்கு மணம் செய்வித்ததுடன், தாமும் தம் மகளாருடன் வேலத்துக்கே வந்து சேர்ந்தார் நரசம்மாள்.

நரசம்மாள் நல்லியல்புகள் வாய்ந்தவர். அவர் நல்லியல்புகள் அனைத்தும் அம்மாக் கண்ணுவினிடம் விளங்கின. அம்மாக்கண்ணு குடும்பத்திற்கு ஏற்ற குலமகளாகக் காட்சி வழங்கினார். உற்றார் உறவினர் பாராட்டும் சீருடன் சிறந்தார். கணக்கு வைப்பதிலும் கட்டு திட்டமாகக் குடும்பம் நடத்துவதிலும் எடுத்துக்காட்டாக இலங்கினார். "இல்லதென் இல்லவள் மாண்பானால்" என்னும் பொன்மொழிக்கு ஏற்ப, நிறைந்த இல்லமாக்கி இன்புற்றார். "மனைக்கு விளக்கம் மடவார்" என்பதை மெய்ப்பித்தார்.

**மக்கள் :**

முனிசாமி முதலியார் அம்மாக்கண்ணு அம்மையார் ஆகிய இவர்களின் இனிய இல்வாழ்வின் பயனாக மக்கள் அறுவர் தோன்றினர். அவர்களுள் ஆடவர் இருவர்; மகளிர் நால்வர்; முதன் மகள் கண்ணம்மாள் என்பார். இவர் பதினெட்டு வயதே வாழ்ந்தார். இவரே மு. வ. என்னும் குழந்தையை மடியில் கிடத்தியும், இடையில் இருத்தியும், தோளில் சுமந்தும் வளர்த்த பேறுடையார். இவர், குழந்தை மு. வ. வின் மேல் காட்டிய அன்பிற்கு அளவில்லை. மு. வ. வும் இத் தமக்கை யிடத்துக் கொண்டிருந்த அன்புக்கோர் எல்லையில்லை. கண்ணம்மாள் இறந்தபோது மு. வ. வுக்கு வயது எட்டே ஆகும். அப்பொழுது இடுகாடு வரை அழுது கொண்டே சென்றாராம் மு. வ.

கண்ணம்மாளை அடுத்துப் பிறந்தவர் இராசம்மாள் என்பார். இவர் மு. வ. வுக்கு ஐந்து வயது மூத்தவர். அம் மூரில் வாழ்ந்து கொண்டிருப்பவர். "இளம் வயதில் என் தம்பி பேனாவைக் கையில் பிடித்தவன்; இறுதி வரையில் பேனாவைக் கீழே வைக்கவில்லை" என்று தம் அருமைத் தம்பியை எண்ணி எண்ணிக் கண்கலங்கி நிற்பவர்.

இராசம்மாளை அடுத்து மூன்றாம் மகவாகப் பிறந்தவரே மு. வ. என்னும் வரதராசனார். பெண்களே நிறைந்திருந்த குடும்பத்தில் ஓர் ஆண் மகவாகத் தோன்றினார். இவருக்குப் பின்னர்ப் பிறந்தவர் பழனிச்சாமி. அவரும் தம் பதினான்காம் வயதில் இயற்கை எய்தினார். அவருக்குப் பின் பிறந்த காவேரி என்னும் பெண்மகளாரும் பன்னிரண்டாம் அகவையளவில் மறைந்தார். கடைக்குட்டியாகப் பிறந்தவர் கமலாம்பாள். அவர் தம் தமக்கையார் இராசம்மாளைப் போலவே அம்மூரில் மணம் செய்துகொண்டு வாழ்கிறார். இனி வரலாற்றுத் தலைவர் மு. வ. அவர்களின் பிறப்பு-வளர்ப்புகளில் கருத்துச் செலுத்துவோம்.

# 3. இளமையும் கல்வியும்

ஆறு இடும் மேடும் பள்ளமும் போலச் செல்வம் ஒருகால் பெருகுதலும் குறைதலும் உலகில் காணக் கூடியதே. அதிலும் பெருஞ் செல்வக்குடியினர் பலர், தம் பழம்பெருமையாலும், உழைப்பின்மையாலும், முறைகேடான செலவுகளாலும் தீரா வறுமைக்கு ஆட்பட்டுத் திண்டாடுவதும் அறிந்ததே.

“குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்”

என ஒரு மன்னன் பாடியதுண்டு. ஏழூர் சமீன்தாரின் வழிவந்த பங்களா வீட்டார்க்கும் வறுமை சூழ்ந்தது. ஆகலின் பிழைப்புக்கு ஏற்ற தொழில் செய்வதற்காக முனிசாமி முதலியார் தம் குடும்பத்துடன் வடார்க்காடு மாவட்டத்தில் பெரும் வாணிக மையமாக விளங்கும் திருப்பத்தூர்க்குச் சென்றார். இவ்வூர் முனிசாமி முதலியார்க்குத் திருவினைத் தந்தது. தீந்தமிழ்க்குத் திருவாகிய மு. வ. வையும் தந்தது.

பிறப்பு :

மு. வ. வின் தந்தைவழிக் குடும்பத்திலும் சரி, தாய்வழிக் குடும்பத்திலும் சரி ஆண்மக்கள் மிகுதியாகப் பிறந்தனர் அல்லர். அம்மாக்கண்ணு அம்மாள் வயிற்றில் பிறந்த முதல் இரண்டு குழந்தைகளும் பெண்களே. ஆதலால், காஞ்சிமாநகரில் பிறந்தவரான அம்மாக்கண்ணுவின் அன்னையார் நரசம்மாள், காஞ்சி வரதராசப் பெருமானிடம் ஓர் ஆண்மகவு அருள வேண்டித் தவங்கிடந்தார். பின்னர் ஒருமுறை திருவேங்கட மலைக்குச் சென்று வழிபட்டார். ஓர் அடுப்பை மூட்டினார். பிள்ளை பிறந்தால் மேற்கொண்டு வந்து உரிய வழிபாடுகளைச் செய்வதாகவும், மூட்டிவைத்த அடுப்பை எடுத்து வைப்பதாகவும் உறுதி கொண்டார். அவ்வுறுதி பிழையாவண்ணம், தமிழகத்

தின் தவப்பயனுக 1912 ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் இருபத்தைந்தாம் நாள் மு. வ. பிறந்தார்.

**திருவேங்கடம் :**

வேலத்தில் சீரும் சிறப்புமாக வாழ்ந்த பெரிய பாட்டனுர் வரதராச முதலியார் பெயர் விளங்க வரதராசன் எனப் பெயர் சூட்டினர். ஆனுல், ஏழுமலை சென்று பிள்ளைவரம் வேண்டிப் பெரும்பாடு கிடந்த பாட்டியார், ஏழுமலையான் பெயராகிய 'திருவேங்கடம்' என்ற பெயரையே பேரனுக்கு வைத்து மகிழ்ந்தார். அப் பெயராலேயே தம் பேரனை அழைத்து மகிழ்ந்தார். பாட்டனுர் பெயர் பள்ளிப் பெயராக இருந்தது. வீட்டுப் பெயராகத் திருவேங்கடம் என்பது விளங்கியது.

**செல்வப் பிள்ளை :**

தமிழ் நாட்டின் செல்வப்பிள்ளையாக விளங்கப்போகும் மு. வ., மூன்று குடும்பங்களுக்கு ஒரே செல்வப்பிள்ளையாகத் திகழ்ந்தார். பெரிய பாட்டனுர், சிறிய பாட்டனுர், தாய்வழிப் பாட்டனுர் ஆகிய மூவர் குடும்பங்களுக்கும் மு. வ. ஒருவரே ஆண்மகவு என்ருல், அவரை எப்படிப் பாராட்டி வளர்த்திருப்பர்! பெருமாளினிடம் பிள்ளைவரம் வேண்டிக் கிடந்த பாட்டியார் நரசம்மாள், எத்தகைய அன்போடு வளர்த்திருப்பார் !

**இரண்டு பெருமக்கள் :**

மு. வ. வின் வாழ்வில் இரண்டு பெரியவர்களுக்குச் சிறந்த இடம் உண்டு. அவருள் ஒருவர், அவரை வளர்த்துப் பரிவு காட்டிச் சீராட்டிய அருமைப் பாட்டியார் நரசம்மாள். மற்ருெருவர் அவரை இளமையிலேயே இனங்கண்டு எழுத்துலக வேந்தராக விளங்குதற்கு வழிகாட்டிய ஒளிவிளக்கு திரு. வி. க. அவர்கள்.

நரசம்மாள் பேரன் மு. வ. மேல் வைத்திருந்த அன்பும், மு. வ. பாட்டியார் மேல் வைத்திருந்த உருக்கமும் 'விடுதலையா?' என்னும் கதையுருக் கொண்டு வெளிப்பட்டது. கொள்ளிடமும் காவிரியும் கூடிநிற்பது போன்ற அன்பு வெள்ளத்தை, அக் கதையிலே படிப்போர் உருகிப்போவர் !

''அப்போது முதிய அம்மையார் ஒருவர் தம் பேரனை அழைத்துக்கொண்டு அணிவகுப்பில் நுழைந்தார். அம்மையார்க்கு நரை வந்துவிட்டதே அல்லாமல் இன்னும் திரை வரவில்லை. மூப்பு என்று சொல்லிவிட இயலாது. ஆனாலும் அவர் நிலையினைக் கூற வேறு சொல் இல்லையாகையால் மூப்பின் தொடக்கம் எனலாம். வயது ஐம்பதுக்கு மேற்பட்டிருக்கலாம். சிவந்த மேனியும் கட்டுத்தளரா யாக்கையும், எளிய உடையும் ஒருவகை வீறு அளித்தன. கண்களின் கலக்கமற்ற ஒளி, உள்ளத்தின் தெளிவை வெளியாக்கிற்று. நடையில் பெண்மையும் வீரமும் ஒருங்கே குடிகொண்டிருந்தன. பிரான்சு நாட்டில் வாழ்ந்து வீரப்போர் புரிந்து தீக்கு இரையாகிய 'ஜோன்' என்னும் அம்மையார் இன்னும் 30 ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருந்தால் அவரை இந்த அம்மையாருக்கு உவமையாக்கிக் கூறலாம். 'ஜோன்' ஒரு நாட்டைக் காக்க வாழ்ந்தவர். நரசம்மா என்னும் இந்த அம்மையாரோ ஒரே பேரனைக் காக்க வாழ்ந்தவர்.''

* * * * *

''நான் வளர்ந்து இருபதாண்டு இளைஞன் ஆனேன். பாட்டியாரும் வளர்ந்து அறுபத்தைந்தாண்டு கிழவியானார். நரைமட்டும் இருந்தநிலை மாறித் திரையும் வந்துற்றது; நடையில் தளர்ச்சியும் பேச்சில் சோர்வும் வந்துற்றன. என் மனம் வளர்ந்தது. ஆனால் பாட்டியாரின் மனம் வளரவில்லை. அன்பு மனத்திற்கு வளர்ச்சி என்பதே இல்லைபோல் தெரிகிறது. பாட்டியாருக்கு நான் இன்னும் ஆறாண்டுள்ள சிறுவனாகவே இருந்தேன். இருபதாண்டு நிரம்பியும் அவருக்குச் சிறுபையனாகவே தோன்றினேன்.''[1]

மு. வ. இளமைக்காலத்தில் மெலிந்த யாக்கையராய் இருந்தார். அப்பொழுது பாட்டியார் தம் மெலிந்த உடலைப் பேணிக்காத்த பெற்றியைக் குறிப்பிடுகின்றார் மு. வ.

''நான் வாந்தி எடுத்துப் பல ஆண்டுகள் ஆகியிருக்கும். வாந்தி எடுத்துச் சோர்ந்து தலை சாய்ந்திருந்த நிலையில் என்

---

1. விடுதலையா? பக். 12-13; 33.

இளமையை நினைத்துக் கொண்டேன். என் உடம்பு பித்த உடம்பு என்று பாட்டியார் அடிக்கடி சொல்வார். அடிக்கடி பித்தம் மிகுந்து வாந்தி எடுத்த நாட்கள் நினைவுக்கு வந்தன. அருமைப் பாட்டியாரின் அன்புக்கைகள் இரண்டும் அப்போதெல்லாம் என் தலையை இறுக்கிப் பிடித்துக் காப்பாற்றின.''[1]

மு. வ. வின் இளமைக் காலம் பெரும்பாலும் திருப்பத்தூரில் கழிந்தது. திருப்பத்தூர் நகராட்சித் தொடக்கப் பள்ளியிலும் உயர்நிலைப் பள்ளியிலும் முறையே தொடக்கக் கல்வியும், உயர்நிலைக் கல்வியும் பெற்றார்.

ஆசிரியர்கள் :

தொடக்கப் பள்ளியில் மு. வ. அவர்கள் பாலப்பிள்ளை என்ற ஆசிரியரிடம் பயின்றார். அமைதியே உருவானவர் ஆசிரியர் பாலப்பிள்ளை. இளமையில் மு. வ. வை நன்கு உருவாக்கிய பெருமை அவர்க்கு உண்டு. அவ் வண்ணமே உயர்நிலைப் பள்ளியில் மேலும் சிறப்பாக மு. வ. வை உருவாக்கிய பெருமை முருகைய முதலியார்க்கு உண்டு. மு. வ. வைத் தமிழ் படிக்கத் தூண்டி, மாலை வேளைகளில் முருகன் கோயில் முன்றிலில் சில நூல்களைக் கற்பித்தார். அப்பொழுது முருகைய முதலியாரால் ஊன்றப் பெற்ற தமிழ்வித்து, மு. வ. அவர்களைத் தாமே தமிழ் பயின்று மின்னலிட வைத்தது!

மு. வ. வின் ஆசிரியர்களுள் மற்றொருவர் திருவேங்கடத்தையங்கார் என்பார். அவர் கணக்கு ஆசிரியர். மிகத் தேர்ச்சியாளர்; கற்பிக்கும் ஆற்றல் மிகுந்தவர். அதனினும் மு. வ. வின் மேல் தணியாத அன்பு செலுத்தியவர். நூற்றுக்கு நூறு மதிப்பெண் கணக்கில் பெறுமாறு மு. வ. வின் திறனை வளர்த்தவர். மு. வ. வின் கணக்குப் பாடத் தேர்ச்சி அவரைப் பொறியியல் போன்ற துறைகளுக்கே ஈர்த்திருக்க வேண்டும். அத் துறைக்கு அவ்வளவு சிறப்பும் உண்டு. ஆயினும் அவர் தம் உள்ளத்தின் ஆழத்தில் பதிந்திருந்த தமிழ் ஆர்வமே தலைதூக்கி நிற்பதாயிற்று.

---

1. யான் கண்ட இலங்கை. பக். 79.

**இலக்கண வகுப்பு :**

"யான் ஆறும் வகுப்பில் கற்றபோது எனக்குத் தமிழ் இலக்கணம் கற்பித்தவர் கணக்கு ஆசிரியர். அவர் தமிழ் கற்றுத் தேர்ந்தவர் அல்லர்; வடமொழியைப் பாடமாகக் கொண்டு தேர்ந்து கணக்கு ஆசிரியராக வந்தவர். ஆயினும் தமிழ் வகுப்பு அவரைத் தமிழ் கற்கத் தூண்டியது. அவர் நடத்திய வகுப்பில் இலக்கணப்பகுதி வரும்போதெல்லாம் மாணவர்க்குப் பேரச்சம் ஏற்படும். 'இலக்கணக் கேள்விகளுக்கு நன்ருக விடை எழுதுவோர்க்கு நல்ல மார்க்குத் தருவேன். அப்படித்தான் இவன் என்னிடம் 60, 65 என மார்க்கு வாங்குகிருன்' என்று மற்ற மாணவரிடம் கூறுவார். ஆனல் யான் தவறு செய்யும்போதெல்லாம் தண்டனையும் இரட்டிப்பாகத் தருவது அவர் வழக்கம்.

"ஒருநாள் இலக்கண வகுப்பில் வாக்கியங்கள் பலவற்றிற்கு எழுவாய் பயனிலை கூறிவந்தனர் மாணவர். எனக்கு முன் நான்காம் வரிசையில் உள்ள மாணவனுக்கு முறை வந்தது. 'அவனல் மணலைக் கயிருகத் திரிக்க முடியாது' என்பது அவனுக்குக் கொடுத்த வாக்கியம். 'அவனல்—எழுவாய்' என்ருன் அவன். 'மணலை—எழுவாய்' என்ருன் அடுத்தவன். 'கயிருக' என்ருன் மற்ருெருவன். 'திரிக்க—எழுவாய்' என்றேன் யான். எல்லோருக்கும் பிரம்பால் ஒவ்வோர் அடி கிடைத்தது. எனக்கு மட்டும் அன்று மூன்று அடி கிடைத்தன. 'கண்ணை மூடிக்கொண்டு அந்த வாக்கியத்தில் உள்ள ஒவ்வொரு சொல்லையும் எழுவாய் எழுவாய் என்கிறீர்களா?' என்று சினந்தார் ஆசிரியர். 'நீயும் அவர்களைப்போல் ஆகிவிட்டாய்' என்று வெகுண்டார் என்னை. 'அவன் என்பது தோன்ருஎழுவாய்' என்று அவரே விடை கூறினர்.

"யான் கண்ணை மூடிக்கொண்டு சொல்லவில்லை. ஆசிரியர் கற்பித்த முறையே சென்றுதான் எழுவாய் கண்டேன். முதலில் பயனிலை காணவேண்டும் என்றும் அது பெற்ற பிறகு, 'எவர் எது' முதலிய கேள்விகளை எழுப்பி விடையாக வருவது எழுவாய் எனக் கொள்ள வேண்டும் என்றும் அந்த ஆசிரியரே எனக்குக் கற்பித்திருந்தார்.

''முடியாது' பயனில்லை என்று கண்டேன். எது முடியாது? என்று கேட்டேன். திரிக்க முடியாது என்று விடை வந்தது. திரிக்க—எழுவாய் என்று கூறினேன்; மூன்று அடி பெற்றேன். ஆசிரியர்பால் எனக்குச் சிறிதும் வெறுப்பு இல்லை. அவர் 60, 65 என உயர்ந்த எண்களும், தவறியபோது இரட்டிப்புத் தண்டனையும் கொடுத்த கொடையே என்னை இன்று தமிழ்க் கடலுள் திளைக்கச் செய்துள்ளது என நினைந்து நன்றியுடையேனாகும் போது என் உள்ளம் குளிர்கின்றது.''

தமிழ் வகுப்பு :

கணக்குப் பாடத்தில் தேர்ச்சிமிக்க மு. வ. தமிழ்ப் பாடத்தின் மேல் பேரன்பு கொண்டார்; தமிழ் வகுப்பைப் பெரிதும் விரும்பினார்; தமிழ் கற்பித்த ஆசிரியர்பால் வயப்பட்டார். வயப்பட்டு 'ஆழ்ந்த பேர்அன்பு' செலுத்துமாறு தமிழாசிரியரும் வாய்த்தார்.

''ஆறு மாதத் தேர்வு முடிந்தது; விடுமுறையும் கழிந்தது; பள்ளிக்கூடம் திறந்த நாள் அது. மாணவர்கள் மகிழ்ச்சியோடு ஒருவரை ஒருவர் கண்டு அளவளாவினார்கள். மணி அடித்தது. எட்டாம் வகுப்பில் நானும் மற்றவர்களும் விரைந்து போய் 'இடம் பிடித்து' இருந்தோம். தமிழ் ஆசிரியர் வந்தார். உயர்ந்த பண்புகளுக்கெல்லாம் உறைவிடமான அவரைக் கண்டதும் எங்கள் மகிழ்ச்சி தெய்வத்தன்மை பெற்றுவிட்டது. வழக்கம் போல் முன்னுரையாக இன்மொழி பேசித் தமிழமுது ஊட்டினார்.''[1]

அழியா வாழ்வு :

மு.வ.விற்கு உயர்நிலைப்பள்ளியில் தமிழ் ஆசிரியராக விளங்கிய பெருந்தகை முருகைய முதலியார் என்பார். அவர் தனியே தமிழ் கற்பித்ததையும் முன்னர் அறிந்தோம். முருகைய முதலியாரை மாணவர்கள் அனைவரும் 'தமிழ் ஐயா' என்றே அழைத்தனர். அவர் எவ்வித ஊதியமும் எதிர்பார்க்காமல் ஆர்வமுள்ள மாணவர்களுக்கெல்லாம் வகுப்பிலே மட்டுமல்லாமல் வீட்டிலும் வெளிப்புறங்களிலும் தமிழ்ச் செல்வத்தை வாரி

1. *மொழியியற் கட்டுரைகள் 106.*

வழங்கும் வள்ளலாகத் திகழ்ந்தார். சமய நூல்களையும் கற்பித்தார். ''நால்வர் நான்மணிமாலை' முதலான சில நூல்களை அவரிடம் மு. வ. பாடங்கேட்டார். முருகைய முதலியார்மேல் மு. வ. கொண்ட அன்பு அளப்பரியது. உன்ன உன்ன உவகை அளிப்பது. தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய், எடுத்துக் காட்டான வாழ்வினராய், எண்ணத்தால் சிறந்த எளிய வாழ்வினராய்—மு. வ. விற்கு முருகைய முதலியார் காட்சி வழங்கினர். அக் காட்சிகள் பின்னாளில் அவர் புனைந்த கதைகளில் 'முருகையா' என்னும் பெருமகனாராக அமைந்து அழியா வாழ்வு பெற்றது. 'கள்ளோ? காவியமோ?' 'வாடா மலர்' என்னும் இரு புனைகதைகளிலும் முருகைய முதலியார் வாழ்கிறார்.

''முருகையா : சுடர்விழியின் கணவன். மிக நல்லவர். கிராமப் பள்ளிக்கூடத்து ஆசிரியர். பல புத்தகங்களையும் படித்தறிந்தவர். ஆடம்பரம் எதுவும் பிடிக்காது. மிக எளிய வெள்ளை ஆடையே உடுத்துக் கொள்வார். காப்பி போன்ற குடிவகை எதுவும் பழக்கம் இல்லை. காலம் அறிந்து தம் கடமையைச் செய்யும் பழக்கம் உடையவர். தேவைகளைக் குறைத்துக் கொண்டு சிக்கலும் துன்பமும் இல்லாமல் வாழ்கிறார். முருகையாவின் மனம் செடிகொடிகளில் இருந்து பூப்பறிப்பதும் ஒரு குற்றம் என்று எண்ணும் மனம்.''[1] இது முருகையா அவர்களின் ஓவியம் !

**நண்பர்கள் :**

மு. வ. பள்ளியில் பயின்ற நாளில் நல்ல நண்பர்கள் நால்வர் வாய்த்தனர். அவருள் ஒருவர் மளிகைக்கடை தாமோதர முதலியார் ; இவர் நல்ல செல்வர் ; நெருக்கமாகப் பழகியவர். 1973 ஆம் ஆண்டில் இயற்கை எய்தினர்.

பிறிதொருவர் கவிநயம் கந்தசாமி முதலியார். இவர் உயர்நிலைப் பள்ளிகளில் பணி செய்து அண்மையில் ஓய்வு பெற்றுள்ளார். கவிச்சுவை சொட்டச்சொட்டச் சொற்பொழிவு ஆற்றுதலில் தேர்ந்தவர். எனவே நண்பர்களால் 'கவிநயம்' என அழைக்கப்பெற்றார்.

---

1. டாக்டர் மு. வ. கலைக்களஞ்சியம். பக். 58. திரு. இரா. மோகன்.

இன்னொருவர் நகைச்சுவை நாயகர் திரு. பி. எஸ். குப்புசாமி முதலியார். இவர் சித்த மருத்துவர். மண்டிக் கடைக் கணக்கு எழுதுவதில் தேர்ச்சி மிக்கவர். நகைச்சுவை இவர் உரையாடலில் ததும்பி வழியும்.

மற்ெருரு நண்பர் பேராசிரியர் யோக சுந்தரம் ஆவர். இவர் சவ்வாது மலையடிவாரத்தில் உள்ள பூங்குளம் என்னும் ஊரினர். வேலூர் ஊரிசுக் கல்லூரியில் பல்லாண்டுகள் தமிழ்ப் பணி செய்து, மதுரைப் பல்கலைக் கழக அஞ்சல் வழிக் கல்வித் துறையிலும் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். வேலூர் காட்டுப் பாடியில் 'கண்ணகத்தில்' வாழ்ந்து வருகிருர்.

இந் நண்பர்களின் நட்பு, காலமெல்லாம் பெருகிக் கனிவு மிக்கதாக விளங்கியது. 'நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை' என்பதற்கு இவர்கள் நட்பு சீரிய எடுத்துக்காட்டாக இலங்கிற்று.

அலுவல் நாட்டம் :

பள்ளி இறுதித் தேர்வினை மு. வ. 1928 ஆம் ஆண்டில் எழுதிச் சிறப்பான தேர்ச்சி பெற்ருர். கல்லூரியில் மேற்கொண்டு படிப்பதற்குக் குடும்பப் பொருள் நிலை இடந்தரவில்லை. ஆதலால் அவ்வளவில் அமைதிகொண்டு அலுவல் பார்க்கும் நிலைக்கு ஏவியது.

"படித்தபின் வேலைக்குத் தேடி அலையும் அலைச்சலும், கவலையும் அந்தக் காலத்தில் இல்லை. உடனே தொழில் கிடைத்தது. அரசாங்க ஊழியன் ஆனேன்" என்கிருர் மு. வ.[1]

அரசினர் பணி :

திருப்பத்தூர் வட்ட ஆட்சி அலுவலகத்தில் ஓர் எழுத்தர் வேலை மு. வ. வுக்குக் கிடைத்தது. அந்த இளமைப் பருவத்திலேயே எடுத்த பணியை ஒழுங்காகவும் செம்மையாகவும் முடிக்கும் திறம் பெற்றிருந்தார். ஆதலால், மேல்நிலை அலுவலர்களின் அன்பும் பாராட்டும் இயல்பாக வாய்த்தன. இவர்தம்

1. தினத்தந்தி. 8—7—1963.

செம்மையும் சால்பும் துறைக்கு ஈர்த்துச் சென்றன. ஆங்கே எழுத்தராளுர். கையூட்டு கணக்கின்றி வருதற்கு வாய்ப்பான அத் துறையிலும் கடமை தவறினர் அல்லர். அறநெறி அன்றிப் பிறநெறி புகுந்தார் அல்லர். கொண்ட குறிக்கோளில் அணுவும் அசைவு இன்றிக் கடமை ஆற்றினர். ஆர்வம் பெருக இவர் செய்த அயராப்பணி, அலுவலர்களைக் கவர்ந்த அதே பொழுதில் இவர் உடலைத் தாக்கிற்று.

"ஆற்றுவார் மேற்றே பொறை" என்பது வள்ளுவம். தாங்குவார் மேல் தானே சுமை ஏறும்! இந்நெறிப்படி மு. வ. வின் மேல் வேலைச் சுமை அளவின்றி ஏறியது. இயல்பாகவே மெலிந்த உடம்பினரான மு. வ. தொடர்ந்து செய்த கடும் உழைப்பால் பலமுறை நோய்களுக்கு ஆட்பட்டார். அப்பொழுதில் உடலைப் பேணி உறுதியாக்க வேண்டும் என எண்ணினர். கடுமையான 'தண்டால்' முதலிய தசை நார்ப் பயிற்சிகளைச் செய்வதில் ஈடுபட்டார். நலிந்த உடல் இப் பயிற்சியைத் தாங்கும் வலுவை இழந்தது. அதனால் மூச்சு இழுப்பு என்னும் 'ஈளை' நோய்க்கு ஆட்பட்டு அல்லலுற்றார். அவ்வல்லலே அன்னைத் தமிழுக்கு நல்வாழ்வு ஆயிற்று!

"ஒருநாள் வெளியூரில் அலைந்த பொழுது இரத்தம் இரத்தமாக உமிழும் நிலையைக் கண்டவர்கள், என்னைப்பற்றி மிகக் கவலைப் பட்டார்கள். மருந்துகள் பல சாப்பிட்டும் உடல் தேருமையால் தொழிலை விட்டுவிட்டு, மூன்று ஆண்டுகள் கிராமத்தில் தங்கி ஓய்வு கொண்டேன். அந்த ஓய்வுக் காலமே என்னைத் தமிழ்த்துறைக்கு இழுத்து வந்தது என்று கூற வேண்டும்."[1]

**நாட்டுப்பற்று:**

1928 ஆம் ஆண்டு முதல் 1931 ஆம் ஆண்டுவரை மூன்று ஆண்டுக் காலமே மு. வ. அரசினர் பணிபுரிந்தார். அக் குறுகிய காலத்திலும் எடுத்த பணியில் சுடர்விட அவரால் முடிந்தது. தம் கொள்கையை விட்டுக்கொடுக்காமல் மேலதிகாரிகளின் பாராட்டைப்பெறவும் முடிந்தது. காட்டாற்று வெள்ளம்

---

1. *தினத்தந்தி 8-7-1973.*

போன்ற காளைப் பருவத்திலேயே கட்டுத் திட்டம் கொண்டு வாழ்ந்த வாழ்வே, அவரை அந் நிலைக்கு ஆட்படுத்திற்று. நாட்டுப் பற்றும் விடுதலை வேட்கையும் கொண்ட மு. வ. அவற்றை ஒடுக்குவதையே குறியாகக் கொண்ட அரசுப் பணியில் பாராட்டு மாறு கடமை புரிந்தது வியப்பேயாம். அதனினும் வியப்பு, அங்கும் நாட்டுப்பற்றை விடாப் பிடியாகக் கொண்டு விளங்கியதே யாம். மு. வ. அவர்களின் வளர்ச்சியில் தொடக்கநாள் முதலே பேரார்வம் காட்டியவராகிய திரு. கா. அ. சண்முக முதலியார் அவர்களின் மைந்தரும், பச்சையப்பன் கல்லூரி பி. ஒ. எல். (ஆனர்சு) முதலணி மாணவர்கள் நால்வருள் ஒருவருமாகிய திரு. கா. அ. ச. இரகுநாயகன் அவர்கள் விறுமிக்க செய்தி ஒன்றை விளக்குகின்றார்.

"அந்தநாளில் இவர் உடுப்பது முழுதும் கதராடை. நாட்டுப்பற்று மிக்கவராய் இருந்தார். ஒருநாள் வேலூர் சென்று, மாவட்ட ஆட்சித்தலைவரிடம் நேரில் கடிதம் கொடுத்துவரும் பணி இவருக்கு இடப்பட்டது. அப்போது நாட்டு விடுதலைப் போர் தீவிர நிலையில் இருந்தது. கதர் அணிந்தவர்கள் எல் லோரையும் ஆங்கில ஆட்சியாளர்கள் பகைவராய்க் கருதி வெறுத்தனர். இந்த நிலையில் மு. வ. அவர்கள் கதராடை அணிந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்முன் செல்வது தக்கதா என்று நண்பர்கள் தயங்கினர். இவருடைய பணிக்கு இடையூறு விளையுமோ என்று அஞ்சினர். ஆனால் மு. வ. அவர்கள் தயக்கம் ஏதும் கொள்ளவில்லை. "வேலையை இழக்க நேரினும் சரி; ஆடையை நான் மாற்றிக் கொள்ளேன்" என்று உறுதியாக நின்றார். முன்னணித் தலைவர்கள் ஒருசிலர் வாழ்க் கையில் மட்டுமே காணக்கூடிய மன வலிமையை மு. வ. அவர் களிடம் காண்கின்றோம்.[1]

அரசினர் பணியை விடுத்த மு. வ. தம் சொந்த ஊரான வேலத்துக்கு வந்து சேர்ந்தார். அது முதல் அவர் வாழ்வு முழுமையான தமிழ் வாழ்வு ஆயிற்று.

———

1. பேராசிரியர் மு. வ. பேராசிரியர்—அ. ப. ப. கருத்தரங்குக் கட்டுரைகள் பக். 49.

# 4. வேலம் தந்த பெருவாழ்வு

திருப்பத்தூரில் இருந்து 1931 ஆம் ஆண்டில் வேலத்திற்கு மு. வ. வந்து சேர்ந்தார். 1934 ஆம் ஆண்டுவரை மூன்றாண்டுக் காலம் அங்கே தங்கினார். அக்காலம் பொற்காலம் ஆயிற்று! மு. வ. வின் வாழ்வில் வாய்த்த பல்வேறு ஏற்றங்களுக்கும் திருப்பு முனையாக இருந்தது இந்த மூன்று ஆண்டுக் காலமும், வேலத்தின் இயற்கை வாழ்வுமேயாம்.

"ஓய்வு கொள்ளக் கிராமத்திற்குச் சென்ற நான், ஓயாமல் இரவும் பகலும் தமிழ் நூல்களைக் கற்றேன்"[1] என்கிறார். மு. வ. இஃது அரிய திருப்பமல்லவா !

**இயற்கை வாழ்வும் இயற்கை மருத்துவமும் :**

"மனிதன் இயற்கையோடு உறவாடல் வேண்டும். காடுகளிலும் மலைகளிலும் புகுந்து ஆங்காங்குள்ள இயற்கை வனப்பைக் கண்டு கண்டு மகிழ்தல் வேண்டும். செடிகளின் அழகும், கொடிகளின் அழகும், பூக்களின் அழகும், பறவைகளின் அழகும், பிற அழகுகளும் அடிக்கடி மனத்திற் படிவதால் உடலில் அழகரும்பும். கடலோரத் தமர்ந்து கடலைக் காணக் காண மகிழ்ச்சி பொங்கும். வானத்தை நோக்கினால் அழகிய நீல நிறமும், விண்மீன்களும், திங்களும் மகிழ்ச்சியூட்டும். மகிழ்ச்சி அழகை வளர்க்கும். ஆதலால் மனிதன் என்றும் இயற்கை வாழ்வை விரும்புதல் வேண்டும்"[2] என்றும்,

"இயற்கையோடு இயைந்து வாழ்வோர்க்கு எவ்விதப் பிணியும் வாராது. அவர்க்கு எத்தகைய வைத்தியமும் வேண்டுவதில்லை. இயற்கையினின்றும் வழுக்கி வீழ்ந்தோரை நோய் அடர்க்கும். அவர்க்கு வைத்தியம் வேண்டற்பாலது. வைத்தியத்துள் இயற்கை வைத்தியம் பொருந்தியது. இயற்கை

---

1. *தினத்தந்தி. 8-7-1963.* 2. *தமிழ்ச்சோலை. 208.*

வைத்தியம் இயற்கை வாழ்வை மீண்டும் கூட்டும்[1]'' என்று தமிழ்ப் பெரியார் திரு. வி. க். கூறும் இயற்கை வாழ்வைத் தேர்ந்தார் மு. வ. இயற்கை மருத்துவத்தை நாடினார்.

வேலத்து மலையின் இயற்கைச் சூழலில் தம் நெஞ்சைப் பறிகொடுத்தார் மு. வ. ஆறும், அருவியும், ஏரியும், குளமும் அவரை வயப்படுத்தின. மரமும் செடியும் கொடியும் இன்புறுத்தின. வயலும் சோலையும் கானும் களிப்பூட்டின. விண்ணும் மண்ணும் வியப்புறுத்தின. இயற்கையில் ஈடுபட்டுத் தோய்ந்து நோய்த்துயரை மறந்தார். இயற்கையின் அரவணைப்பில் நோயும் தன் குறும்பைக் காட்டாது ஒழிந்தது. உள்ளம் உடற் கட்டைக் கடந்து இயற்கைத் தெய்வத் திருக்கோயில் வழிபாட்டில் நிலைத்தபோது நோய்ப்பேய்மை தலைகாட்டவும் நாணி ஒடுங்கியது! தம் பட்டறிவு மட்டும் அல்லாமல் சான்றோர் உரைகளும் இயற்கை மருத்துவத்துக்கு அரண் செய்து நிற்பதை உணர்ந்தார். அவ்வழியே செவ்வழி எனத் துணிந்தார்.

ஒரு நண்பர் :

வேலத்தில் இருந்தபோது ஒருமுறை தம் பள்ளி நண்பராம் யோகசுந்தரம் அவர்களைக் காண்பதற்கு வேலூர்க்குச் சென்றார். அவர் வேலூர் ஊரீசுக் கல்லூரியில் இடைநிலை வகுப்புப் பயின்று கொண்டிருந்தார்.

இளமையில் யோகசுந்தரமும் மு. வ. வும் இரவில் நிலவொளியில் நெடுந்தொலை நடந்து செல்லும் வழக்கம் கொண்டிருந்தனர். யோகசுந்தரத்தின் ஊராகிய பூங்குளம் சவ்வாது மலையின் அடிவாரத்தில் இருந்ததனால் மு. வ. அவ்வூர்க்கு அடிக்கடி செல்வது வழக்கம். அத்தகைய பொழுதுகளில் இருவரும் சவ்வாது மலைமேல் ஏறிச் சென்று உரக்க ஒலி எழுப்பி மலை முழைஞ்சிலின் எதிரொலி கேட்டு இன்புறுவர்; மலைச்சாரலில் உலவி மகிழ்வர்; காலைப் பொழுதில் மலைமேல் ஏறிச் சென்று மாலை மையிருட்டுச் சூழ்ந்த பின்னரே மலையை விட்டுக் கீழே இறங்குவர்; ஒருமுறை பலாப்பழத்தை மட்டும் தின்று கொண்டு,

1. தமிழ்த்தென்றல் பக். 36.

முழுநாளும் தங்கியிருந்து ஊர் திரும்பினர். அத்தகைய இயற்கைக் காதல் வாழ்வினர் மு. வ. வும், யோகசுந்தரமும்.

**ஒரு நூல் :**

வேலூரில் யோகசுந்தரத்தைப் போய்ப் பார்த்த மு. வ., அவர் மேசையின் மேல், செருமனிநாட்டு இயற்கை மருத்துவப் பேரறிஞர் 'கூன்' என்பார் எழுதிய எல்லா நோய்களுக்குமான ஒரே மருந்து (The oneaess of cure of all diseases) என்னும் நூலினைக் காண நேர்ந்தது. அதனை மேற்போக்காகப் புரட்டிப் பார்த்தார். அவ்வளவிலேயே அந்நூல் இவர் நெஞ்சைக் கொள்ளை கொண்டது. தம் நண்பரிடம் கெஞ்சிக் கேட்டு (ஏனெனில் அந்நூல் வேறொரு நண்பருடையதாகும்) வாங்கிக் கொண்டு வேலத்திற்குத் திரும்பினர்.

**கடைப்பிடி :**

நண்பரிடம் வாங்கிக் கொண்டு வந்த நூலை எழுவாய் முதல் இறுவாய் வரை ஆழ்ந்து கற்றார்; ஆய்ந்து தெளிந்தார்; அந் நூலில் கூறப்பட்டிருந்த இயற்கைமருத்துவ முறைகளைக் கையாள்வதென உறுதி கொண்டார்; அவ்வுறுதியால் பயனும் கண்டார். இருபதாவது வயதில் தொடங்கிய இயற்கை மருத்துவம், மு. வ. வின் வாழ்நாளின் இறுதிநாளுக்கு முதல்நாள் வரை எள்ளளவும் தவறாமல் கடைப்பிடியாகக் கொள்ளப் பெற்றது.

இளமைதொட்டே கடைப்பிடிக்கப் பெற்ற இயற்கை மருத்துவத் திண்மை இலங்கையில் குரல் எழுப்புகின்றது.

"நான் காந்தி வழியில் நடப்பவன். அவர் அம்மை குத்திக் கொள்ளக் கூடாது என்று பக்கம் பக்கமாக எழுதியிருக்கிறார். நான் அவருடைய கொள்கையை நம்புகிறவன். 'என்னைப் போன்றவர்களுக்கு விதிவிலக்கு இல்லையா' என்றேன்.

"உடனே அவர் (தணிக்கை அலுவலர்) அம்மை பற்றிய சான்றை மறுபடியும் புரட்டிப் பார்த்து, என் கையையும் நீட்டச் சொல்லிப் பார்த்தார். 'இதோ குத்திக் கொண்டிருக்கிறீர்களே' என்றார்.

"இது இரண்டாவது முறையாகக் குத்தியது. காந்தியடிகள் உயிரோடு இருந்த வரையில் நான் அம்மை குத்திக் கொண்டதே இல்லை. அவர் மறைந்த பிறகு இனி அவருடைய கொள்கைக்கு அரசாங்க ஆதரவு சிறிதும் இருக்காது என்று சென்ற ஆண்டில் குத்திக் கொண்டேன். இந்த ஆண்டில் அதன் சான்றுபெற முடியாமையால் இலங்கைக்கு வருவதற்காக மறுபடியும் குத்திக் கொண்டேன். மனச் சான்றுக்கு மாறாகச் செய்து கொண்ட தவறுதான்' என்றேன்.

* * * * *

'அம்மை வந்தால் என்ன செய்வீர்கள்?' என்று கேட்டார்.

'எவருக்கும் அம்மை குத்தக் கூடாது என்று நான் சொல்லவில்லையே. யார் தம்மைத் தாம் காத்துக் கொள்ள முடியுமோ அவர்களுக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கலாம். என்னைப் பொறுத்த வரையில் எனக்கு எந்தக் காரணத்தாலும் அம்மை வராது என்று உறுதி கூறுவேன். என் உடம்பு என் வசமாக இருக்கிறது. இப்படி என்னைப்போல் உறுதிகூற வல்லவர்களிடம் எழுதி வாங்கிக் கொண்டு அனுமதி தரலாமே, தவறி அம்மை வந்தால் என்னைத் தண்டிக்கலாமே' என்றேன்."[1]

இயற்கை மருத்துவத்தில் மு. வ. கொண்டிருந்த அழுத்தமான பற்றும், தம் உடலின்மேல் கொண்டிருந்த ஆட்சித் திறமும், நம்பிக்கை மேம்பாடும், இவ் வுரையாடலால் வெட்ட வெளிச்சம் ஆகின்றன அல்லவா!

**இன்பத் தமிழ் நலம்:**

இயற்கை வாழ்வும், இயற்கை மருத்துவமும் மட்டுமோ மு. வ. வின் நோயை அகற்றின? இயற்கை இன்பத் தமிழும் நலம் செய்தது. இயற்கை, மருந்தாக உதவியது என்றால், இயற்கைத் தமிழ் அமிழ்தாக இருந்து ஊட்டமுற வளர்த்தது.

"இயற்கை ஓவியம் பத்துப் பாட்டு;
இயற்கை இன்பக் கலம் கலித்தொகை;

---

1. *யான் கண்ட இலங்கை. பக். 39-40.*

இயற்கை வாழ்வில்லம் திருக்குறள்;
இயற்கை இன்பவாழ்வு நிலையங்கள்
சிலப்பதிகாரமும் மணிமேகலையும்;
இயற்கைத் தவம் சிந்தாமணி;
இயற்கைப் பரிணமம் கம்பராமாயணம்;
இயற்கை அன்பு பெரியபுராணம்;
இயற்கை இறையுறையுள் தேவார திருவாசக
திருவாய் மொழிகள்''[1]

இத்தகைய இயற்கை இன்பத்தமிழ் உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே வளர்த்து உயிராக்கம் செய்யாது ஒழியுமோ?

**வித்துவான் முதனிலைத் தேர்வு :**

வேலத்தில் வாழ்ந்த மூன்றாண்டுக் காலமும் தமிழ் நூல்களைக் கற்பதிலேயே செலவிட்டார். ''யான் படிக்கும் போது என்னை நான் அறியேன்; ஊன்படிக்கும்; உளம்படிக்கும்; உயிர் படிக்கும்; உயிர்க்கு உயிரும்தான் படிக்கும்'' என்னுமாறு தோய்ந்து கற்றார். 1934 ஆம் ஆண்டில் வித்துவான் முதனிலைத் தேர்வு எழுதிச் சிறப்பாக வெற்றி பெற்றார்.

வித்துவான் தேர்வை மு. வ. முழுமையாக முடிக்கும் வரை முத்தமிழ் அன்னை காத்துக் கிடக்கவில்லை. விரைந்து தன் செல்வ மகனைத் தன் திருப்பணிக்கு ஆளாக்கத் துடித்தாள். அத் துடிப்பு மு. வ. வின் உள்ளங்கவர்ந்த 'தமிழையா' முருகைய முதலியார் 'ஓய்வு' ஆயிற்று. எந்த வகுப்பிலே எவர் அரவணைப்பிலே உருகி உருகிப் பாடம் கேட்டாரோ அவ் வகுப்பிலே அவர் இடத்திலேயே பாடம் கற்பிக்கும் பேறு வாய்த்தது. வேலை வேண்டும் என விண்ணப்பித்து முயன்று பெற்ற வாய்ப்போ அது? அன்று! அன்று!

**தேடி வந்த வேலை :**

மு. வ. அவர்கள் வருவாய்த்துறையில் பணி செய்தார் அன்றோ? அக் காலத்தில் அவர் ஆற்றிய கடமைச் சிறப்பையும்,

1. சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து. பக். 22-23.

கடைப்பிடித்த செம்மையையும் நன்கு அறிந்த வருவாய்த்துறை ஒப்பந்தக்காரர் 'நாயுடு சகோதரர்' என்பார். அவரே தம் தனிச் செல்வாக்கினால் நகராண்மைக்கழக உயர்நிலைப் பள்ளியில் வேலைக்கு அமர்த்தினார். முருகைய முதலியார் அமர்ந்து பணியாற்றிய இடத்திலே தாம் இருந்து பணியாற்றக் கிடைத்த வாய்ப்பை உன்னி உன்னி உளம் மகிழ்ந்தார் மு. வ. தம் இடத்திலே தகுதி சான்ற தம் மாணவர் அமர்த்தப் பெற்றதற்குப் பேருவகை உற்றார் முருகைய முதலியார். மு. வ. வின் வாழ்வு வேலத்தில் இருந்து திருப்பத்தூர்க்கு மீண்டும் மாறியதும் வேலம் தந்த பெருவாழ்வு அன்றோ இது!

# 5. திருப்பத்தூர் சேர்த்த திரு

## உடைத் தோற்றம் :

"மு. வ. அவர்கள், தமிழாசிரியராகப் பணியேற்ற முதல் நாளிலேயே தமக்கென ஓர் உடை அமைப்பை வகுத்துக் கொண்டார். அந்த அமைப்பு அவர் உயர்நிலைப் பள்ளியில் பணிசெய்த ஐந்து ஆண்டுகளில் ஒரு நாளும் மாறவில்லை. ஒவ்வொரு நாளும் அதே அமைப்புடன் விளங்கினார். வெள்ளைக் கைத்தறி வேட்டியை இடுப்பில் கச்சம் வைத்துக் கட்டுவார். வெள்ளைக் கதர்ச் சட்டையும் அதன்மேல் வண்ணக் கதர்க் கோட்டும் அணிவார். தலையில் பாகை அணி செய்யும். சிறு சந்தனப் பொட்டு முகத்தில் விளங்கும். மு. வ. அவர்களின் உடையில் பகட்டு இருக்காது. ஆசிரியருக்குரிய தோற்றம் பொலியும். கந்தையையும் அழுக்கையும் அவர் உடையில் காணமுடியாது."[1]

## வகுப்பு நடத்தும் திறம் :

மாணவர் உள்ளம் கொள்ளுமாறு மு. வ. பாடம் நடத்தினார் என்பதைக் கூற வேண்டியதில்லை. அவர், தாம் வளர்ந்தவர், கற்றவர், ஆசிரியர், கட்டளை இடுபவர் — என்பதை மறந்து மாணவரோடு மாணவராக இழைந்து நின்று கற்பித்தார். சிறுவர்க்கு நடைபயிற்றும் தாயர் தாமும் தளர்நடை நடந்து பயிற்றுவிப்பது போல, மாணவர் மகிழும்வண்ணம் வழிகாட்டியாய்அமைந்து கற்பித்தார். அவர் வகுப்பு ஆய்வுப் பட்டறையாகவும், கருத்தரங்கமாகவும், சிந்தனை மேடையாகவும் இருந்தது எனின் உண்மையேயாம். இதோ ஒரு வகுப்பு நடைபெறுவதைக் காணலாம்.

---

1. கா. அ. ச. ரகுநாயகன். பேராசிரியர் மு. வ. - பேராசிரியர் அ. மு. ப. கருத்தரங்கக் கட்டுரைகள். பக். 47.

ஒரு வகுப்பு :

"எழுவாய் பயனிலை கற்பிக்கும் வாய்ப்பு எனக்கு ஒரு நாள் வாய்த்தது. 'அவருடைய புகழை எவராலும் சொல்ல முடியாது' என்பது வாக்கியம். மாணவரைக் கேட்டேன். வெவ்வேறு வகையான விடைகள் வந்தன. எல்லாம் தவறே 'முடியாது—எது' என்று கேள்வி கேட்குமாறு வழிகாட்டினேன். அப்போதும் பலரும் திகைத்தனர். ஒருவன் எழுந்து 'சொல்வது—எழுவாய்' என்றான். 'வாக்கியத்தில் இல்லையே' என்றேன். மற்றொருவன் 'தோன்றா எழுவாய்' என்றான். 'தோன்றா எழுவாயினைச் சேர்த்துப் படித்தால் வாக்கியம் நிரம்ப வேண்டும்; இது மிகை யாகின்றது. ஆகையால் தோன்றா எழுவாய் ஆகாது. 'சொல்ல' என்பதை எழுவாயாகக் கொள்ள வேண்டும்' என்று கற்பித் தேன். இன்னொரு மாணவன் எழுந்தான். 'சொல்ல—வினை யெச்சம் என்று சொல்லிக் கொடுத்தீர்கள்' என்றான். மற்றொரு வன் எழுந்து ஏதோ கேட்க முயன்று வாளா அமர்ந்தான். இன்னொருவன் 'பெயர்ச்சொல்தானே எழுவாயாக வரும்?' 'வினையெச்சம் எழுவாய் ஆகுமா?' என்று கேட்டான்.

மாணவர் மூளையை எண்ணி வியந்தேன். இது போன்ற வாக்கியம் என் ஆறும் வகுப்புக் கல்வி முதற்கொண்டே என் உள்ளத்தைக் கலக்கித் தெளிவித்திருப்பதால், அன்று மாணவர் உள்ளம் கொள்ளுமாறு விளக்க முடிந்தது."[1]

பிறவி ஆசிரியர் :

மாணவப்பருவம் புதிது புதிதாக அறிந்து கொள்ளத் துடிக்கும் பருவம். சிந்திப்பதற்கும் செயலாற்றுவதற்கும் வாய்ப் புகளைத் தேடும் பருவம். அவர்கள் ஆர்வத்தையும் ஆக்கத் திறனையும் வளர்க்கும் வகையில் ஆசிரியப்பணி அமையுமாயின் அது வெற்றிபெற்ற பணி ஆகும். இல்லையானால் தோல்விமேல் தோல்வியும், கற்பித்தலின்மேல் வெறுப்பும், மாணவர்கள்மேல் சலிப்பும் உண்டாகும். மாணவர்கள் மையத்தில் பூஞ்சோலையில் உலவுவது போலவும், அருவிச்சூழலில் இருப்பது போலவும்

1. மொழியியற் கட்டுரைகள். பக். 24-25.

உணர்ந்து பணி செய்பவர் மாணவர்களுக்குத் தந்தையாவார்; தாய் ஆவார்; தெய்வமும் ஆவார்! ஊரெல்லாம் உறவினர் ஆவார்! அவர் நினைத்தது நடக்கும்! அவர் வாழ்வு நிலைக்கும். இத்தகைய ஆசிரியராக — பிறவி ஆசிரியராக அமைந்தவர் மு. வ. ஆதலின் அவர் ஆசிரியராகவும், ஆசிரியர்க்கு ஆசிரிய ராகவும் திகழ்ந்தார்.

ஆசிரியர் மு. வ. மாணவராக மாறுகிறார். மாணவர் உள்ளத்தை உணர்கிறார். தாம் மாணவராக இருந்த காலத்துத் தம் நிகழ்ச்சிகளையும் மறவாமல் போற்றுகிறார். மாணவர் தவறும் இடங்களில் பரிவுடன் பார்க்கிறார். காரணம் காண்கிறார்; வழிகாட்டும் ஒளிவிளக்காகிறார்.

"இளமையில் பள்ளிக்கூடத்தில் படித்தபோது நான் ஆசிரியரிடம் கேட்ட ஒரு கேள்வி நினைவுக்கு வருகின்றது. 'சென்னையில் சைனாபசார் இருக்கின்றதே அதுபோல் சைனாவில் சென்னை பசார் உண்டா?' என்று கேட்டேன். 'நீங்கள் எல்லாம் பெரியவர்களாகிச் சைனாவுக்குப் போய் வியாபாரம் செய்தால் அப்படி ஏற்படும்' என்றார் ஆசிரியர்"[1] எனத் தம் இளமையை — இளமை நினைவை — மறவாது போற்றும் மு. வ. வின் ஆசிரியப் பணிச் சிறப்பை விரிக்க வேண்டுவது இல்லை.

திரு. வி. க. தொடர்பு:

உயர்நிலைப் பள்ளிக் கல்வி முடிந்தபின் திரு. வி. க. எழுதிய உரைநடை நூல்களைக் கற்றார்.[2] கற்ற நாள் முதல் அதன் நடையமைப்பிலும், பொருள்நயத்திலும் ஒன்றினார். அவர் இயற்றிய ஒவ்வொரு நூலையும் மறைமொழி யெனக் கொண்டு ஓதினார். அவர் சொற்பொழிவு கேட்பதற்கு வாய்ப்பு நேரும்போதெல்லாம் தவறாது கேட்டார். எட்டி நின்று கேட்டு மகிழ்ந்தவர் ஒட்டி நின்று உறவாடும் பேறும் பெற்றார். அவருடன் உரையாடி இன்புற்றதுடன் உடன் சொற்பொழிவாளராகவும் உலாவுதற்குச் செல்லுங்கால் உசாத் துணையாகவும் வளர்ந்தார்.

---

1. யான் கண்ட இலங்கை. பக். 44.
2. மொழியியற் கட்டுரைகள். பக். 25.

மு. வ. வின் உள்ளத்தைத் திரு. வி. க. ஆட்கொண்டது போலவே, திரு. வி. க. வின் உள்ளத்தில் மு. வ. வும் இடம் பெற்றார். இருவர் இன்ப அன்பும் படிப்படியே வளர்ந்து இணையற்று ஓங்கின. பின்னாளில் திரு. வி. க. மு. வ. வின் புனை கதைகளில் உயிரோட்டமுள்ள ஒரு படைப்பானார். அவர் சொற்பொழிவுகள் கதைகளில் இடம் பெற்றன. அவர் கருத்துகள் நூலில், பொதிந்து கிடந்து கவின் செய்தன. கிடைத்தற்கரிய இத் தொடர்பை வளர்த்துப் பெருக்கி வாழ்வாங்கு வாழச்செய்த பெருமை திருப்பத்தூர்க்கு உண்டு. மு. வ. வுக்குத் திருப்பத்தூர் சேர்த்த திருவினுள் இதுவும் ஒன்றாம்.

வாழ்க்கைக் குறிப்பு :

'வாலாஜா, இராணிப்பேட்டை, வேலூர், வெட்டுவாணம் முதலிய இடங்கட்கு யான் அடிக்கடி போவேன். கூட்டங்களில் யான் மு. வரதராஜனாரைப் பார்ப்பேன். அவர் என்னைக் கண்டதும் ஒதுங்கி ஒதுங்கி நிற்பர். பின்னை நாங்கள் நெருங்கிப் பழகினோம். வரதராஜனார் முக அமைப்பு என் மூளைக்கு வேலை அளித்தது. அதைச் சிந்திக்கச் சிந்திக்க என் மூளை அவர் மூளையை நண்ணியது. நுண்ணறிவுக் கேற்ற முகம் வடிந்திருக்கிறது என்ற முடிவுக்கு வந்தேன்.

"முதல் முதல் வரதராஜனார் பேச்சை யான் வெட்டுவாணத்தில் கேட்டேன். அப்போது அவர் முக அமைப்பைப் பற்றி யான் கொண்ட முடிவை உறுதிப் படுத்தியது. அவரது எழுத்தும் பேச்சைப் போலவே இருத்தல் கண்டேன்.

* * *

"கூட்டம் கூடுதற்கு முன்னர்க் காலையிலும் கூட்டம் முடிந்த பின்னர் மாலையிலும் வரதராஜனாரும் யானும் ஆற்றங்கரைக்குச் செல்வோம். தோட்டங்கட்குப் போவோம். இயற்கையை எண்ணுவோம்; பேசுவோம்; உண்போம். அவர் திருப்பத்தூரில் வதிந்த போது இயற்கையோடியைந்த வாழ்வு அவரிடம் தானே தவழ்ந்தது"[1] என்று திரு. வி. க. அவர்கள் குறிப்பிட்டுரைக்கும் வாழ்வு திருப்பத்தூர் தந்ததுதானே !

---

1. திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள் பக். 803-4.

மங்கலமனையறம் :

வித்துவான் முதனிலை முடித்த அளவில்தானே தமிழாசிரியர் வேலையில் அமர்ந்தார் மு. வ. ஆதலால் இறுதி நிலைத் தேர்வு எழுதுதற்கும் பயின்றார். ஆசிரியப் பணியின் இடையே தேர்வுக்குப் பயில்வது அவருக்கு ஒரு தடங்கலாக இருந்தது இல்லை. அவ்வாறு இருந்திருக்குமாயின் அவர் படிப்படியே பெற்ற ஏற்றங்களைப் பெற்றிருத்தற்கு இயலாது. பணியோடு தேர்வுக்குப் பயின்று வரும் பொழுதிலேயே அவருக்குத் திருமணம் செய்து வைக்கவேண்டும் என்னும் ஆவலும் பெற்றோர்க்கு ஏற்பட்டது. அஃது இயற்கையான ஆவலேயாம். 'உண்பதும் உறங்குவதும் அன்றி வேறொன்று அறியேன்' என்று இருப்பார்க்குக் கூடப் பெற்றோர் உரிய வயதில் திருமணம் முடித்துப் பார்க்க வேண்டும் என்று செயல்படுவதைக் காணும்போது, இவ்வளவு நாள் பொறுத்ததற்கே பெற்றோர்களைப் பாராட்டுதல் வேண்டும்.

மு. வ. வின் மூத்த அத்தையார் சஞ்சீவி அம்மையார் என்பவர். அவர் ஆண்மக்கள் பன்னிருவரைப் பெற்றார். பெண் மகவு ஒன்றுகூடப் பிறக்கவில்லை. இவ்வம்மையாரின் மைந்தருள் ஒருவர் சாரங்கபாணி முதலியார் என்பார். அவர் நற்பண்புகளின் உறைவிடமாக விளங்கியவர். அம்மூரைச் சேர்ந்தவர். சென்னையில் 'வர்ணக் கடை' வைத்துச் செல்வ வளம் பெருக்கியவர்; பொருட் செல்வத்தினும் கல்விச் செல்வத்திற்கு மிகுந்த மதிப்புத் தருபவர். இவர் அரக்கோணத்திற்கு அருகில் உள்ள நாகவேடு என்னும் ஊரை அடுத்த பத்தித்தூரில் பெண் கொண்டிருந்தார். பெண்ணின் பெயர் விருத்தாம்பாள் என்பது.

இராதா அம்மையார் :

விருத்தாம்பாள் சிறந்த அழகுடையவர்; நற்குடியில் பிறந்தவர்; செல்வமாக வளர்ந்தவர்; இவர்களின் இல்லறத்தின் பயனாக மக்கள் அறுவர் பிறந்தனர். அவர்களுள் ஆண் மக்கள் ஐவரும் பெண் மகளார் ஒருவரும் ஆயினர். பெண் மகளார் பெயர் இராதா அம்மையார். இவர் மூன்றாவது மகவாகப் பிறந்தார். இவர் பிறந்த ஆண்டு 1917 ஆகும்.

இராதா அம்மையார்க்குப் பெற்ரோர் இட்ட பெயர் 'சாரதா பாய்' என்பதாகும். இவர் ஐந்து ஆண்மக்களுக்கு இடையே பிறந்த ஒரே ஒரு பெண் மகவு ஆதலால் மிகச் செல்வமாக வளர்க்கப் பெற்ருர். ''இவளைப் பெற்ற வயிறுடையாள் என்ன நோன்பு நோற்ருளோ'' என்று பாராட்டுமாறு எழிலும் பண்பும் கொஞ்ச வளர்ந்தார்; உள்ளூர்ப் பள்ளியில் ஏழாம் வகுப்பு வரை பயின்ருர். நல்லிளமைப் பருவத்திலேயே தேவார திருவாசகப் பாடல்களை நயமுறப் பாடி உருகும் திறம் பெற்ருர்.

**பிள்ளை விளையாட்டு :**

இராதா அம்மையார் வீட்டார் மு. வ. வின் வீட்டார்க்கு நெருங்கிய உறவினர் அல்லரோ! ஆகலின் இராதா அம்மையார் மு. வ. வீட்டுக்கு அடிக்கடி செல்லும் வாய்ப்பு இருந்தது. அவர் மு. வ. வுக்கு ஐந்து வயது இளையவர். கள்ளம் கபடு அறியாமல் துள்ளி விளையாடும் இளம் பருவத்தினராகிய அவர்கள், தங்களுக்குள் விளையாட்டுச் சண்டை இட்டுக் கொண்டது உண்டு.

**மொட்டைச் சாமியார் :**

வேலத்திலும்சரி, அம்மூரிலும்சரி வீட்டுத்திண்ணையில் அமர்ந்து எந் நேரமும் படித்துக் கொண்டே இருப்பார் மு. வ. முக்காடு இட்டு, முழங்காலைக் கட்டிக் கொண்டு சிறு மேசைமுன் அமர்ந்திருப்பார். அவர் தோற்றம் இராதா அம்மையார்க்கு வேடிக்கையாகத் தோன்றியது. அதனால் 'மொட்டைச் சாமியார்' என்னும் ஒரு பட்டத்தைச் சூட்டினர்.

இராதா அம்மையார் திண்ணைப் பக்கம் வரும்போது 'மொட்டைச் சாமியார்' ஒரு சிறு கல்லை எடுத்து விளையாட்டாக அவர்மேல் வீசி எறிந்து விட்டு ஒன்றும் அறியாதவர்போல் படித்துக்கொண்டும், எழுதிக் கொண்டும் இருப்பார். இராதா அம்மையாரும் 'மொட்டைச் சாமியார்' மேல் ஒரு கல்லை எடுத்து வீசிவிட்டு ஓடி விடுவதுண்டு. இத்தகைய விளையாட்டு எத் துணைப்பேர் வாழ்விலே விளையாட்டாகவே போய்விடுகின்றது! வெடிக்கும் துயராகவும் ஒழிகின்றது! ஆனல் மு. வ. இராதா அம்மையார் இவர்கள் விளையாட்டு வாழ்வு பூத்துக் குலுங்கிப்

போற்றத்தக்க வாழ்க்கைத் துணையாக அமைந்த அருமைப்பாடு பெருமைப்படத் தக்கதாம்.

திருமணக் குறுக்கீடு :

மு. வ. இராதா அம்மையார் திருமணமும் குறுக்கீடு இல்லாமல் முடிந்து விடவில்லை. இராதா அம்மையாரின் அன்னையார் தம் மகளை மு. வ. வுக்கு மணம் செய்துதர விரும்பினர் அல்லர். அவருக்கு இரண்டு தடைகள் தோன்றின.

ஒன்று மு. வ. வின் வீட்டார் அனைவரும் இரண்டு இரண்டு மனைவிமார்களை உடையவர் என்பது. ஆம்! தம் மகள், புகுந்த வீட்டில் போராட்டம் நடத்திக் கொண்டு வாழ்வதை எந்த அன்னையார் உள்ளம்தான் விரும்பும்? உரிமையற்ற வாழ்வில் தம் மகளை ஒப்படைக்க அவருக்கு மனமில்லை. இஃது அவர் தம் மகள்மேல் கொண்ட காதலால் எழுந்த தடை. ஆனால், மகள் மேல் வைத்த காதலால், 'மு. வ. இரண்டு மனைவிகளை உடையவர் ஆகிவிடுவார்' என்று அவர் கணக்குப் போட்டது தவறேயாகும். மற்றொரு காரணம், மு. வ. வின் குடும்பம் செல்வச் செழுமை அற்றது என்பது. வளமாக வாழ்ந்த மகளை எளிய வாழ்வில் தள்ள அவர் அறவே விரும்பவில்லை. அவர் செல்வக் குடும்பத்தில் பிறந்ததும், செல்வச் செருக்கிலே செம்மாந்து இருந்ததும், புகுந்த வீடும் செல்வச் செழிப்பு மிக்கதாக அமைந்திருந்ததும் அவருக்குச் செல்வத்தைத் தான் வாழ்வாகக் கருத வைத்ததே அன்றிக் கல்வியையோ பண்பாட்டையோ கருத விடவில்லை. 'செல்வம் என்பது சிந்தையின் நிறைவே' என்பதையும், 'ஒன்றன் கூறு ஆடை உடுப்பவர் ஆயினும் ஒன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை' என்பதையும் அவர் அறியார். அவர் தம் செல்வ வாழ்வு அறியவும் விடாது. இத்தகைய நிலைமையிலும் இராதா அம்மையார் மு. வ. திருமணம் தடைப் படாமல் நடந்தது என்றால், இராதா அம்மையாரின் தந்தையார் மு. வ. வின் மேல் கொண்டிருந்த நல்லெண்ணமே காரணம் ஆகும்.

திருமண நிறைவேற்றம் :

இராதா அம்மையாரின் தந்தையார் ஆகிய சாரங்கபாணி முதலியார் தம் மக்களைக் காட்டிலும் மு.வ. வின் மேல் பேரன்பு

கொண்டிருந்தார். மு.வ. வினிடம் அமைந்திருந்த கல்வி விளக்கமும், பண்பு நலமும் அவரைப் பெரிதும் வயப்படுத்தின. எனவே தம் மகளாரை அவருக்கே மணம் செய்துதர விரும்பினார். ஆனால், தம் மனைவியாரைத் தம்வழிக்குக் கொண்டுவர இயலவில்லை. தம் அன்பு மகளாரைத் தம் சொல்வழி நிற்கச் செய்வது அவருக்கு எளிதாயிற்று.

மு.வ. வை முன்னரே நன்கு அறிந்தவர் அல்லரோ இராதா அம்மையார்? அதனுடன் தந்தையின் ஆர்வமும், அவர்க்கு மணஞ்செய்து தருவதிலேயே இருக்கிறது என்பதையும் உணர்ந்தார். 'தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை' என்னும் பொன் மொழிப்படி மு. வ. வை மணம் செய்து கொள்ள இசைந்தார்.

மு.வ. பள்ளியிறுதி வகுப்பு முடித்தவர். வித்துவான் தேர்வும் எழுதி ஆசிரியப்பணியில் இருப்பவர். ஆதலால் ஆர்க்காட்டில் இருந்த செல்வர் ஒருவர் தம் மகளாரை மு.வ. வுக்கு மணம் செய்துதர ஆர்வம் கொண்டிருந்தார். ஆனால் மு.வ. வின் சிறியதந்தையார் முத்துசாமி முதலியார் இராதா அம்மையாரையே மணம் செய்ய வேண்டும் என வலியுறுத்தினார்.

இவ்வாறாக மு.வ. இராதா அம்மையார் திருமணம் 1935 ஆம் ஆண்டு தைத் திங்கள் 23ஆம் நாள் வேலம் 'பங்களா வீட்டில்' சிறப்பாக நடைபெற்றது.

**திருமண எளிமை :**

இந்தத் திருமணத்திற்கு மாமனார் மாப்பிள்ளையின் உடைக்கென்று ஐம்பது ரூபா தந்தார். ஆனால் மு.வ. அதில் முப்பது ரூபாவுக்குக் கதராடை வாங்கிக் கொண்டு இருபது ரூபாவை மாமனாரிடமே திருப்பித் தந்துவிட்டார்.

இராதா அம்மையாரின் அன்னையார் விருத்தாம்பாள் வேலத்தை அடுத்துள்ள அம்மூரிலே இருந்தும் திருமணத்திற்கு வரவில்லை. அவரைச் சார்ந்த உறவினரும் வரவில்லை. இறுதி வரையிலும் விடாப்பிடியாகவே இருந்துவிட்டார். ஆயினும் சாரங்கபாணி முதலியார் திருமணத்தை மிகச் சிறப்பாக நடத்தி

வைத்தார். மு.வ. வின்மேல் அவர் வைத்திருந்த பற்றும் பாசமும் அத்தகையது!

"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையென் றைந்துசால் பூன்றிய தூண்" ஆக விளங்கிய மு வ. வின் இல்வாழ்க்கைச் சீர்மையை எடுத்துரைக்க வேண்டுவதில்லை. இராதா அம்மையாரும் மு.வ. வும் ஈருடலும் ஓருயிருமாக அமைந்து இல்லறம் நடத்தினர் என்று சுருங்கக் கூறலாம். பெண்ணுரிமை பேசும் மு. வ. அவர்கள் பெயருரிமை பேசுவதைக் கேட்போம் :

பெண்ணுரிமை :

"வரதராசன் என்பவனை மணந்த ராதா என்பவள், தன் பெயரை ராதா வரதராசன் என்று மாற்றுகிறாள். அதையும் சுருக்கி ரா. வரதராசன் என்று அமைக்கிறாள். நேற்று வரையில் ராதா என்று கையெழுத்து இட்டு வந்தவள் திருமணமானதும் அன்றே ரா. வரதராசன் என்று கையெழுத்திடுகிறாள். அவள் பெண்பால். ஆனால் அவள் பெயரோ ஆண்பாலுக்குரிய 'அன்' விகுதி உடையதாக வரதராசன் என்று கையெழுத்தில் உள்ளது.

"இது புதிய முறை: ஆங்கில நாட்டாருடன் பழகிப் பழகி அவர்களைப் பார்த்துக் கற்ற 'முற்போக்கான' முறை. பெண் பெயர் ஆண் பெயராக மாறும் இந்தச் சீர்திருத்த முறை பெண்ணுரிமை அற்ற பழங்காலப் பழக்கத்தினையே புலப்படுத்துகிறது. தன் பெயரால், தான் வாழும் உரிமையும் இல்லாத ஒருநிலையைக் காட்டுகிறது. அல்லது, மகளாக வாழ்ந்த அடிமை வாழ்வு தொலைந்தது என்று அந்தப் பழைய பெயரை மாற்றியமைத்ததாகக் கூறலாம். ஆனால் அவ்வாறு கூறுவதற்கு இடம் இல்லை. ஏன் எனின், புதியபெயர் தன் உரிமைப் பெயராக இல்லாமல் வேறொருவனுடைய பெயராகவே உள்ளது.

"இல்லறத்தார் ஒருவர் துறவியாகும் போது தம் பழைய பெயரைத் துறந்து, புதிய பெயரை ஏற்கிறார். அதில் உரிமை உள்ளதுபோல், பெண்ணின் பெயர் மாற்றத்தில் உரிமை மணம்

கமழவில்லை. அரசகுடும்ப மக்களுள் ஒருவனாக இருந்தவன் முடிசூடி அரசாளத் தொடங்கும் நாளில் தன் பெயரை மாற்றிக் கொள்வதிலும், புதிய வாழ்வுபற்றிய உரிமை விளங்குகிறது. பெண்ணின் பெயர் மாற்றத்தில் இத்தகைய உரிமை மணம் இல்லை.''[1]

மு.வ. இராதா அம்மையார் வாழ்வு உரிமை வாழ்வாக-உள்ளன்பு வாழ்வாக-ஒருவரில் ஒருவர் கரைந்துவிடும் வாழ்வாக அமைந்தது.

''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னை யையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தை;
தன்னை மறந்தாள் தன்னாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே''

என்னும் நாவுக்கரசர் நன்மொழிக்கு ஏற்ப நங்கை இராதா அம்மையார் வாழ்வு அமைந்தது. அவ் வாழ்வே படிப்படியாக ஏறி, அறிவுப்பணியிலும், அலுவற் பணியிலும் கொடுமுடியை எட்டும் அளவுக்குத் துணையாய் அமைந்தது. மனமொத்த இல்வாழ்வே மணவாளனின் புறவாழ்வின் வெற்றிகளில் 'செம்பாதியன்று பெரிது' என்பதை நிறுவினார் இராதா அம்மையார்.

**முதன்மைத் தேர்ச்சியும் பரிசும்:**

இனிய இல்லற வாழ்வின் இடையே வித்துவான் இறுதி நிலைத் தேர்வுக்கும் பயின்றார் மு.வ. பெப்ரவரித் திங்களிலே வாழ்க்கைத் தேர்வு நிகழ்ந்தது. ஏப்பிரல் திங்களிலே கல்வித் தேர்வு வந்தது. வாழ்க்கைத் தேர்வு தந்த வெற்றிபோலவே கல்வித் தேர்வு வெற்றி அமைந்தது. எப்படி? வித்துவான் இறுதி நிலைத் தேர்வில் முதல் வகுப்பில் முதலாமவராகத்

1. மொழியியற் கட்டுரைகள். பக். 263-4.

தேறினர். திருப்பனந்தாள் காசிமடத்தினர் தமிழ்'முதன்மைக்கு வழங்கிய 1000 ரூபா பரிசைப் பெற்ருர். தனியே கற்றுத் தனி முதன்மை பெற்றமை எத்துணைப் பாராட்டுக்குரிய செய்தி!

வித்துவான் தேர்வுக் குழுவின் தலைவராக இருந்தவர் தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர். அதன் உறுப்பினர்களுள் ஒருவர் பண்டிதமணி கதிரேசன் செட்டியார். "புலமிக் கவரைப் புலமை தெரிதல் புலமிக்கவர்க்கே புலனும்" என்பது புலப்படத் தேர்வு முடிவு வெளியாயினமை மு.வ. வின் உற்ருர் உறவினர் அன்பர் நண்பர் ஆகிய அனைவருக்கும் 'இறும்பூதாற் பெரிய' செய்தியாகி வியப்புறுத்திற்று. தாம் பெற்ற முதன்மை குறித்து மு.வ. வே வியப்புற்ருர் எனின், மற்றையோர் வியப்பைக் கூறுதல் வேண்டுமோ?

"வித்துவான் என்னும் தமிழ்த் தேர்வுக்குச் சென்றேன். அதில் முதல் வகுப்பில் முதல்வனுகத் தேறி ரூ. 1000 பரிசு பெற்றேன். அந்தச்செய்தி வந்தபோது என்னுல் நம்பவே முடியவில்லை. கணக்குப் பாடத்தில் முதல்வனுக இருந்ததுபோலவே தமிழிலும் இந்தச் சிறப்புக் கிடைத்தவுடன் என்மனம் மற்றத் துறைகளை மறந்து தமிழையே போற்றியது"[1].

இயல்பாகவே தமிழ்ப் பற்றுடைய மு.வ. வை இம்முதன்மையும், பரிசும் மேலும் அழுத்தமாக ஊன்றி நிற்கச் செய்தன என்பது வெளிப்படை. அகத் தூண்டல்களே அன்றிப் புறத் தூண்டல்களும் பொலிவுறுத்தும் என்பதற்கு இந் நிகழ்ச்சி எடுத்துக் காட்டாகும்.

தேர்ச்சிமிக்காரைப் பாராட்டுதலால் அவர் மேலும் ஆர்வம் குன்ருமல் அத்துறையில் செல்வதற்கு வாய்ப்பும், பிறரும் அவ்வழியில் செல்வதற்கு ஓர் அரிய தூண்டுதலும் உண்டாதல் இயற்கை. இதனுல் மு. வ. பெற்ற முதன்மை வெற்றியைத் திருப்பத்தூர் வட்டார மக்கள் விழாவெடுத்துப் பாராட்ட விழைந்தனர்.

---

1. *தினத்தந்தி 8-7-1963.*

பரிசளிப்பு விழா :

30-11-'35 ஆம் நாள், பரிசளிப்பு விழா வேலூரில் நிகழ்ந்தது. வடார்க்காடு மாவட்ட ஆட்சியாளர் திரு சாமுவேல் அரங்கநாதன் தலைமை ஏற்றிருந்தார். திருப்பத்தூர் வட்டாரப் பெருமக்கள் திரளாகக் குழுமியிருந்தனர். வேலூர் நகரப் பெருமக்களும் கூடியிருந்தனர். அவர்களுள் மாசிலாமணி முதலியார் என்பவர் ஒருவர் ஆவர். அவர் தெய்வசிகாமணி முதலியார் என்னும் பள்ளி ஆசிரியர் ஒருவருடன் வந்திருந்தார். அவர்தம் வருகை மு. வ. வின் எதிர்கால வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்படுவதற்கு வித்திட்டது!

நன்றிமடல் :

சான்றோர் பாராட்டுக்கு இடமாகியிருந்த மு. வ. தமக்கு அளிக்கப் பெற்ற பாராட்டுக்குப் பதிலளித்து நன்றிமடல் ஒன்று படித்தார். அது பன்னிருசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் ஒன்றும், அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் நான்கும் ஆக ஐந்து பாடல்களைக் கொண்டதாகும்.

''ஓம்
''வாழிய செந்தமிழ் !''
திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத தம்பிரானவர்களின்
தமிழ் வித்வான் தேர்விற்குரிய ஆயிரம் ரூபாய்ப்
பரிசிற் பெற்று வரிசையிற் போற்றல்''

என்னும் தலைப்பிட்டு வெளியிட்டது அந் நன்றியுரைப் பாட்டு.

''எண்ணரிய பெருங்கொடைக்கே கடைச்சிறியேன்
எங்ஙனமோ அருக ஞதல்
அண்ணலருள் தனைநினைந்தே அகமுருகல்
அன்றி,செயும் நன்றி யாதோ?
மண்ணதனில் அன்னையொப்பான் மாட்சியருட்
புகழ்சிறக்க சிறக்க என்றே

நண்ணரிய பரம்பொருளை நாவார
உளமார வாழ்த்துவேனே''

இங்ஙனம்

வேலூர்
30-11-35

நன்றியறிதலுள்ள,
வித்வான் மு. வரதராசன்
தமிழ்ப் பண்டிதர் முனிசிபல் ஐஸ்கூல்
திருப்பத்தூர், வட ஆர்க்காடு

—என்னும் முடிப்புரையோடு நன்றிமடல் அமைந்தது.

முதன்மைப் பரிசு பெற்ற பின்னர் மு. வ. வின் புகழ் விரைந்து பரவிற்று. நெருங்கி அறியாத மக்களும் அவர்மேல் நேயம் செலுத்தினர்; மதித்துப் போற்றினர். 'வரதராஜி' என்று பெயரிட்டுப் பொதுமக்கள் அழைக்கவும் தொடங்கினர் என்றால் அது பரிசு தந்த பரிசுதானே !

தமிழ்ப் பரிசு பெற்ற மறு ஆண்டிலே மு. வ. வுக்கு மற்றொரு பரிசு கிடைத்தது. அப் பரிசை வழங்கியவர் மு. வ. வின் கருத்தொத்த காதல் மனைக்கிழத்தியார் இராதா அம்மையார். ஆம்! 'பிள்ளைக் கனியமுது'; 'பேசும் பொற்சித்திரம்', 'கலிதீர்க்க வந்த கவின் செல்வம்' என்று பாராட்டப் பெறுமே அப் பிள்ளைப் பரிசை வழங்கினர் இராதா அம்மையார்.

அருமை அரசு :

செல்வமகனைக் கண்ட மு. வ. வின் நெஞ்சம் நாவுக்கரசர் மேல் சென்றது. 'தொண்டலால் துணையும் இல்லை' என்று வாழ்ந்த பெருந்தகை அவர். 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று கொண்ட ஏந்தல் அவர். 'விளக்கினர் பெற்ற இன்பம் மெழுக்கினுல் பதிற்றியாகும்' என்று பேசிய பெருந்தகை அவர். எண்பத்தோர் அகவையாய்த் தண்டூன்றித் தள்ளாடி நடந்தாலும், உழவாரத் திருப்பணி செய்தலில் ஓயாத திருத்தொண்டர் அவர். ஈசன் கழலிணைகளை மாசில் வீணையாய், மாலை மதியமாய், வீசுதென்றலாய், வீங்கிள வேனிலாய், மூசுவண்டறை

பொய்கையாய் எண்ணித் திளைத்த எழிற்செல்வர் அவர்! அப் பெரியார் வாழ்வை எண்ணி எண்ணி உருகுபவர் மு. வ. கருதிக் கருதிக் கரைபவர் மு. வ. அவர் வாக்கை ஓதி ஓதி உவகை பெருகுபவர் மு. வ. ஆதலால் அவ்வரசின் பெயரையே தம் குடி விளக்க வந்த அரசுக்குப் பெயராகச் சூட்டினார். பெயர் சூட்டுதலில் எத்தகைய பெற்றிமை! சூட்டப்படும் பெயர்கள் எல்லாம் பெயர்கள் தாமா!

1934 முதல் 1939 வரை ஐந்தாண்டுக் காலமே திருப்பத்தூரில் ஆசிரியப் பணிசெய்து வாழ்ந்தார் மு. வ. அக் குறுகிய காலத்தில் திருப்பத்தூர் அவர்க்கு வழங்கிய 'திரு'க்கள் பலப் பல. ஆதலால் மு. வ. வின் ஏற்றமிக்க வாழ்வில் திருப்பத்தூர்க்குத் தனிப் பெரும் சிறப்பான இடமுண்டு என்பது வெளிப்படை.

# 6. ஒளிவளர் விளக்கு

திருப்பத்தூர் மு வ. வுக்குச் சேர்த்த திருக்கள் எவையெனக் கண்டோம். ஒளிவளர் விளக்கு என்னும் இப் பகுதியும் திருப்பத்தூர் வாழ்வு பற்றியதேயாம். இப் பகுதியில் மு. வ. எவ்வாறெல்லாம் திருவாளராகத் திகழ்ந்தார் என்பதைக் காண்போம்.

**தோற்றம் :**

மு. வ. எடுப்பான தோற்றம் வாய்ந்தவர். நெடுமால் போன்ற நெடிய உருவமும் கரிய நிறமும் கொண்டவர். அவர் தம் கருநிறத்திலும் ஒளி விளங்கும். அவர் கண்கள் ஒளிமயமானவை. உள்ளொளி விளக்கத்தை அள்ளி வீசும் இயல்பினவை. அவர் பச்சையப்பர் கல்லூரிப் பேராசிரியராகப் பணி செய்தபோது அங்கே சொற்பொழிவாற்ற வந்திருந்த வழக்கறிஞர் திரு. செங்கல்வராயன் அவர்கள் தமக்கும் மு. வ. விற்கும் இடையில் ஓர் ஒற்றுமை நிலவுகின்றது என்றும், அஃது இருவரும் நெடிய பெரிய தோற்றம் கொண்டிருப்பது என்றும் குறிப்பிட்டார். இயற்கையொடு போராடிக் கடுமையாக உழைக்கும் கூட்டம் என்பதற்கு அடையாளமே கருநிறம் என்பதைத் தம் எழுத்துகளில் மு. வ. குறித்துள்ளார்.

**காலைக்கடன் :**

திருப்பத்தூரில் முத்துக்காரத் தெருவில் வாழ்ந்தார் மு. வ. திருமணத்திற்குப் பின்னரும் தம் தாய் தந்தையர், பாட்டியார், தங்கையார் ஆகியவர்களோடு ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்தார்.

வைகறையில் துயில்எழும் வழக்கத்தை அடிநாள் தொட்டே உடையவர் மு. வ. விடியற் காலையிலேயே சோலார்ப் பேட்டைச் சாலையோரத்தில் அமைந்துள்ள ஒரு பெரிய கிணற்றுக்குச் சென்று, தம் துணிகளைத் தோய்த்து, நீரில் நீந்தி விளை

யாடிக் குளிப்பார். ஈரத் துணிகளைக் காற்றிலும் கதிர் ஒளியிலும் காயப் போட்டுக்கொண்டு திரும்புவார். கொட்டும் மழைக் காலமே ஆயினும், கொடிய பனிக்காலமே ஆயினும், வருத்தும் வாடைப் பொழுதே ஆயினும் குளிர்ந்த நீரிலேயே குளிப்பார். குளித்து வந்த பின்னர்ச் சிறிது நேரம் தியானத்தில் ஆழ்ந்திருப்பார். திருநாவுக்கரசர், நம்மாழ்வார், தாயுமானவர், இராம கிருட்டிணர், விவேகானந்தர், இராம தீர்த்தர் முதலாகிய அருட் பெருமக்கள் பாடல்களையும் வாக்குகளையும் ஊன்றிப் படிப்பார்.

உணவு:

காலையில் தோசை, இட்டலி, பொங்கல் போன்ற சிற்றுண்டிகளை உண்பார். தம் உடலுக்கு ஊறுவிளைக்காத உணவைத் தேர்ந்தெடுத்தே உண்பார். நாச்சுவைக்கு அடிமைப்பட்டுக் கண்ட கண்ட உணவுகளை உண்ணார். காப்பி, தேநீர் முதலிய சுவைநீர் பருகார். பாலையும் சில வேளைகளில் அரிதாகவே பருகுவார். வெற்றிலைபாக்குப் போடும் பழக்கம் இவரிடம் இருந்ததில்லை. குடும்பத்தினர் புலால் உண்பவர் எனினும் இவர் சின்னஞ்சிறு வயதிலேயே அவ்வுணவை வெறுத்தார். மரக்கறி உணவே மனித வாழ்வுக்குப் போதுமானதும் பொருந்தியதும் ஆகும் என்னும் உறுதியான கொள்கையில் வளர்ந்தார். இவர் புலாலுண்பதை விடுத்தமையால் இவர் பாட்டியார் தாயார் மனைவியார் தங்கையார் ஆகியோரும் புலாலை நீக்கினர். இவர் தந்தையார் மட்டுமே புலால் உணவை விடமுடியாமல் தவித்து மேற்கொண்டிருந்தார்.

வறுமையிற் செம்மை:

ஏழ்மையுடன் எளிமையான வாழ்வு நடத்தி வந்தாலும் மு. வ. தம் வாழ்வை வளப்படுத்திக் கொள்வதற்காக எவர் உதவியையும் நாடுவார் அல்லர். வருவாய்க்கு ஏற்பச் செலவிட்டு வாழ்வதே வாழ்வு என்று தெளிந்திருந்தார். எத்தகைய பண நெருக்கடி நேரிட்ட பொழுதிலும் நெருங்கிய நண்பரிடத்தும் உரிமைச் சுற்றத்தாரிடத்தும் உதவிகேட்டு நிற்காத உறுதிப் பாட்டில் நின்றார். தமக்கு ஓரொரு கால் தட்டுப்பாடு நேரு

மாயினும் அதனைப் பிறர் அறியாதவாறு மறைத்துக் காத்தார். உள்ளார்ந்த அன்புடைய உழுவலன்பர்கள் உண்மை நிலைமையை உணர்ந்து தாமே வலியச் சென்று உதவி செய்யினும் அதனையும் மறுத்து விடுவார்.

**பயன் கருதாப்பணி :**

மு.வ. வின் பால் பேரன்புகொண்ட பெரியார் திரு. சண்முக முதலியார். அவரைப்பற்றி முன்னரும் குறிப்பிட்டுள்ளோம். அவர் 'இராகவன் புகழ் அறுபது' முதலாய கவிதை நூல்களின் ஆசிரியர். பைந்தமிழ்ப் பற்றாளர். அவர் தம் மைந்தர் இரகுநாயகனை, மு.வ. வினிடம் தனியே தமிழ் கற்பதற்கு ஏற்பாடு செய்தார். மு.வ. வும் உவந்தேற்றுக் கற்பித்தார். இதற்கெனத் தொகை எதுவும் பெறுதற்கு மறுத்துவிட்டார் மு.வ. பெரியார் சண்முக முதலியார்க்குத் தாம் எவ்வுதவியும் செய்ய வாய்க்கவில்லையே என்ற ஏக்கம் இருந்தது. பொங்கல் திருநாள் வந்தது. அந்நாளில், தம் அன்புக்குரியவர்களுக்குப் பரிசு வழங்குவது அவர் வழக்கம். அவ்வாறே புதிய உடையும் சிறிது பணமும் தம் மைந்தர் வழி மு.வ. வுக்கு விடுத்தார். அப்பொழுதும் மு வ. அவ்வன்பளிப்பை ஏற்க விரும்பினார் அல்லர். ஆயினும் அன்பளிப்பை மறுப்பதால் பெரியவர் மனம் வருந்துமே எனத் தாம் வருந்தி, 'இந்த முறை இதனை ஏற்றுக் கொள்கிறேன். இனி, இத்தகைய முயற்சி வேண்டா; இதுவே இறுதியாக இருக்கட்டும்' என்று சொல்லிப் பெற்றுக் கொண்டார். பயன் கருதாது பணி செய்யும் பான்மை இதனால் வெளிப்படும். இத்தகைய சான்றுகள் மு.வ. வின் வாழ்வில் பலப்பல.

**எளிமை போற்றுதல் :**

பட்டாடையை விரும்பாதவர் மு.வ. பருத்தி ஆடையே அணிவார். எளிமை மட்டும் அதற்குக் காரணம் அன்று. உயிர் இரக்கமும் கூடிய கொள்கையாகும். 'ஏழை எளிய மக்கள் ஒரு வேளைக் கஞ்சிக்கும் வழியற்றுத் திரியும் நாட்டில் வாய்ப்புப் படைத்த சிலர் பட்டாடை உடுத்தியும், பொன்னணிகள் பூண்

டும் திரிவது பாவம்' என்று பதறுவது அவர் நெஞ்சம்! கோடிக் கணக்கான பட்டுப்பூச்சிகளைக் கொன்று எடுத்த நூலால் ஆகிய பட்டாடை உடுப்பது கொடுமை என்று நடுங்குவது அவர் அருள் உள்ளம். ஆகலின் பட்டாடையும் சரி, பகட்டு விளங்கும் ஆடையும் சரி, அவர் உடுப்பது இல்லை. பொன்னும் மணியும் பட்டும் பொருட்காட்சி நிலையங்களில் காட்சிப் பொருளாக வைக்கப்படுமானால் சமூதாயச் சிக்கல் தீர வழியுண்டு என்பது அவர் கருத்து.

பின்னாளில் குமுதம் இதழில் இவர் எழுதிய 'வைரமோதிரக் கதை' ஒன்று வெளிவந்தது. அதற்கு வைரமோதிரம் பரிசாக வழங்கப் பெற்றது. அதனைத் தாம் அணிந்துகொள்ள விரும்பாமல் தம் அருமை மனைவியார் விரலுக்கு அணிவித்து அமைந்தார். அறிவால் நாளும் வளர்ந்து வந்தது போலவே பண்பாலும் வளர்ந்துவந்தார் என்பதற்குரிய சான்றுகளுள் இதுவும் ஒன்றாம்.

உளமறிந்து உதவும் உயர்வு :

ஆற்றலும் அறிவும் மிக்க மாணவர்களையும் அவர்கள் குடும்பத்துள்ள வறுமை வாட்டி வதைப்பதை அறிந்தார் மு.வ. அவர்கள் கல்வியில் கருத்தை ஊன்றுதற்கு இயலாது செய்யும் இல்லாமைத் துயரை ஒழித்தற்கு வழிவகை காணமுனைந்தார். அன்னை அருளுக்கு எடுத்துக் காட்டாக அமைந்த அவர் உருகினார். அல்லல்படும் மாணவர்களைத் தனியே அழைத்து அவர்தம் இடுக்கண்களை ஆய்ந்தார். தம்மால் இயன்ற அளவு உதவி செய்து கல்வி தடைப்படாவண்ணமும், இடையறவு பட்டு நிற்காவண்ணமும் காத்தார்.

இவ்வளவுடன் நின்றுவிட அவர் உள்ளம் இசையவில்லை. தகுதி வாய்ந்த நன்மக்களை அணுகி, மாணவர் நிலையை மனங்கொள்ளுமாறு எடுத்துரைத்து அவர்கள் வழியே உதவி பெறச் செய்து மகிழ்ந்தார். தமக்கென்று தானே வரும் உதவியை வேண்டாமல் வெறுத்த மு.வ. கல்விகற்கும் இளைஞர் நலங் கருதிப் பிறர் உதவியை நாடிச் சென்றார் எனின் அவர்தம் பெருமனமே காரணமாம்.

சமயப் பொதுமை :

திருப்பத்தூருக்கு அண்மையில் 'கிறித்து குல ஆசிரமம்' என்னும் ஓர் அமைப்புளது. அது மருத்துவச் சாலையாக விளங்கி, ஏழை எளிய மக்களின் பிணிதீர்க்கும் பெரும்பணி செய்து வருகின்றது. அம் மருத்துவ மனையில் டாக்டர் ஏசுதாசன் என்னும் தாய்மொழிப் பற்றுமிக்க மருத்துவர் ஒருவர் பணிசெய்து வந்தார். அவருடன் டாக்டர் பேட்ரன் என்னும் பெயருடைய 'ஸ்காத்லாந்து' நாட்டவரான ஒரு மருத்துவரும் பணிசெய்தார். வேறு வேறு மொழி பேசும் இளைஞர்கள் சிலரும் அம் மருத்துவ மனையில் பணியாற்ற வந்தனர். அவர்கள் அனைவரும் தமிழ் மொழியைக் கற்பதற்கு விரும்பினர். அதனை நிறைவேற்றுதற்கு டாக்டர் ஏசுதாசன் மு.வ. வின் உதவியை நாடினர். மு.வ. அப் பணியை உள்ளார்ந்த அன்புடன் ஏற்றுக்கொண்டு வாரத்திற்கு இரண்டு மூன்று நாள்கள் இரண்டுகல் தொலைவு நடந்து போய்க் கற்பித்தார். இத் தொண்டால் மருத்துவர்கள் இருவரொடும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. கிறித்து சமய உண்மைகளை அறிந்துகொள்ளும் வாய்ப்பு உண்டாயிற்று.

ஒருசமயம் 'தீனபந்து ஆண்ட்ரூஸ்' அவர்கள் கிறித்தவ குல ஆசிரமத்திற்கு வந்து தங்கியிருந்தார். அவர் காந்தியடிகளுடன் அணுக்கமாகப் பழகி, அவர்தம் பணிகளுக்கு உறுதுணையாக இருந்தவர். அவர் தொடர்பும் நட்பும் பெறும் வாய்ப்பு மு வ. வுக்கு உண்டாயிற்று. காந்தியடிகளிடம் அமைந்த சமயப் பொதுமை 'ஆண்ட்ரூஸ்' அவர்களிடமும் காணப்பெற்றது. இதனை அவரிடமிருந்து மு. வ. கற்றுக்கொண்டார். பின்னர் இந்நெறி திரு. வி.க. அவர்கள் தொடர்பால் பெரிதும் வளர்க்கப் பெற்றதாகும்.

இடையறாது கற்றல் :

கிறித்து குல ஆசிரமத்தில் சிறிய கோயில் ஒன்று உண்டு. விடுமுறை நாட்களில் மு.வ. அக் கோயிலுக்குச் செல்வார். அக் கோயிலின் உட்புறம் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டு காலைமுதல் மாலை வரையில் நூல்களை ஓதுவார்; நூல் நுதல் பொருளை ஆழ்ந்து எண்ணுவார்; வேண்டும் குறிப்புகளைத்

தொகுத்துக் குறிப்பார்; ஆய்வுப் பொருளை வடித்துக் கொள் வார். தனித்திருந்து கற்பதும், தனியே சிந்தனையுடன் உலாவி வருவதும் மு.வ. வுக்கு என்றும் இனிமை தரும் செயல்க ளாகும்.

மாலைப் பொழுதுகளில் நாள் தவறாமல் உலாவச் செல்வார். அப்பொழுது ஒரு கையில் பையும் மற்றொரு கையில் குடையும் எடுத்துச் செல்வார். பையில் திருக்குறளோடு அன்று படித்து முடிக்க வேண்டிய இன்றியமையாத சில நூல்களும் இருக்கும். ஊருக்கு வெளியே சென்று ஆள் அரவமற்று அமைதி தவழும் இயற்கை எழில்மிக்க இடத்தில் தனியே அமர்ந்து படிப்பார். மாலையாகி இருள்கவிந்து, கோலநிலா வானப் பெருவழியில் உலாக் கொள்ளும் முன்னிரவுப் பொழுதில் மீள்வார். சிலநாட் களில் அவருடன் சில நண்பர்களும் செல்வர். போகும்போதும் திரும்பும் போதும் நண்பர்களுடன் கலகலப்பாக உரையாடி மகிழ்வார். படிப்பதற்கெனத் தேர்ந்து கொண்ட இடத்தைச் சேர்ந்ததும் 'ஒரு தனி யோகு செய்யும்' உயர்தவச் செல்வர் போல் அமைந்து விடுவார். நூற் செல்வத்துள் ஒன்றிவிடுவார். நண்பரும் படிப்பாவல் உடையவர் ஆயின் தம் பையிலுள்ள ஒருநூலை எடுத்துத்தந்து படிக்கச் சொல்வார். இவ்வாறு இயற்கைச் சூழலிடையே இனிதமர்ந்து நூல்களை முழுமை முழு மையாகவே வரப்படுத்திக் கொண்டார். அவ்வாறு குறிப்பிடத் தக்கவற்றுள் திருக்குறளும், திருவாசகமும் தலையாயவையாம்.

நட்பாடுந் திறம் :

மு.வ. விற்குப் பல்வேறு நிலைகளிலும் நண்பர்கள் இருந் தனர். அவர்களுள் ஏற்றத் தாழ்வு என்றும் காணார். ஏழை எளியவர்களாயினும் உளங்கலந்து ஒன்றி உரையாடுவார்; உற வாடவும் செய்வார். நண்பர்களுடன் மட்டுமல்லாமல் நண்பர் குடும்பத்தினரோடும் இரண்டறக் கலந்து உறவாடுவார். சிறு வர்களோடும் அளவளாவி இன்புறுவார். தம்மோடு கலந்து பழகுபவர்களை யெல்லாம் சுற்றமெனக் கருதி இன்ப அன்பு கெழும அரவணைப்பார். இது வேலம் தந்த விழுமிய பொருள் என்பது குறிப்பிடத் தக்கது.

''சுற்றம் என்ற சொல்லின் உண்மைப் பொருள் (முன்னோர் வழங்கிய பொருள்) என்ன என்பதை எனக்கு உணர்த்திய ஊர் அது (வேலம்). பங்காளிகளும் சம்பந்திகளும் ஆகிய இரத்தக்கலப்பு உள்ளவர்கள் மட்டும் சுற்றம் அல்ல; தொழிலாலும் உதவியாலும் நெஞ்சக் கலப்பு உடையவர்களும் சுற்றமே என்பதை அங்கு உணர்ந்த பிறகே, திருக்குறளில் உள்ள 'சுற்றந் தழாஅல்' என்பது எனக்கு நன்கு விளங்கியது. தச்சர், கருமார், இடையர், உழவர், குயவர் முதலிய வெவ்வேறு குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்னைத் தம்பி என்றும், அண்ணன் என்றும், மாமன் என்றும், மச்சான் என்றும், மருமகன் என்றும், அத்தான் என்றும் அன்புடன் அழைத்தார்கள். உறவு முறை கொண்டாடாமல் பேசியவர்கள் மிகக் குறைவே. மருமகன் என்று என்னை அன்பாக உறவு கொண்டாடிய ஒரு செட்டியாரையும்' 'தம்பி' 'தம்பி' என்று ஆர்வத்துடன் அழைக்கும் ஓர் ஆச்சாரியையும் என்னால் மறக்கமுடிவதில்லை. வேலத்துச் சட்டக்கல் போலவும், கூசுமலை போலவும் அவர்கள் என்றும் என் நெஞ்சில் நீங்காமல் நிற்கிறார்கள்.''[1]

மு.வ. தம் நண்பர்களின் வாழ்வில் ஏதேனும் இடர்ப்பாடு உண்டாயிருப்பதாக அறிந்தால் அவர்கள் அறியாமலே தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து இனிதுறுத்துவார். எவருடைய குறையாயினும் அதனை அவர் வெளிப்படக் கூறார். 'பிறர் தீமை சொல்லா நலத்தது சால்பு'' என்னும் அருளறம் அவர் வாழ்வில் தனிப் பெரும் சிறப்புடன் திகழ்ந்தது. அதேபோல் உரிமை நண்பர்களே ஆயினும் உழுவலன்புடன் இடித்துரைத்துப் புண்ணாக்கவும் செய்யார். தம் கருத்தைப் பிறர் ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும் அதற்காக ஏமாற்றமோ, மன மாற்றமோ, காழ்ப்புணர்வோ கொள்ளார்.

தம் உணர்ச்சிகளை மறைத்துப் பழகும் ஆற்றல் மிக்கவர் மு.வ. ஆதலால் மாற்றுக்கருத்து உடையவர்களிடத்தும் எப்போதும் போலவே இனிதுறப் பழகுவார். பொதுவாகத் தருக்கங்களில் இறங்கவே இறங்கார். பிறர் கூறும் கருத்துகளை வன்மையோடு எதிர்க்கமாட்டார். ஏற்கமுடியாத கருத்தாக

1. ஆனந்த விகடன். எங்கள் ஊர் : வேலம். 3-8-1969.

இருந்தாலும் அதனை மறுத்துப்பேசாமல் முகத்தில் முறுவல் காட்டி அமைதியாக இருப்பார். பகைபாராட்டாமை மட்டு மன்று, 'பகைவனுக்கும் அருளும் நன்னெஞ்சம்' அவர் நெஞ்சம்!

"ஒருநாள் நல்லெண்ணம் வாய்ந்த, ஆனால் ஒருவகை மனச் சலிப்பு ஊட்டுகின்ற ஆங்கிலேய அம்மையார் ஒருவர் வந்தார். அவரை ஒருவகைப் பொழுது போக்குச் சமயப் பரப்புநர் எனலாம். டாக்டர் மு.வ. அவர்களிடம், இந்து தருமத்தை விடத் தாம் மெய்யெனக் கருதும் கிறித்துவ சமய அறங்களின் உயர்வையும் சிறப்பையும் அந்த அம்மையார் விளக்கலானார். பற்றற்ற பார்வையாளருக்கு அவ்வம்மையாரின் சொற்கள் வசை புராணமாகவே தோன்றும் எனினும் பொறுமையுடனும் அருளிரக்கத்துடனும் இருந்த புறச் சமயத்தைச் சார்ந்த மு.வ. அவ்வம்மையின் பலவீனமான வாதங்களைத் தகர்த்து எறிந்து, மனம் புண்படுமாறு யாதும் சொல்லவில்லை. விரும்பியிருந்தால் மிக எளிமையாக அவ்வாறு அவர் செய்திருக்கலாம். இதற்கு மாறாக நெடுநேரம் அவ்வம்மையாரைப் பேசவிட்டு, மனத் தாங்கல் யாதும் இன்றி அவ்விடத்தை விட்டுப் போகுமாறு அவர் செய்தார்"[1] என்று எடின்பரோ பல்கலைக் கழகத்தைச்சேர்ந்த டாக்டர் ஆர். இ. ஆஷர் தம் பசுமையான நினைவாகக் குறிப்பிடுகின்றார். இத் தன்மை தொடக்கநாள் முதலே மு.வ. வினிடம் துலங்கிய தாகும். "நித்தம் நடையும் நடைப்பழக்கம்" என்பது பட்டறிவின் முதிர்வால் வெளிப்பட்ட மொழியே யன்றோ!

**பி.ஓ.எல் பட்டம் பெறுதல்:**

வித்துவான் தேர்வு முடித்த பின்னரும் தேர்வு நாட்டம் மு.வ. வுக்கு மிகுந்திருந்தது. மேற்பட்டம் பெறுவதற்கு விரும்பினார். அயராது உழைத்தார். தமிழ் நூல்களுடன் ஆங்கில நூல்களும் நிரம்பக் கற்றார். சென்னைப் பல்கலைக் கழகம் நடாத்தும் பி.ஓ.எல் பட்டத்தில் முதல்வகுப்பில் தேர்ந்தார்.

பி.ஓ.எல் பட்டம் பெற்ற அளவினும் மு. வ. வின் கல்வி ஆர்வம் அமையவில்லை. மேற் கல்வியை விரும்பினார். ஆராய்

1. செந்தமிழ்ச் செல்வி - ஒளிவிளக்கு. சிலம்பு 50. பக். 215.

வுக்கு வேண்டிய கருவிநூல்கள் பலவாதலை எண்ணினார். கருவி நூல்கள் தாம் வதியும் திருப்பத்தூரில் கிடைத்தற்கு அருமையை உணர்ந்தார். ஆதலால் தம் மேற்படிப்புக்கும் ஆய்வுக்கும் வாய்ப்பாகச் சென்னை செல்லுதலே நலம் எனக் கருதியிருந்தார். திருவருளின் எண்ணமும் அதற்குத் துணை நிற்பதுபோல அமைந்தது.

1939ஆம் ஆண்டு மேத் திங்களில் செய்தித் தாளில் ஒரு விளம்பரம் வந்திருந்தது. அதில் சென்னைப் பச்சையப்பர் கல்லூரித் தமிழ்த் துறைக்குத் தமிழாசிரியர் ஒருவர் வேண்டும் என்னும் குறிப்பு இருந்தது. அதனைக் கண்ணுற்றார் வேலூர்ப் பெரியவர் மாசிலாமணி முதலியார். அவருக்கு அவ் விளம்பரத்தைக் கண்டதும் மு.வ. வின் நினைவே முந்தி நின்றது. தம் உறவினரும் ஆசிரியருமான திரு. தெய்வசிகாமணி முதலியாரை அழைத்தார். இவ் வேலைக்குத் தக்கவர் மு.வ. வே என்று இருவரும் முடிவு செய்தனர். மு.வ. வுக்குக் கடிதம் எழுதினர். கடிதம் கண்ட மு.வ. களிபேருவகையுற்றார். உடனே பச்சையப்பர் அறங்காவலர் குழுவுக்கு உரியமுறையில் ஒரு விண்ணப்பம் விடுத்தார். நேரே வேலூர்க்குச் சென்று மாசிலாமணி முதலியார் அவர்களைக் கண்டார்.

மாசிலாமணி முதலியார் துணைவேந்தர் டாக்டர் ஆ. இலக்குமணசாமி முதலியார் அவர்களின் சிறிய மாமனார் ஆவர். இலக்குமணசாமி முதலியார் பச்சையப்பர் அறங்காவலர் குழுவில் இடம் பெற்றிருந்தார். ஆகலின் மு.வ. வைப் பற்றி இலக்குமணசாமி முதலியாருக்கு விளக்கமாகக் கடிதம் எழுதினார். இரண்டு நாள்களிலே மகிழ்வான மறுமொழிக் கடிதம் வந்தது. தகுதிவாய்ந்த ஒருவருக்கே தம் மாமனார் பரிந்துரை இருப்பதை அறிந்து மகிழ்ந்தார் இலக்குமணசாமி முதலியார். ஆதலால், அறங்காவலர் குழுவில் மு.வ. வின் பெயரை வைத்து இசைவு பெற்றார். பச்சையப்பர் கல்லூரித் தமிழ்த் துறையில் திருத்தாளராக அமர்தற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. 'திங்களுக்கு அறுபது ரூபா சம்பளம்' என்றும், 'ஓராண்டுக்குப் பணி' என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

மாசிலாமணி முதலியார் செய்த உதவி காலத்தால் செய்த தாகும். அதே பொழுதில் தகுதியுணர்ந்து தாமே முந்துநின்று தேடிப்போய்ச் செய்த உதவியாகும். இத்தகைய உதவியை நன்றியறிதல் மீக்கூர்ந்த மு. வ. வின் நெஞ்சம் மறப்பதே இல்லை. தம் புனைகதை ஒன்றில் வேலூர் மாசிலாமணி முதலி யார் தெருவினைக் குறிப்பிடுகின்றார். "தேமொழி-சீராளர் குடும் பம் வேலூர் மாசிலாமணி முதலி தெருவில் பன்னிரண்டாம் எண்ணுள்ள வீட்டில் வாழ்கிறது'' என்பது அக்குறிப்பு. டாக்டர் இலக்குமணசாமி முதலியார் செய்த உதவியும் மு.வ வின் நெஞ்சில் என்றும் பசுமையாகவே இருந்தது. இனி மு.வ. வின் சென்னை வாழ்வைத் தொடர்வோம்.

———

# 7. சென்னை வாழ்க்கை

**அ. பச்சையப்பர் கல்லூரி :**

மு. வ. சென்னைப் பச்சையப்பர் கல்லூரியில் திருத்தான ராகப் பணியமர்த்தம் பெற்றார். அப்பொழுது பச்சையப்பர் கல்லூரி ஆரவாரமிக்க, 'சைனா பசாரில்' உள்ள பழைய கட்டடத்தில் நடந்து வந்தது. தமிழ்த் துறைத் தலைவராக மோசூர் கந்தசாமி முதலியார் அவர்கள் விளங்கினார்கள்.

கந்தசாமி முதலியார்க்கு மு. வ. வின் மேல் தனியன்புண்டு. 'முதலியார்' 'முதலியார்' என்று வாயார அழைத்து மகிழ்வார். தமிழ்த்துறைப் பொறுப்புகளையெல்லாம் கவனிக்குமாறு சொல்வார். மு. வ. வுக்கு ஒரு பட்டப்பெயர் சூட்டினார் மோசூரார். 'மூலவர்' என்பது அது. இளம் பேரறிஞர்க்கு முதுபேரினைஞர் சூட்டிய இப் பட்டம் எண்ணுந்தோறும் இன்பம் பயப்பதாம். இருந்த இடத்திலே இருந்து அமைதியாகப் பணி செய்யும் மு. வ. வை 'மூலவர்' என்று அழைக்கத் தோன்றியது அவர்க்கு. அன்றியும் கோயிலுள் மூலவர்க்கு உரிய சிறப்பினை அறிந்து மோசூரார் வழங்கிய பெருமைப் பெயர் இஃதாகும். ஆம்! மு. வ. தம் வாழ்வில் எத் துறையில் புகுந்தாலும் மோசூரார் வாக்குப்போல மூலவராகவே விளங்கினார் என்பது உண்மை.

மு. வ. பணியேற்றுக் கொண்ட முதல் ஆண்டிலேயே பி. ஓ. எல். பட்டப் படிப்பைப் பச்சையப்பர் கல்லூரியில் தொடங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார். பச்சையப்பர் பெயரால் அமைந்த அற நிறுவனங்களைப் பேணிவந்த அறங்காவலர்களைத் தனித்தனியே அணுகி பி. ஓ. எல். பட்டப் படிப்புத் தொடங்க வேண்டிய இன்றியமையாமையை வலியுறுத்தினார். அவர்களின் ஒருமித்த இசைவையும் பெற்று உவந்தார்.

மு. வ. வுக்கு ஓராண்டுகால அளவுக்கே பணி வழங்கப் பெற்றிருந்தது. ஓராண்டும் முடியும் தறுவாயில் இருந்தது.

ஆயினும் பதவி நீட்டிப்பு ஆணை வரவில்லை. மு. வ. வுக்கு உளைவு ஏற்பட்டது. தாம் பணி செய்துவந்த திருப்பத்தூர் உயர்நிலைப் பள்ளிக்கே சென்று விடலாமா என்றும் எண்ணினார். ஆயினும் தமக்கு வேலை பெற்றுத் தந்த டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்களை அணுகிக் கேட்பது நல்லது என்னும் முடிவுக்கு வந்தார்.

ஏ. எல். முதலியார் அப்பொழுது எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையில் முதல் இந்தியத் தலைமை அலுவலராக (Superintendent of the Hospital) இருந்து வந்தார். அவரைக் காண்பதற்கு அங்கே சென்றார். மு. வ. அப்பொழுது இருள் கவிந்து கொண்டுவரும் அந்திப் பொழுது. டாக்டர் ஏ. எல். முதலியார் தம் பணிகளை முடித்து விட்டுத் தம் வண்டிக்கு வந்து அமர்ந்து, முன் விளக்கைப் போட்டுவிட்டு வண்டியை எடுக்கத் தொடங்கினார். வண்டியின் முன்னே மு வ. விரைவாக வருவதைக் கண்டு முன் விளக்கை அணைத்துவிட்டுப் புறப்படுவதை நிறுத்தினார். மு. வ. தம் அருகில் வந்ததும் 'என்ன செய்தி வரதராசன்?' (What is the matter Mr. Varadarajan) என்று கேட்டார். அதற்கு மு. வ. "எனக்கு வழங்கப் பெற்ற ஓராண்டுப் பணிக் காலம் முடிவடைகின்றது. பதவி நீட்டிப்பு இன்னும் செய்யப்பட வில்லை. மனம் துன்புறுகின்றது" என்றார். இச் சொற்களைக் கேட்ட டாக்டர் ஏ. எல். முதலியார், "கவலைப்படாதீர்கள்; பணியில் நீங்கள் நிரந்தரம் ஆக்கப் படுவீர்கள்" (Don't worry Mr. Varadarajan, you will be Confirmed) என்று நன்மொழி யுரைத்தார். சொல்லிய வண்ணமே பணியை நிரந்தரப் படுத்தியதுடன், பதவி உயர்வும் வழங்கினார். திருத்தாளராக இருந்த மு. வ. 'கீழ்த்திசை மொழிகளின் விரிவுரையாளர்' (Lecturer in Oriental Languages) என்னும் பதவியாளராக உயர்ந்தார். அவ் வாண்டிலேயே பச்சையப்பர் கல்லூரியில் பி. ஓ. எல். பட்டப் படிப்புத் தொடங்கப் பெற்றது. அதே ஆண்டில் சைனபசாரில் இயங்கி வந்த பச்சையப்பர் கல்லூரி, சேத்துப்பட்டில் புதிதாக எழுப்பப் பெற்ற கட்டடத்திற்கு மாறியது. அமைதி மிக்க சூழலில் அமைந்த புதுக் கட்டடம் மு. வ. வின் மனத்திற்கு மிகப் பிடித்தமாக அமைந்திருந்தது. இப்பொழுது தமிழில் மேல் நிலைப்பட்டப்

படிப்பு வகுப்புகள் பலப்பல கல்லூரிகளில் உள்ளன. ஆனால், பச்சையப்பர் கல்லூரியில் பி. ஓ. எல். தொடங்கியபோது இருந்த காலநிலை இத்தகையது இல்லை. சென்னைப் பல்கலைக் கழகத்திலேயே முதன் முதலாகத் தமிழுக்கென்று பட்டப்படிப்புத் தொடங்கப் பெற்றது பச்சையப்பர் கல்லூரியில்தான். அதனைத் தொடங்குவதற்கு அயராது உழைத்து வெற்றி கண்டவர் மு. வ. தாம். தாம் புகுந்த துறையைப் பொலிவுறச் செய்வதில் மு. வ. கொண்ட ஆர்வம் இதனால் நன்கு வெளிப்படும்.

மு. வ. வின் முயற்சி இவ்வளவுடன் அமைந்ததா?

"முதல்அணி மாணவர்கள் இண்டர் மீடியட் வகுப்பில் தேர்ச்சி பெற்று 1942-ஜூன் திங்களில் பி. ஓ. எல். வகுப்பில் சேர்ந்து படிக்கத் தொடங்கி விட்டார்கள். மு. வ. அவர்களின் உள்ளத்தில் அமைதி இல்லை. ஏதோ ஒரு போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது. பி. ஏ., என்னும் பட்டத்துக்குரிய மாணவர்கள் இண்டர் மீடியட்டுக்குப் பிறகு, இரண்டு ஆண்டுகள் படித்து அந்தப் பட்டத்தைப் பெறுகின்றனர். ஆயின் தமிழ் இலக்கியம் படிக்கும் மாணவர்கள் மட்டும் இண்டர்மீடியட் படித்த பின்னர் மூன்று ஆண்டுகள் படித்துவிட்டு பி. ஏ. பட்டத்துக்கு ஒத்த பி. ஓ. எல். என்னும் பட்டம் பெறும்நிலை உள்ளதே என்று அவருடைய மனம் புழுங்கியது.

"பல்கலைக் கழகத்துக்குச் சென்றார். அறிவு சான்ற துணைவேந்தர் டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்களைக் கண்டு, பி. ஓ. எல். படிக்கும் தமிழ் மாணவர்களுக்கு வாய்த்துள்ள அவல நிலையை எடுத்து விளக்கினார். பி. ஏ. மாணவர்கள் படிக்கும் பாடங்களின் அளவையும் பி. ஓ. எல்; மாணவர்கள் படிக்க வேண்டிய நூல்களின் அளவையும் ஒத்திட்டுக் காட்டினார். பி.ஓ.எல்., படிப்புக்குரிய நூல்கள் பி.ஏ., நூல்களைவிடப் பன்மடங்காக விரிந்திருப்பதை உணர்த்தினார். பி. ஓ. எல்., படிப்பை மூன்று ஆண்டுகள் படிக்கும் மாணவர்களுக்கு பி. ஓ. எல்., என்று ஒரு பட்டம் அளிப்பதற்குப் பதிலாக 'ஆனர்சு' பட்டம் அளிக்க வேண்டுமென்று மன்றாடினார். துணைவேந்தர், மு. வ. அவர்கள் எடுத்துக் காட்டிய நியாயத்தைத் தெளிந்துகொண்ட பின்னரும்,

விதிகள் இடம் தரவில்லையே' என்று தயங்கலானார். இறுதியாக பி. ஓ. எல்., மாணவர்கள் ஏதாவது இன்னொரு பாடத்தைக் கூடுதலாகப் படிக்க வேண்டும் என்றும் அப்படிப் படிப்பதானால் 'பி. ஓ. எல். (ஆனர்சு)' என்று பட்டம் வழங்கலாம் என்றும் சொல்லி விட்டார்.''[1]

துணைவேந்தர் கருத்தை மாணவர்க்கு நயமான முறையில் எடுத்துரைத்தார் மு. வ. ஆர்வ மூட்டினார்; சிறிது கூடுதலாக உழைத்தால் அதற்கேற்ப உயர் பட்டம் வரும் வகையை மொழிந்து நெறிப் படுத்தினார். ஆசிரியர் ஆர்வத்தையும் தமக்காக உழைத்த உழைப்பையும் உண்மையாக உணர்ந்து கொண்ட மாணவர்கள் அவர் வழியிலே நின்று அரிய தேர்ச்சி காட்டினர். இறுதியாண்டிலே திட்டப்படியான தாள்களுடன் இந்திய வரலாறு பற்றிய ஆங்கிலத்தாள் ஒன்றும், சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய இரட்டைக் காப்பியம் பற்றி ஒருதாளும் சேர்த்து எழுதினர். மு. வ. இவ்வளவுடன் நின்றார் அல்லர். பி. ஓ. எல். (ஆனர்சு) பட்டம் பெற்ற மாணவர்கள் எம். ஏ., பட்டம் பெறவும் உரிய வகையில் கூறி வகை செய்தார்.

மாணவர் உயர்வுக்கான வழிகளைத் தாமே கருதிக் கருதிக் கடனாற்றிய மு. வ. கல்லூரி வகுப்பை எவ்வாறு நடத்தினார்?

''கழுத்துவரை மூடிய நீண்ட கோட்டு, வெள்ளைத் தலைப் பாகை, நெற்றியில் சந்தனப்பொட்டு ஆகிய கோலத்துடன் மு. வ. அவர்கள் எங்கள் வகுப்பிற்குள் முதன் முதலாக 1940 ஆம் ஆண்டு சூன் மாதம் நுழைந்தார். அவர் தோற்றப் பொலிவும், முகத்தில் தவழ்ந்த இனிமையும் நிமிர்ந்த நன்னடையும் எங்களை ஆட்கொண்டன. 'திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ்' என்ற நூலை முதல் பாடமாகத் தொடங்கினார். தமிழ்த் தெய்வமான முருகனை இலக்கிய உலகில் அவர் அறிமுகம் செய்தவிதமே தனிச் சிறப்புடன் திகழ்ந்தது. அதை அடுத்து 'நம்பி அகப் பொருள்' என்ற இலக்கண நூலைப் பாடம் சொல்லி விளக்கினார். ஆம், தேனில் இனிமையைக் குழைத்துச்செந்தமிழ்ப் பாலினை ஊட்டத் தொடங்கினார். அள்ள அள்ளக் குறையாத தமிழ்

1. குன்றின்மேல் நின்ற ஒளி. திரு. கா. அ. ச. ரகுநாயகன்.

அமுதை வாரி வாரி வழங்கினர். ஐந்து ஆண்டுகள் போனதே தெரியவில்லை.''[1]

மு.வ. பிறவி ஆசிரியர். கற்பித்தலைத் தொழிலாகக் கொண்டார் என்பதினும் தொண்டாகக் கொண்டார் என்பதே தகும். மேலதிகாரத்தவர் கண்காணிப்பார்கள் என்றோ, அவர்கள் பாராட்டைப் பெற வேண்டும் என்றோ எண்ணிக் கற்பித்தலைக் கருதாத உள்ளம் அவர் உள்ளம். மாணவர்க்குத் தெளிவு உண்டாகவேண்டும்; தம் நெஞ்சுக்கு நிறைவு உண்டாக வேண்டும் என்பவையே நினைவில் நிற்பன. ஆதலால் வகுப்பு ஆராய்ச்சி மன்றமாகவும், கருத்தரங்கமாகவும் திகழும். கண்டறியாதன வெல்லாம் கண்ணுறக் காட்டி விளக்கம் பெறச் செய்விப்பது மு.வ. கடைப் பிடித்த கல்விநெறி. இதற்கு எண்ணற்ற சான்றுகள் உளவாதலை அவர்தம் மாணவர் அறிவர். ஒரு சான்றைச் சுட்டிக் காட்டுகிறார் மு.வ. வின் அன்பு மாணவர் திரு. மின்னூர் சீனிவாசன்.

''ஒருசமயம் புன்கம் பூக்களை ஒரு குவியலாகத் தம் பையில் போட்டுக் கொண்டுவந்து மேசையின்மேல் வைத்தார். புன்கம் பூக்கள் மேசையின்மேல் இறைந்திருந்தன. வகுப்புத் துவங்கும் போது 'இது என்ன புதுக்காட்சி. பேராசிரியர் ஏன் இந்தப் பூக்களைக் கொண்டுவந்தார்? என்று எங்களுக்குப் புரியவில்லை. பேராசிரியர் தொடங்கினர்: 'பொரிப்பூம் புன்கு' என்றாரே சங்கப் புலவர்; பாருங்கள்-சிந்திக் கிடக்கும் புன்க மலர்களை!' தெரியாமல் அயர்ந்துபோய், பொரி என்று வாயில் போட்டுக்கொள்ள யாரேனும் நினைத்தாலும் வியப்பதற்கில்லை. பாருங்கள் இலக்கியப் புலவரின் கூரிய கலைப் பார்வையை'' என்றார். அவர் சொன்னது முற்றும் உண்மை என்பது அந்தப் பூக்குவியலைப் பார்க்கப் பார்க்க விளங்கலாயிற்று.''[2]

கல்லூரிக்கு வந்தபின்னரும் மு.வ. முன்னே உடுத்தது போலக் கதராடையே உடுத்து வந்தார். காந்தியடிகள்மேல்

---

1. டாக்டர் மு.வ. அவர்களின் பேராசிரியத் திறம். திரு. சி. வேங்கடசாமி எம்.ஏ., பேராசிரியர் மு.வ.-பேராசிரியர் அ.மு.ப. கருத்தரங்கக் கட்டுரைகள் பக். 41. 2. நான்கண்ட மு.வ.

கொண்ட பற்றும், திரு.வி.க. தொடர்பும் மட்டும் கதர்ப் பற்றுக்குக் காரணமாக இருந்தன வல்ல. மு.வ. வின் தமக்கையார் கணவர் சிறந்த காங்கிரசுத் தொண்டர்; சிறைக்கும் சென்றவர். அவருக்கு ஆர்க்காட்டில் கதர்க்கடை ஒன்றும் உண்டு. அக் கடையில் மு.வ. 1931 முதல் 1934 வரை சில சமயங்களில் வாணிகம் செய்ததுண்டு. ஆகலின் கதர் உடுத்துதல் குடும்பச் செல்வமாக இருந்தது. தம் ஆழ்ந்த எண்ணத்தாலும், அவ் வுடையே உடலுக்கும் உள்ளத்திற்கும் நிறைவு தருவது எனத் தெளிந்தார். ஆகலின் கதர் உடுப்பதைக் கடமையெனப் போற்றினார். ஆனால், கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் மோசூர் கந்தசாமி முதலியார்க்கு மு.வ. கதர் உடையுடன் கல்லூரிக்கு வருவது உவப்பாகத் தோன்றவில்லை. கதர் உடையால் மு.வ. வின் வேலைக்கு ஏதேனும் இடையூறு வந்துவிடுமோ என்றும் அஞ்சினார். அதனால் மு.வ. வை ஒருநாள் அழைத்து "அப்பா! வரதராசன்! நீ இனி பி.ஓ.எல். போன்ற உயர் வகுப்புகளுக்குப் பாடம் கற்பிக்கப்போகிறாய். ஆதலின் நீ பழைய தமிழ் நாட்டு முறையில் உடையணிய வேண்டா. ஏனைய விரிவுரையாளர்களைப் போல் மேனாட்டுப் பாணியில் 'சூட்டு கோட்டு' முதலிய உடைகளை அணிந்துவா. ஆனால் நெற்றியில் சந்தனப் பொட்டை மட்டும் மறந்து விடாதே!"[1] என்று அன்புக் கட்டளையிட்டார். அவர் தம்மிடம் காட்டிய பேரன்பாலும் மதிப்பாலும் அவர் சொல்லை மீறி நடக்க மு.வ. வினால் முடியவில்லை. எனவே தமிழ் நாட்டு முறையில் கீழ்ப் பாய்ச்சும் தலைப்பாகையும் கட்டிவந்ததை விட்டுவிட்டு மேனாட்டு முறையில் உடையணியத் தொடங்கினார்.

பருத்தியினால் ஆகிய இம் மேனாட்டு உடை அணிதலும் நெற்றியில் சந்தனப் பொட்டு இடுதலும் சில ஆண்டுக் காலமே நிலைத்தன. ஏறத்தாழ எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு—1950ஆம் ஆண்டு தொடங்கி—முன்போல் கதர் உடைகளே ஆயின. காசுப்பையும் அரைஞாண் கயிறும் கூடக் கதராகின.

தொடக்கத்தில் மு. வ. குடும்பம் 'ஜார்ஜ்டவுன்' பகுதியில் வேங்கடேச நாயக்கன் தெருவில் ஒரு மேல்மாடிக் கட்டடத்தில்

---

1. குமுதம் 21-11-74. ப. 1. அரசு கடிதம்.

இருந்தது. அங்கே இருக்கும்போது மு. வ. வுக்கு ஒரு பெண் மகவு பிறந்தது. அதற்குத் 'திலகவதி' என்று பெயர்வைக்கலாம் என எண்ணியிருந்தார். அவர் விரும்பிப் போற்றும் பெருந்தகை அப்பரடிகளின் தமக்கையார் பெயர் திலகவதியார் என்பது. அன்றியும் தம் வழிகாட்டியாக விளங்கும் பெரியார் திரு. வி. க. வின் செல்வியாகிக் கால் காட்டிக் கை காட்டி நகைமுகங் காட்டி ஈராண்டளவில் இயற்கை எய்திய திலகவதியின் நினைவும் கூடியது. ஆனால், மு. வ. வின் திலகவதியாகத் திகழப் பிறந்தநும் சில வாரங்களிலேயே இயற்கை எய்தியது! பிற்காலத்தில் மு. வ. தம் மனைவியாரோடு அப் பக்கம் செல்ல நேருங்கால் 'நம் குழந்தை இங்கே தானே இருக்கிறது' என்று துயரோடு அப் பகுதி இடுகாட்டைச் சுட்டிக் காட்டுவார்.

1943 ஆம் ஆண்டில் மு. வ. வுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அப்பொழுது மு. வ. வின் நினைவு பாவலனாகவும் காவலனாகவும் திகழ்ந்த ஒரு பாண்டிய மன்னன் மேல் சென்றது. தொல் பழங்காலத்திலேயே கல்வியின் மேம்பாட்டை ஒப்பாரும் மிக்காரும் இல்லாத அளவுக்கு உணர்ந்து உரைத்த அப் பெரு நாவலன் பாடல்மேல் சென்றது; ''உற்றுழி உதவியும்'' என்னும் அப் பாட்டைப் பாடிய பாண்டியன் அறிவுடை நம்பியின் பெயரின் மேல் சென்றது; தம் குழந்தையின் திருப்பெயர் மேல் சென்றது; 'நம்பி' என நற்பெயர் சூட்டி நாமணங் கொண்டது; நெஞ்சம் இனித்தது; செவி குளிர்ந்தது.

ஆறு ஆண்டுகள் உருண்டன. மு. வ. வுக்கு மூன்றாவது செல்வமகன் பிறந்தான். தொண்டர் தம் பெருமையைப் போற்றிய அவர், அறிவுப் பணியிலே ஊன்றிய அவர், 'ஈட்டிய வெல்லாம் இதற்காகவே' என்று கொடுக்கும் கொடை வள்ளலாகத் திகழ்ந்த பாரியை எண்ணினார்.

''பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர்''

வழங்கிய பாரியின் கொடையை எண்ணினார். இறைவன் கொடையாக வந்த இனிய செல்வனுக்குக் கொடை மன்னன் பாரியின்

பெயரைச் சூட்டி மகிழ்ந்தார். இரண்டெழுத்தும் மூன்றெழுத்தும் இடம் பெறும் பெயர்கள்! ஆனால் எண்ண எண்ண இனிக்கும் வரலாறுகளைத் தம்முள் அடக்கிக் கொண்டுள்ள பெயர்கள். 'இப்படி வாழவேண்டும்' என்று உலகுக்குக் கற்பிக்கும் எடுத்துக் காட்டான பெயர்கள். மு. வ. வின் பெயர்த் தேர்ச்சியின் பெற்றி இது.

எழுத்துப்பணி :

மு. வ. திருப்பத்தூரில் இருந்த காலத்தில் இருந்தே எழுத்துப்பணி தொடங்கி விட்டது. ஆயினும் சென்னைக்கு வந்த பிறகே கட்டுரைகளை எழுதுவதுடன் அமையாமல் நூல் எழுதும் பணியிலும் ஈடுபட நேர்ந்தது.

மு. வ. அழுத்தமான சிந்தனையாளர். எப்பொழுதும் ஏதேனும் ஒன்றைச் சிந்தித்துக் கொண்டே இருப்பார். கல்லூரி முடிந்து வீட்டிற்கு நடந்து போகும் பொழுது, சிந்தித்துக் கொண்டே வீட்டைக் கடந்தும் சென்று விடுவதுண்டு. எதிரே வரும் மாணவரோ நண்பரோ 'எங்கே ஐயா போகிறீர்கள்?' என்று கேட்ட பிறகே தம் நிலைக்கு மீண்டு வீடு திரும்புவதும் உண்டு.

ஒருமுறை உறவினர் ஒருவரின் உடல்நிலை பற்றிக் 'கவலைக் கிடம்' எனத் தந்திச் செய்தி வந்திருந்தது. வகுப்பறைக்குச் செல்லுமுன் அத் தந்தி வந்திருந்தது. பிரித்துப் படித்தார்; கலங்கினார்; கடமையை மேற்கொண்டு வகுப்பினுள் நுழைந்தார்; பாடத்திலே ஊன்றிக் கற்பித்தார். வகுப்பு முடிந்த பிறகே தந்தி நினைவு வந்தது. இவ்வாறு சிந்தனைச் செல்வராகத் திகழ்ந்தார் மு. வ. எனினும் அச் சிந்தனைக்கு எழுத்துருவம் கொடுக்கும் வாய்ப்பும் வேண்டுமே! அவ் வாய்ப்புத் தானே தேடிவந்து தருவதுபோலச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் முன் னின்றது.

சைவ சித்தாந்தக் கழகத் திங்கள் இதழாகிய செந்தமிழில் மு. வ. வின் கட்டுரைகள் சில திருப்பத்தூரில் இருந்தபோதே வெளிப்பட்டதுண்டு. அத் தொடர்பால் கழக ஆட்சியாளர்

தாமரைச் செல்வர் வ. சுப்பையாபிள்ளை அவர்களுக்கும் மு வ. விற்கும் தொடர்பு உண்டாயிற்று. அத் தொடர்பு நாளும் வளர்ந்து மு. வ. சென்னைக்கு வந்ததும் சுடர்விடுவதாயிற்று. மு. வ.வுக்கு முதற்கண் வீடு அமைத்துக் கொடுத்தவரும் அவரே. மு.வ.வின் எழுத்தோவியங்களை அச்சூர்தி ஏற்றி அழகு செய்வித்தவரும் அவரே. முதன்முதலாக மு.வ.வின் பெயரைப் பட்டி தொட்டிகளெல்லாம் பரப்பிய 'திருக்குறள் தெளிவுரை'யை வெளியிட்டு எட்டு நூறாயிரம் படிகள் விற்பனை செய்த அயரா முயற்சியாளரும் அவரே. மு. வ. வின் தொடக்ககால நூல்வெளியீடு குறித்து அவரே உவகை பெருக உரைக்கின்றார்:

"அவர் (மு. வ) திருப்பத்தூர்ப் பள்ளியினின்றும் விலகிச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் துணை விரிவுரை (Tutor) யாளராக 1939இல் அமர்த்தப் பெற்றார். சென்னையிலே அவர் குடியிருப்பதற்குத் தங்கசாலையை அடுத்துள்ள வெங்கடேச நாயக்கன் தெருவில் ஒரு வீடு அமைத்துக் கொடுத்ததோடு அடிக்கடி அவர் இல்லஞ் சென்று அவரோடு அளவளாவி வருவதுண்டு. நெடுநேரம் இருத்தலோ வீண் உரையாடலோ செய்யேன். அவரும் அதை விரும்பார். சிறுவர்கட்கு எளிய நடையில் குழந்தைப் பாடல்களும் சிறுகதைகளும் எழுதுமாறு வேண்டினேன். குழந்தைப் பாடல்கள் சிலவற்றை ஆக்கித் தந்தனர். அவற்றைப் படங்களுடன் 'குழந்தைப் பாடல்கள்' என்ற தலைப்பமைத்து வெளியிடலானேன்; அவர் எழுதுகோலால் முதன்முதல் எழுதப்பெற்ற நூல் அதுவேயாகும். அதனை அடுத்து அவர் எழுதியவை 'இளைஞர்க்கான சிறுகதைகள்' என்ற நூலும், செகப்பிரியர் நாடகக் கதைகளில் ஆறு கதைகள் அடங்கிய இரு நூல்களுமாகும். சார்லஸ் லாம் ஆங்கிலத்தில் எழுதிய கதைகளைக் கொண்டு 'செகப்பிரியர் நாடகக் கதைகள்' எழுதப் பெற்றனவாகும். முதற்புத்தகத்தில் 'வெனிசு வணிகன்', 'விரும்பிய வண்ணமே', 'மாக்பெத்' ஆகிய மூன்றும், இரண்டாவது புத்தகத்தில் 'புயற் காற்று', 'லியர் மன்னன்' 'ஆம்லெத்' ஆகிய மூன்றும் அடங்கியுள்ளன.

"இவற்றை யடுத்துப் புலவர் திரு. மு. வரதராசனுர் புதிய பாடத் திட்டத்தின்படி தொடக்கப்பள்ளிக்கும், நடுநிலைப் பள்ளிக்குமாகக் 'கழகத் தமிழ் இலக்கணம்' என்ற தலைப்பில் இரு நூல்களை எழுதியுள்ளார்.

"1941 இல் மேனாட்டுச் சிறுகதைகள் சிலவற்றைத் தழுவி சிறுவர்கள் விரும்பிப் படிக்கும்பொருட்டு எளிய நடையில் சில கதைகளை எழுதித் தந்தனர். அவை 'கழகச் சிறுகதைகள்' என்ற தலைப்பில் மூன்று சிறு நூல்களாக வெளியிடப் பெற்றன. 1942 இல் உயர்நிலைப்பள்ளிப் பாடத் திட்டத்திற்கேற்ப அவர்கள் எழுதித் தந்த, 'கழ்கத் தமிழ் இலக்கணம்' மூன்ரு வது புத்தகம் வெளியிடப் பெற்றது."[1]

படிக்காத மக்கள் தம் வாழ்க்கையில் படும் தொல்லைகளை யும் இடர்களையும் தம் பட்டறிவில் கண்டவாறு அறிஞர் சிலர் அனுப்பிய குறிப்புகளைக் கொண்டு தம் கருத்துகளையும் இணைத்துப் 'படியாதவர் படும்பாடு' என்னும் தலைப்பில் ஒரு நூல் இயற்றினர். 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்னும் நன்மொழி நயமாக விளக்கும் வண்ணம் முதியோர் கல்விக்குப் பயன்படும் வகையில் வினவிடை அமைப்பில் 'கண்ணுடைய வாழ்வு' என்னும் தலைப்பில் ஒரு நூல் யாத்தார். இந்நூல் மட்டுமே மு. வ. வின் பெயரால் வெளிப்பட்டது. ஏன் மற்றை நூல்களில் மு. வ. வின் பெயர் பொறிக்கவில்லை என்னும் எண்ணம் எவர்க்கும் உண்டாதல் இயல்பு. "இதுகாறும் அவரால் எழுதப்பெற்ற நூல்களில் 'தமது பெயரை நூல் முகப்பிலோ விளம்பரத்திலோ குறிக்க வேண்டா' என அவர் கூறியவாறு குறிக்கவில்லை"[2] என்பது உரிய விடை யாகும். புகழ் விரும்பாப் புகழ் வாழ்வு மு.வ.வுக்கு முதிர்ந்த காலத்தே தோன்றியதன்று! அரும்பிய காலத்திலேயே அமைந் தது என்பது இதனல் தெள்ளிதின் விளங்கும்.

---

1. செந்தமிழ்ச் செல்வி-சிலம்பு. 47 பக். 309-10. திரு. வ. சுப்பையா பிள்ளை.

2. செந்தமிழ்ச் செல்வி. சிலம்பு 47, பக். 311. திரு. வ. சுப்பையா பிள்ளை.

மேலே குறிப்பிடப்பெற்ற நூல்கள் எல்லாம் இளைய மாணவர்களையும், எழுதப் படிக்கத் தொடங்கும் முதியோர்களையும் மையமாகக்கொண்டு எழுதப்பெற்ற நூல்களாகும். எனினும் அரிய கருத்துகள் அமைந்து கற்பாரை நல்வழிப் படுத்தத்தக்க ஆற்றல் உடையனவாய் விளங்கின. சொல்லழகும் பொருளழகும் அமைந்த சிறுசிறு தொடர்களால் இனிமையாக நடந்து செல்லும் உரைநடை அவர் நடை. மாணவர்க்கேற்ற பாடல்களும் சுவையூட்டுவனவாய் அமைந்தன. எளிதில் பாடுதற்கும், பொருள் புரிந்து கொள்ளுதற்கும் வாய்ப்பாக இருந்தன. குழந்தைகளுக்கென்று எழுதிய நூல்களில் எத்தகைய உயர்ந்த கருத்துகள் இடம்பெற்றிருந்தன என்பதற்குச் சில சான்றுகள் காணலாம்.

"என்னுடைய பெற்றோர் எனக்குக் கண்கொடுக்காமல் பொருள் கொடுத்தார்கள். அறிவை வளர்க்காமல் உடம்பை வளர்த்தார்கள். அவர்கள்மேல் தப்பு இல்லை. அந்தக் காலமே அப்படித்தான்"—படிக்காதவன் ஒருவன் உரை இது.[1]

"நல்லவர் யாராக இருந்தாலும் அவர் வீட்டில் சாப்பிடலாம். சமைக்கும் இடமும் பாத்திரமும் சுத்தமாக இருத்தல் வேண்டும். அழுகாத, கெடாத பொருளைச் சமைக்க வேண்டும். இப்படி நல்ல முறையில் சமையல் செய்திருந்தால் அதுதான் நல்ல உணவு. வேறே ஒன்றும் நான் கவனிப்பதில்லை.[2] இது படித்த இளைஞன் ஒருவன் கூறும் சீர்திருத்த உரை.

"அத் தெருவில் வாழும் சிலருக்கு நாலைந்து முறை தந்திச் செய்திகள் வந்தபோது அவர் உடன் இருந்து அவற்றைப் பார்த்திருந்தார். அச் செய்திகள் இழவுச் செய்திகளாகவே இருந்தன. ஒருநாள் நல்லப்பருக்கே ஒரு தந்தி வந்தது. அதை அவர் கண்டவுடன் அழத் தொடங்கி விட்டார்."[3] இஃதொரு நகைச்சுவைச் செய்தி.

---

1. கண்ணுடைய வாழ்வு பக். 2.
2. ௸ 5—6.
3. படியாதவர் படும்பாடு பக். 12.

"உன் வயது என்ன ?"

"என் வயது சரியாகச் சொல்ல முடியாது. போன தாது ஆண்டில் வந்த பஞ்சம் எனக்குத் தெரியும். அப்போது சிறு பையனாய் இருந்தேன். நீங்களே கணக்குப் போடுங்கள்."

"ஏறக்குறைய எழுபது இருக்குமா?"

"இருக்கலாம் என்றுதான் எண்ணுகிறேன். என் வீட்டுக்காரி செத்துப்போய் பத்து வருடம் இருக்கும். அப்போது எனக்கு 62 வயது என்று பேசிக்கொண்டார்கள்"[1]

—சிரிப்பு வெடிகள் இவை.

"நம் தமிழ் நாடோ தூங்குகிறது. இன்னும் தூக்கமா? தமிழ் மக்கள் நிலையை உன்ன உன்ன உள்ளம் குழைகிறதே. உலகிற்குக் கலையறிவை ஊட்டிய தமிழ்மக்கள், உலகின் முதன் முதலில் எழுத்து வடிவம் பெற்ற மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழ்மக்கள், மொழிகள் பலவற்றுக்குத் தனிப் பெருந் தாயாய் இயங்கும் மொழியைப் பேசும் தமிழ்மக்கள், உலக மொழிகள் எல்லாவற்றையும் விட எழுதப்படிக்கக் கற்றல் எளிதாக உள்ள ஒரு மொழியைப் பயிலும் தமிழ்மக்கள் எழுத்தறிவும் இல்லாது வாழ்தல் தகுமோ? இந் நிலை ஒழிக. நன்னிலை எய்துக! தமிழ் மக்களே எழுங்கள்! அனைவரும் முயலுங்கள்! அறிவொளியைப் பரப்புங்கள்!"[2] — இஃது உணர்ச்சிமிக்க ஒரு நடை. இது மு. வ. நடையா? திரு.வி.க. நடையா? திரு. வி. க. நடையில் தோய்ந்த மு. வ.வின் எழில் நடை!

"பேசு கிளியே பேசு கிளியே
பேதம் ஒன்றும் இல்லை என்று பேசு கிளியே"[1]

கிளிக்குச் சொல்கிறாரா? கிள்ளை வழியே பிள்ளைக்குச் சொல்கிறாரா? மனப்பறவை பறக்கும் வகையை மறக்க விடாமல் பாடுகிறார் மு.வ.

1. படியாதவர் படும்பாடு. 33.
2. ,, 96.
3. குழந்தைப் பாட்டுக்கள். பக். 9.

"குருவி பறக்கும் வீட்டின் மேல்
காக்கை பறக்கும் அதற்கு மேல்
புறாக்கள் பறக்கும் புதுமையாய்
பருந்து பறக்கும் முகில் அருகே
கப்பல் பறக்கும் அதைப்போலே
காற்றில் பறக்கும் எல்லாமே
எல்லாம் உயரப் பறந்தாலும்
என்மனம் போலப் பறந்திடுமோ ?"[1]

தென்னையைப் பார்க்கிறான் சிறுவன். தன்னையும் பார்க்கிறான். தன்னை வளர்க்கும் அன்னையையும் எண்ணுகிறான். தென்னை செய்யும் உதவியையும் எண்ணுகிறான்! தனக்குக் கற்றுத் தரும் பாடத்தை உன்னுகிறான்.

"தென்னை மரமே கேளாய்!
தென்னை மரமே கேளாய் !
உன்னை வளர்த்தவர் அப்பா;
என்னை வளர்த்தவர் அம்மா;
உனக்கும் வயது ஆறே;
எனக்கும் வயது ஆறே;
நீவளர்ந்த உயரம்
நான்வளர வில்லை;
நீகொடுப்பாய் இளநீர்
நான் கொடுப்ப தென்ன ?
ஆனாலும் என்னை அன்பாய்
அன்னை வளர்த்தலைப் பாராய் !"[2]

மு.வ. தொடக்க நாளிலேயே எழுதிய செய்திகள் இவை. ஆனால், அப்பொழுதே அவர் கையெழுத்து—அச்சிடுவதற்குத் தரும் கையெழுத்துப்படி—எப்படி இருக்கும்?

"திரு. மு. வரதராசனார் எழுதித் தரும் கையெழுத்துப் படிகளில் அடித்தல் திருத்தல் இரா. எழுத்துகளும் தனித்தனியாக ஒன்று போலத் தெளிவாகவே இருக்கும். அவர் ஒரு நூலை

1. குழந்தைப் பாட்டுக்கள். பக். 18.
2. குழந்தைப் பாட்டுக்கள் பக். 19

எழுதவேண்டுமானால் அதற்குரிய கருத்துகளைத் தமது உள்ளத்திலே தெளிவு பெற அமைத்துக் கொண்டு எழுதுவர். அவர் கையெழுத்துப் படியை அச்சுக் கோப்பவர் அச்சுப் படியை அச்சுக்கோப்பது போல் பிழையில்லாமல் மகிழ்ச்சியோடு அச்சுக் கோப்பர். தடித்த எழுத்தில் அமைக்க வேண்டிய தலைப்புச் சொற்கட்கும் இடைநடுவில் வருகிற சிறப்புச் சொற்கட்கும் இரட்டை அடிக் கோடுகளும் ஒற்றை அடிக் கோடுகளும் இடுவர். காற்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப் புள்ளி, கேள்விக் குறி, வியப்புக்குறி முதலிய குறிகளையும் தவறாமல் இடுவர் அவர்கட்கு மெய்ப்பினை அனுப்புவதற்குமுன் யான் ஒருமுறை படித்துத் திருத்தியே அனுப்புவேன். அவர் மெய்ப்பில் புதுக் கருத்துகளைப் புகுத்துவதோ சொற்களை மாற்றி அமைப்பதோ பெரும்பான்மை கிடையாது''[1].

பி.ஓ.எல். வகுப்பு மாணவர்களுக்கு 'மொழியியல்' பாடமாக இருந்தது. அதனைக் கற்பிப்பதற்குரிய நூல்கள் தமிழில் இல்லை. ஆகவே, மொழியியல் கற்பிக்க வேண்டியிருந்த மு.வ. வே மொழியியல் நூல் எழுதும் கடமையையும் மேற்கொண்டார். கற்பிக்கும் பாடத்தை நூலாக்குவதும், நூலாக்கும் பாடத்தைக் கற்பிப்பதும் இரட்டை நன்மைகள் ஆயின. இவ்வகையில் மொழி நூல் என்னும் நூலும் மொழியியற் கட்டுரைகள் என்னும் நூலும் வெளிப்பட்டன. மொழிநூல் 1947ஆம் ஆண்டிலும் மொழியியற் கட்டுரைகள் 1954ஆம் ஆண்டிலும் வெளிவந்தன. மொழி வரலாறு என்னும் நூலும் 1954இல் வெளிவந்ததே ஆகும்.

மொழிநூல் எவ்வாறு நூல் வடிவுற்றது என்பதை மு.வ. குறிப்பிடுகிறார் :

''சென்னைப் பல்கலைக் கழகத்து மொழிநூல் பாடத்திட்டத்தை ஒட்டி, பச்சையப்பன் கல்லூரியில் பி.ஓ.எல். ஆனர்ஸ் (B.O.L. Hons) வகுப்பிற்கு 1942இல் மொழி நூல்பாடம் கற்பிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தபோது எனக்கு இந்நூலைப் பற்றிய எண்ணம் அரும்பியது. முதலில் மாணவராக இருந்த

1. செந்தமிழ்ச் செல்வி. சிலம்பு. 47. பக். 310-11. திரு. வ. சுப்பையாபிள்ளை.

திருவாளர் போ. குருசாமி, சி. வேங்கடசாமி, ச. ரகுநாயகம், ரா. சீனிவாசன் ஆகியோர் அந்த எண்ணத்தை மேன்மேலும் வளர்த்து வந்தனர். யான் சொல்லியவற்றை அவர்கள் எழுதி வைத்த குறிப்புக்களே இந்நூல் வடிவு பெற்றன''.

இன்னும் மொழிநூல் பற்றிய சில அரிய கருத்துகளை மொழிநூல் முன்னுரையிலே சுட்டுகின்றார் மு.வ.

''பயனுள்ளது வாழும்; பயனில்லாதது வீழும்; வேண்டாத ஒன்று தானே அழிதல் இயற்கை; இந்த அழிவும் ஆக்கம் கருதியதே. மாறுதல் ஒவ்வொன்றும் முன்னேற்றத்தின் படியே. இவ்வளவும் உயிர்வாழ்க்கையின் மற்றத் துறைகளில் காணப்படுதல் போலவே மொழித் துறையிலும் காணப்படுகின்றன.

''மொழியைப் பேசுவோர்க்கும் எழுதுவோர்க்கும் பிணக்கும் போராட்டமும் உள்ளன. மொழியின் பழைமையைப் போற்றுவோர்க்கும் மொழியின் வளர்ச்சியை விரும்புவோர்க்கும் பகை பெருகுகின்றது. இந்தப் பிணக்கு, போராட்டம், பகைமை எல்லாம் வேண்டாதவை. வீண்; இவ்வாறு உணர்த்தவல்லது மொழியின் ஆராய்ச்சியே.

''இலக்கியத்தில் காண்பது மொழியின் பதிவுபெற்ற பழைய வடிவம். இலக்கணம் என்பது மொழியின் இறந்தகால நிலையை விளக்கி நிகழ்கால நிலையைச் சொல்ல முயல்வது. மொழியியல் என்பது மொழியின் வரலாற்றை விளக்குவதோடு நிகழ்கால நிலையைத் தெளிவாக்கி எதிர்காலப் போக்கையும் அறிவிக்க வல்லது''[1].

''டாக்டர் மு.வ. அவர்களே இக்கலையை (மொழியியல்) நாடெங்கும் பரப்பிய பேரறிஞர். அவர் இத்துறைக்குச் செய்த தொண்டு அடிப்படையானது. கடைக்கால் போட்டவர் அவர் என்று கூறலாம்''[2] என்கிறார் மு.வ. வின் மாணவர் மொழி நூற் பேராசிரியர் டாக்டர் ரா. சீனிவாசன்.

---

1. மொழிநூல்—முன்னுரை.

2. பேராசிரியர் மு. வ. பேராசிரியர் அ. மு. ப. கருத்தரங்கக் கட்டுரைகள் பக். 14.

மொழிநூல் ஒலிவகை, உயிரொலிகள், மெய்யெழுத்துக்கள், ஒலியளவு, ஒலியழுத்தம், ஒலியசை முறை, சொல்லின் திரிபு, அடிச்சொற்கள், பெயர்ச்சொல், வேற்றுமை, மூவிடப்பெயர், எண்ணுப் பெயர்கள், வினைச்சொல், வினைவகை, சுட்டு முதலியன, சொல்லும் பொருளும், சொற்றொடர் என்னும் பதினேழு தலைப்புகளில் 296 பக்கங்களில் அமைந்துள்ளது.

பெண் அஃறிணையா?, இந்தியின் தாய், தலைச்சோறு, நிற்பது கூடாது, அடக்குமுறை, மொழிபெயர்ப்பு, ஊருடன் கூடிவாழ், செவிச்செல்வம், வல்லான் வகுத்ததே வாய்க்கால், 'கள்' பெற்ற பெருவாழ்வு, மனம் போன போக்கு, செல்லப்பன், கல்லாத பேர்களே நல்லவர்கள், இழப்பது ஒன்றும் இல்லை, அழகா? எளிமையா?, பெரியோர் சிறுபிழை, பெண்ணுரிமை என்னும் பதினேழு கட்டுரைகளை யுடையது மொழியியற் கட்டுரைகள்.

'அரியகலை' என்பது முதலாக 'எண்கள்' என்பது ஈறாக இருபத்தெட்டுத் தலைப்புகளைக் கொண்டு நானூற்று எண்பத்தேழு பக்கங்களில் நடையிடுகின்றது மொழி வரலாறு.

''மக்களின் வாழ்வில் பிறந்த கலை, மொழி; மக்களால் வளர்க்கப்படும் கலை மொழி; மக்களின் வாழ்வை நாகரிகமுடையதாக உயர்த்தி வரும் அரியகலையும் மொழியே''[1] என்று தெளிந்துரைக்கும் மு. வ. இளைஞர்களும் எளிதில் மொழியியற் கருத்துகளை உணர்ந்து கொள்ளுமாறு வானொலியில் உரையாற்றினார். அவ்வுரை சிறிய சிறிய சொற்றொடர்களில் கதைப் போக்கில் அமைந்தது. அதன் தொகுப்பே 'எழுத்தின் கதை', 'சொல்லின் கதை', 'மொழியின் கதை' என்னும் நூல்களாக வெளிப்பட்டன.

''(தமிழ்) எழுத்துகளில் வளைவுகளும் சுழிகளும் மிகுதியாக இருப்பதற்குக் காரணம் என்ன? நம்முடைய முன்னோர்கள் பலகையிலும் காகிதத்திலும் எழுதவில்லை. பனை ஓலையில் இரும்பு எழுத்தாணி கொண்டு எழுதினார்கள். அதில் எழுதும்போது

1. மொழி வரலாறு. பச் 5.

ஒலை கிழியாமல் இருக்க வேண்டுமானுல் இப்படி வளைவுகளும் சுழிகளும் இருந்தால்தான் எழுத முடியும். இப்படித்தான் எழுதப்படும் பொருளுக்கும் எழுதும் கருவிக்கும் தகுந்தபடி எழுத்து முறையும் அமைந்துவிட்டது.''

—இஃது எழுத்தின் கதை,[1]

''அந்தக் காலத்தில் சொற்களை எப்படி ஏற்படுத்தினுர்கள்? தங்கள் காதால் கேட்ட ஒலியையே திருப்பிச் சொன்னுர்கள். திருப்பிச் சொன்ன ஒலியே சொல் ஆயிற்று. மரத்தில் கருநிற மான பறவை ஒன்று 'காகா' என்று கத்தியது. அதைப்பற்றிச் சொல்லும்போது பழங்கால மனிதன் தானும் 'காகா' என்று கத்தினுன். நாளடைவில் காக்கா என்ற ஒலியே அந்தப் பறவைக்குப் பெயராயிற்று.''

—இது சொல்லின் கதை,[2]

''கோழி பேசுகிறது. கோழியாவது பேசுவதாவது. இது என்ன கதையா என்று எண்ணத் தோன்றும். ஆனுல் நன்ருக எண்ணிப் பார்த்தால் தாய்க் கோழி தன் குஞ்சுகளோடு இருக்கும் போது எந் நேரமும் பேசிக்கொண்டே இருப்பது உண்மை என்று தெரியும். அது ஒரு பேச்சா, கிக் கிக் கிக் என்ற ஒலி தானே என்று எண்ணலாம். நமக்கு விளங்காத காரணத்தால் அது பேச்சு அன்று என்று தள்ளிவிடக் கூடாது. சீனுக்காரன் பேசுவது நமக்கு ஒன்றும் விளங்கவில்லை. அதனுல் அது பேச்சு அன்று என்று தள்ள முடியுமா? அப்படித்தான் கோழிப்பேச்சும். அதன் பேச்சு நமக்கு விளங்கவில்லை; ஆனுல், அதன் இளங்குஞ்சு களுக்கு நன்ருக விளங்குகிறதே. அவைகள் தாய் சொல்வதைக் கேட்டு அதன்படி நடப்பதைக் காணலாம். ஆகையால் அது பேச்சுத்தான்.''[3]

—இது மொழியின் கதை,

---

1. எழுத்தின் கதை பக். 35.
2. சொல்லின் கதை பக். 7.
3. மொழியின் கதை பக். 14.

குழந்தை இலக்கியங்களைப் படைத்த மு. வ., பட்டப்படிப்பு மாணவர்க்கு மொழிநூல் படைத்த மு. வ. பதவியால் வளர்ந்த மு. வ, மேல்நிலைப் பட்டங்களாலும் உயர்ந்தார். கல்லூரிப் பணிகளுக்கு இடையே, எழுத்துப் பணிகளுக்கு இடையே, மேல்நிலைக் கல்விக்கெனப் பொழுதைத் திட்டப்படுத்தித் திறமாகப் பயின்று பெற்ற வெற்றிகள் பொன்னேபோல் போற்றத் தக்கனவாம்.

**எம். ஓ. எல் :**

1944 ஆம் ஆண்டில் 'தமிழ் வினைச் சொற்களின் தோற்றமும் வளர்ச்சியும்' (Origin and development of verbs in Tamil) என்பது பற்றி ஆராய்ந்தார். அதனை எம். ஓ. எல். பட்டத்திற்குரிய ஆய்வாகப் படைத்தார். மு. வ. எம். ஓ. எல். ஆனார். அடுத்த ஆண்டிலேயே பச்சையப்பர் கல்லூரித் தமிழ்த் துறையின் தலைவராக உயர்ந்தார்.

**டாக்டர் :**

1948 ஆம் ஆண்டில் 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' (The Treatment of Nature in Sangam Literature) என்பதை ஆராய்ந்து பிஎச். டி. (Ph D.) பட்டம் பெற்றார். குழந்தைப் பருவமுதலே இயற்கையீடுபாடு கொண்ட மு. வ. இத்தலைப்பைத் தேர்ந்து கொண்டது இயற்கையே ஆகும். இயற்கையும் மு. வ. வும் இரண்டறக் கலந்து நின்ற தன்மைக்கு இஃதோர் எடுத்துக்காட்டேயாம்.

''நண்பரது சென்னை வாழ்க்கை இயற்கையிலே செயற்கையைச் சேர்த்தது. அடிக்கடி நண்பரைச் சென்னையில் காண்பதில் எனக்கு இன்பம் உண்டாகிறது. அதே நேரத்தில் செயற்கையின் சேர்க்கை நினைவு தோன்றும்போது துன்பம் உண்டாகிறது. அன்பரும் சிற்சில போது வருந்துவது எனக்குத் தெரியும்''[1] என்று திரு. வி. க. அவர்கள் குறிப்பிடும், 'செயற்கையின் சேர்க்கை' வாழ்வை 'இயற்கையோடு இயைந்த வாழ்

1. திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள் பக். 804.

வாக' மாற்றத் தேர்ந்த சித்தராக விளங்கினார், மு. வ. அவ் விளக்கமே பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை ஆய்வும், சங்க இலக்கியம் தொடர்பான பிற ஆய்வுகளுமாம். 'பாலையைப் பசுஞ் சோலையாக்குவதும், பசுஞ்சோலையைப் பாழ்ப் பாலையாக்குவதும் மனமே' என்பதை மு. வ. வின் வாழ்வை உற்றுநோக்கி உணர் வார் உணர்வர்! கருத்துடையார் காண்பாராக.

டாக்டர் பட்டத்தை மு. வ. பெற்றார் என்றால் அதிலும் ஒரு தனிச் சிறப்புண்டு. சென்னைப் பல்கலைக் கழகத்தின் வழியே தமிழ்த் துறையில் முதன் முதல் பிஎச். டி., டாக்டர் பட்டம் பெற்றவர் மு. வ. வேயாவர்.

**பல்கலைக் கழகப் பணி :**

பச்சையப்பர் கல்லூரியில் பணி செய்த மு. வ. 1948 ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றும் வாய்ப்புப் பெற்றுச் சென்றார். ஆனால், கடற்காற்று அவர்தம் உடல் நிலைக்கு ஏற்றதாக அமையவில்லை. ஆதலால் ஓராண்டுக் காலமே பணியாற்றிவிட்டு மீண்டும் பச்சையப்பர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைமைப் பணிக்குத் திரும்பினார்.

**மீண்டும் பச்சையப்பரில் :**

பச்சையப்பர் கல்லூரிப் பணியில் மு. வ. மீண்டும் அமர்ந்தது அவருக்கு மட்டும் அன்றித் தமிழ் இலக்கியத்திற்கும், தமிழர் நல்வாழ்வுக்கும் பொற்காலமாக அமைந்தது என்பது பேருண்மையாம். அவர்தம் சிந்தனைப் பறவை சிறகடித்துப் பறந்து சீரிய பல்வேறு துறைகளில் படைப்பு இலக்கியங்களை உருவாக்கியது. 'மு. வ.' என்னும் இரண்டு எழுத்துகளைக் கூறிய அளவில் எவரும் அறிந்து கொள்ளும் நிலையை உண் டாக்கியது.

**நூல்கள் :**

பச்சையப்பர் கல்லூரிப் பசுமையில் தோய்ந்து அமைதி கண்ட மு. வ. இலக்கிய ஆராய்ச்சி நூல்கள், வரலாற்று நூல்கள், கடித நூல்கள், நாடக நூல்கள், சிறுகதை நூல்கள், புனைகதை (நாவல்) நூல்கள் எனப் பல்வேறு துறைகளில்

நூல்களை எழுதிக் குவித்தார். இதழ்களிலும், மலர்களிலும் கட்டுரைகள் பல எழுதினார். அவற்றைத் தொகுத்தும் இணைத்தும் கட்டுரை நூல்களும் வெளியிட்டார். சில ஆண்டுகளுள் பல்வேறு பணிகளுக்கு இடையே, இத் துணை நூல்களை-அருமையும் பெருமையும் வாய்ந்த நூல்களை - ஒருவர் படைக்க முடியுமோ என்று திகைப்பும் வியப்பும் உறுவார்க்குப், 'படைத்துள்ளாரே மு. வ.' என்பதே விடையாம்.

இலக்கிய ஆராய்ச்சி நூல்கள் :

கூர்த்த மூளையமைந்த மு. வ. தம் தணியா விருப்பத்தால் தேர்ந்தெடுத்துக் கொண்ட துறை இலக்கியத்துறை ஆகும். அதனைத் தொழில் துறையாக மட்டும் கொள்ளாமல் உயிரொடும் உணர்வொடும் ஒன்றிய வாழ்வுத் துறையாகவே கொண்டவர். ஆதலால் இலக்கியத்தைத் தம் வாழ்வாகக் கொண்டு ஆராய்ச்சியில் ஈடுபட்டவர் அருமணிக் குவைகளைக் கண்டெடுப்பதில் ஐயமொன்றும் இல்லையே! அன்றியும் புலவர் பட்டத்திற்காகவும், பி. ஓ. எல்; எம். ஓ. எல்; பிஎச். டி; முதலாய உயர்நிலைப் பட்டங்களைப் பெறுதற்காகவும், பல்கலைக் கழகப் பேரவைகளிலும், இலக்கிய மாநாடுகளிலும் உரையாற்றுவதற்காகவும் இடையீடு இன்றி இலக்கிய இலக்கண நூற்கடலுள் புகுந்து புகுந்து முத்தும் பவழமும் அள்ளி அள்ளிக் கொணர்ந்தவர். மு. வ., இவ்வனைத்தும் தம்மொடும் அமைந்து கிடந்துவிடப் பொதுநல நாட்டமுடைய அறிவுச் செல்வர்கள் கருதுவது உண்டோ? அவ்வகையால், தாம் பெற்ற இன்பத்தைத் தமிழ்கூறு நல்லுலகமும் தாங்கி மகிழுமாறு விரும்பினார் மு. வ., அவ்விருப்பத்தால் எழுந்த நூல்கள், "பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய மாமலைப் பயந்த காமரு மணியும் தொடைபுணர்ந்து" அமைத்தாற் போன்று அருநூல் அணிகலங்களாய் அன்னைத் தமிழுக்கு அழகுறுத்துகின்றன.

தமிழ் நெஞ்சம் :

மு. வ. வின் தமிழ் நெஞ்சத்தில் இருந்து முதற்கண் வெளிப்பட்ட இலக்கிய ஆய்வுநூல் 'தமிழ் நெஞ்ச'மாகும். அது 1945 ஆம் ஆண்டில் வெளிப்பட்டது.

பண்டைத் தமிழ்ப் புலவர்களின் வாழ்வினை அவர்கள் பாடிய புறப்பாடல்களைக் கொண்டு பல்வேறு கோணங்களில் ஆராயும் நூல் தமிழ் நெஞ்சமாகும். 'தமிழ் நெஞ்சம்' சென்னைப் பல்கலைக் கழகத்தில் இருமுறை பாடமாக வைக்கப் பெற்றது. இரண்டாம் முறை பாடமாக வைத்ததனால் பெற்ற வருவாய் முழுமையும் சென்னை நகர் திரு. வி. க. உயர்நிலைப் பள்ளிக்குச் சேர வாய்ப் பளித்தது மு. வ. வின் தமிழ் நெஞ்சமாகும்.

**இலக்கிய ஆய்வு நூல்கள் :**

மு. வ. வின் பழந்தமிழ் இலக்கிய ஆய்வுகள் பல்வேறு நூல்களாகத் தொடர்ந்து வெளிப்பட்டன. அவற்றுள் ஒரே பாடலால் எழுந்தவை 'ஓவச் செய்தி'யும், 'கொங்குதேர் வாழ்க்கை'யும். பாட்டும் தொகையும் முழுதுறத் தழுவி எழுந்தது 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை.' ஒரே பொருளால் அமைந்தது 'மணல் வீடு'; ஒரே திணையால் அமைந்தது 'முல்லைத்திணை'; ஒரே துறையால் அமைந்தது 'புலவர் கண்ணீர்'; விருந்தாய் அமைந்தவை 'குறுந்தொகை விருந்து', 'நற்றிணை விருந்து', 'நெடுந்தொகை விருந்து.' செல்வமாய் அமைந்தவை 'குறுந்தொகைச் செல்வம்', 'நற்றிணைச் செல்வம்,' 'நெடுந்தொகைச் செல்வம்'; இலக்கிய ஆய்வாய் அமைந்தவை 'இலக்கிய ஆராய்ச்சி', 'இலக்கியத் திறன்', இலக்கிய மரபு'. இலக்கியக் கட்டுரைத் தொகுப்பாய் அமைந்தவை 'இலக்கியக் காட்சிகள்', 'நடைவண்டி'. சிலம்பின் வழியாய் எழுந்தவை, 'கண்ணகி', 'மாதவி', 'இளங்கோ வடிகள்'. திருக்குறள் வழியாய் எழுந்தவை, 'திருக்குறள் தெளிவுரை', 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்', 'குறள் காட்டும் காதலர்.'

ஓவச் செய்தி :

வேலத்து ஓடையிலே உருவாகியது ஓவச் செய்தி என்பதை முன்னரே அறிந்தோம். ''அளிநிலை பொருஅது'' எனத் தொடங்கும் அகநானூற்றுப் பாடலின் விளக்கமே ஓவச் செய்தி. 28 அடிகளால் அமைந்த அப் பாட்டின் விளக்கம் 179

பக்கங்களாக விரிந்தது. ''முன்னங் காட்டி முகத்தின் உரையா ஓவச் செய்தியின் ஒன்று நினைந்து'' என்னும் வரிகளில் அமைந்துள்ள 'ஓவச் செய்தி' என்னும் தொடரே நூற் பெயராகியது. ஓவியச் செய்தியின் முடிநிலையாக ''இப்பாட்டு ஒளிமிக்க ஒரு முழுமணி; இதன் தூய ஒளி கலைத் துறையிலும் வாழ்க்கையிலும் இருளைப்போக்கவல்ல சிறந்த விளக்கம்'' என்று கூறும் மு. வ. 'ஒன்று' என்பதற்குத் தரும் விளக்கமும் நயமும் உள்ளங் கொள்ளை கொள்வதாம்.

சிறப்புப் பேராசிரியர் :

சென்னைப் பல்கலைக் கழகம் மு. வ. வுக்குச் சிறப்புப் பேராசிரியர் என்னும் பதவியளித்து (ஆனரரி ரீடர்) சில ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் ஆற்றுமாறு கோரியது. அதன்படி 23-10-44 இல் பச்சையப்பர் கல்லூரியில் ஆற்றிய சொற்பெருக்கே 'ஓவச் செய்தி'. பின்னர் 17-10-45 இல் 'சிலப்பதிகாரத்துள் மாதவி' என்பது பற்றி ஆற்றிய உரை 'மாதவி'யாகவும், 4-11-46, 5-11-46 ஆகிய இருநாள்களில் ஆற்றிய உரை முல்லைத்திணையாகவும் உருக்கொண்டன. 11-11-46, 12-11-46 ஆகிய இரு நாள்களிலும் ஆற்றிய 'புற நானூற்றில் கையறுநிலைப் பாட்டுக்கள்' என்னும் உரை 'புலவர் கண்ணீர்' ஆயிற்று.

மாதவி :

''கண்ணகியின் வாழ்வு கணவனுக்காகவே வாழ்ந்து கணவனுக்காகவே முடிந்தது. மாதவியின் வாழ்வு காதலில் நின்று பிறகு அதையும் கடந்து அறத்துறையில் சென்றது. மனம் மாறிய மாதவி பிறந்த குடும்பத்தின் தீமையை வேருடன் களைந்தாள்; அதுபோன்ற மற்றக் குடும்பங்களின் சீர்திருத்தத் திற்கு வழிகாட்டியாக விளங்கினாள்; பெரும் புரட்சி செய்தாள்; கலையின் வளர்ச்சிக்காக மங்கையர் சிலரின் வாழ்வைக் கெடுக்கும் மடமையைக் கொளுத்தினாள்; அரசன் திகைக்க ஊரார் வியக்க, சுற்றத்தார் இரங்க, பெற்றதாயும் வருந்தச் சீர்திருத்தம் செய்தாள். கணிகையரின் வாழ்வுக்கும் தனக்கும்

தொடர்பு இல்லை என்பதை நாடு அறியச் செய்தாள். தன் வயிற்றில் பிறந்த மணிமேகலையைத் தமிழகத்தின் தவச் செல்வி ஆக்கினாள். சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்குதல், அமுதசுரபி ஏந்திப் பசிப்பிணி தீர்த்தல் முதலிய அறப் பெருஞ் செயல்கள் செய்து தொண்டு ஆற்றி உலகப் பெருமாதரில் ஒருத்தியாக விளங்கிய மணிமேகலையைப் பெற்ற தாய் என்று உலகம் புகழுமாறு உயர் நிலை உற்றாள் மாதவி'' என்று மாதவி யாரின் மாண்புகளை அடுக்கடுக்காகக் கூறும் மணிமொழிகளைக் கேட்கும் நாம், 'மாதவி வாழ்க' என நம்மை அறியாமலே வாழ்த்துகிறோம்!' அதே பொழுதில் மு. வ. வையும் சேர்த்தே வாழ்த்துகிறோம்.

கொங்குதேர் வாழ்க்கை :

தருமி பொற்கிழி பெறுவதற்கு இறைவன் உதவியதாகக் கற்பனை செய்வதற்கு இடமாக அமைந்தது 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் தொடக்கமுடைய குறுந்தொகை இரண்டாம் பாட்டு. அப் பாட்டு பற்றிக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் பதினொன்றாம் ஆண்டுவிழாத் தலைமை ஏற்று (19-2-1949) மு. வ. ஆற்றிய சொற்பொழிவே, 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் நூலாயிற்று.

''தட்ப வெப்பம் அளவுபட அமைந்து மரம் செடி கொடி களில் பூத்த மலர்கள் மணம் கமழ்ந்து விளங்குவதற்கு ஏற்ற வளமுடைய நாடு இது. தண்மை மிகுந்த நாடுகளில் மலரும் மலர்கள் மணம் நிரம்பாதனவாக உள்ளன. வெம்மை மிகுந்த நாடுகளில் மரம் செடிகொடிகள் தழைத்து மலர்தல் அரிதாக உள்ளது. தட்ப வெப்பம் அளவாக அமைந்த தமிழ் நாடோ, மணம் கமழும் மலர்கள் மிகுந்ததால் தும்பிகள் பாடிப் பறந்து வாழ்வதற்கு உகந்ததாய் உள்ளது. புறத்தே அமைந்த இச் சூழ்நிலை அகத்திலும் உள்ளது போலும். இந் நாட்டில் சோலை யெல்லாம் தும்பிகளின் இசை முழக்கம் சிறந்திருப்பதுபோலவே ஊரெல்லாம் மக்களின் இசை முழக்கமும் மிகுந்திருக்கிறது. மக்கள் வாழ்வெல்லாம் பாட்டாக உள்ளது'' என்று தமிழ் மண்ணின் மாண்பை வியந்து கூறும் மு. வ. ''குற்றமுடையதா

குற்றமற்றதா என்று ஆராயப்பட்ட பாட்டு, இன்று எத்தனையோ காவியங்களின் குற்றங்களையும் குணங்களையும் சீர்தூக்க வழி கோலி உதவுகிறது'' என்று முடிப்பது அப் பாட்டின் பயனை நயமுற விளக்குகிறது.

இளங்கோவடிகள் :

சொல்லின் செல்வர் இரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் தம் அன்னையார் பெயரால் 'சொர்ணம்பாள் சொற்பொழிவுகள்" என்ற பெயரில் ஓர் அறக் கட்டளை நிறுவியுள்ளார்கள். அதன் சார்பில் மு. வ. அவர்கள் 11-9-59, 12-9-59 ஆகிய இரண்டு நாள்களில் ஆற்றிய மூன்று சொற்பொழிவுகள் இளங்கோ வடிகளைப் பற்றியவை. அவையே 'இளங்கோவடிகள்' என்னும் நூலாக உருக்கொண்டன. இளங்கோவடிகள் தமிழர் என்பதை யும், கலைஞர் என்பதையும் அறவோர் என்பதையும் வியத்தக விளக்குகின்றார்.

கண்ணகி :

கண்ணகியின் பெருமையைப் பலரும் அறிய வேண்டும் என்னும் ஆர்வத்தால் எழுதிய நூல் 'கண்ணகி.'

''ஏறக் குறைய ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் மாலையில் மதுரை மாநகரத்தின் ஒரு பகுதியில் ஒரு பெண்ணின் கூக்குரல் கேட்டது. இந்த ஊரில் கற்புடைய பெண்கள் இல்லையா? அருளுடைய சான்றோர் இல்லையா? அறம் காக்கும் தெய்வமும் இல்லையா? என்று அழுது அரற்றுவது கேட்டது'' என்று கதைப் போக்கு உத்தியிலே தொடங்கிச் சுவையாகச் செல்லும் திறனாய்வு நூல் கண்ணகியாகும்.

மணல் வீடு :

மாசற்ற காதல் வாழ்வைப்பற்றிய சங்கப் புலவர்கள் பாடல்கள் பதினொன்றனைத் தேர்ந்தெடுத்துக் கட்டுரையாகத் தீட்டப் பெற்றநூல் 'மணல்வீடு' ''மணலில் வீடுகட்டி விளையாடும் போது குழந்தைகளின் உள்ளத்தில் எவ்வாறு தூய்மையும்

உண்மையும் அன்பும் குடிகொண்டிருக்கின்றனவோ அவ்வாறே காதலர் உள்ளத்திலும் அந்த உயர்ந்த பண்புகள் விளங்குகின்றன'' என்பதை விளக்கும் நூல் மணல்வீடு.

**நடைவண்டி :**

ஒவ்வொருவரும் சிறுவராக இருந்து விளையாடியபோது மணல்வீடு கட்டினர்; நடைவண்டி ஓட்டினர்; காற்றாடி விட்டனர்; சடுகுடு ஆடினர்; மற்றச் சிறுவர்கள் மணல்வீடு கட்டும்போதும் நடைவண்டி ஓட்டும்போதும் காற்றாடி விடும்போதும் சடுகுடு ஆடும்போதும் வளர்ந்தவர்கள் அந்த விளையாட்டுகளைப் பார்க்கின்றனர். வேடிக்கையாகப் பார்த்து மகிழ்கின்றனர். உள்ளம் பண்பட்ட சான்றோர்கள் அந்தச் சிறுவர்களின் மணல்வீட்டையோ நடைவண்டியையோ வெறுப்பதே இல்லை. தம்மை மறந்து கண்டுகளிக்கும் நெஞ்சம் பெற்று மகிழ்கின்றனர். இளைஞர்களின் ஒழுக்கநெறி பிறழாத காதல் வாழ்வையும் சான்றோர்கள் அவ்வாறே நோக்குகின்றனர். கற்பனைவளம் பெற்ற சான்றோர்கள் அவ் வாழ்வைப் பாட்டாக வடித்துப் பிறரும் நோக்கி மகிழுமாறு தருகின்றனர். அவ்வாறு சங்க காலத்துத் தமிழ்ச் சான்றோரால் தந்தருளப் பெற்ற பாட்டுக்களில் சிலவற்றின் விளக்கங்கள் 'நடைவண்டி' யாயின. நடைவண்டி 1956இல் உருண்டது.

**குறள் காட்டும் காதலர் : இலக்கியக் காட்சிகள் :**

1955-56ஆம் ஆண்டுகளில் சுதேசமித்திரன் வார இதழில், திருக்குறளில் உள்ள காதல் கருத்துகளை அமைத்து வெளியிட்ட கட்டுரைகளே 'குறள் காட்டும் காதலர்' என்னும் நூலாகியது. 1951 முதல் 60 வரை அவ்வப்போது பல்வேறு இதழ்களில் வந்த பத்தொன்பது கட்டுரைகளின் தொகுப்பு 'இலக்கியக் காட்சிகள்' என்னும் பெயரில் வெளிப்பட்டது.

**இலக்கியத் திறன் : இலக்கிய ஆராய்ச்சி : இலக்கிய மரபு :**

சென்னைப் பல்கலைக் கழகச் சிறப்புப் பேராசிரியர் என்னும் நிலையில் 18—10—45, 22—10—45 ஆகிய இரு நாள்களில்

தமிழில் இலக்கிய ஆராய்ச்சி என்னும் பொருளில் ஆற்றிய உரை 'இலக்கியத் திறன்' என்னும் நூலாகியது. அறிவியலும் கலையும், கலைகள், கலைஞர், இலக்கியம், உணர்ச்சி, கற்பனை, வடிவம், உணர்த்தல், நுகர்தல், ஆராய்ச்சி என்னும் பத்துத் தலைப்புகளில் இலக்கியத் திறனை ஆய்ந்துரைக்கும் அரிய நூல் அது. கலைக்கதிரில் தொடர்ந்து வெளிவந்த இலக்கிய ஆராய்ச்சி முதலான இருபத்தொரு கட்டுரைகளை உள்ளடக்கிய இனிய நூல் இலக்கிய ஆராய்ச்சியாகும். அது 1953இல் வெளிவந்தது. தமிழ் இலக்கிய மரபுகளைப் பாகுபாடு, காவியம், நாடகம், புதினம் (நாவல்), சிறுகதை, மரபு என ஆறு கூறுபடுத்தி அருமையாக ஆராயும் நூல் இலக்கிய மரபாகும். அதன் முதற் பதிப்பு 1960இல் வெளிவந்தது.

**விருந்தும் செல்வமும்:**

விருந்து என்னும் பெயரில் வெளிப்பட்ட நூல்கள் புதுமையான அமைப்புடையவை. ''சங்கப்பாட்டுக்கள் தமிழர் பலர் அறிந்த இலக்கியச் செல்வமாக விளங்கினால்தான் எதிர்காலத்தில் வாழ்தல் இயலும். பலர் போற்றாத எதற்கும் இனி வாழ்வு அரிதாகும். அதனால் எளிதில் கற்பதற்கு உரியவகையில் இப் பாட்டுக்களை அமைத்தல் வேண்டுவதாயிற்று.

''அரியதொரு நூலை எளியமுறையில், வேறு வடிவில், சுருக்கமான விளக்கத்துடன் தொடர்ச்சியான கதைபோன்ற போக்கில் தர முயன்றபோது பெரிதும் தயங்கினேன். தமிழகம் காரணம் கருதி இந்தச் சிறிய முயற்சியை ஏற்றருளும் என நம்புகிறேன்'' என்று மு வ. குறிப்பிடுவது இந் நூலின் அமைப்பினையும், நூல் எழுந்த நோக்கையும் நன்கு விளக்கும்.

குறுந்தொகை விருந்தில் 100 பாடல்களும் நற்றிணை விருந்திலும், நெடுந்தொகை விருந்திலும் 77, 77 பாடல்களும் விளக்கம் பெற்றன. இனிச் செல்வம் என்னும் வரிசையில் வெளிப்பட்ட குறுந்தொகைச் செல்வம், நற்றிணைச் செல்வம், நெடுந்தொகைச் செல்வம் என்னும் மூன்று நூல்களும் சங்க நூல்களை எவ்வாறு சுவைக்க வேண்டும் என்பதற்கு வழிகாட்டியாய் அமைந்த நூல்களாகும்.

சங்க இலக்கியங்களை, ''நாம் கற்க முயலுமுன் அந்நூல்களின் சொல்நடையில் பயிலுதல் வேண்டும்; அப் பாட்டுக்களைப் பாடிய புலவர்கள் மலையிலும் காட்டிலும் வயலிலும் கடற்கரையிலும் வானத்திலும் கண்ட காட்சிகளை நாமும் கண்டு பழகல் வேண்டும். நேரே காணமுடிந்த காட்சிகளைக் கண்டு பழகிய அனுபவம்கொண்டு காணமுடியாத காட்சிகளையும் கற்பனை செய்து உணர்தல் வேண்டும்; அவர்கள் ஒப்பிட்டுப் போற்றிய அழகுகளை நாமும் ஒப்பிட்டுக் காணல் வேண்டும். அவர்கள் உணர்ந்து பாராட்டிய நாகரிகக் கூறுகளை நாமும் உணர்ந்திடல் வேண்டும். அவர்கள் ஆய்ந்து உணர்ந்த உள்ளத்து உணர்வுகளை நாமும் ஆய்ந்து உணர்தல் வேண்டும். இவ்வளவும் இலக்கியச் செல்வமாகக் கொண்டு போற்றிய பின்னரே அப் பாட்டுக்கள் நமக்கு விருந்தாக விளங்கி இன்பம் அளிப்பனவாகும்'' என்னும் தேர்ச்சியுரைகளுக் கெல்லாம் பயிற்சி வழங்கும் நூல்கள் இந் நூல்கள்.

இவற்றுள் நெடுந்தொகைச் செல்வமும் நற்றிணைச் செல்வமும் முறையே மலை முதலாக எட்டுத் தலைப்புகளிலும், பதினாறு தலைப்புகளிலும் வழங்கப்படுகின்றன. குறுந்தொகைச் செல்வம் 'புதுமையுணர்வு' முதலாகப் பதினைந்து தலைப்புகளில் வழங்கப் பெறுகின்றது.

**திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் :**

உலகம் புரட்சியை விரும்புகின்றது; புதுமையை விரும்புகின்றது. அவ் விருப்பத்திற்கு அரண் செய்வது போன்ற புரட்சி ஆய்வாகப் புறப்பட்டது 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்'. அதன் அமைப்பிலே புரட்சி; பொருள் பொருத்தம் காட்டுதலிலே புரட்சி; தொழிலிலே புரட்சி; தொண்டிலே புரட்சி; நோக்குமிடமெல்லாம் புதுமை நோக்கு; புதுப் புரட்சி, ''புரட்சி அவர் நெஞ்சில் பொங்குகிறது; வாயில் வழிகிறது; கையில் திகழ்கிறது. தோழர் புரட்சியை இந் நூலில் பரக்கக் காணலாம்''[1].

---

1. அணிந்துரை. திரு. வி. க. XI.

திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் என்னும் நூலை மு.வ. படைத்த நோக்கமென்ன? 'உலகம் ஒருகுலமாதல் வேண்டும்' என்னும் உயர்ந்த உணர்வே திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் என்னும் நூலைப் படைக்க வைத்தது.

"இந் நூற்கண் பல இடங்களில் பொதுமையும் மனத் தூய்மையும் மிளிர்கின்றன. இரண்டும் நூலின் 'நுரையீரல்கள்' என்று கூறல் மிகையாகாது. இவை 'உலகம் ஒருகுலம்' என்னும் உயிர்ப்பை நல்குவன"[1].

'திருவள்ளுவரே திருக்குறள்' ஆதலை விளக்குகிறார் ஆசிரியர் :

"நூல் இருவகை : தன் காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்வது ஒன்று. நம் காலத்திற்குத் தான் வந்து உதவுவது மற்றொன்று. நூலைக் கற்கும் முறையும் இருவகை. வாழும் காலத்தை மறந்து நூலெழுதிய காலத்திற்குக் கற்பனைச் சிறகு கொண்டு பறந்து சென்று நூற்பொருளைக் கற்பது ஒருவகை. நூலெழுதிய காலம் எதுவாயினும் அதைவிட்டு வாழும் காலத்திற்கே வந்து வழிகாட்டும்படியாக நூலைப்போற்றிக் கற்பது மற்றொரு வகை. புலவருலகில் நின்று இலக்கியமாக மட்டும் போற்றப்படும் நூல்கள் முதல் வகையைச் சார்ந்தவை. இரண்டாம் வகை நூலகளோ, எல்லா மக்களுக்கும் பயன்படுவனவாய் ஆட்சிபுரியும் சட்ட நூல்களைவிடச் செல்வாக்கு உடையனவாய மக்களின் உள்ளங்களே கோயில்களாய் வாழ்வன. திருக்குறள், பகவத்கீதை, கன்பூஷியஸ்நூல், பைபில், குர் ஆன் முதலியன இவ்வகையைச் சார்ந்தவை. இந் நூல்களில் எழுதிய எழுத்துக்கள் மறைந்து நிற்க, அறிவுறுத்தும் சான்றோரே முன் நிற்பர். திருக்குறளை இவ் வகையாகப் போற்றிக கற்கக் கற்கத் திருவள்ளுவர் என்னும் தமிழ்ச் சான்றோர் முன்வந்து வழி காட்டக் காண்கின்றோம். இது பற்றியே திருக்குறளைத் 'திருவள்ளுவர்' என்று வழங்கும் வழக்கும் காணப்படுகின்றது."[2]

---

1. அணிந்துரை. திரு. வி. க. XVII.
2. திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம். முன்னுரை XXII

''பகவத் கீதையைப் பற்றிக் காந்தியடிகள் எழுதும்போது ]ந்த நூலை மூளைகொண்டு கற்காமல் இதயம்கொண்டு உணர வண்டும்' என்று குறித்துள்ளார். திருக்குறளையும் அவ்வாறே தி உணரவேண்டும் என்னும் அவா நெடுங்காலமாக என்னுள் ருந்து வருகின்றது. அதன் தூண்டுதலால் இத்தகைய யற்சியில் ஈடுபடலானேன்''[1] என்று இந் நூலாக்க முயற்சி ல் ஈடுபட்ட வகையை இயம்புகின்றார் மு. வ. இதனைக் கற் ார்க்கும் இந் நிலை இன்றியமையாதுவேண்டும் என்பது ஒருதலை. ருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் 1948 இல் ஒளி ரப்பியது.

நக்குறள் தெளிவுரை :

'மு வ. என்றால் திருக்குறள்,' 'திருக்குறள் என்றால் மு. வ.' ன்பதைத் தமிழ் கூறு நல்லுலகெல்லாம் பரப்பிய நூல் மு. வ. ழுதிய 'திருக்குறள் தெளிவுரை'யாகும். எட்டு நூறாயிரம் டிகள் விற்பனையாகிய வித்தகம் உடையது திருக்குறள் தெளி ரை. பள்ளி மாணவர்க்குப் பரிசா, மணமக்கட்குப் பரிசா, ட்டம் பெறுவோர்க்குப் பரிசா, பிறந்தநாட் பரிசா 'திருக்குறள் தளிவுரை' முந்து நிற்கும். அழகிய பதிப்பு அடக்கமான ]மைப்பு - எதிர் எதிரே பொருளும் குறளும் - இரண்டடிக் றளுக்கு மூன்றடியில் விளக்கவுரை - எளிதில் வாங்கும் விலை ன்பன வெல்லாம் ஒருங்கு கூடிய எழில்மிக்க வெளியீடு திருக் றள் தெளிவுரையாகும். எழுதிய ஆசிரியர்க்கே அன்றிப் பதிப் த்த 'சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்'திற்கும் தனிப் பருமை வழங்கிய நூல் திருக்குறள் தெளிவுரையாகும். தக்கார் )வரெனத் தேர்ந்து தகுமுறை காட்டி நூலாக்கிய கழக ஆட்சி ாளர் தாமரைச் செல்வர் வ. சுப்பையாபிள்ளை அவர்களை எத் ]ணைப் பாராட்டினும் தகும். திருக்குறள் தெளிவுரை 1949 ஆம் ]ண்டில் வெளிப்பட்டது.

ட்டுரை :

கட்டுரை என்பது திட்டமுறக் கூறுவதையும் குறிக்கும்; ]ட்பமுற எழுதுவதையும் குறிக்கும். 'பேச்சும் எழுத்தும் சுட்டும்

1. திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம். முன்னுரை XXIII

பொதுமைச் சொல் அது. மு. வ. அவர்கள் கட்டுரையாளர். இருபொருள்படவும் விளங்கிய கட்டுரையாளர். அவர் தம் விழுமிய சொற்பொழிவுகளாகிய கட்டுரைகளைத் தாங்கிய நூல்களை அறிந்தோம். எழுத்து வடிவில் இதழ்களில் அவ்வப் போது வெளிப்பட்டு உலாவந்த கட்டுரைகளைக் கொண்ட நூல் களைக் காண்போம்.

மு. வ. வின் கட்டுரைகள் ஒழுங்கு பெற்றவை; திட்டமிட்டு எழுதப் பெற்றவை. தொடர்ந்து ஓரிதழில் வரப்பெறுவன ஆயினும் சரி, பல்வேறு காலங்களில் பல்வேறு இதழ்களில் வரப் பெறுவன ஆயினும் சரி அவற்றுக்கு ஓர் ஊடகம் அமைந்து ஒளி செய்யும். அவற்றைத் திரட்டின் மலரை மாலையாக்குமாறுபோல அமைந்து ஒருமித்த நறுமணம் பரப்பும். திட்டமிட்டு ஒரே போக்கில் எழுதப் பெற்ற நூல் போலவே காட்சி வழங்கும் இத் தகைய கட்டுரை நூல்களில் மொழியும் நாடும்பற்றி எழுந்தவை, உண்டு; கட்சி கலவா அரசியல் விளக்கநூல் உண்டு; பெண் ணுலகும், கல்வியுலகும் பிறங்குதற்கு வழிகாட்டும் நூல் உண்டு; கற்பனைக் கட்டுரைகளாய் அமைந்து எதிர்கால ஏற்றத்திற்கு வேண்டுவனவற்றை விளங்கக் கூறும் நூலுண்டு. இப்படிப் பொருளாலும் தலைப்பாலும் பல திறத்தன ஆயினும் 'எல்லாரும் இன்புற்று வாழவேண்டும்' என்னும் பொதுமை உணர்வை உரு வாக்குதல் ஒவ்வொரு நூலிலும் உண்டு; ஒவ்வொரு கட்டுரை யிலும் உண்டு. ஒவ்வொரு விளக்கத்திலும் உண்டு.

**அரசியல் நூல்கள் :**

அரசியல் தொடர்பாக மு. வ. எழுதி அவ்வப்போது இதழ் களில் வெளிவந்த கட்டுரைகள் 'அறமும் அரசியலும்,' 'அரசியல் அலைகள்' என்னும் இருநூல்கள் ஆயின. மு. வ. வின் அரசியல் கட்சிச் சார்பற்ற அரசியல். அறத்தை அடிப்படையாகக் கொண்ட அருளரசியல். தஞ்சையில் அரசியல் தலைவர் திரு. செயப்பிரகாசர் தலைமையில் ஓர் அரசியல் மாநாடு நடை பெற்றது. அம் மாநாட்டில் கலந்து கொண்டு மு. வ. உரை யாற்றினர். அவர் உரை கேட்ட செயப்பிரகாசர், தாம் நினைத்து

வரும் கருத்துகளையே புதிய முறையில் புரட்சியாகச் சிந்தித்து மு. வ. உரைப்பதாகப் பாராட்டினர்.

மதுரையில் பேராசிரியர் சி. இலக்குவனார் அவர்கள் தலைமையில் 'தமிழ்க் காப்புக் கழகம்' என ஓர் அமைப்புத் தொடங்கியது. அதனைத் தொடங்கிவைக்கும் பொறுப்பை மு.வ. வினிடம் எதிர்பார்த்தது கழகம். அதற்கு மு. வ. "அரசியல் அரசினர் மோதல் உள்ள கூட்டங்களில் கலந்து கொள்ளல் இயலாது. அந் நிலை இல்லையாயின் தொடக்க விழாவுக்கு உடன் படுகின்றேன்" என்று இசைவு தந்தார். இது மு. வ. போற்றிய அரசியல் நெறி இன்னதெனத் தெளிவிக்கும்.

"தனிமனிதன் வாழ்க்கைக்கு உணவும் உறக்கமும் இருந்தால் போதும். மக்கள் பலர் கூடிவாழும் சமுதாய வாழ்க்கைக்கே அறம் கட்டாயம் வேண்டும். மக்கள் எல்லோரும் கூடி நடத்தும் அரசியலுக்கே அறம் சிறப்பாக வேண்டும். உடம்பின் நன்மைக்கு இரத்த ஓட்டம் எப்படிக் கட்டாயம் வேண்டுமோ அது போல உலக நன்மைக்கு அறத்தின் அடிப்படை கட்டாயம் வேண்டும்" என்பது அறமும் அரசியலும் வலியுறுத்தும் கோட்பாடு.

'அரசியல் அலைகள்' 17 கட்டுரைகளைத் தன்னகத்துக் கொண்ட நூல். சென்னை அரசின் கட்டுரைத் துறைக்கான பரிசு பெற்ற நூல் அரசியல் அலைகள். அது 1948 ஆம் ஆண்டு வெளி வந்தது. 'கட்சி வெறி ஒழியவேண்டும்' எனத் தொடங்கும் அரசியல் அலைகள், "தூற்றி எழுதத் தெரியுமா? திட்டிப்பேசத் தெரியுமா?" என்ற தேர்வுகளை ஒழித்து "எண்ணத் தெரியுமா?" என்று ஒவ்வொருவரும் தத்தம் மனச் சான்றைக் கேட்டுத் தெளிய ஏவுகின்றது.

**பெண்மை வாழ்க :**

'பெண்மை வாழ்க' என்பது முதலாக அமைந்த பன்னிரண்டு கட்டுரைகளைக் கொண்ட நூல் 'பெண்மை வாழ்க' என்பது. இக் கட்டுரைகள் 'காதல்' முதலிய இதழ்களில் வெளிவந்தவை யாகும்.

"பெண்களின் நடுக்கத்தைக் கண்டு ஆண் அஞ்சுதல், வருந்துதல், அவர்களுக்குத் தன்னை அறியாமல் இழைத்த தீங்கை நினைத்துக் கலங்குதல், அவர்கள் பேச இடம் தருதல், பேசும் வரையில் காத்து நிற்றல் ஆகிய இந்த நல்ல பண்புகள் பெண்மைக்கு மதிப்புத்தரும் நாகரிகமாகும்" என்று பெண்ணின் மதிப்பைப் போற்றும் வகையைக் குறிக்கிறார் மு. வ. இதிலமைந்துள்ள 'களவும் கற்றுமற' என்னும் கட்டுரை புதுமையான பொருள் விளக்கம் படைத்ததாகும்.

**கல்வி :**

'ஆனந்த விகடன்' முதலாய இதழ்களில் அவ்வப்போது கல்வி தொடர்பாக மு. வ. எழுதிவந்த கட்டுரைத் தொகுப்பே 'கல்வியாம்'. அதன்கண் 27 கட்டுரைகள் உள. கல்வித் துறைச் சீர்திருத்தத்திற்கு இன்றியமையாத கருத்துகள் பலவற்றைத் தன்னிடம் கொண்ட நூல் கல்வி. "கல்வியால் குடும்பம் உயரும்; நாடு தழைக்கும். ஆகவே, கல்விமுறை சீர்ப்பட வேண்டும்; கற்பிக்கும் ஆசிரியர் நிலை உயரவேண்டும்"—இவ்வகை நோக்குடன் எழுதப்பெற்றது கல்வி.

**குருவிப்போர் : கி. பி. 2000.**

'குருவிப்போர்' எப்படி எழுந்தது? கூடு கட்டிய குருவியும் கூட்டை உரிமை கொண்டாடுகின்றது. கட்டாத குருவியும் உரிமை கொண்டாடுகின்றது. 'குருவிப்போர்' எழுகின்றது. மனிதர் கூறுகிறார் :

"நீங்கள் ஒரே சாதிப் பறவைகள்; உங்களுக்குள் பகை ஏன்? பொறாமை ஏன்? திருடு ஏன்?" என்கிறார்.

"எல்லாம் உங்களைப் பார்த்துக் கற்றுக்கொண்டவைதான். மனிதர்கள் வாழும் வீட்டில் கூடுகட்டி மனிதர்களோடு பழகிய பிறகுதான் எங்கள் சாதியாருக்கு இந்தப் பகை பொறாமை எல்லாம் ஏற்பட்டன" என்றது ஆண் குருவி.

"கூடு, கட்டிய குருவிகளுக்கு உரிமையானது என்று முடிவு செய்து விடவேண்டும்" என்கிறார் மனிதர். கூடுகட்டாத ஆண்

குருவி பேசுகின்றது. "ஓ ஓ! நியாயத்துக்கு வந்து விட்டாயா மனிதா! நீங்கள் இப்படித்தான் கட்டியவர்களுக்கே வீடு என்று வாழ்கிறீர்களா?"—விழித்துத் திகைப்பதை அல்லாமல் என்ன செய்வது! குருவிப்போர் எவ்வளவு பொருளுடையதாகின்றது? இத்தகைய கற்பனைக் கட்டுரைகள் பதினொன்றைத் தாங்கிய நூல் 'குருவிப்போர்'. இத்தகைய கற்பனைப் படைப்பே 'கி. பி. 2000' என்னும் நூலும் ஆகும்.

"வாழ்க்கையில் ஒவ்வொரு சிக்கலையும் எதிர்ப்படும்போது ஒதுங்கிச் செல்வதும் உண்டு. ஒதுக்கிச் செல்வதும் உண்டு. ஒதுங்கிச் செல்லும் வாழ்க்கை அச்சம் நிறைந்த வாழ்க்கை, ஒதுக்கிச் செல்வதோ அக்கறை அற்ற வாழ்க்கை. இந்த இரண்டும் பயனில்லை. சிக்கலைத் தீர்த்து வெல்லும் வீரமே வேண்டும். அதுவே புத்துலகத்தின் திறவுகோல். அந்தத் திறவுகோலைத் தேடவேண்டுவது ஒவ்வொருவருக்கும் கடமையாகும்". அதனை நினைவூட்ட எழுந்த நூல் கி.பி. 2000. அவர் எதிர்பார்க்கும் எதிர்காலச் சமுதாய ஓவியம் அது.

**உலகப் பேரேடு :**

'உலகப் பேரேடு' என்பதும் சமுதாய நலக் கட்டுரை நூலே ஆகும். அதன்கண் 20 கட்டுரைகள் உள. உலகப் பேரேட்டில் ஒவ்வொருவரும் தாம் ஓர் ஏடு என்பதை உணர்ந்துவிட்டால் உலகப் பேரேடு பொலிவுறாமல் எப்படி இருக்க முடியும்?

**மொழிப்பற்று, நாட்டுப்பற்று :**

மு.வ. மொழிப்பற்று மிக்கவர்; நாட்டுப்பற்றும் மிக்கவர். அப்பற்றுகளால் அவ்வப்போது எழுதிய கட்டுரைகளே 'மொழிப் பற்று' 'நாட்டுப் பற்று' என்னும் நூல்களாயின. இவ்விரண்டு நூல்களின் வருவாயும் திரு. வி. க. பள்ளி நிதிக்கு உரிமையாக்கப் பெற்றதாகும்.

"ஒரு நாட்டில் பெரும்பாலான மக்கள் என்ன மொழி பேசுகிறார்களோ அந்த மொழியிலேயே ஆட்சிமுதல் ஆடல் பாடல்

வரையில் எல்லாம் நடைபெறுதல் வேண்டும். அப்படி இல்லை யானல் அது அந்த நாட்டிற்கே தீமையாக முடியும்.''[1]

''நமக்குத் தெரியாத மொழியில் இசையை அனுபவிக்க எண்ணுவது மனைவியிடம் வக்கீல் வைத்துப் பேசுவதற்கு ஒப்பா கும் என்றார் கவிஞர் தாகூர். இந்த உண்மையை வானொலி நிலையத்தாரும் அவர்களை இயக்கும் அரசாங்கத்தாரும் உணர்தல் நல்லது; தமிழ்மக்கள் தமிழிலேயே இசையைக் கேட்டு மகிழ விரும்புகிறார்கள். அவர்களின் இயற்கையான காதலைத் தடுத்து, செயற்கையான—வெறுப்பான முறையில் பிறமொழிப் பாடல் களைத் திணிப்பதை உடனடியாகக் குறைத்தல் வேண்டும்; நாளடைவில் நிறுத்தல் வேண்டும்''[1]

''இந்தியாவின் ஒருமைப்பாடு நல்ல அடிப்படையோடு அமைய வேண்டுமானல் அது மக்களின் விருப்பத்தை ஒட்டி அமைந்தால்தான் முடியும். நூற்றாண்டுக் கணக்காக நிலைபெற வேண்டும் என்ற ஆசையோடு உயரமான கல்கட்டிடம் எழுப்ப லாம். ஆனல், அதன் உயரத்தை மட்டும் கருதி நல்ல அடிப் படை அமைத்தலை மறத்தல் கூடாது. அதுபோலவே இந்தியா வின் புகழ் வெளிநாடுகளில் வானளாவ உயர்ந்தால் மட்டும் போதாது. இந்திய மக்களின் மனம் விரும்பும் வகையில் உள் நாட்டு ஆட்சியும் நடைபெற வேண்டும்.''[2]

இத்தகைய அரிய கருத்துகளைக் கொண்டு நாட்டுப் பற்றையும் மொழிப்பற்றையும் ஒருங்கே தூண்ட வல்ல நூல்கள் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றுமாம். இவை 1956 ஆம் ஆண்டில் வெளிவந்தன.

**மண்ணின் மதிப்பு :**

மண்ணின் மதிப்பு என்னும் நூலும் இதழ்களில் வெளி வந்த கட்டுரைத் தொகுப்பே யாகும். அதில் முப்பத்து நான்கு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இவை 'ஆனந்தவிகடன்',

1. மொழிப்பற்று. பக். 67.
2. மொழிப்பற்று பக். 117, 118.
3. நாட்டுப்பற்று பக். 147.

'கங்கை', 'கிராமராஜ்யம்' முதலிய இதழ்களில் வெளிவந்தவை. 1962 இல் நூல் வடிவாயது.

கட்டுரை வகையைப் பார்க்கிலும் பிறிதொரு வகையால் கற்பார் நெஞ்சங்களைக் கவரத் தக்க ஒரு வகையில் வாழ்வியல்களை எழுத எண்ணினர் மு.வ. அதற்கு ஓர் அரிய உத்தியாக வாய்த்தது கடிதமுறை யாகும்.

**கடித நூல்கள் :**

வாழ்வில் கடிதத்திற்குச் சீரிய இடம் உண்டு. கடிதம் எவரையும் எதிர்நோக்கி இருக்கச் செய்யும்; ஆர்வத்தை எழுப்பிப் படிக்க ஏவும்; படித்த பின்னரும் பேணிக் காக்கவும் செய்யும். சில கடிதங்கள் பொன்னினும் சிறந்தனவாகப் போற்றப் பெறும். இத்தகைய ஆர்வ உத்தியை மு.வ. அரிதில் தேர்ந்து அருமையாகப் போற்றி ஐந்து நூல்களை அமைத்தார். அவற்றுள் நான்கு வாழ்வாங்கு வாழும் வாழ்வு நெறியை வனப்புறத் தீட்டிக் காட்டுவது. ஒன்று ஈழநாட்டுச் செலவு பற்றியது.

நேரு பெருமகனர் தம் மகளார்க்கு எழுதிய கடிதம் உலக வரலாறு ஆகியது; காரல் மார்க்ஸ், ஏங்கல்ஸ் என்பார் கடிதங்கள் செல்வமாக மதிக்கப் படுகின்றன. காந்தியடிகளார் கடிதங்கள் வழிகாட்டும் ஒளிவிளக்குகளாகக் கொள்ளப்படுகின்றன. மறைமலையடிகளார் இயற்றிய கோகிலாம்பாள் கடிதங்கள் இலக்கியமாக எண்ணப் பெறுகின்றன. கடித அமைப்பிலேயே கதை கூறும் நடைமுறையும் உண்டு. இவ்வனைத்தும் உணர்ந்து பல்லாற்றானும் பயன்படுத்தும் பான்மைக்கு மு.வ. கடித இலக்கியங்கள் சான்று பகர்வனவாம்.

கட்டுரை நூல்களினும்—ஏன்—கதை நூல்களிலும் கூட—கடித நூல்களே மிகுதியாக விற்பனை யாயின என்னும் உண்மைச் செய்தி கடித இலக்கியத்தைச் சமூகம் எத்துணை வரவேற்கின்றது என்பதைத் தெளிவாக்க வல்லதாம்.

'அன்னைக்கு', 'நண்பர்க்கு', 'தம்பிக்கு', தங்கைக்கு' என்பவை கடித நூல்களின் பெயர்கள். அன்னைக்கு அன்பு மகன்

எழில் எழுதும் கடிதங்களாகவும், நண்பன் வளவனுக்கு நம்பி எழுதும் கடிதங்களாகவும், தம்பி எழிலுக்கு அண்ணன் வளவன் எழுதும் கடிதங்களாகவும், தங்கைக்கு அண்ணன் வளவன் எழுதும் கடிதங்களாகவும் முறையே இந்நூற் கடிதங்கள் அமைந்துள்ளன. மொத்தத்தில் இந் நான்கு நூல்களிலும் 33 கடிதங்கள் உள.

''இது ஒரு நல்ல குடும்பம்; வளவன் எழில் இருவரும் உடன் பிறந்தவர்கள்; அன்னையும் தந்தையும் அறிவில் சிறந்தவர்கள்; பண்பாட்டைப் போற்றுபவர்கள். இவர்களின் குடும்ப நண்பன் நம்பி. அனைவரும் இந்த நூற்றுண்டில் பிறந்து வளர்ந்தவர்கள். இக்கால வாழ்வின் இன்ப துன்பங்களை நன்கு உணர்ந்தவர்கள். இவர்கள் எல்லோரும் கற்பனைப் படைப்புக்களே. ஆயினும் இவர்கள் உணர்வனவும் உரைப்பனவும் கற்பனை அல்ல. இவை இன்றைய இளைஞர் பலர் உணர்வன; உரைப்பன'' என்று 'நண்பர்க்கு' என்னும் கடித நூலின் முன்னுரையில் மு வ. குறிப்பிடும் செய்தி இக் கடித நூல்கள் எழுந்த நோக்கினைத் தெள்ளிதில் விளக்குவதாம்.

''குழந்தைக்கு உணர்ச்சி மிகுதி; தொழிலாளர்க்கு உணர்ச்சி மிகுதி; பலம் குறைந்தவர்களுக்கு உணர்ச்சி மிகுதி; அடிக்கடி சினம் கொள்கிறவர்களுக்கு உணர்ச்சி மிகுதி; இவ்வளவு ஏன்? காட்டு மிராண்டிகளுக்கும் உணர்ச்சி மிகுதி; வறியவர்களுக்கும் உணர்ச்சி மிகுதி; ஆகையால் உணர்ச்சி சிறந்தது சிறந்தது என்று சொல்லி உணர்ச்சியைப் போற்றியது போதும் அம்மா! போதும். நாட்டின் நன்மையைக் கருதியாவது மூளை வளர்ச்சியைப் பெருக்க வேண்டும். மூளை, முன்னே தான் அழியாமல் காத்துக் கொள்ளவல்லது; பிறகு பிறருக்கும் உதவவல்லது''[1] என்று அன்னைக்கு மகன் எழுதும் செய்தி செந்தமிழ் நாட்டுச் சொத்தாக அமைந்திருந்தால் எத்துணை நன்மை பிறந்திருக்கும்! எத்துணைத் தீமை ஒழிந்திருக்கும் !

''தமிழர்கள் நல்லவர்களாக மட்டும் வாழ்ந்தால் போதாது; வல்லவர்களாகவும் வாழவேண்டும்'' என்னும் மு. வ. வின் புகழ்

1. அன்னைக்கு பக். 68-69.

பெற்ற மணிமொழியொடு தொடங்கும் கடிதநூல் 'நண்பர்க்கு' ஆகும். "தமிழ்மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் துரோகம் செய்யாமல் எழுதினால்தான் இங்கே செய்தித்தாள் பரவமுடியும் என்ற நிலையை மக்கள் ஏற்படுத்த வேண்டும். காசு கொடுத்து வாங்குவோரின் கைக்கு இந்த ஆற்றல் இருப்பதைக் காட்டி விட்டால் போதும்; அந்தச் செய்தித்தாள்கள் மறு வாரமே திருந்தி விடும்; உடனே அவை நாட்டுக்கும் மொழிக்கும் பயன் படும் கருவிகளாக மாறி அமைந்துவிடும்"[1] என்று நம்பி உரைப்பதை நம்பிச் செயல்பட்டிருந்தால் தமிழ் நாட்டுச் செய்தித் தாள்கள் எவ்வளவு போற்றத் தக்கவையாக அமைந்திருக்கும்!

"நான் சர்வாதிகாரியாக ஏற்பட்டால் திருக்குறள் ஓதாத திருமணம் தமிழ் நாட்டில் செல்லுபடி ஆகாது என்றும், தேவாரம் திருவாசகம் பிரபந்தம் முதலான தமிழ்மறை ஓதாத கோயில்கள் தமிழ் நாட்டில் திறந்திருக்கக் கூடாது என்றும், தமிழில் உத்தரவு அனுப்பத் தெரியாத பட்டதாரிகள் தமிழ் நாட்டில் அதிகாரிகளாக இருக்கக் கூடாது என்றும், தமிழ்நாட்டுக் கவர்னரும் தமிழில் கையெழுத்து இடவேண்டும் என்றும் ஆணையிடுவேன்"[2] என வளவன் கூறும் உரையை வளரும் இளைஞர் எண்ணிப் பார்த்திருந்தால் உணர்ச்சியை வெளிப்படுத்தி ஒழியாமல் செயல் பட்டிருந்தால் எத்தனையோ கேடுகள் ஒழிக்கப்பட்டிருக்குமே!

வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் நூலாக அமைந்தது தங்கைக்கு என்னும் கடிதநூலாகும். திருமணத்திற்கு முன்னர் ஒவ்வொரு பெண்ணும் ஓதியுணர வேண்டிய அரியநூல் தங்கைக்கு.

"உங்கள் அன்பான இல்வாழ்க்கை வளர்பிறைபோல் வளரவேண்டும் என்று விரும்புகிறேன். அது என் வாழ்த்துதலில் இல்லை. நீங்கள் வாழும் முறையில் இருக்கிறது."[3]

"பசி எடுக்கிற வயிறு உள்ளவர்கள்தாம் வயிறாரச் சாப்பிட முடியும். அடங்கி நடக்கிறவர்கள்தான் உரிமையின் நன்மையை அனுபவிக்க முடியும்."[4]

---

1. நண்பர்க்கு பக். 76.
2. தம்பிக்கு பக். 12
3. தங்கைக்கு பக். 7.
4. " பக். 11.

"அன்புக்காக விட்டுக்கொடுத்து இணங்கி நட. உரிமைக்காகப் போராடிக் காலங் கழிக்காதே"[1] என்பன போன்ற எண்ணற்ற மணிமொழிகளைக் கொண்டது தங்கைக்கு.

1950 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் மு. வ. இலங்கைச் சுற்றுலா மேற்கொண்டார். அங்கே தாம் உற்ற உணர்வினையும் பெற்ற பட்டறிவினையும் தம் முதன் மகனார் அரசுக்குக் கடிதங்களாக எழுதினார். இக் கடித நூலே "யான் கண்ட இலங்கை" என்பதாம். இதன்கண் அமைந்துள்ள கடிதங்கள் ஐந்து. மற்றைக் கடித நூல்களில் உள்ள கடிதங்களினும் விரிவானவை இக் கடிதங்கள். 'அன்புள்ள அரசு'' என்று தொடங்கி அன்புள்ள 'வ' எனக் கடிதங்கள் முடிகின்றன.

"எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா!" என நுகர்பவர் மு. வ. அவரையும் இலங்கைத் தமிழர் வாழ்வு, இயற்கை ஈர்ப்பையும் வென்று தம்மை நோக்கவைத்தது.

"வெளியூர்களுக்குச் சென்றால் நான் பெரும்பாலும் கடைத் தெருவைச் சுற்றிப்பார்க்க விரும்புவதில்லை. அருவி உண்டா, ஆறு உண்டா, அழகிய கடற்கரை உண்டா, புத்தம் புதிய கட்டடங்கள் உண்டா, வியப்பான இயற்கைக் காட்சிகள் உண்டா என்றுதான் தேடுவது என் பழக்கம். ஆனால், கொழும்பு நகரம் தமிழர் வாழ்க்கைக்குப் போராடும் ஓர் இடமாக மாறிவிட்டதால் உண்மைக் காரணத்தைக் காண்பதற்காகச் சுற்றிப்பார்க்க விரும்பினேன்."[2]

இலங்கையைக் கண்ட மு. வ. அங்கு வாழும் எவரையும் நொந்து கொள்ளவில்லை. ஆள்வோரையும் அமைப்புகளையும் நொந்து கொள்ளவில்லை. "நேரில் கண்டறிந்தபின், தமிழ் நாட்டிலிருந்து இலங்கையைப் பிரித்து வைத்துள்ள கடலை நினைந்து நொந்தேன்'[3] என்று கூறுவதிலிருந்து இலங்கைச் சுற்றுலாவின் 'பெருமூச்சு' அஃது என்பது புலப்படுகின்றது.

1. தங்கைக்கு பக். 12.
2. யான் கண்ட இலங்கை பக். 46. 3. ௸, குறிப்பு. பக். 3

**வரலாறு :**

மு. வ. வின் படைப்பாற்றல் வெளிப்பட்ட மற்றொரு துறை வரலாறு ஆகும். சான்றோர் சென்ற நெறியைக் கற்றுக்கொண்டு அவர்கள் வழியில் செல்வதே முன்னேறுவதற்கு இயல்பான எளிதான வழி என்பது மு. வ. வின் தெளிவாகும். ஆகவே, தாம் எண்ணி எண்ணி உருகும், விரும்பி விரும்பிப் போற்றும் பெருமக்கள் வரலாறுகளை எழுதினர். அவ்வாறு வெளி வந்தவை காந்தியண்ணல், கவிஞர் தாகூர்' திரு. வி. க. அறிஞர் பெர்னார்ட்ஷா என்னும் நான்குமாம். பச்சையப்பர் வரலாறு நாடக அமைப்பில் வெளிப்பட்டது.

பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை என்னும் டாக்டர் பட்ட ஆராய்ச்சி நூலை அரும்பாடுபட்டு முடித்து 30-1-48ஆம் நாள் வெள்ளிக்கிழமையன்று பல்கலைக் கழகத்தில் சேர்த்து விட்டு வீட்டுக்கு வந்தார் மு. வ. ஒரு பெரிய தலைச்சுமை இறங்கியது போன்ற நிறைவில் கட்டிலில் படுத்தார். மாலை மங்கி இருள் கவிந்துங்கூட மின்விளக்குகளைப் போடாமல் கண்ணை மூடிக்கொண்டு களைப்புடன் இருந்தார். அப்போது தெருவில் சிலர் பேசிச் சென்றதில் 'சுடப்பட்டார்' என்ற சொல்மட்டுமே இவர் செவியில் வீழ்ந்தது. வெளியே வந்து கேட்டபோது நெஞ்சு நடுக்குறும் நஞ்சனைய செய்தியினைக் கேட்டார். நைந்தார்; கலங்கினர்; கண்ணீர் உகுத்தார். அண்ணல் காந்தியின் மறைவுச் செய்தியே அது. மு. வ. கொண்ட ஆற்றாமை 'அண்ணல் காந்தி'யாக உருவெடுத்தது. காந்தியடிகளின் தூய்மை, தொண்டு, முற்போக்கு, உணர்வு, அடிப்படை ஆகிய பண்புகளை விளக்கி எழுதிய நூல் காந்தியண்ணல் ஆகும். அது 1948ஆம் ஆண்டில் வெளிவந்தது.

மு. வ. வின் உளம் நிறைந்த தலைவர்களுள் காந்தியடிகளுக்குச் சீரிய இடம் உண்டு. அவர் வாழ்வையும் வாக்கையும் மு. வ தம் எழுத்துகளில் மேற்கோள் காட்டியுள்ளவற்றைத் தொகுத்தால் அதுவே ஒரு தனி நூலாகும் பரப்புடையது. அன்னைக்கு எழுதும் கடிதத்திலே எழில் குறிப்பிடுகின்றன்.

"புத்தர் வாழ்ந்தார்; அவர் வாழ்நாளில் லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையைத் திருத்த முடிந்தது. சாக்ரடீஸ் வாழ்ந்தார்; அவருடைய வாழ்நாளில் பதினாயிரக் கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாறுதலை விளைக்க முடிந்தது. ஏசுநாதரும் அவ்வாறே. ஆனால் வாழ்நாளிலேயே கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாறுதலை உண்டாக்கினவர் யார் அம்மா? காந்தியடிகள். இந்தப் பெயரையும் நினைத்து தம் மனத்தையும் தொட்டுப் பார்க்கட்டும்! அவருடைய பகைவரும் அவரிடமிருந்து கற்று வளர்ந்த புதிய முறைகள் சில உண்டு என்பதை உணர்ந்து கொள்வார்களே."[1]

"இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களுள் உலகிலேயே மிகச் சிறந்த கவிஞர் தாகூர் என்பது என் எண்ணம். அவருடைய கீதாஞ்சலியை நூறுமுறையாவது படித்திருப்பேன்... பொதுவாகச் செல்வ வாழ்க்கையில் இருந்து கலை பிறப்பதில்லை. தாகூர் இந்த விதிக்கு விலக்கு. செல்வாக்கான குடும்பத்தில் பிறந்து வளர்ந்து கலைஞராக உயர்ந்தவர் அவர்"[2] என்று பாராட்டும் மு.வ. தாகூர்க்கு எழுப்பிய நினைவு மாளிகை கவிஞர் தாகூராகும். இது 1949ஆம் ஆண்டில் வெளிவந்தது.

மு.வ. வைத் தமிழ்நாட்டுப் பெர்னாட்சா என்று அழைப்பதுண்டு. திரு. வி. க. வோ இன்னும் ஒருபடி மேலே செல்கின்றார். "வரதராசனார் பேச்சிலும் எழுத்திலும் பர்னார்ட்ஷாவின் கருத்துக்கள் ஆங்காங்கே பொதுளும். அவர் பர்னார்ட்ஷா நூல்களைப் படித்துப் படித்து ஒரு 'தமிழ் பர்னார்ட்ஷா' ஆனார் என்று கூறுதல் மிகையாகாது. பர்னார்ட்ஷாவைப் பார்க்கிலும் வரதராசனார் ஒரு துறையில் சிறந்து விளங்குகிறார் என்பது என் ஊகம். பர்னார்ட்ஷா பலப்பல நூல்களை எழுதி எழுதி முதுமை எய்தியவர். இம் முதுமையில் அவர்க்கு வழங்கும் இக்கால அரக்கப்போர்க் காட்சி 'வாழ்க்கைக்குக் கிறிஸ்து வேண்டும்; பைபில் வேண்டும்' என்னும் எண்ணத்தை அவரிடம் அரும்பச் செய்து வருகிறது. வரதராசனார்க்கோ அக் கருத்து இளமை

1. அன்னைக்கு பக். 28.
2. யான் கண்ட மு.வ. திரு. இரா. மோகன். பக். 153.

யிலேயே முகிழ்த்தது. 'வாழ்க்கைக்குச் சமயம் தேவை, கடவுள் தேவை' என்று இளமை வரதராஜனார் பேசினார்; எழுதினார். கீழ்நாட்டு இளமை மேல்நாட்டு முதுமையை விஞ்சி நிற்கிறது'' என்கிறார். மேல்நாட்டு பெர்னார்ட்ஷா வரலாற்றைக் கீழ்நாட்டுப் பெர்னார்ட்ஷா எழுதிய காரணம் என்ன?

''அறிஞர் பெர்னார்ட்ஷாவை நான் மதிப்பதற்குக் காரணம்' வாழ்க்கைச் சிக்கல் எதுவாயினும் அதை மேற்போக்காகக் கண்டு மருந்திட்டுச் செல்லாமல் அடிப்படைக் காரணம் கண்டு திருத்தும் ஆற்றல் அவருடைய எழுத்துக்களில் இருத்தலே ஆகும்''.

திரு. வி. க. வின் மேல் மு. வ. கொண்டிருந்தது அன்பா—பற்றா—காதலா? எல்லாமும் கூடிய ஒன்று என்பது தகும். மு. வ. ஞாயிறுதோறும் சென்று வழிபடும் தமிழ்க்கோயில் திரு. வி. க. மு. வ. எழுதிய வரலாற்றுப் புகழாளர்களுள் அணுக்கத்தொண்டராய் அடித்தொண்டராய் அறிவறிந்த தொண்டராய் அமைந்து கண்டும் கேட்டும் கலந்துரையாடியும் எழுதப் பெற்ற வரலாறுடையார் திரு. வி. க. வே. ''வரதராஜனார் என் வீட்டுக்கு வருவர்; எனக்கினிய கனிகளைக் கொணர்வர்; அவர் என்னிடம் பேசிக்கொண்டே எனது அன்றாட வாழ்க்கையை ஆய்ந்துள்ளனர்''[1] என்கிறார். அவ் ஆய்வே 'திரு.வி.க' என்னும் நூலாகியது.

''திரு. வி. க. ஒரு வானம்பாடி; வெள்ளாடை சூழ்ந்த மெல்லிய உடலும் புலமைப்பொலிவு பெற்ற அழகிய முகமும் அருள் பெருகும் கூரிய விழியும் பெற்ற வானம்பாடி; தமிழ்நாட்டில் பிறந்த தமிழ் வானம்பாடி; சமரச வானம் கண்டு களிக்கும் வானம்பாடி; தமிழகம் தழைக்க உலகம் உய்யப் பொதுமை மழை பெய்யுமாறு வாழ்த்துப்பாடும் வானம்பாடி''[2] என அந்த வானம்பாடியைப் பாடுகிறார் இந்த வானம்பாடி.

---

1. திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள் பக். 804.
2. திரு. வி. க. பக். 64.

கொடையப்பராக விளங்கிய பச்சையப்பரை உன்ன உன்ன உருகுவார் மு.வ. அவர்தம் கல்விக் கொடையை எண்ணிக் குளிர்ந்து போவார். பச்சையப்பர் கல்லூரிப் பக்கமாகப் போகும் போதெல்லாம் தம்மை வளர்த்து வாழவைத்த அந்தக் கலைக் கோயிலை நன்றியுணர்வுடன் கையெடுத்து வணங்குவார். பச்சையப்பர் மேல் மு.வ. கொண்ட நன்றியுணர்வே பச்சையப்பர் வரலாற்றை நாடகம் ஆக்கி மகிழ்ந்தது. 'பச்சையப்பர்' என்னும் நூல் 1951 ஆம் ஆண்டு வெளிவந்தது.

**குழந்தை:**

மு.வ. எதனையும் உற்று நோக்குபவர்; உணர்ந்து நோக்குபவர்; பல கோணங்களிலும் நோக்கி முடிவு காண்பவர். இத்தகைய அவர்தம் தன்மைக்கு நல்ல விளக்கமாக அமைந்த நூல் குழந்தை ஆகும். அதனைக் குழந்தைகளின் 'உளவியல்' நூல் என்பது தகும். மு.வ. படைத்த புதுவகை நூல் எனலாம்; மேலே வரும் சிறுகதை, புனைகதைகளுக் கெல்லாம் இத்தகைய உளவியல் நோக்கே அடிப்படையாய் அமைந்து உருப்படுத்தியது என்பது கருதத்தக்கதாம்.

''மக்கட்பேறு என்னும் அதிகாரத்தை மகிழ்வூட்டி மயக்கும் உணர்ச்சிகளின் வெளிப்பாடாக மட்டும் அவர் கருதவில்லை. இருபது ஆண்டுகளுக்கு முன்னர்த் தம்முடைய பிள்ளைகளோடும், பின்னர்த் தம்முடைய பேரப்பிள்ளை புகழேந்தியோடும் அவர் கொஞ்சி மகிழ்ந்ததை நேரில் கண்டு மகிழ்ந்தவன் நான். இவ்வாறு அவர் தம் மக்களோடு உள்ளம் கலந்து மகிழ்ந்து விளையாடியமை,

> 'மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
> சொற்கேட்டல் இன்பம் செவிக்கு'
>
> 'குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
> மழலைச்சொல் கேளா தவர்'

என்னும் குறட்பாக்களை அவர் ஆழமாக உணர்ந்திருந்ததையும் உண்மைப் பொருளை நன்கு புரிந்து கொண்டிருந்ததையும் புலப்படுத்தின. வள்ளுவரின் இக் கருத்துகளுக்குச் சிறப்பு

மிக்க இலக்கியமாக அவர் திகழ்ந்ததைக் கண்டபொழுது என் உள்ளம் பெரும் பூரிப்பு அடைந்தது''[1] என்று நேரிற் கண்டுணர்ந்த காட்சியைக் கூறுகிறார் வெளிநாட்டுப் பெரியார் ஒருவர்.

''குழந்தைகளிடம் உள்ள குறைகளைச் கண்டு மகிழத் தெரிய வேண்டும். அது பெரிய கலை. அதற்கு உள்ளத்தில் பொறுமை வேண்டும். வாழ்க்கையில் ஓய்வான அமைதி வேண்டும்''[2] என்பது எத்தகைய நுண்ணிய நோக்கின் வெளிப்பாடு! குழந்தை என்னும் நூல் 1954ஆம் ஆண்டு வெளி வந்தது.

**நாடகம்:**

எழுதுகோல் மன்னராகத் திகழ்ந்த பெர்னாட்ஷா எந்தக் காட்சியையும் நாடகமாகவே சிந்திப்பார். அதுபோல் அறிஞர் மு.வ. வும் எக் காட்சியையும் நாடகமாகவே சிந்திக்கும் இயல்பு பெற்றிருந்தார். நாடகங்களைக் காண்பதிலும், நாடகக் கலையை வளர்ப்பதிலும் பேரார்வம் காட்டினார். நாடகத் தமிழ் எனத் தனிப்பிரிவு அமைத்து, தனி இலக்கணமும் கொண்டிருந்த தமிழ் நாடகக்கலை தக்க வகையில் போற்றப்படாது இருப்பது கண்டு வருந்துவார். அவ் வுணர்வுகள் வாளா ஒழியாமல் சில நாடக நூல்களை வழங்கின. எதிர்பாராத திருப்பம் ஒன்று ஏற்பட்டிருக்கவில்லை என்றால் மு.வ. முழுமையாக நாடகத் தமிழுக்குத் தொண்டு புரிந்திருப்பார். அதனை மேலே காணலாம்.

'மனச் சான்று', 'காதல் எங்கே?', 'மூன்று நாடகங்கள்' என்னும் மூன்றும் மு.வ. எழுதிய நாடக நூல்களாம். பச்சையப்பர் வரலாறு நாடகமாக அமைக்கப் பெற்றதை அறிந்தோம். மு.வ. எழுதிய 'அல்லி', 'டாக்டர் அல்லி' என்னும் பெயரால் நாடகம் ஆகி நடிக்கப் பெற்றது.

---

1. ஒளிவிளக்கு டாக்டர் ஆர். இ. ஆஷர். தமிழாக்கம் திரு. க. த. திருநாவுக்கரசு, செந்தமிழ்ச் செல்வி 50; 212-3.

2. குழந்தை பக். 51.

முதல் மூன்று நூல்களிலும் உள்ள நாடகங்கள் கல்லூரி விழாக்களில் நடிப்பதற்காக எழுதப் பெற்றவை. நடித்துப் பாராட்டுப் பெற்றதுடன், படித்துப் பயன் பெறவும் நூல் வடிவு எடுத்தவை.

'மனச்சான்று' என்னும் நூலில், 'மனச்சான்று', 'கிம்ப ளம்', 'ஏமாற்றம்', 'பொது நலம்' என்னும் நான்கு நாடகங் களும், காதல் எங்கே என்னும் நூலில், 'காதல் எங்கே?' 'கடமை எங்கே?' 'நன்மை எங்கே?' என்னும் மூன்று நாடகங் களும், மூன்று நாடகங்கள் என்னும் நூலில், 'இளங்கோ', 'திலகவதியார்', 'வீண்கனவு' (இராசேந்திர சோழனைப் பற்றி யது) என்னும் மூன்று நாடகங்களும் இடம் பெற்றுள்ளன.

நெல்லை திரு. டி. கே. கணபதி அவர்கள் அல்லியை நாடக மாக்கி, நெல்லை அருணகிரி இசைக் கழகத்தில் நடிக்கச் செய் தார். இந் நாடகத்தை மு.வ. வும் கண்டு மகிழ்ந்தார். ஔவை தி. க. சண்முகம் அவர்களும் உடனிருந்து கண்டு உவகை யுற்றனர். "நடிக்கப் பெறும் நாடகங்களிற் பல படிப்பதற் குரியனவாக அமைவதில்லை. நடிக்கவும் படிக்கவும் தகுதியுடைய தாக நாடகம் அமையுமாயின் அதுவே சிறப்புக் குரியது. அப் போதுதான் நாடகம் இலக்கியமாகவும் வளர இடமுண்டு. நடிக்கவும் படிக்கவும் இலக்கியத்திலே இடம் பெறவும் தகுதி வாய்ந்த நாடகம் அல்லி" என்று திரு. சண்முகம் அணிந்துரை யில் குறிப்பிட்டுள்ளார்.

### புதினங்கள் (நாவல்கள்):

படித்தவர் மையத்திலெல்லாம்—குறிப்பாக மாணவ மாண வியர் மையத்திலெல்லாம், 'எங்கள் மு.வ.' என்று உரிமை கொண்டாடும் பரவிய பெருமையை வழங்கிய கதை நூல்களைப் பற்றி இனிக் காணலாம்.

நூலகம் என்னும் இதழின் சார்பாக நிகழ்ந்த பேட்டியில், 'முதல் நாவலை நீங்கள் எழுத முற்பட்டதற்கான தூண்டுதல் என்ன?' என்று மு.வ. வினிடம் வினவப் பெற்றது. அதற்கு

மு.வ. அளித்த விடை, தாம் கதை எழுதத் தொடங்கிய காரணத்தை நன்கு விளக்குவதாகும்.

''எனக்கு நாடகத்தில் எப்போதும் ஆர்வம் உண்டு. நாடகங்கள் படிப்பேன்; பார்ப்பேன். எனக்குத் தோன்றிய கருவை அமைத்து ஒரு நாடகம் எழுதினேன். வெளியீட்டாளரிடம் அதைக் கொண்டு போனேன். அவர் எனக்கு வேண்டியவர். இருந்தாலும் தயங்கினார். நம் நாட்டில் நாடகங்கள் விற்பனை ஆவதில்லை; பலர் படிப்பதில்லை. ஆகையால் அதே கதையை நாவல் வடிவத்தில் எழுதினால் பயன் இருக்கும் என்றார். அதனால் தான் நாவல் முயற்சியில் ஈடுபட்டேன்.''[1]

**கவிதை :**

கற்பனைத் திறம் அமைந்த மு. வ. தொடக்கநாளிலே கவிதைகளும் இயற்றினார். சேக்ஸ்பியர்கதை முதலியவற்றில் இடத்துக் கேற்ற வகையில் சில கவிதைகள் பாடிச் சேர்த்தார். குழந்தைப் பாடல்களும் பாடினார். சில விழாக்களில் வாழ்த்துக் கவிகளும் நன்றிக் கவிகளும் இயற்றிக் கூறினார். நண்பர்களும் பாராட்டினர். ஆயினும் அவருக்கு அதில் நிறைவு தோன்றவில்லை. உரைநடையே அவர்க்கு ஏற்றதாக இருந்தது. அதனை அவரே உணர்ந்து போற்றினார். மு வ. தம மாணவர் திரு. மின்னூர் சீனிவாசனிடம் இதனை ஒருமுறை வெளிப்படுத்தினார்.

''என் இளவயதில் - உன்னைப் போன்ற இளைஞனாக இருந்த சமயம் - நிறையப் பாடல்களாக எழுதிப் பார்த்தேன்; கலித்தொகை நூலைப் படித்துவிட்டுத் தரவு தாழிசை தனிச்சொல் சுரிதகம் என்றெல்லாம் அமைத்து இயற்றினேன். சிலர் என்மேல் அன்பு காரணமாக ஊக்கப்படுத்தினார்கள். ஆனால் எனக்கென்னவோ, கவிதை எனக்குரிய துறையே அல்ல என்று மிக விரைவில் புலப்பட்டு விட்டது. உரைநடையின் பக்கம் திரும்பி விட்டேன். இது ஒருவகையில் கவிதைக்கும் மற்றொரு வகையில் உரைநடைக்கும் நல்லதாகப் போய்விட்டது; இல்லையா' கவிதை எழுதாமல் இருந்து அதற்கு நான் தொண்டு

1. நூலகம், ஏப்ரல்—1969.

செய்கிறேன் இல்லையா' என்று சிரித்துக் கொண்டே கேட்டது நினைவினின்று அகலாது.''[1]

**சிறுகதை :**

''மு. வ. எழுதிய சிறுகதைத் தொகுதிகள் மூன்றேயாம். அவை; விடுதலையா, குறட்டை ஒலி, பழியும் பாவமும் என்பன.

கள் குடிப்பதால் வருங்கேடுகளைக் கதையாகக் கூறும் நூல் பழியும் பாவமும். ''ஒருவன் பட்டும் வைரமும் சுமந்துகொண்டு தலைநகரத்தின் பெரிய தெருவில் நிற்கிருன். ஒருவன் பழியும் பாவமும் சுமந்துகொண்டு எங்கோ ஓடி ஒளிகிருன். நல்ல உலகம் இது'' என நூல் முடிகின்றது. இதன் வருவாய் திரு. வி. க. உயர்நிலைப் பள்ளிக்குரியது.

அந்த மனம் வருமா? என்பது முதலிய பதினெரு சிறு கதைகளைக் கொண்ட நூல் குறட்டை ஒலி, நாய்க்குட்டியையும் தன் குழந்தையாகக் கருதிப் பாலூட்டும் தாய்மனம் ஒருபக்கம்; தாமே தின்று ஏப்பமிட்டுக் குறட்டை ஒலிவிடும் பேய் மனம் ஒரு பக்கம்; இணைந்த இரட்டைக் குடியிருப்புகளைப் பற்றிய ஒரு சிறுகதையால் 'குறட்டை ஒலி' என்னும் பெயரை நூல் தாங்கியுள்ளது.

விடுதலையா என்பது முதலிய ஆறு சிறுகதைகளைக் கொண்டது 'விடுதலையா?' என்னும் நூலாகியது. விடுதலையா என்பது மு. வ. தம் இளமைப் பருவ நிகழ்ச்சியையும், தம் அன்புப் பாட்டியார் நரசம்மாளைப் பற்றியும் எழுதியதாகும்.

இனி மு. வ. எழுதிய நாவல்களைக் காணலாம். செந்தாமரை, கள்ளோ? காவியமோ?, பாவை, அந்த நாள், மலர்விழி, பெற்றமனம், அல்லி, கரித்துண்டு, கயமை, நெஞ்சில் ஒருமுள், அகல்விளக்கு, மண்குடிசை, வாடாமலர் என்னும் பதின்மூன்று நாவல்களை மு. வ. எழுதியுள்ளார்.

நாவலைக் கருத்துக்காகப் படிப்பது என்னும் நிலையினைத் தமிழ் நாட்டு வரலாற்றில் உருவாக்கியவர் மு. வ. வே ஆவர். புது

1. யான்கண்ட மு. வ. பக். 8-9.

நாவல் எப்பொழுது வருகிறது என்று எதிர்பார்த்திருந்து தேடிப் போய் வாங்கிப்படிக்கும் வாசகர் வட்டத்தைத் தமக்கெனப் பெற்றவரும் மு. வ. வே ஆவர். இலக்கிய இலக்கணங்களிலும் மொழியியலிலும் அழுத்தமான புலமை பெற்று ஆராய்ச்சி நூல்கள் படைத்துக்கொண்டு, அதே வேளையில் நயத்தக்க நாவல்களை எழுதித் தமிழ் உலகை ஆட்சிகொண்ட தனி ஒருவர் மு. வ. வே ஆவர்.

நூலகம் பேட்டி :

நூலகம் இதழ் தொடர்பாக ஒரு பேட்டி நடைபெற்றது. பேட்டி கண்டவர் மு. வ. வினிடம் சில வினாக்களை விடுத்தார். அவ் வினாவும் விடையும் மு. வ. வின் நாவல்களைக் காணப் போகும் நமக்கு நல்ல துணை செய்வனவாம்.

வினா : நீங்கள் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட வயதுள்ள வாசகர்களை மனத்தில் கொண்டு அவர்களுக்கு ஏற்ற முறையில் உங்கள் நாவல்களை உருவாக்குவது வழக்கமா?

விடை : ஆம்! உயர்நிலைப் பள்ளிப் படிப்புள்ள இளைஞர்களும், குடும்பப் பெண்களும் விரும்பக் கூடிய முறையில் என் நாவல்களை எழுதுகிறேன்.

வினா : நாவல் எம் முறையில் அமைதல் வேண்டும்?

விடை : வெறும் பொழுது போக்குக்காக என்று நான் எதையும் எழுதுவது இல்லை. இடையிடையே பொழுது போக்கு அம்சங்களை நான் வாசகர்களைக் கவருவதற்கான ஒரு கருவியாகவே பயன் படுத்துகிறேன். எழுத்தாளன் வாழ்க்கையின் முன்னேற்றக் கருத்துக்களைப் புறக்கணிக்கக் கூடாது. அதற்காக அப்பட்டமான நீதிபோதனை அல்லது பிரச்சாரத்திலும் இறங்கிவிடக்கூடாது. எழுத்தாளன் தான் ஒரு கலைஞன் என்பதை எப்போதும் மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டும். கலையைப் படைப்பதே முதல் கடமை. மற்றவற்றில் எந்த அளவு எதைச் சொல்லலாம், எந் நிலையில் நிற்கவேண்டும் என்று வரையறுத்துக் கூறுவது கடினம்.

வினா: கதைகளுக்கான கருத்து, சம்பவம் முதலியவைகளை நீங்கள் உண்மை வாழ்க்கையில் இருந்து தேர்ந்து கொள்வதுண்டா? அல்லது எல்லாம் கற்பனையா?

விடை: பெரும்பாலும் சுற்றுப்புறத்தார், நண்பர்கள், உறவினர்களின் வாழ்க்கையில் காணும் பல உண்மைச் சம்பவங்களையே கதைகளுக்குத் தேர்ந்து கொள்கிறேன். சில சமயம் கற்பனைச் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன. அறிந்தோ அறியாமலோ சில நாவல்களில் என்னையே கூடக் கதாபாத்திரமாகச் சித்திரித்துக் கொண்டிருக்கிறேன்.[1]

**விடுமுறை:**

நாள்தோறும் எழுதுவது என்னும் கடமையை மு. வ. கொண்டிருக்கவில்லை. அதற்கு அவர்தம் பேராசிரியப் பணி வாய்ப்புத் தரவில்லை. விடுமுறைக் காலத்தை எல்லாம் மிக நன்றாகப் பயன்படுத்திக்கொண்டு எழுதினார். ஒரு விடுமுறை வாய்த்தால் அதில் ஒருநூலை உருவாக்கி முடித்தார். சிறிய விடுமுறையாயின் சிறியதொரு நூலும், கோடை விடுமுறை ஆயின் பெரிய நூல் ஒன்றும் தொடர்ந்து எழுதினார். தொடக்க நாளில் வேலம், அம்மூர், திருப்பத்தூர் ஆகிய இடங்களுக்குச் சென்று எழுதினார். 1950 ஆம் ஆண்டுக்குப் பின்னர்க் குன்னூருக்கும், 1957 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 1971 ஆம் ஆண்டுவரை பெங்களூருக்கும் சென்று எழுதினார்.

**வாழ்க்கைத் துணை:**

தொடக்கநாளில் இரவு நெடுநேரம் வரை இவர் எழுதுவது வழக்கம். எழுதிக் கொண்டு பேனாவைக் கையில் பிடித்த நிலையிலேயே உறங்கியும் போவார். இவர் தம் துணைவியார் பேனாவையும் தாளையும் எடுத்து வைத்துப் படுக்கையில் படுக்க வைப்பதும் உண்டு. மு. வ. வின் எழுத்துப் பணிக்கு இராதா அம்மையார் செய்த துணை மிகப் பாராட்டத் தக்கதாகும்.

---

1. *நூலகம், ஏப்ரல் 1969.*

எழுத்துப்பணி தடைப்படக் கூடாது என்பதற்காக வீட்டுக் கதவைச் சாத்திவிட்டுக் குழந்தைகளை வெளியே கொண்டுவந்து வேடிக்கை காட்டுவார். சில வேளைகளில் குழந்தைகளுடன் தம் ஊர்க்குச் சென்றும் மு. வ. எழுத்துக்குத் துணைபுரிவார். அங்கிருந்து திரும்பியதும் தாம் சென்ற இடத்திலும் பக்கத்து ஊரிலும் நடந்த நிகழ்ச்சிகளையும் கேட்ட நிகழ்ச்சிகளையும் எடுத்துக் கூறுவார். அவர் கூறும் செய்திகள் நாவலுக்குக் கருவாக அமைவதுண்டு. 'பாவை', 'மலர்விழி', 'கள்ளோ? காவியமோ?' 'அகல்விளக்கு', 'வாடாமலர்' ஆகியவை இவ் வண்ணம் உருவாகியனவாம். 'கள்ளோ? காவியமோ?' வில் வரும் மங்கை இராதா அம்மையாருக்குத் தெரிந்த ஒரு வேலைக் காரி ஆவர்.

இராதா அம்மையார் உயர்வு பெரிது. தம் கணவர் பெருமையையும் நல்வாழ்வையும் சுற்றிச் சுற்றி வட்டமிட்டதே அவர் உள்ளம். மு. வ. செந்தாமரை என்னும் முதல் நாவலை எழுதி முடித்தார். அதனை வெளியிடுதற்கு முயன்றார். வெளியிடுமாறு அவர் கேட்ட பதிப்பகத்தார் எவரும் வெளியிட முன் வரவில்லை. ஆனால் மு. வ. சோர்வடையாமல் தாமே வெளியிடத் துணிந்தார். அதற்கு அவர் கையில் அப்பொழுது பணவாய்ப்பு இல்லை. இராதா அம்மையார் தம் நகைகள் சிலவற்றைத் தந்தார். அதனை அடைவு வைத்து அப் பணத்தால் முதல் நாவலை - செந்தாமரையை - வெளிக் கொணர்ந்தார். இதனால் இராதா அம்மையார் வாழ்க்கைத்துணை என்பதற்கு எல்லா வகைகளாலும் எடுத்துக் காட்டாக இலங்கியமை தெளிவாம்.

செந்தாமரை :

செந்தாமரை 1948 இல் வெளிவந்தது. அந்த நாவலுக்கு மு.வ. இட்டிருந்த பெயர் 'முருங்கை மரம்' என்பதாகும். ஆனால், மு. வ. வின் அன்பு மாணவருள் ஒருவராகிய திரு. ம. ரா. போ. குருசாமி அவர்கள் முருங்கைமரக் கதையைப் படித்து முடித்தார். இதற்குச் செந்தாமரை என்று பெயரிட்டாற் பொருத்தமாக இருக்கும் என்றார். அறிவறிந்த மாணவர் உரையை அன்பு ஆசிரியர் ஏற்றுக்கொண்டு செந்தாமரை எனப் பெயரிட்டார்.

நல்ல கருத்துகளை ஏற்றுப் போற்றும் நயத்தகு நாகரிகர் மு. வ. என்பது இதனுல் விளங்கும்.

நூலின் முன்னுரைக்குப் பதிலாக, படிப்பவர்க்கு, படித்தவர்க்கு எனச் சில குறிப்புகளை வழங்கியுள்ளார் மு. வ. அதில் படித்தவர்க்கு என்பதில்,

''அந்த முருங்கை மரத்திலிருந்து இரண்டு கிளிகள் ஒன்றன்பின் ஒன்ருக எழுந்து பறந்தன. அவை தென்னை மரத்தில் சென்று ஓலையில் மறைந்திருந்தன. உடனே சிறிது நேரத்தில் வெளி வந்தன.

''காற்று ஆரவாரம் செய்தபோது இந்தக் கிளிகள் எங்கே இருந்தனவோ தெரியவில்லை. இப்போது பழையபடி வந்து விட்டன. தென்னை மரத்தைச் சுற்றுகின்றன.

''ஆறு கிளிகள் இருக்கின்றன. ஆறு கிளிகள் - மூன்று குடும்பம் - மூன்று இணை. எது எதன் துணையோ தெரியவில்லை. பொறுத்துப் பார்ப்போம் எப்படியும் தெரிந்துவிடும்''

எனக் குறிப்பிடுகிருர். திலகம், இளங்கோ, மருதப்பன், திருநாதன், செந்தாமரை ஆகியோரின் நேர்க் கூற்ருகச் செந்தாமரை அமைந்துள்ளது.

**கள்ளோ? காவியமோ:**

மு. வ. வுக்குப் புனைகதை உலகில் நல்ல புகழ் வாங்கித் தந்த நூல்களுள் 'கள்ளோ? காவியமோ?' என்பதும் ஒன்று. அது செந்தாமரையை அடுத்து வெளி வந்தது. சென்னை அரசின் பாராட்டுப் பெற்றது இந்நூல்.

கபிலரின் பாடலொன்று கிளறியதன் விளைவாக எழுந்த இந்நூல், ''உலகம் பொல்லாதது, அவர் நல்லவராக இருந்தாலும் உலகம் பொல்லாதது'' என மங்கையின் கூற்றில் தொடங்கி, ''அந்தக் குடும்ப விளக்கு அணைவதற்கு முன்னே ஒருமுறை அழகாக ஒளிவீசியது'' என்று அருளப்பன் கூற்றில் முடிகிறது.

அருளப்பனுக்கு மங்கை கள்ளாக இருந்தாளா? காவியமாக அமைந்தாளா? என ஆராயும் நூல் இது.

"மங்கையின் வாழ்க்கை கள் அல்ல; அவள் கள்ளாக இருந்திருந்தால் அன்று இரவே - பிணக்கு ஏற்பட்ட அன்று இரவே- அருளப்பனை மயக்கியிருக்க மாட்டாளா? அருளப்பனும் குடிகாரன் அல்லன் விலை மகள் தான் கள். அவள் காமுகனை அழிக்கிருள். கள், குடிப்பவன் வாயில் நாறி அழிகின்றது. காவியமோ படிப்பவன் வாயில் புகழ்பெற்றுச் சிறப்படைகின்றது. மங்கையின் வாழ்க்கை காவிய வாழ்க்கை."[1]

முருகையா ஓர் அரிய உண்மையை வெளிப்படுத்துகிருர்: "அருளப்பா, காதல் வாழ்க்கையில் ஒருவகைக் கண்மூடி வாழ்வு வேண்டும். குழந்தைபோல் வாழவேண்டும்; தொடக்கத்தில் தான் ஆராய்ச்சி வேண்டும். பிறகு ஆயுள் வரைக்கும் ஆராய்ச்சியும் கூடாது. அறிவும் மிகுதியாகக் கூடாது. ஒருவர் குற்றம் ஒருவர்க்குத் தெரியாத அன்பு வாழ்வு - கண்மூடி வாழ்வு — வேண்டும்."[2]

பாவை :

'பாவை' 'லோகோபகாரி' இதழில் தொடர்கதையாக வெளிவந்தது. பின்னே நூலாகியது. பழைய அகத்திணை மரபுகள் காலப்போக்கில் மாறி இக் கால வாழ்வில் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்பதனைப் புலப்படுத்துவது பாவையாகும். கதைத் தலைவன் பழனி, "நான் வாழும் வாழ்வுக்கு ஒருதுணை வேண்டும்; நான் பேசும் பேச்சைக் கேட்பதற்கு ஒரு நட்பு வேண்டும்; நான் எண்ணுவதுபோல் சேர்ந்து எண்ணுவதற்கு ஒரு மனம் வேண்டும். அதனுல்தான் நான் பாவையைத் தேடுகிறேன்" என்கிருன்.

உரிமைக்கும் கண்மூடி வழக்கத்திற்கும் நடக்கும் போராட்டத்தில் உரிமை வெற்றி கொள்வதை விளக்கும் நாவல் பாவை.

---

1. டாக்டர் மு. வ. வின் நாவல்கள். திரு. இரா. மோகன். பக். 3-4. 2. கள்ளோ? காவியமோ? பக். 104.

அந்தநாள் :

1941, 42 ஆம் ஆண்டுகளில் பர்மாவில் இருந்து ஓடிவந்த தமிழர் பட்ட அடுக்கடுக்கான துயரங்களை அவலச்சுவை பெருக எடுத்துரைக்கும் நாவல் அந்த நாள் ஆகும். இது முதற்கண் 'தமிழ் முரசு' வார இதழில் தொடர்கதையாக வெளிவந்தது.

மலர்விழி :

மு. வ. வின் அடுத்த நாவல் மலர்விழியாகும். மலர்விழியில் வரும் கலெக்டர் செல்வநாயகம் மு. வ. வுக்குத் தொடர்புடைய ஒரு பாத்திரமாகும்.

மலர்விழி நல்ல பெண்; அவள் இல்வாழ்வு கணவனின் கயமையால் கெடுகிறது. அவள் மீண்டும் கல்வியைத் தொடர்ந்து, ஆசிரியை ஆகிறாள்; கல்விப்பணி புரிகிறாள். கண் கண்ட மணிமேகலையாகக் காட்சி வழங்குகிறாள்.

செல்வநாயகம் கூறுகிறார்: "சிலருடைய மனம் பனைமரம் போன்றது. தன்னை நினைத்துக் கொண்டே நெடுக வளர்வது; ஈவு இரக்கம் அற்ற தன்னல மனம்; சிலருடைய மனம் அறுகம் புல் போன்றது. எங்கெங்குப் பார்த்தாலும் பரந்து படர்வது. இரக்கம் உள்ள நல்ல மனம்; நல்ல மனங்கள் பெருகினால் உன்னைப் போன்றவர்கள் மிகுதியானால், வறுமைக்கே ஒரு முற்றுப்புள்ளி வைத்து விடலாம்."[1]

பெற்ற மனம் :

பெற்ற மனம் மு.வ. எழுதிய பெரிய நாவல்களில் ஒன்று. இஃது எழுதப்பெற்ற எட்டாண்டுகளில் திரைப்படமாக வெளி வந்தது. கதைக்காக நூலாசிரியர் ரூபா ஐயாயிரம் பெற்றார். அவர் வேண்டுகோட்படி திரு. வி. க. உயர்நிலைப் பள்ளிக்கு ரூபா ஐயாயிரம் நன்கொடை வழங்கினர். "வேலைக்காரனின் மனைவி, பைத்தியக்காரி, பிச்சைக்காரி, குழந்தை திருடி, சமையல்காரி, கொலைகாரி, குற்றவாளி, வேலைக்காரி எனப் பல்வேறு

---

1. *மலர்விழி பக்- 140.*

நிலைகளில் பலவாறு இகழ்ந்தும் பழித்தும் ஒதுக்கப்பட்டாள் ஒருத்தி. ஆயினும் அவளுடைய தூய நெஞ்சத்தில் தாய்மையுணர்ச்சி ஒதுங்கவில்லை. ஒடுங்கவில்லை; நிறைந்து நின்று அவளுடைய வாழ்வை இயக்கியது'' என்பதை விளக்கும் நூல் பெற்ற மனம்.

அல்லி :

வாசகர் உலகில் ஒரு பரபரப்பை ஏற்படுத்திய நாவல் அல்லி யாகும். ஆணின் தவறான ஒழுக்கத்தால் மேனிலைப் படிப்புடைய ஒரு பெண் துன்புறும் அவல வாழ்வைப் படம்பிடித்துக் காட்டும் நூல் அல்லி. அது நாடகமாக வெளிப்பட்டதையும் முன்னரே கண்டுள்ளோம்.

''இன்பத்திற்குத் துணையாக யாராலும் முடியும். ஈ எறும்பாலும் முடியும்; தேவையானபோது ஈயும் எறும்பும் நம்மைக் கேளாமலே வந்து மொய்க்கின்றன. அதுபோல் இன்பம் உள்ளவரை யார் வேண்டுமானாலும் வந்து மொய்த்துக் கொள்வார்கள். ஆதலால் இன்பத்திற்குத் துணையாக வல்லவரை நம்பாதே. துன்பத்திற்குத் துணையாக இருக்க வல்லவரைத் தேடு; உறவானாலும், நட்பானாலும், காதலானாலும் இப்படித் தான் தேடவேண்டும்''[1]—இஃது அல்லியின் வாழ்வை எதிர் நோக்கிக் காணக் கிடைத்த ஒரு நூலின் வரிகள்.

குறிப்பேடுகள் :

இதன்கண் நான்கு வகைக் குறிப்பேடுகள் இடம்பெற்றுள. 1. சோமுவின் நாட்குறிப்பு. 2. அல்லி எழுதிவைத்த மருத்துவக் குறிப்பு. 3. அல்லியின் எது குற்றம்? என்னும் நூலைக் கற்றோர் எழுதிய குறிப்பு. 4. சுப்புரத்தினம் தன் சிறிய ஏட்டில் எழுதி வைத்த குறிப்பு. குறிப்புகளால் விளையும் நலங்களை அல்லி நன்கு விளக்குகிறது.

கரித் துண்டு :

ஓர் ஓவியக் கலைஞரின் வாழ்வை ஓவியமாக்கிக் காட்டும் நாவல் கரித்துண்டு. கரித்துண்டு கொண்டு ஓவியம் வரையும்

---

*1. அல்லி. பக். 112.*

ஓவியர் ஒருவரை மு வ. வும் அவர்தம் மனைவியாரும் கண்டனர். அந்த ஓவியரைக் குறித்தே சில நாட்கள் தங்களுக்குள் உரையாடினர். இந்த உரையாடலின் விளைவே 'கரித்துண்டு' ஆயிற்று.

"பெரிய மேகம் ஒன்று திங்களைத் தன் அகன்ற வயிற்றுக்குள்ளே விழுங்கி இறுமாந்திருந்தது. அந்த ஏழைத் திங்கள் அந்த நிலையிலும் கவலை எள்ளவும் இல்லாமல் தன்னால் இயன்ற அளவு ஒளியை உலகுக்கு அளித்து வந்தது. எப்போதேனும் அந்த மேகத்தின் செல்வாக்குக்கு ஒரு முடிவு ஏற்படும்; உடனே திங்கள் தன் முழு நிலவையும் உலகிற்கு அளிக்கும்" என்னும் பகுதி நூலின் உட்பொருளை விளக்குமுகத்தான் ஆசிரியர் காட்டும் ஒரு காட்சியாகும்.

**கயமை :**

மு வ வின் அடுத்த படைப்பு, கயமை என்னும் நாவலாகும். இதன் தலைப்பே நாவல் உலகிற்குப் புதுமை என்பார் நாவலாசிரியர் திரு. அகிலன்.

கயமை உள்ளங் கொண்ட ஆணவர் வாழ்வையும், அவர்தம் கொடுமைக்கு ஆட்பட்டு அல்லலுற்றோர் வாழ்வையும், செல்வாக்குள்ளவர்களால் சமுதாயத்திற்கு ஏற்படும் கேடுகளையும் தெள்ளத் தெளிவாக விளக்கிக் காட்டும் நூல் கயமையாகும்.

வேங்கடேசன் கூறுகிறான் :

"நல்லவர்களுக்கு ஒரேவழிதான் உண்டு; ரயில் வண்டி போல ஒரு பாதையில்தான் போகமுடியும்; பொல்லாதவர்களுக்கு எல்லா வழிகளும் உண்டு; ஆடு மாடுகள் போல் காடு மேடு எல்லாம் போய் அழிப்பார்கள். அதனால்தான் பொல்லாதவர்கள் எப்போதும் யாரையும் ஏமாற்றி வசப்படுத்தி விடுகிறார்கள்".[1] இது கயமை நாவலின் 'பிழிவு' ஆகும்.

---

1. கயமை. பக். 311.

**நெஞ்சில் ஒரு முள் :**

அறியாமல் தவறு செய்துவிட்டுப் பின்னர்த் திருந்தி வாழும் முயற்சி மேற்கொண்ட நல்லவள் ஒருத்தியின் வாழ்வை விவரிக்கும் நூல் 'நெஞ்சில் ஒரு முள்'ளாகும். மு. வ. வின் நாவல்களில் இதுவே மிக நீண்ட நாவலாகும்.

''கெட்டது வாழாமலே அழிய வேண்டும் என்றும், நல்லது வாழ்ந்து அழிய வேண்டும் என்றும் படைப்பு உணர்த்துகிறது. நல்ல உயிர்கள் அழிவது, மலர் மலர்ந்து மணம் கமழ்ந்த பிறகு வாடி உதிர்ந்து அழிவதைப் போன்றது. அதற்காக வருந்த வேண்டியது இல்லை. வாடி உதிர்ந்த மலர் அழுகி மண்ணாகி மறுபடியும் ஒரு செடிக்கு உரமாகும். அதுபோல் நல்லோர் வாழ்ந்து அழிந்த பிறகு நன்மை மறுபடியும் தழைப்பதற்கே பயன்படுவர்''.[1] இத்தகைய வாழ்வியற் கருத்துகள் பல வற்றை விளக்கும் நூல் நெஞ்சில் ஒரு முள்ளாகும்.

**அகல் விளக்கு :**

தில்லி சாகித்திய அகாதெமிப் பரிசான ஐயாயிர ரூபா பெற்றது 'அகல் விளக்கு' என்னும் நாவலாகும். ''மு.வ. வைப் படிக்க விரும்புவோர் முதலில் படிக்க வேண்டிய நூல் அகல் விளக்கு''[2] என்பர்.

வேலய்யனின் நினைவோட்டமாக இந் நாவல் புனையப்பட்டுள்ளது. சந்திரன் அகல் விளக்கின் கதைத் தலைவன். அவனுடைய தொடக்ககாலச் செழிப்பு மிக்க வாழ்வினையும், அவலத்திற்கு இடமான இறுதிக்கால வாழ்வினையும் படம் பிடித்துக் காட்டும் நூல் அகல் விளக்கு.

''நீ மண் அகலாக இருந்த காலத்தில் நான் பித்தளை அகலாக இருந்தேன். சிறிது காலம் பளபள என்று மின்னினேன். என் அழகையும் அறிவையும் அப்போது எல்லோரும் விரும்பினார்கள்; பாராட்டினார்கள். என்ன பயன்? வரவர எண்ணெயும்

---

1. நெஞ்சில் ஒரு முள். பக். 535.
2. டாக்டர் மு.வ. வின் நாவல்கள். பக். 17.

கெட்டது, திரியும் கெட்டது, சிட்டமும் பிடித்தது, ஒளி மங்கியது, மங்கிவிட்டேன். நீதான் நேராகச் சுடர்விட்டு அமைதியாக எரியும் ஒளிவிளக்கு என்றான்'' என்று சந்திரன் வாயிலாக அரிய வாழ்வு நெறியை விளக்குகிறார் மு.வ.

மு. வ. வின் இளமைக்கால நண்பன் ஒருவன் சந்திரன் போலவே வாழ்ந்து கெட்டவன். ஒருநாள் மு.வ. கல்லூரியில் இருந்து தம் வீட்டிற்குச் செல்லும்போது நடைபாதையின் எதிர்ப்பக்கத்தில் இருந்து 'வரதராசா! வரதராசா!' என்னும் குரல் கேட்டது. ஒரு தொழுநோயாளி தம்மை நோக்கி 'வரதராசா! என்னைத் தெரியவில்லையா? மறந்து விட்டாயா?' என்று கூறுவதைக் கேட்டு அவனை அடுத்துச் சென்றார். தம் இளமை நண்பன் என்பதைக் கண்டார். வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அவன் வாழ்க்கையைப் பரிவுடன் கேட்டார். உணவு படைத்துப் பணம் தந்து அனுப்பி வைத்தார்.

''வேலு தன் வீட்டில் சந்திரனுக்கு இடங் கொடுத்துக் காப்பாற்றியதுபோல் நான் செய்யவில்லை. மாறாக உணவு படைத்துப் பணம் கொடுத்து அனுப்பிவிட்டேன்''[1] என்று தம் அன்பு மாணவரிடம் இந் நிகழ்ச்சியைப் பின்னாளில் கூறினார் மு. வ.

மண்குடிசை :

மு. வ. வின் நீண்ட நெடுங் கனவிலிருந்து முளைத்தெழுந்த கதை 'மண்குடிசை' ''ஆனால் மாறுதல் ஒன்று செய்யப்பட்டது. கனவில், நல்லது செய்து அல்லல்படும் அந்த மெய்யப்பனின் உருவம் மறைவதற்கு ஒருவரின் மந்திரம் பயன்பட்டது. ஆனால் இங்குக் கதையில் அறிவியலே உதவுவது நல்லது என எண்ணி மாறுதலைச் செய்தேன்''[2] என்கிறார் மு. வ.

''திருத்தக் கூடியவர்களைத் திருத்தமுடியும். வீட்டினுள் மனைவியைத் திருத்தமுடியாமற் போகலாம்; தொடர்பு இல்லாத வழிப்போக்கனைத் திருத்திவிடக் கூடும்.''

---

1. டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்.
2. மண்குடிசை குறிப்பு.

''ஒவ்வொருவருக்கும் உடல் உறவும் உள்ளத்து உறவும் உண்டு. உடலால் உறவானவரை விட உள்ளத்தால் உறவான வரையே திருத்த முடியும். உலகத்துச் சான்றோர் சிலர் மனைவி மக்களைத் திருத்த முடியவில்லை. அது ஒரு குறையல்ல. அவர்கள் உள்ளத்தால் உறவான எத்தனையோ பேரைத் திருத்தியிருக் கிறார்கள்.

''மனத்தையும் நல்ல வழியில் காப்பாற்றி உடம்பையும் நோய் இல்லாமல் காப்பாற்றினால் அந்த வாழ்க்கைதான் வெற்றி மிகுந்த வாழ்க்கை. உடம்பு நோய்வயப்பட்டால் அதற்குப் பிறகு வாழ்க்கையில் முன்னேற்றம் இல்லை.''

இத்தகைய மணிமொழிகள் பொதிந்த பேழையாக மண் குடிசை விளங்குகின்றது.

**வாடாமலர் :**

மு. வ. எழுதிய இறுதி நாவல் 'வாடாமலர்' ஆகும். ''அந்த மலர்கள் என்னோடு பேசுவனபோல் இருக்கின்றன. அவை அப்படியே இருக்கட்டும். வாழ்க்கையைப் பற்றி அவை என்னவோ சொல்கின்றன; உணர்த்துகின்றன''—முருகய்யா என்னும் குறிப்புடன் வாடாமலர் மலர்கின்றது.

குழந்தைவேல் என்னும் கதை மாந்தர் தம் இளமைப் பருவத்தை நினைந்து பார்த்த போக்கில் அமைந்துள்ளது. மு. வ. அவர்களின் அறிவு முதிர்ச்சியையும் பட்டறிவுப் பரப்பை யும் இந்நூலிற் காணலாம்.

''இப்போதெல்லாம் நேரம் கிடைத்தாலும் அந்த நேரத் தில் ஒரு பங்கு இந்தப் புத்தகங்கள் படிக்கச் செலவிடுகிறேன். நீயும் நல்ல புத்தகங்கள் இரண்டு மூன்றுவது வைத்துக்கொண்டு திரும்பத் திரும்பப் படிப்பது நல்லது. வாழ்க்கையில் மனிதர் களின் தொடர்பு கசக்கும் நாள்வரும். ஆனால், உயர்ந்த புத்த கங்களின் கருத்துக்கள் என்றும் கசப்பதில்லை'' என்று தானப் பன் கூறும் மொழி வளரும் உலகுக்குக் கூறும் வளமான மொழி யாகும்.

**தொடர்கதைப் புதுமை :**

'பாவை' 'அந்த நாள்' என்னும் இரண்டு நாவல்கள் மட்டுமே இதழ்களில் தொடர்கதையாக வெளிவந்தவை. அவற்றையும் மு. வ. முழுமையாகவே எழுதித் தந்துவிட்டார். இதழ் ஆசிரியர்களே தம் வாய்ப்புக்கு ஏற்பத் தொடர்கதையாக வெளிக் கொணர்ந்தனர். தொடர்கதை வரலாற்றில் மு. வ. வின் செயல் புதுமையானதாகும்.

''பரிசுக்காகவும் பத்திரிகையில் தொடர்கதை வெளியிட வேண்டிய நிர்ப்பந்தத்திற்காகவும் நாவல்களைப் படைக்கிறவர்களையே என்றும் எங்கும் காண்கிறோம். வேறு எந்தவிதமான தூண்டுதலும் இல்லாமல் படைப்புத் திறனைக் காட்டி நாவல் எழுதுகிறவர்கள் மிக மிகக் குறைவாகப் போய்விட்டார்கள்... இந்தப் பதினைந்து ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் வெளிவந்த நாவல்களில் நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு தொடர் கதைகளாகவே வெளிவந்தவை. டாக்டர் மு. வ. போன்றவர்கள் இதற்கு விதிவிலக்கு. அவரைப்போன்ற மிகச் சிலரே நாவலைத் தனியே எழுதி முடிக்கிறார்கள்''[1] என்கிறார் திரு. கி. வா. ஜகந் நாதன்.

முன்னுரை :

மு. வ. தம் நூலுக்கு எவரிடமேனும் முன்னுரை வாங்குவதையோ இதழ்களில் மதிப்புரை பெறுவதையோ விரும்பினார் அல்லர். ஆனால், இதற்கு விதிவிலக்காக, திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் என்னும் நூலுக்குத் தமிழ்த் தென்றல் திரு. வி. க. வினிடம் அணிந்துரை பெற்றார். நூலுக்குத் தனிப்பெருமை தரும் நுணுக்கமான முன்னுரை. இன்னும் தம்பால் தமிழ் பயின்ற முதன்மை மாணவர் நால்வரிடம் தம் நாவல்கள் நான்கிற்கு அறிமுகவுரை பெற்றார். அல்லி, கரித்துண்டு, நெஞ்சில் ஒரு முள், அகல் விளக்கு என்பவற்றுக்கு முறையே திருவாளர்கள் ம. ரா. போ. குருசாமி, சி. வேங்கடசாமி, ரா. சீனிவாசன், ச. ரகுநாயகன் ஆகியோர் அறிமுக உரை எழுதியுள்

1. தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும், பக். 150.

ளனர். தம் ஆசிரியரும், தம் மாணவரும் முன்னுரை வழங்கத் தக்கார் என்னும் முன்னையோர் முறைவழியை மு. வ. போற்றினார் என்பது புலனும்.

முகப்புப்படம் :

தம் நூல்களுக்கு முகப்புப் படங்கள் வரைந்து அழகுபடுத்த மு. வ. விரும்புவதில்லை. நூலின் எளிமையை முகப்புப் படம் கெடுக்கக் கூடாது என்பதும் கருத்துக்கு முரண்பட்ட ஓவியம் இடம் பெற்றுவிடக்கூடாது என்பதும் அவர் தம் உள்ளக்கிடை. ஆதலால் படம் போட்டுக் கவர்ச்சி செய்ய அவர் விரும்பியது இல்லை.

"ஏன் அழகழகான பல வண்ண முகப்பு ஓவியங்களை நூலின் அட்டைக்கு நீங்கள் பயன்படுத்தக் கூடாது என்று ஒரு சமயம் அவரைக் கேட்டேன். அதற்கு அவர், ஓவியர்கள் பலரை அறிவேன். அதில் ஓவியர்கள் கவர்ச்சி என்ற பெயரால் பல வண்ணங்களில் பெண்மையை மதியாது வரைந்து கெடுத்து விடவும் செய்வார்கள். பிறகு நாம் மறுத்து, 'படம் வேண்டாம்' என்பதும் இயலாது. நூலில் இடம் பெறும் எளிமையை இலக்காகக் கொண்ட இலட்சியங்களுக்கு முரணாக - அட்டைகளே - முகப்புச் சித்திரங்களே - இருந்துவிடக் கூடாதல்லவா' என்றார்."[1]

படையல் :

ஒரு நூலைப் பிறருக்குக் காணிக்கையாக்குவதை மு. வ. விரும்புவதில்லை. "எனக்கு அதிலெல்லாம் நம்பிக்கையில்லை. பெர்னார்ட்ஷா கூட விரும்பியதில்லை. நாம் யாருக்குக் காணிக்கை ஆக்குகிறோமோ அவருக்கு நாம் இயற்றிய கவிதைகளில் - தரம் என்னவாக இருந்தாலும் அவற்றில் - சொல்லப்பட்ட அனுபவங்கள் விருப்பமானவையா என்று கருதாமல் காணிக்கையாக்குவது பொருந்தாது. அதுமட்டுமில்லை. ரோஜாவைப்

---

*1. என் ஆசான், திரு. மின்னூர் சீனிவாசன், மஞ்சரி 1974 டிசம்பர் பக். 58*

பற்றி ஒரு கவிதை என்றால் அது ஏற்கனவே ரோஜா மலருக்குக் காணிக்கையாக்கப்பட்டு விட்டது. மீண்டும் மனிதர் ஒருவருக்கு ஏன் மறு காணிக்கையாக்க வேண்டும்? அது எப்படிப் பொருந்தும்?''[1] என்று காணிக்கை படைக்க விரும்பாக் காரணத்தை விளக்குகிறார் மு. வ.

**நடை :**

கற்பாரைத் தம்பால் ஈர்த்துக்கொண்டு ஆழமாக எண்ணிப் பார்க்க வைப்பவர் மு. வ. அன்றியும் அவர் எழுதும் நடையாலும் வயப்படுத்தி அந்நடையே ஆட்சி புரியச் செய்தலிலும் திறம் வாய்ந்தவர். ''எல்லார்க்கும் புரியும் நடை எளிதாக அமையும் மொழி இயல்பு, தெளிவாக விளக்கும் திறம், சிறிய தொடர்களால் அரும் பொருள்களையும் புரியக்காட்டும் புலமை—இவ்வியல்புகளைக்கூட்டி எழுதுவோமானால் வரதராசனார் வழிக்கு ஒருநாள் வந்து சேரலாம்''[2] என்கிறார் திரு. ஔவை நடராசன்.

**கதை மாந்தர் :**

கதை மாந்தர் பெயர் சூட்டுதலில் தாம் கொண்டிருந்த நோக்கத்தை வெளிப்படுத்துகிறார் மு. வ. ''கதை மாந்தர்கள் என் உள்ளத்தில் பிறந்து வளர்கிறார்கள். அவர்களுக்குப் பெயர் வைக்கும் பொறுப்பு ஏற்படும்போது அவரவர்களின் பண்புகள் உள்ளத்தில் நின்று தூண்டுதல் புரிகின்றன. அதனால் அப்படிப் பெயர்கள் அமைந்து விடுதல் உண்டு. சில வேளைகளில் நான் வைத்த பெயர்களுக்கு மாறாக அவர்கள் வளர்ந்து விடுவதும் உண்டு. கதை எழுதி முடிக்கும் வரையிலும் அவர்கள் என் உள்ளத்தில் வளர்ந்துகொண்டே இருப்பதால் நான் எதிர்பார்ப்பதற்கு மாறாக அவ்வாறு மாறிவிடுவது உண்டு''[3]

---

1. *என் ஆசான், திரு. மின்னூர் சீனிவாசன், மஞ்சரி 1974 டிசம்பர் பக். 59.*

2. *பேராசிரியர் மு. வ.—அ. மு. ப. கருத்தரங்கக் கட்டுரைகள் பக். 39*

3. *திரு. தி. பாக்கியமுத்து, விடுதலைக்குப்பின் தமிழ் நாவல்கள் பக். 37*

பெயர் :

கதை மாந்தர்களுக்குப் பெரும்பாலும் தமிழ்ப் பெயரே சூட்டியுள்ளார் மு. வ. சிலர் இயல்புகளுக்கு ஏற்ப வேறு வகையாலும் சூட்டியுள்ளார். பெற்றோர்கள் தம் மக்களுக்கு நல்ல பெயர்களைச் சூட்டுவதற்கு மு. வ. வழிகாட்டுகிறார். 'அருளப்பர்' 'அல்லி' அழகன், அறவாழி, அறிவன், அன்பரசி, ஆராவமுது, ஆளவந்தார், இளங்கோ, இன்பவல்லி, கண்ணழகன், கயற்கண்ணி, கலைவல்லி, கற்பகம், கோதை, சிவக்கொழுந்து, சீராளர், சுடர்விழி, செங்கதிர், செந்தாமரை, செல்வம், செவ்வேள், தாமரை, தாயம்மா, திருவேங்கடம், திருமகள், திருமலை, திருவாய்மொழி, தேமொழி, நல்லய்யன், நறுமலர், நாகு, நிலா, நெடுமாறன், பச்சைமலை, பண்பு, பாவை, பூங்கொடி, பெருவளத்தான், பேராயிரம், பொய்யாமொழி, பொன்முடி, பொன்னி, மங்கை, மங்கை நல்லாள், மங்கையர்க்கரசி, மணி, மணிமேகலை, மணிவண்ணன், மரகதம், மருதப்பன், மலர்விழி, மல்லியம்மா, மழைக் கண்ணர், மாணிக்கவல்லி, மான்விழி, முத்தப்பன், முத்தய்யன், முத்தன், முருகையா, முனியம்மா, மெய்கண்டார், மெய்யப்பன், மென்மொழி, வடிவு, வடிவேலுவள்ளி, வாணி, வெண்ணிலா, வேலய்யன் முதலான பெயர்களை அவர் சூட்டியுள்ளமை நாவல் உலகில் புதுமையானதாம்.

மொழிநடை :

மு. வ. நாவலில் மற்றொரு தனிச்சிறப்பு உண்டு. கொச்சை நடையையும், கலப்பு நடையையும் கையாள்வது இல்லை. குழந்தை மொழிக்கும், குடிகாரன் மொழிக்கும் விதிவிலக்குத் தந்ததை அல்லாமல் வேறு எவருக்கும் பிழையிலா மொழி நடையையே கையாண்டுள்ளார். நடைக் கொச்சையையும், கலப்பையும் அள்ளித் தெளித்துக் கலைக்கோலம் போடுவதாகக் கூறும் கதை எழுத்தாளர்கள் மு. வ. வின் நடைக் கொள்கையைக் கருதிப் பார்த்தல் மொழிக்கு நன்மை செய்வதாம்.

மு. வ. வின் நாவல்களில் அமைந்துள்ள உத்தி, பாத்திரப் படைப்பு, நடை, கருத்தாழம்-ஆகியவற்றைப் பற்றியெல்லாம் தனித்தனியே ஆய்ந்து திறனாய்வு செய்துள்ளவர்கள் பலர்.

அவர்தம் மற்றை நூல்களையும் ஆய்ந்தோரும் உளர். அவற்றை யெல்லாம் நோக்குதல் மு. வ. வைப் புரிந்து கொள்வதற்கு உதவியாம்.

பரிசு :

மு. வ. வின் நூல்களில் திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், விடுதலையா, மொழிநூல் ஆகிய மூன்றும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசையும், கள்ளோ ? காவியமோ ?, அரசியல் அலைகள், ஓவச்செய்தி, மொழியியற் கட்டுரைகள் ஆகிய நான்கும் சென்னை அரசாங்கப் பரிசையும் பெற்றன. அகல் விளக்கு சாகித்திய அகாதெமியின் பரிசைப் பெற்றது.

1939 ஆம் ஆண்டில் பச்சையப்பர் கல்லூரிப் பணியேற்றுக் கொண்ட மு. வ. 1961 வரை அங்கே பணி செய்தார். அவர்தம் நாவல்களும் சரி, மற்றை நூல்களும் சரி; பெரும்பாலனவும் பச்சையப்பர் கல்லூரியில் பணி செய்த காலத்தில் வெளிப் பட்டனவே ஆகும். அப் பணியை விடுத்த பின்னே நாவல் எதுவும் வெளிவந்திலது. கடமையால் ஏற்றுக்கொண்ட சில நூல்களே வெளிப்பட்டன எனலாம். ஓய்வு ஒழிவு இல்லாமல் மற்றைப் பணிகள் அவரைச் சூழ்ந்து கொண்டமையே இதற்குக் காரண மாம்.

இனி இக் குறிப்பிட்ட காலத்தில் மு. வ. வின் தனி வாழ் விலும், குடும்ப வாழ்விலும் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பல. அவற்றை அறிதலும் இன்றியமையாததாம்.

இயற்றமிழ்ச் செல்வர் :

1957 ஆம் ஆண்டில் இந்திய விடுதலைப் போரின் நூற்றாண்டு விழா நாடெங்கும் நடைபெற்றது. அப்போதைய சென்னை அரசு இயல், இசை, நாடகம் என்னும் முத்துறைகளில் சீரிய பணி செய்தாரைத் தேர்ந்து பாராட்ட விரும்பியது. சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஏ. எல். முதலியார், உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி பி. வி. இராசமன்னார் முதலிய பெரு மக்களைக் கொண்ட ஒரு தேர்வுக் குழுவினை அமைத்தது. அக்

குழு இயற்றமிழுக்கு மு. வ. வையும், இசைத் தமிழுக்குக் கொடு முடிக் கோகிலம் திருவாட்டி கே. பி. சுந்தராம்பாள் அவர்களை யும், நாடகத் தமிழுக்குத் தமிழ் நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார் அவர்களையும் தேர்ந்தெடுத்தது. பரிசு வழங்கியும் பட்டயம் தீட்டித் தந்தும் அரசு பாராட்டியது.

**பாட்டியார் மறைவு :**

தாயினும் சாலப் பரிந்து வளர்த்த பாட்டியார் நரசம்மாள் 1944 ஆம் ஆண்டில் இயற்கை எய்தினர். மு. வ. வுக்கு அவர் மறைவு ஆருத்துயராக இருந்தது. அவர்க்குச் செய்யும் நீத்தார் வழிபாட்டினைத் தம்மோடு பணி செய்யும் பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் அவர்களைக் கொண்டு செய்தார். நீர்த் துறைக்கு ஒரு மூடை அரிசியும் சில்லறைக் காசும் கொண்டு சென்று ஆங்கு வந்த ஏழைகளுக்கு வழங்கினர்.

**புதுமனை :**

செனாய் நகர் செல்லம்மாள் தெருவில் மனையொன்று வாங் கினர். கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து கடன்பெற்றுத் தம் நேரடிப் பார்வையிலே வீட்டைக் கட்டினர். அவர் அப்பொழுது பெற்ற பயிற்சி பின்னாளில் அவர்தம் நண்பர்கள் வீடு கட்டு தற்கும், மதுரைப் பல்கலைக் கழகக் கட்டடம் கட்டுதற்கும் பேருதவியாக அமைந்தது.

புதுமனை புகுவிழாவிற்குக் குறிப்பிட்ட சில உறவினர்களையும் நண்பர்களையும் அழைத்தார். ஆயினும் கட்டடம் கட்டிய தொழி லாளர்களுக்கு இரண்டு வார ஊதியத்தை அன்பளிப்பாக வழங் கினர். வேட்டி, துண்டு முதலியன எடுத்துத் தந்து விருந்து படைத்து மகிழ்வித்தார். "வினையாளை வேலை முடிவில்" என்னும் நன்மொழியைப் பொன்மொழியெனப் போற்றி நடை முறையில் காட்டினர் மு.வ.

**அன்னையார் மறைவு :**

மு. வ. வின் அருமை அன்னையார் 15-10-65 இல் வேலத்தில் இயற்கை எய்தினர். 6-11-65 ஆம் நாள் மாலையில் நடப்பும்,

7-11-65 ஆம் நாள் வழிபாடும் நிகழ்த்தப் பெற்றன. நீத்தார் வழிபாட்டினைக் கழகப் புலவர் திரு. ப. இராமநாத பிள்ளை அவர்கள் நிகழ்த்தினர்.

**இந்தி எதிர்ப்பு:**

மு. வ. மொழிப் பற்றும் நாட்டுப் பற்றும் மிக்கவர். அதற்கு அப் பெயர்களால் அவர் வெளியிட்ட நூல்களே சீரிய சான்று பகரும். ஆயினும் 1965 ஆம் ஆண்டில் நிகழ்ந்த இந்தி எதிர்ப்புப் போரின்போது அவர்தம் தமிழ்ப் பற்று நன்கு புலனாயிற்று. 'சட்டம் திருத்தப் படுமா?' என்று அறை கூவல் விடுத்தார்.

மொழிப் பற்றுளர் சிலர் தமக்குத் தாமே நெருப்பு மூட்டிக் கொண்டு மடிந்தனர். பல இடங்களில் அரசு துப்பாக்கிக் குண்டுகளைப் பரிசாக வழங்கியது. இந் நிகழ்ச்சிகள் மு. வ. வைத் துயரத்தில் ஆழ்த்தின. துடிதுடிக்கச் செய்தன. ஆகலின், ''மாணவரும் மக்கள் பலரும் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலி யாகி மடிவதைத் தடுக்க முன் வந்து மடியும் உயிர்களைக் காக்க வேண்டும்'' என்று நடுவண் அரசுக்குத் தந்தி கொடுத்தார். மாநில அரசுத் தலைவர்களை நேரில் கண்டு நிலைமையை எடுத்துரைத்தார். 'சட்டம் திருத்தப் படுமா?' என வினா எழுப்பி, ''அச்சத்தைப் போக்க நல்லெண்ணத்தை வளர்க்க வழி ஒன்று தான். ஆட்சித்துறை, கல்வித்துறை, நீதிமன்றம், சட்டமன்றம் ஆகியவற்றில் ஆங்கிலத்தின் இடத்தில் தமிழ் வாழ, தமிழ் வளர, தமிழ் விளங்க உறுதி தருவார்களா? அடிமைத் தன்மையின் காரணமாக ஆங்கிலத்திற்காகக் குனிந்த தமிழ் இன்னும் நிமிர வில்லை. தமிழ் நிமிர்ந்து நிற்கும் வரையில் இந்தி விலகி நிற்குமா? அதற்கு ஏற்றபடி இந்திய அரசியல் சட்டம் திருத்தப் படுமா?'' என்று விளக்கி இதழ்களுக்கு அறிக்கை விட்டார்.

அப்பொழுது தில்லியில் அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும், திரு. ஒ. வி. அளகேசன் அவர்களும் தம் பதவி விலகல் செய்தனர். தலைமையமைச்சர் திரு. லால்பகதூர் சாத்திரியார், தமிழ் நாட்டு மக்களுக்கு, ''இந்தி கட்டாயமாகத் திணிக்கப்பட மாட்டாது. ஆங்கில மொழி

தொடர்ந்து தொடர்பு மொழியாக இருக்கும்'' என உறுதி கூறினர். பின்னர்ப் புயல் ஓய்ந்தது.

பட்டம் துறப்பு :

1967 ஆம் ஆண்டில் நடுவண் அரசு மு.வ. வுக்கு 'பத்மஸ்ரீ' (தாமரைச் செல்வம்) என்னும் பட்டம் வழங்கியது. ஆனால், இரண்டு ஆண்டுகளுக்கு முன் கட்டாய இந்தி நுழைவை எதிர்த்தோரைக் கொடுமைக்கு ஆளாக்கிய அரசு தரும் பட்டத்தை ஏற்க மு.வ. வின் தமிழ் நெஞ்சம் ஏற்கவில்லை. ஆதலால் அப்பட்டத்தை வேண்டாவெனத் துறந்தார்.

மாநாடுகள் :

பச்சையப்பர் கல்லூரிப் பேராசிரியராக மு.வ. இருந்த காலத்திலே கலந்துகொண்டு சிறப்புச் செய்த மாநாடுகள் எண்ணற்றன. அவற்றைத் தனித்தனி விரிப்பின் அளவிறந்து பல்குமாதலின் குறிப்பிடத்தக்க சிலவற்றை மட்டும் காண்போம்.

1940 ஆம் ஆண்டு சனவரி 19, 20 ஆம் நாள்களில் சென்னை, சிந்தாதிரிப் பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. தலைமையில் 'பத்துப்பாட்டு மாநாடு' நடைபெற்றது. அப்பொழுது அம் மாநாட்டில் கலந்துகொண்டு திருமுருகாற்றுப்படை குறித்து உரையாற்றினர். இருபத்தெட்டே வயதினராக இருந்த மு.வ. வின் சொல்லாற்றலும், ஆய்வுத் திறனும் ஆங்குக் குழுமியிருந்த அனைவர் உள்ளங்களையும் கொள்ளை கொண்டது. அதன் பின்னே, பல மாநாடுகள் மு.வ. வைப் போட்டியிட்டு அழைத்துச் சிறப்புப் பெற்றன.

பத்துப்பாட்டு மாநாட்டுக்குச் சென்ற பெருமக்களுள் கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களும் ஒருவர். அவருக்கு 'இவ் வரிய சொற்பொழிவு காற்றோடு காற்றாகப் போயொழிகின்றதே; இதனை நிலைபெறச் செய்யின் நாட்டுக்கும் மொழிக்கும் எத்துணைப் பயனும்?' என்னும் எண்ணம் எழுந்தது. அதனல் இலக்கிய மாநாடுகளுக்குத் திட்டம் வகுத்து,

சொற்பொழிவுகளை நூலுருவாக்கி வெளியிடத் துணிந்தார். அத் துணிவால் 1—3—1940இல் சென்னை, கோவிந்தப்ப நாயக்கர் பள்ளியில் 'கலித்தொகை மாநாட்டை'க் கழகம் நடத்தியது. விழாத்தலைமை நாவலர் ந.மு வேங்கடசாமி நாட்டார் அவர்கள் ஏற்றிருந்தனர். மு.வ. 'மருதக் கலி' குறித்து ஆய்வுரை நிகழ்த்தினார். அப் பொழிவு, 'கலித்தொகைச் சொற்பொழிவுகள்' என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.

கழகச்சார்பில் 9—2—1952, 10—2—1952 ஆகிய இரு நாள்களிலும் 'பத்துப் பாட்டு மாநாடு' நெல்லையில் நடைபெற்றது. மு. வ. அவ் விழாத் தலைமை ஏற்றுச் சிறப்புச் செய்தனர். அவர் ஆற்றிய உரை, 'பத்துப் பாட்டுச் சொற்பொழிவுகள்' என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.

**தமிழிசைத் தொண்டு :**

தமிழிசை வளர்ச்சிக்காகத் தனியொரு மன்றம் அமைத்துப் பெரும் பொருள் செலவிட்டுப் பண்ணாராய்ச்சி நடத்தவும், இசைத்தமிழ் நூல்கள் வெளியிடவும் செட்டி நாட்டரசர் பெரு முயற்சி செய்தார். அவர்தம் முயற்சியால் சென்னையில் தமிழிசைச் சங்கம் தோன்றியது. இராசா சர் அண்ணாமலை மன்றமும் எழுந்தது. 1943ஆம் ஆண்டு மேத் திங்களில் தொடங்கிய அதன் தொடக்கநாள் முதலே, மு. வ. அதன் வளர்ச்சியிலும், ஆய்விலும் மிகுந்த ஈடுபாடுகொண்டார். பண்ணாராய்ச்சி நிகழ்ச்சியில் தவறாது கலந்துகொள்வதை முதன்மையான கடமையாகக் கொண்டிருந்தார். 28—12—1955இல் நிகழ்ந்த பண் ஆராய்ச்சியின் ஆறாவது ஆண்டுக் கூட்டத்தை மு. வ. தொடங்கி வைத்து உரையாற்றினார். தமிழ்ப் பண்ணின் பழைமை இனிமை, கருநாடக இசை தமிழிசையில் இருந்து பிறந்த வகை ஆகியவற்றை விரித்துரைத்தார்.

**பண்ணாராய்ச்சி :**

ஒருமுறை காந்தாரம், பியந்தைக் காந்தாரம், கொல்லி, கொல்லிக் கௌவாணம் ஆகிய நான்கு பண்களைப் பற்றிய தருக்கம் எழுந்தது. ஓதுவார் சிலர் நான்கு பண்களையும் ஒரே

மாதிரியாகவே பாடிவருகின்றோம் என்றனர். மு.வ. அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. “நான்கு பண்களையும் ஒன்றாகவே பாடுகிறோம் என்று பதிவு செய்து கொள்வதில் எனக்குத் தடையில்லை. ஆனால், தேவார ஆசிரியர்கள் காலத்திலும் இவ்வாறுதான் பாடினார்கள் என்று கூறமட்டும் நான் ஒப்பமாட்டேன். அது ஆராய்ச்சிமுறைக்குப் பொருத்தமானதும் அன்று”[1] என்று தம் கருத்தினை எடுத்துரைத்தார்.

உலகத் தமிழ் மாநாடு :

1968ஆம் ஆண்டு சனவரித் திங்களில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பெருமுயற்சியால் இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றது. அம் மாநாட்டை ஒட்டித் தமிழ்ப் பேரறிஞர்களின் கருத்தரங்கு பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நிகழ்ந்தது. கருத்தரங்கின் வெற்றிக்கு மு.வ. முழு முயற்சியாகப் பாடுபட்டார். பன்னாட்டுப் பேரறிஞர்களும் கூடிய அக் கருத்தரங்கில், ‘திருப்பள்ளி எழுச்சி’ என்னும் தலைப்பில் மு. வ. ஆராய்ச்சிக் கட்டுரை படித்தார்.

விழாவை ஒட்டி, தமிழ் வளர்த்த சான்றோர் பலர்க்குச் சிலையெடுத்துச் சிறப்பிக்கும் நிகழ்ச்சியும் நடந்தது. அதன்படி புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் அவர்கள் சிலைத் திறப்புவிழா உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு மா. முத்துசாமி அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. மு.வ. புரட்சிக் கவிஞர் சிலையைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார்.

“எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு” என முழங்கிய புரட்சிக் கவிஞர் சிலையை, வெலிங்டன் மகளிர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிக்கு எதிரே ஆசிரியர்க்கு ஆசிரியராம் மு. வ. திறந்துவைக்க ஏற்பாடு செய்த தமிழக அரசின் தகுதி போற்றும் திறம் பெரிதாம். மு.வ. வின் தமிழ்வாழ்வின் தனிப்பரிசு இஃதெனல் சாலும்! இனி மு.வ. வின் பல்கலைக் கழகப் பேராசிரியப் பணி குறித்துக் காண்பாம்.

---

1. பண் ஆராய்ச்சியும் அதன் முடிவுகளின் தொகுப்பும், பக். 88.

**ஆ. பல்கலைக் கழகப் பேராசிரியர்**

சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராக விளங்கியவர் சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை அவர்கள் ஆவர். நெல்லைச் சீமையில் பிறந்த சேதுப்பிள்ளை அவர்கள் முதற்கண் வழக்கறிஞராகத் தம் தொழிலைத் தொடங்கினர். அவர்தம் தமிழ்ப் புலமையும் நாநலமும் அவரைத் தமிழ்த் துறைக்குத் தள்ளின. 1936 ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் ஆனார். ஆராய்ச்சித் துறைத் தலைவராகத் திகழ்ந்தார். 25 ஆண்டுகள் அன்னைத் தமிழுக்கு அரும்பணியாற்றி 1961ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் ஓய்வு பெற்றார்.

இருபத்தைந்தாண்டுகள் தொடர்ந்து தமிழ்ப்பணியாற்றிய சேதுப்பிள்ளை அவர்களுக்குச் சென்னைப் பல்கலைக் கழகம் வெள்ளிவிழாக் கொண்டாடியது. தென்றல் தவழும் தீந்தமிழ் நடையைத் திக்கெல்லாம் பரப்பிய பெருமகனாரின் சீர்த்தியெல்லாம் விளங்க வெள்ளிவிழா அமைந்தது.

டாக்டர் ஏ. எல். முதலியார் தலைமை தாங்கினார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திவான் பகதூர் தி. மு. நாராயணசாமிப்பிள்ளை அவர்களும், செட்டி நாட்டரசர் டாக்டர் இராசா சர். முத்தையா செட்டியார் அவர்களும் கலந்துகொண்டு உரையாற்றினர். பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்கள் 'ஆற்றங்கரையினிலே' என்னும் தலைப்பில் தொடர்ந்து கல்கி இதழில் எழுதி வந்த கட்டுரைகள் நூலாக்கப் பெற்று, தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி முதல்வர் பேராசிரியர் அ. சீனிவாசராகவன் அவர்களால் வெளியிடப் பெற்றது. அரிய கட்டுரைகள் அடங்கிய 'வெள்ளி விழா மலர்' ஒன்று டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிப்பட்டது. விழாச் செல்வரின் விழுமிய வரலாறு டாக்டர் ந. சஞ்சீவி அவர்களால் எழுதப்பெற்று விழாமலரில் இடம் பெற்றது. ஆனால், விழாவுக்குரிய பெருமகனார் விழா மேடையில் கலந்துகொண்டு இருந்தார் அல்லர். உடல் நலம் குன்றி மருத்துவமனையில் இருந்தார்.

அன்பர்கள் ஆர்வத்தால் எடுக்கப்பெற்ற அணிவிழாவின் இடையே சொல்லின் செல்வருக்குச் சொல்லொணு அல்லல் ஒன்று உள்ளுக்குள் இருந்தது. அது தம் உடல்நிலை பற்றிய தன்று; வேறெதுவும் பற்றியதும் அன்று; தம் உயிர்த் தமிழ்த் துறைக்கு உரியார் ஒருவரை அமர்த்தம் செய்தல் வேண்டும் என்பதேயாம்.

பல்கலைக்கழகப் பேராசிரியர் மு. வ. :

சொல்லின் செல்வர் உள்ளம் மு.வ. வை எண்ணியது. முதலும், முடிவும் ஆகிய முழு நினைவும் மு.வ. வின் மேலேயே பதிந்து நின்றது. தம் இடத்திற்கு மு. வ. வே வரவேண்டும் எனத் தாம் ஆரா விருப்புக் கொண்டிருப்பதனைத் தக்கார் வழியே மு. வ. வுக்கு அறிவித்தார். ஆனல், மு. வ. பல்கலைக் கழகப் பணியை விரும்பினர் அல்லர். ஆயினும் சேதுப்பிள்ளை அவர்கள் மு.வ. வை வலியுறுத்தினர். தம்மை மருத்துவமனையில் பார்க்க வந்த மு. வ. வின் இருகைகளையும் பற்றிக்கொண்டு தமக்குப் பின்னர்த் தாம் இருந்த இடத்தை அவரே அணிசெய்ய வேண்டும் என்று வலியுறுத்தினர். தமிழின் நலங்காப்பதோடு, தாம் ஏற்படுத்தியுள்ள அறக் கட்டளைகள் செவ்வையாக நடைபெறுவதற்கும் நற்றுணையாக அமையும் என்பதையும் வற்புறுத்தினர். சேதுப்பிள்ளை அவர்களின் செந்தமிழ்ப் பற்றும் அவர்தம் கலக்கமும் கண்ணீரும் மு. வ. வை உருக்கின. தாம் அப் பொறுப்பை ஏற்பதாக மு. வ. உறுதி கூறினர். விண்ணப்பம் அனுப்ப இசைந்தார்; தேர்ந்தெடுக்கவும் பெற்றுப் பணியமர்த்தமும் பெற்றுர். மருத்துவமனையில் இருந்த சொல்லின் செல்வர் மு.வ. பணியமர்த்தம் பெற்றதைக் கேள்விப்பட்டு மட்டற்ற மகிழ்வுற்றுர்.

1961ஆம் ஆண்டு சூலைத் திங்கள் முதல் நாள் டாக்டர் மு.வ. சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவரானுர். அப்பொழுது அவருக்கு 800 உரூபா சம்பளம் வழங்கப்பெற்றது.

ஆராய்ச்சித் துணை :

மு. வ. பச்சையப்பர் கல்லூரியில் பணிசெய்யும் போதே மேல்நிலைப் பட்டம் பெறுவார்க்குச் சீரிய வழிகாட்டியாகத்

திகழ்ந்தார். திரு. ரா. சீனிவாசன் அகநானூற்றை ஆய்ந்து 1962இல் எம். லிட் பட்டம் பெற்றார். திரு. சி. பாலசுப்பிரமணியன் குறுந்தொகையை ஆய்ந்து 1963இல் எம் லிட். பட்டம் பெற்றார். இவ்வாறாக, மு.வ. பல்கலைக் கழகப் பணியில் அமர்ந்தது மேலும் ஆராயும் மாணவர்களைப் பெருக்கிப் பட்டங்கள் பெறுவதற்கு ஊக்குதலும் உதவியுமாகத் திகழ்ந்தது.

மு. வ. சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1961 முதல் 1971 வரை பத்தாண்டுகள் பணிசெய்தார். இக்காலத்தில் மாணவர் பலர் டாக்டர் பட்ட ஆராய்ச்சி மேற் கொண்டனர். ஒவ்வொரு மாணவருக்கும் ஒவ்வொரு நாள் என்று வரன்முறைப் படுத்தி அவ்வந் நாள்களில் அந்த மாணவரை அழைத்து அவர்தம் ஆராய்ச்சியினை மேற்பார்வை செய்வார்; வழிகாட்டுவார்; மேலும் அவ் ஆராய்ச்சி தொடர்பாகக் கற்க வேண்டிய நூல்களைக் குறிப்பிடுவார். கட்டுரைகள் எழுதிக் கொண்டு வந்தால் அதனை ஆய்ந்து கருத்துக் கூறுவார். அதன் சிறப்புக்குரிய குறிப்புகளைப் பொறிப்பார். இவ் வகையால் தமிழ் ஆராய்ச்சித் துறை தனிப்பெருஞ் சிறப்பும் பொலிவும் உடையதாகத் திகழ்ந்தது.

பல்கலைக் கழகத்தில் மு.வ. பணி புரிந்த காலத்தில் அவரிடம் பயின்று சிறப்புற்ற மாணவர்கள் பெயர்களை அறிந்து கொண்டால் டாக்டர் மு.வ. தமிழ்த் துறையின் ஆக்கத்திற்குச் செய்துள்ள அரும்பணி வெளிப்படுதல் ஒருதலை; ஒற்றைத் திரிவிளக்கு ஓராயிரம் விளக்குகளை ஒளிவிடச் செய்யும் உண்மை விளங்கும்.

| ஆண்டு | பயின்றோர் | பட்டம் |
|---|---|---|
| 1962—63 | திரு. எம். இசரேல் | பி. எச். டி. |
| | ,, ஆர். கே. நாகு | |
| | ,, மின்னூர் சனவாசன | எம். லிட். |
| | ,, தி. முருகரத்தினம் | ,, |
| | செல்வி. வி. சி. சசிவல்லி | பி. எச். டி. |
| | திரு. வ. தெ. மாணிக்கம் | ,, |

| ஆண்டு | பயின்றோர் | பட்டம் |
|---|---|---|
| 1963—64 | திரு. இரா. தண்டாயுதம் | பி. எச். டி. |
| 1964—65 | செல்வி. வி. பி. தேவதத்தா | ,, |
| | திரு. டி. முத்துக்கண்ணப்பர் | ,, |
| 1965—66 | திருமதி இந்திரா சோமசுந்தரம் | எம். லிட். |
| 1966—67 | திரு. எஸ். தில்லைநாதன் | ,, |
| 1967—68 | ,, எஸ். மைக்கேல் இருதயம் | பி. எச். டி |
| 1969—70 | ,, டி. ஆர். ஜனார்த்தனம் | ,, |
| | ,, வி. ஆர். ஞானசிகாமணி | ,, |
| 1970—71 | ,, மா. செல்வராசன் | ,, |
| | ,, அ. நாகலிங்கம் | ,, |

அறக்கட்டளைப் பணி :

பல்கலைக் கழகப் பேராசிரியப் பெரும்பணியைச் சீருற ஆற்றிய மு. வ. சில அறக் கட்டளைப் பணிகளையும் ஏற்று நடாத்தும் கடப்பாடு உடையவராக இருந்தார். சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை தம் அன்னையார் சொர்ணம்பாள் பெயரால் நிறுவிய அறக்கட்டளை ஒன்று; சொல்லின் செல்வர் பெயரால் வெள்ளிவிழாக் குழுவினர் நிறுவிய அறக்கட்டளை மற்றொன்று; கல்கி திரு. இரா. கிருட்டிண மூர்த்தி அவர்கள் பெயரால் கல்கி நிறுவனத்தார் நிறுவிய அறக்கட்டளை இன்னொன்று; ஆக மூன்று அறக்கட்டளைகளுக்கும் தக்காரை அழைத்துத் தகுதி வாய்ந்த தலைப்பில் ஆராய்ச்சியுரை நிகழ்த்துவித்தல் மு. வ. வின் கடமையாயிற்று. அதனைச் சீருறச் செய்தார். அவ் வகையால் அரிய தலைப்புகளில் அறிஞர்களின் ஆய்வுக் கோவைகள் வெளிப்பட்டுத் தமிழ் வளம் கொழிப்பதாயின. "புலமிக் கவரைப் புலமை தெரிதல் புலமிக் கவர்க்கே புலனும்" என்பது மெய்ப்பட்டு விளங்கப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை தனிப்பெரும் பொலிவுடைய தாயிற்று. துணைவேந்தர்களின் தனிப்பெரு மதிப்பிற்கு உரியவராக மு. வ. வை அவர்தம் செயல் திறமும், பண்பு நலமும் உயர்த்தின.

பல்கலைக் கழகத் தூண் :

ஒருமுறை சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவில் (Syndicate) மு. வ வைப்பற்றிப் பேச்சு எழுந்தது. அப்பொழுது துணைவேந்தர் ஏ.எல். முதலியார் அவர்கள் "Dr. Varadarajan is one of the pillars of the University. I am watching his steady progress right from the year 1939 and others may not be knowing as I know him" என்று குறிப்பிட்டார். அதாவது, "டாக்டர் வரதராசன் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தூண். அவர்தம் ஒரு சீரான வளர்ச்சியினை 1939 ஆம் ஆண்டில் இருந்து பார்த்து வருகிறேன்; என்னைக் காட்டிலும் அவர் வளர்ச்சியை அறிந்தவர் எவரும் இருக்க இயலாது" என்பதாகும். மு. வ. அவர்களும், "என் வளர்ச்சிக்குக் காரணராய் அமைந்தவர் டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்களே ஆவர். பலமுறை நான்போய் நன்றி செலுத்திய ஒரே ஒருவர் அவரே. துணை வேந்தர் பதவியேற்குமுன் அவர் வாழ்த்துப் பெற்றுச் சென்றேன்; மதுரையில் நான் துணைவேந்தராய பின் ஒருமுறை நேரே வந்து வாழ்த்தினார். துணைவேந்தர் பதவியில் சில சிக்கல்கள் ஏற்பட்டபொழுது அவர் எனக்கு வழிகாட்டி உதவினார்" என்று நன்றி ததும்பக் குறிப்பிடுவார்.

திரு. ஏ. எல். முதலியார்க்குப் பின்னே வந்த துணை வேந்தர் தாமரைச் செல்வர் நெ. து. சுந்தரவடிவேலு ஆவர். அவரும் மு. வ. வின் மேல் தனியன்பும் மதிப்பும் வைத்திருந்தார். மு. வ. அவரைக் காண வருங்கால் எழுந்து நின்று கை கூப்பி வரவேற்று அமரச் செய்து அதன்பின்னரே அமர்வார். "தாங்கள் துணைவேந்தர்; நான் தங்களின் கீழ்ப் பணியாற்றும் பேராசிரியன்" என்று அடக்கத்துடன் மு. வ. கூறுவதுண்டு. அதற்கு மறுமொழியாகத் திரு. நெ. து. சு, "நீங்கள் என்னை விட ஆறு திங்கள் மூத்தவர்கள்; எனவே அந்த ஒரு காரணத்திற்காகக் கூட நான் எழுந்து நின்று தங்களை வரவேற்கலாம்" என்பார். இவ்வாறு தலைமைப் பொறுப்பில் இருப்பாரும் தகுதி தந்து போற்றும் தகவு உடையவராக மு. வ. விளங்கினார்.

மு. வ. பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்த பத்தாண்டுக் கால அளவில் வெளிவந்தவை மண்ணின் மதிப்பு,

இலக்கியக் காட்சிகள், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, Ilango adigal, குறள் காட்டும் காதலர் என்னும் நூல்களேயாம்.

மின்னல் :

இவற்றுள் 'மண்ணின் மதிப்பு'ப் பற்றி முன்னரே கண்டுள்ளோம். இலக்கியக் காட்சிகள் 1951 முதல் 60 வரை அவ்வப்போது எழுதப்பெற்ற கட்டுரைத் தொகுப்பு நூல் ஆகும். அதன் முதற்பதிப்பு 1962 ஆம் ஆண்டு வெளிவந்தது. இலக்கியக் காட்சி விளக்கம் மிக அரியது; கற்பார் உள்ளத்தைக் கவ்வும் வனப்பினது. அதிலே ஒரு மின்னல்!

''அடடா! என்ன மின்னல்! கண்ணே போய்விடும்போல் இருக்கிறதே'' என்றார் (எதிர்வீட்டு நண்பர்).

''கண் பூத்துப் போகும் என்பார்களே, அப்படிப்பட்ட மின்னல்!'' என்றேன்.

''அதுவேறு அய்யா. எந்த மின்னலைப் பார்த்தாலும் அப்படித்தான் இருக்கும். ஆனால் இது அப்படி இல்லையே. பார்க்காமல் கண்ணை மூடிக்கொண்டு மூலையில் உட்கார்ந்திருந்தாலும் முடியவில்லையே. நானும் பார்க்கிறேன். ஒருமணி நேரமாகக் கொஞ்ச நேரமும் விடாமல் இப்படி மின்னுகிறதே! ஒரே இருளாகக் கவிந்து கொண்டது. மணி எட்டு ஒன்பது இருந்தால் இருக்கலாம். என்ன இருட்டு! ஆனால், இருட்டை வெட்டி வெட்டிப் பிளப்பதுபோல இப்படி விடாமல் மின்னுகின்றதே! இடி வேறே ஓயவே இல்லை. குலை எல்லாம் நடுங்குகின்றது. திண்ணையில் உட்காரவும் முடியவில்லை. வீட்டுக்குள் இருந்தாலும் முடியவில்லை. சில வேளைகளில் பயமாகக்கூட இருக்கிறது. அப்படி இருக்கிறது, இந்த இடியும் மின்னலும் கலந்த கோடை மழை உன்னோடாவது சொல்லலாம் என்றுதான் வந்தேன்'' என்றார்.

''மலைப் பக்கம், அதனால் இடி இப்படி முழங்குவது வழக்கம் தானே'' என்றேன். சொல்லிக் கொண்டே இருக்கும்போது

வானம் அதிர்ந்து விழுவதுபோலக் 'கிடு கிடு கிடு' என இடி முழக்கம் மிகுந்தது.

''அட அட அட! என்ன இடி! இப்படிப் பட்டணத்தில் உண்டா?'' என்றார்.

''எப்போதோ சில நாட்களில் மட்டும்'' என்றேன்.

''இந்த இடி இருந்தாலும் இருக்கும்; இப்படி மின்னல் இருக்காதய்யா. நானும் இந்த மாதிரி மின்னலைப் பார்த்து நெடுங்காலம் ஆச்சு! இதோ பாரேன் வேண்டுமென்றே ஓயாமல் கண்ணை மூடி மூடித் திறப்பதுபோல் விட்டு விட்டு விநாடிக்கு ஒருமுறை மின்னுகிறதே'' என்றார்.

''கண்ணை மூடித் திறப்பது போல'' என்று சொன்னவுடனே 'இமைப்பது போல மின்னி' என்ற தொடர் என்னை அறியாமல் என் வாய்க்கு வந்தது. உடனே நண்பர் என்ன என்ன ? என்று அதை விளக்கும்படி கேட்டார். அதற்குப் பொருள் சொல்லாமலே இரண்டு மூன்றுமுறை திரும்பத் திரும்பச் சொன்னேன். 'பொருத்தம் பொருத்தம்' என்று தலையசைத்தார் நண்பர். பத்தொன்பது காட்சிகளைக் கொண்ட படைப்பு 'இலக்கியக் காட்சி' ஆகும்.

'குறள் காட்டும் காதலர்' 1955, 56ஆம் ஆண்டுகளில் எழுதப்பெற்று இதழில் உலாக் கொண்டவர் எனினும் நூலுருவில் அவர் வெளிப்பட்டது 1968 ஆம் ஆண்டிலேயே ஆகும். நோயும் மருந்தும் என்பது தொடங்கி, ஊடல் உரிமை ஈருகப் பதினெட்டுக் கட்டுரைகளைக் கொண்ட நூல் குறள் காட்டும் காதலர் ஆகும்.

'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' என்பது பிஎச்.டி. பட்டத்திற்கு மு. வ. எழுதித் தந்த ஆங்கிலநூலின் மொழிபெயர்ப்பு ஆகும். திரு. ம. ரா. போ. குருசாமி, திரு. சுப. அண்ணாமலை, திரு கதிர் மகாதேவன் ஆகியோரால் மொழி பெயர்க்கப்பெற்ற இந் நூல் 1964 இல் வெளிவந்தது. இதன் முற்பாதி 'கலைக்கதிர்' இதழில் தொடர்ந்து வெளிவந்ததாகும். இயற்கை

பெறும் இடம், பாடிய புலவர்கள், நிலம், வானம், பயிரினமும் உயிரினமும், உவமையில் இயற்கை, இயற்கையோடு இயைந்த வாழ்வு, முடிவுரை என்னும் எட்டுப் பகுதிகளில் 621 பக்கமாக வெளிவந்தது இந் நூல்.

"பழந்தமிழ்ச் சான்றோர்கள் நமக்கு அளித்த இலக்கியச் செல்வம் ஓர் அழகிய பூந்துணர் ஆகும். அவ் வினிய பூந்துணரில் தொடுக்கப்பட்ட மலர்கள் உருவத்தால் பல திறத்தன; நிறத்தால் பல வகையின; மணத்தால் பல நிலையின; சுவையால் பல அமைப்பின; மூன்றே வரிகளில் அமைந்து உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஐங்குறுநூற்றுப் பாட்டும் அங்கு உண்டு. எழுநூற்று எண்பத்து இரண்டு வரிகளைக் கொண்ட மதுரைக் காஞ்சியும் அங்கு உண்டு" எனத் தொடங்கும் பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, சங்கப் பாடல்களின் இயற்கைக் கருவூலக் காட்சி யகமேயாம். இந் நூலிலுள்ள, 'பயிரினமும் உயிரினமும்' என்னும் பகுதி தனி நூலாக வந்ததும் இவண் குறிப்பிடத்தக்கதாம்.

இளங்கோவடிகள் குறித்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத்தில் ஆற்றிய அறக்கட்டளைச் சொற்பொழிவே 'Ilango adigal' என்னும் நூலாகும். இஃது 1967ஆம் ஆண்டில் வெளிவந்தது. 'இளங்கோ அடிகள்' என்னும் தமிழ் நூல் 1959ஆம் ஆண்டிலே வெளிவந்ததையும், 'இளங்கோ' நாடகம் 1952ஆம் ஆண்டிலே வெளிவந்ததையும் முன்னரே அறிவோம்.

மு.வ. சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியப் பணிபுரிந்த கால எல்லையுள் நிகழ்ந்த சில சிறப்பான நிகழ்ச்சிகள் உண்டு. அவற்றுள் விரிவஞ்சி மூன்று நிகழ்ச்சிகளைக் குறிப்பிடலாம். அவற்றுள் ஒன்று அரசு திருமணம்; மற்றொன்று மு.வ. படத் திறப்பு; இன்னொன்று மு.வ. மருத்துவமனைத் திறப்பு.

அரசு திருமணம் :

மு.வ வின் முதன்மைந்தர் டாக்டர் அரசு—திருநாவுக்கரசு எம். பி. பி. எஸ். திருமணம் 7-5-62 ஆம் நாள் தியாகராய நகர், காமாட்சி திருமண மண்டபத்தில் நிகழ்ந்தது. மண

மகளார், ஆனந்தபோதினி திரு. நா. முனுசாமி முதலியாரின் மகள் வழிப் பேர்த்தியும், அரங்கநாத முதலியாரின் மகன் வழிப் பேர்த்தியும் சென்னை ரிசர்வ் பாங்கு திரு. மே. இராசாராம் முதலியாரின் மகளும் ஆகிய கலாநிதி என்பார்.

மு.வ. படத் திறப்பு :

பச்சையப்பரால் வளர்ந்து, தம்மை வளர்த்த பச்சையப்பருக்குத் தனிப் பெருமை தந்த மு.வ. வின் ஓவியத்தைப் பச்சையப்பர் கல்லூரியில் நிலைபெறுத்தக் கல்லூரி மேலாண்மைக் குழுவினரும் பேராசிரியர்களும் மாணவர்களும் விழைந்தனர். அவ் விழைவு பேரறிஞர் அண்ணா அவர்களை அழைத்து மு.வ. வின் படத்தினைத் திறந்து வைக்க ஏவியது. அறிஞரை அறிஞர் பாராட்டுவது தானே தகவெனக் கண்டது ஆர்வலர் உள்ளம். அறிஞர் அண்ணா அரசு கட்டிலில் இருந்த காலம்! "அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்'' என்பதைத் தம் வருகையால் மெய்ப்பித்தார் அண்ணா.

அண்ணா அவர்கள் உடல்நலம் இல்லாமல் இருந்தார். இருந்தும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் படத்தை கலைஞர் மு. கருணாநிதி அவர்களும் டாக்டர் மு. வ. படத்தை அறிஞர் அண்ணா அவர்களும் திறந்து வைக்க ஏற்றுக் கொண்டனர். ஏற்றுக் கொண்டு உரையாற்ற எண்ணிய பொழுதினும் மிகுதியாக உரையாற்றினார். "தமிழ் மொழியைப் பற்றியும் அந்த இரு பெரியார்களைப் பற்றியும் பேசத் தொடங்கியதாலே உடல் நிலையை மறந்து நான் பேசவேண்டு மென்று, கருதியதைவிடக் கொஞ்சம் நீண்ட நேரம் பேசிவிட்டேன்'' என்று பேச்சின் இடையே கூறினார்.

அறிஞர் பாராட்டு :

மு.வ. வின் எழுத்தாற்றலையும், பிறரைச் சிந்திக்கச் செய்யும் திறத்தையும் அறிஞர் பாராட்டினார்.

"சிலருடைய எழுத்துக்களையும் கருத்துக்களையும் ஏற்றுக் கொள்வார்கள் மிக ஆர்வத்தோடு; அதைப் போலவே சிலர் மறுப்பார்கள் மிக வேகத்தோடு; ஆனால் டாக்டர் மு.வ. அவர்

களுடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்கின்றவர்கள் மறுப்பவர்கள் என்று பிரித்துப் பார்க்க முடியாத வகையில் தமிழ்க் கருத்துக் கொண்ட அத்தனை பேரும் மிக இனிமையாகவும் எளிதாகவும் ஏற்றுக் கொள்ளத் தக்க முறையில் தம்முடைய கருத்துக்களைப் பக்குவப்படுத்தி, பதப்படுத்தி, பலருக்கும் நல்லவிதத்திலே புரியும்படியாகச் செய்து அளித்துக்கொண்டு வருகின்ற ஒரு பெரும் எழுத்தாளர்.

"சிலர் பேசுகின்ற பொழுதும்—எழுதுகின்ற பொழுதும்—சிந்திக்காமலே கூடப் பேசிவிடுவது உண்டு; பேசிவிட்டுப் பிறகு சிந்திப்பவர்களும் உண்டு, ஏன் இதைப் பேசினோம் என்று; சிலர் பேசிப் பிறரைச் சிந்திக்கச் செய்வது உண்டு; ஆனால் டாக்டர் மு.வ. அவர்கள் தம்முடைய எழுத்தின் மூலம்—பேச்சின் மூலம்—தாமும் சிந்திப்பார். அவருடைய பேச்சையும் எழுத்தையும் பெற்றவர்கள் தாமும் சிந்திக்கத் தொடங்குகின்ற வகையில் அந்தப் பேச்சுக்கும் எழுத்துக்கும் தனிச்சிறப்பு இருக்கின்றது.

"மு. வ. வின் எழுத்துக்களைக் கற்பவர்க்கு ஏற்படும் செயலாண்மையைச் சீருற விளக்கினார் அறிஞர் அண்ணா! "அவருடைய எழுத்திலே காணப்படுகின்ற கருத்துக்களைப் படித்துப் பார்க்கின்ற ஒவ்வொருவரும், படித்தவுடனே நியாயந்தானே என்று சொல்வர்; இவ்வளவு நியாயமான இந்தக் கருத்தை ஏன் மற்றவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை என்ற திகைப்பு அவர்க்கு ஒருகணம் வரும். அவ்வொரு கணம் வந்த திகைப்பு மறுகணம் மறைந்து இந்த உண்மையை மற்றவர்க்குச் சொன்னால் அல்லவா மற்றவர்கள் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்ற ஆர்வத்தைப் பெறுவர்''.

மு. வ. செய்திருக்கின்ற பெருந் தொண்டுகளை விரித்துக் கூறிய அறிஞர் அண்ணா, 'அவர்க்கு நாம் செய்யத்தக்க கடப்பாடு யாது' என்பதை நன்கு வலியுறுத்தினார்; "அவர் செய்திருக்கின்ற பெருந் தொண்டுக்கு நாம் காட்டக் கூடிய கைம்மாறு—அவருக்கு நாம் ஆற்றக்கூடிய நன்றிக்கடன்—திருவுருவப் படங்களைத் திறந்து வைப்பதன்று. அவர் பெயராலே மன்றங்களை

அமைப்பது மட்டுமன்று. அவர் எவ்வழியில் தமிழை வளர்த் தாரோ அவ் வழியிலே நின்று நாமும் நம்மாலான அளவுக்குத் தமிழை வளர்ப்போம் என்று உறுதி கொள்வதும் அந்தத் தமிழ் மொழி மூலமாகப் பெறத்தக்க கருத்துக்களை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில் அதனைப் புகுத்த வேண்டும் என் பதும் நாம் மேற்கொள்ள வேண்டிய உறுதியாகும்.''

நிகழ்காலத் தமிழ் வளர்ச்சியில் மு. வ. விற்குள்ள பங்கினை நினைந்து நெஞ்சாரப் பாராட்டினார் அண்ணா.

''நாங்கள் கல்லூரியிலே படித்த காலத்தில் இந்த அளவிற்குத் தமிழ் ஆர்வம் இருந்ததில்லை. இந்த அளவிற்குத் தமிழ் ஆர்வம் இருக்கவேண்டும் என்ற எண்ணங்கூடத் தோன்றியதில்லை. ஆனால் மிக வேகமாகக் கடந்த இருபது ஆண்டுகளில் இருநூறு ஆண்டுகள் பாடுபட்டால் மட்டுமே பெறக் கூடிய ஒரு பெரிய வளர்ச்சியைத் தமிழ் ஆர்வத்திற்கும் தமிழ் வளர்ச்சிக்கும் நாம் பெற்றிருக்கின்றோம். அதற்கு உறுதுணையாக இருந்தவர்களில் மிக முன்னணியில் வைத்துப் போற்றப் படத்தக்கவர்கள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர் களும் டாக்டர் மு. வ. அவர்களும்''.

முடிப்புரையாக மு. வ. வின் தோற்றத்திற்கும் எழுத்திற்கும் உள்ள இருவே றியல்புகளை நயமாக எடுத்துரைத்தார் நாவீ றுடைய நல்லறிஞர் அண்ணா.

''டாக்டர் மு. வ. அவர்களைப் பார்த்துவிட்டு அவர்களுடைய ஏடுகளைப் படித்தால், இந்த சாந்த புருஷரா இவ்வளவு புரட்சி கரமான கருத்துக்களை எழுதி இருக்கிறார்? உண்மை தானா? என்று எண்ணிப் பார்ப்பார்கள். அப்படித் தோற்றத்திலேயும் நடைமுறையிலேயும் தன்மையிலேயும் அமைதியே உருவாக இருந்துகொண்டு அந்த அமைதியைத் துணைக்கொண்டு, ஆர்வத்தை உடன் வைத்துக்கொண்டு தமிழ்மக்களுக்கு வழி காட்டியாகப் பல அரிய கருத்துக்களை அவர் தந்துள்ளார். அந்தப் பெரியாருடைய திருவுருவப் படம் இந்த இடத்திலே திறந்து வைக்கப்படுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடை கிறேன்.''

மு. வ. மருத்துவமனை :

டாக்டர் மு. வ. வின் மைந்தர்கள் திரு. அரசு, நம்பி, பாரி ஆகிய மூவரும் டாக்டர்கள். அவர்கள் தம் தவப்பெருந் தந்தையார் பெயரில் ஒரு மருத்துவமனை எழுப்பினர். சென்னை அமைந்தகரை 360, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள அந்த மருத்துவமனையின் திறப்பு விழா 3-6-71 ஆம் நாள் நிகழ்ந்தது. தமிழக அரசு பொதுநலத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அன்பழகன் எம். ஏ., அவர்கள் மருத்துவ மனையைத் திறந்து வைத்து வாழ்த்தினர். தமிழ் மக்களின் உளநோய் மருத்துவராகத் திகழ்ந்த டாக்டர் மு. வ. வின் பெயரால் உடல்நோய் மருத்துவமனை எழுப்பியது பொருத்தமான செயலாம்! ''உடம்பார் அழியின் உயிரார் அழிவர்; திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்'' என்பது திருமந்திரத் திரு மொழியன்றோ!

# 8. துணைவேந்தர்

படிப்படி வளர்ச்சி:

வேலத்தில் இருந்த மு. வ. வை அவர் கற்ற தமிழ் திருப்பத் தூர்க்கு ஈர்த்தது. திருப்பத்தூரில் பெற்ற வளமும் உற்ற பட்டமும் மு. வ. வைச் சென்னைப் பச்சையப்பர்க்கு ஆட்படுத் தியது. ஆங்கு அவர் வழிக் கிளர்ந்த அறிவுநலம் சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியக் கட்டிலை வழங்கியது. அறிஞர்க்கு அறிஞரை ஒரு துறையில் மட்டும் ஆட்சி நடாத்திக் கொண்டு இருக்க வைத்து நாட்டின் நல்வாழ்வைக் குறைத்துக் கொள்ள விரும்பவில்லை. ஆதலால் அவர்கள் ஆர்வமும் முயற்சியும் மு. வ. வை மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக உயர்த்தி அவர் தம் உயர்வால் தானும் உயர்ந்தது.

துணைவேந்தர்:

தமிழ்நாடு மேதகு ஆளுநரும், மதுரைப் பல்கலைக் கழக வேந்தருமாகிய சர்தார் உச்சல்சிங் அவர்கள் 11-1-1971 ஆம் நாள் மு. வ. அவர்களை மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்த ராக நியமனம் செய்து ஆணை பிறப்பித்தார். தமிழ்நாட்டின் பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்த பெருமக்களும் மிக விரும்பி வரவேற்றனர். தக்கதொன்றைச் செய்ததாகத் தமிழ் நெஞ் சங்கள் மகிழ்ந்தன. 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என் பதில் ஊறிய மு. வ. என்றும் போலவே அமைந்த மனத்தராய்ப் பணி மேற்கொண்டார்.

---

அன்பர்களும் நண்பர்களும் மு. வ. வை நேரில்வந்து பாராட்டித் தம் மகிழ்வைத் தெரிவித்துக் கொண்டனர். மு. வ. வும் குறிப்பிடத்தக்க பெரியவர்களைக் கண்டு வாழ்த்தினைப் பெற்றார். மதுரைக்குப் புறப்படும் நாளையும், வண்டியையும் வெளிப்படுத்தாமலே இருந்தார். அவற்றைப்பற்றி அன்புடன்

வினவியவர்க்கும் வெளிப்படுத்தாது மறைத்தே வைத்தார். துணைவேந்தராகிய மு. வ. வானூர்தியிலே புறப்பட்டாரா? மகிழ்வுந்திலேயாவது கிளம்பினாரா? வழக்கமாகப் புறப்படும் தொடர் வண்டியில் சென்றார். 31-1-71ஆம் நாள் எழும்பூரில் இருந்து பாண்டியன் விரைவு வண்டியில் புறப்பட்டார். மிக நெருங்கிய ஒரு சிலரே தொடர்வண்டி நிலையத்திற்கு வந்து வழியனுப்பிவைக்கும் வாய்ப்புப் பெற முடிந்தது. அத்தகு எளிமையும் ஆடம்பரம் அறியாததும் ஆகியது மு வ. உள்ளம்.

கட்டடக் கலைஞர்:

மதுரைப் பல்கலைக் கழகம் தளர்நடைப் பருவத்தில் இருந்தது. அதன் வளர்ச்சிக்குப் பல்வேறு அடிப்படைச் செயல்கள் செய்ய வேண்டியிருந்தன. அவற்றுள் தலையாயது பல்கலைக் கழகத்திற்கு ஏற்ற வளமான கட்டடங்கள். பழங்கால மன்னர்கள் இறைவனுக்குக் கற்றளி எடுத்து அழியா வாழ்வு பெற்றனர். காவிரியில் கல்லணை கட்டிக் கல்யாணைமேல் அமர்ந்த களிற்றியானை ஆனான் சோழன் கரிகாலன். கல்வெட்டுகளைப் பொறித்து அழியா வாழ்வு பெற்றனர் இடைக்கால வேந்தர்கள்! மாமல்லைக் கலைக்கோயில் எழுப்பிப் பல்லவர் குலம் பாடுபுகழ் பெற்றது. அவ் வண்ணமே மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு வளமான மாளிகைகளை எழுப்பி மாயாவுடம்பு பெற்றார் மு. வ. பல்கலைக் கழகக் கட்டடத்தின் ஒவ்வொரு கல்லும், மு. வ வின் வரலாறு கூறும்; ஒவ்வொரு புல்லும் மு. வ. வின் புகழ்பாடும். தமிழ்க் கலைஞர் கட்டடக் கலைஞராகவும் விளங்கும் சீர்மையை எடுத்துக் காட்டவே மு. வ. துணைவேந்தர் பொறுப்பைத் தாங்கினார் போலும்!

பதவிச் செருக்கு பலரை மயக்கும்; தலைகால் தெரியாமல் நடக்கவிடும்; இறுமாப்பை உண்டாக்கவும் செய்யும்; பழைமை நிலைமையை மறக்கச் செய்து தான்தோன்றித்தனத்தையும் ஊட்டும்! ஆனால் மு. வ. வின் நிலைமை என்ன? ''கல்விசேர் மாந்தரின் உள்ளம்போல் நெற்கதிர் தலை தாழ்ந்ததாகக்'' கூறினாரே சிந்தாமணியார், அந்நிலையில் ''ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்'' சான்றோராகத் திகழ்ந்தார் மு. வ. 'என்றும்

பணியுமாம் பெருமை'' என விளங்கினர். அவர் கொண்டிருந்த பண்பு நலங்களையும் பணிச் சிறப்பையும் இவண் சுட்டுதல் பயில் வார்க்குப் பெரும்பயன் நல்குவதாம்.

செயலாண்மை :

மு. வ. எப் பணி ஆயினும் விதிமுறைகளுக்கு இணங்கவே (As per the Rules and Regulations) நிறைவேற்றினர். தம் பணியுடன் தொடர்புடைய அனைவருக்கும் நெறி முறைகளைத் தம் எடுத்துக்காட்டால் கற்பித்தார். எச் செயலாயினும் சரி, அது முன் கூட்டியே திட்டமிடப் பெற்றுச் செவ்விதின் நிறை வேற்றப் படவேண்டும் என்பது மு. வ. வின் அடிநாள் தொட்டே வளர்ந்த இயல்பாகும். இன்று செய்ய வேண்டிய செயலை நாளைச் செய்யலாம் என்று தள்ளிப் போடுவதை விரும்பார். பிறரையும் அவ்வாறே கடமையில் ஊன்றி நிற்கும் வண்ணம் உறுதியாகப் பார்த்துக் கொண்டார். ஆதலால் பல்கலைக் கழக அமைப்பு முழுமையும் விரைந்து இயங்க வழியாயிற்று.

அமைந்த செயலாண்மை மு. வ. வின் உடைமையாகும். இன்முகத்துடன் எச் செயலிலும் ஈடுபடுவார். ஆயினும் அவர் தம் எண்ணங்களிலும் செயன்முறைகளிலும் ஒரு விறுவிறுப்பு அமைந்திருக்கும்.

மு. வ. வின் எழுத்து முத்துக் கோத்து வைத்தாற் போன்றது. அடித்தல் திருத்தல் அற்றது; இடைச் செருகலும் நீக்கலும் இல்லது. அதனைப்பற்றி முன்னரும் கண்டுள்ளோம். கதைகளும் கட்டுரைகளும் எழுதுவதில் கைவந்த அக் கலை அலுவலகக் குறிப்பு வகையிலும் அருமையாக அமைந்து விளங் கியது. ''கருத்துப் பிழைக்கோ எழுத்துப் பிழைக்கோ இடம் தாராதது அவர் தம் அலுவலகக் குறிப்புக்கள் (Official notes)'' என்று அவர் தம் செயலாண்மைக்குக் கீழே பணி செய்தவர்கள் கூறுவர்; வியந்து போற்றுவர். தம் அமைப்பின் கீழே பணி செய்பவர் அடித்தல் திருத்தல்களுடன் எழுதினல் அதனைச் செவ்விதாக எழுதும் வழி முறையைப் பொறுமையாகக் கூறு வார். எழுத்துத் திருத்தமாக இருக்கவேண்டிய இன்றியமை

யாமையை வலியுறுத்துவார். அவர்தம் கருத்துக்களைப் போற்றிச் செயலாற்றுவாரை நெஞ்சுவக்க-நா நயக்க-நன்கனம் பாராட்டுவார். தட்டிக் கொடுத்து வேலையில் சிறப்புக் காண்பது மு. வ. வுக்குக் கைவந்த கலை!

பேச்சுத்திறம் :

மு. வ. வின் ஆங்கில உரையாடல் ஆயினும் சரி, தமிழ் உரையாடல் ஆயினும் சரி கொச்சையற்றது. கூறியதையே கூறுமல் கொள்வார் உளங் கொளச் சுருங்க உரைப்பார்; விளக்க வேண்டிய பொருளாயின் எளிதில் புரிந்து கொள்ளுமாறு விளக்கமாகவும் உரைப்பார்; பேச்சில் உணர்ச்சி வயப்பட மாட்டார். ஆனல், அவர் உரை கேட்போரைக் கவரக்கூடியதாகவும், உணர்வுகளைத் தூண்டக் கூடியதாகவும் அமையும்.

பிறர்மனம் புண்படாமல் பேசுவார்; ஒளிவு மறைவு இல்லாமல் வெளிப்படையாகப் பேசுவார்; அவர் பேச்சில் உருக்கம் இருக்கும்; அதே பொழுதில் உறுதியும் இருக்கும். அவர் பேச்சில் பணிவு இருக்கும்; அதே பொழுதில் துணிவும் ஊடாடி நிற்கும்.

பிறரைப் பற்றிப் புறங்கூறுதலை அறவே கருதார். பிறர் கூறினும் தம் காதில் வாங்கிக் கொள்ளார்; மாருகச் சினங் கொண்டும் தடுத்து அறிவுறுத்துவார். நல்லவற்றைக் கூறுவதிலும் கேட்பதிலும் மகிழ்ச்சியடைவார். ''பிறர் மறையில் செவிடன்; புறங்கூற்றில் ஊமை'' என்னும் நல்லோர்மொழிக்குச் சான்ருக விளங்கினர்.

ஒழுங்குமுறை :

தம் அலுவலகத்தில் மேசையில் உள்ள பொருள்களை அந்தந்த இடத்திலேயே வைக்கப் பழகவேண்டும் என்று தமக்கு அணுக்கமானவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பார். தாமும் அவ்வாறே போற்றுவார். எங்கும் எப்பொருளும் இருக்க வேண்டிய நிலையில் இருப்பதையே விரும்பினர். அவ்வாறு இருந்தால் வேண்டும்போது தேடுதற்குப் பொழுது செலவிடாமல் தவறியும் போகாமல் தட்டின்றிப் பெற்றுக்கொள்ள முடியும்

என்பதை உணர்ந்து செயல்பட்டார். தம் குடும்ப வாழ்வில் கடைப்பிடித்த இவ்வொழுங்கு முறையே பல்கலைக் கழக வாழ்விலும் பரிமளித்தது.

ஒழுங்கும் ஒழுக்கமும் :

ஒழுங்கு இல்லாதவர் எவராயினும் கடமையில் கருத்து இல்லாதவர் எவராயினும் மு. வ. வின் நல்லெண்ணத்தைப் பெற மாட்டார். எவரிடம் மிகுந்த அன்பு கொண்டுள்ளாரோ அவரையே குற்றம் காணும்போது மிகுதியாகக் கண்டிப்பார். அக் கண்டிப்பிலேயே கனிவு ஒளிந்துள்ளதை உணருமாறும் அமைந்திருக்கும். திருந்தாத உள்ளம் உடையவர்க்குச் சரியான தண்டனை தருவார்; அஃது அவருக்கு எதுவும் சொல்லாது ஒதுங்கி விடுவதே !

அதிகார வரம்பு மீறாமை :

துணைவேந்தரை நாடினால் உதவி கிடைக்கும் என்னும் துணிவால் சென்னையில் இருந்தும், அவர் பிறந்து வளர்ந்த பகுதிகளில் இருந்தும் உறவினர்களும் நண்பர்களும் முயன்றதுண்டு. நேரில் வந்தும் அஞ்சல் எழுதியும் வேண்டிக் கொண்டது உண்டு. ஆனால், அவர்கள் வேண்டுதல் நிறைவேறுதற்காகத் தம் தனிப்பட்ட செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டது இல்லை. முறையான கோரிக்கைகளுக்கு மதுரைப் பல்கலைக் கழக நான்கு மாவட்ட எல்லைக்குள்ளேயே வாய்ப்பு இல்லாத போது வெளியே இருந்துவரும் வேண்டுதல்களை நிறைவேற்ற இயலாது என்று தம் வருத்தத்தை எடுத்துரைப்பார். முதுகலைப் பட்டப் படிப்புத் தொடர்பாகத் தாம் பதவிக்கு வரும்வரை நடைமுறையில் இல்லாத 25 விழுக்காடு முறையை துணைவேந்தர்க்கென அவர் ஏற்படுத்தியது ஏழை எளியவர்களின் முறையான கோரிக்கைகளுக்கு உதவவேண்டும் என்பதாலேயேயாம்.

விரைந்து செயலாற்றும் வினைநுட்பம் :

ஒரே நேரத்தில் பல அலுவல்களைச் செம்மையாகவும் திருத்தமாகவும் செய்வதில் தேர்ச்சி மிக்கவர் மு. வ. தம் அறை

யில் அலுவலகக் கூட்டம் நடத்திக் கொண்டிருக்கும் பொழுதில் கூட, தொலைபேசி அறை கூவல்களைக் கவனிப்பார்; கடிதங்களைப் பார்ப்பார்; அலுவலகக் கட்டுகளையும், கோப்புகளையும் பார்த்துக் குறிப்பெழுதுவார். ''குறிப்பிட்ட ஒரு பணிக்காக நாள் வழிமுறைப் பணிகள் தடைப்பட்டு விடக்கூடாது'' என்று விளக்கம் கூறுவார்.

அலுவலரிடையே எழும் போட்டி, பொறுமை, பூசல்கள் தம் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் செவ்வையாகச் செவி சாய்த்துக் கேட்பார். இரு சார்பிலும் உரிமையாக எடுத்துரைக்கும் வாய்ப்புத் தருவார். நல்ல நடுவராக முறை வழங்குவார். 'தவறு செய்தவர்களை உடனே தண்டிக்கவேண்டும்' என்னும் கருத்தை ஏற்றுக் கொள்ளார். ''குற்றவாளியைத் தண்டிப்பதினும் திருந்தி வாழச் செய்வதே வீட்டுக்கும் நாட்டுக்கும் நலம்'' என்பார். திருந்த வாய்ப்புத் தந்தும் திருந்தாதவர்களையே தண்டிக்க முனைவார்.

கடமை உணர்வு :

தம் குடும்பப் பணிக்கெனவோ, தம் பணிக்கெனவோ அவர் விடுமுறை எடுத்துக் கொண்டது இல்லை. பட்டமளிப்பு விழா அன்று நெஞ்சு வலிகண்டு அதன் பின்னர் மூன்று நாள்கள் மதுரையில் இருந்தபோதும், ஓய்வு எடுத்துக்கொள்ளாமல்—ஏன் - சென்னைக்கு வந்த பின்னரும் ஓய்வு எடுத்துக்கொள்ளாமல்—படுத்த படுக்கையில் இருந்துகொண்டே பல்கலைக் கழகக் கோப்புகளைப் பார்த்துக் குறிப்பு எழுதினார். தனிப்பட்ட ஒருவரால் பலருக்குத் தொல்லை நேர்வதைப் பொறுக்கமாட்டார். அதனால்தான் பட்ட மளிப்பு விழாத் தொடங்குவதற்கு நான்கு மணி நேரத்திற்கு முன்னே தமக்கு உண்டாகிய நெஞ்சு வலியைப் பிறர் அறியாவண்ணம் மறைத்து நிகழ்ச்சியைச் செவ்வையாக நிறைவேற்றினார்

மறைத்துப் போற்றியவை :

தாம் உற்ற நலிவை மறைத்துப் போற்றுவதை அல்லாமல் தம் பெருமையையும் மறைத்துப் போற்றினார். அமெரிக்கநாட்டு

'ஊஸ்டர்' கல்லூரியில் பெற்ற 'டி. லிட்.' பட்டத்தை, மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்குக் கூடத் தெரிவித்தார் அல்லர். அவர் பட்டம் பெற்றுக்கொண்டு மீண்ட பின்னரும் விளம்பரப் படுத்தினார் அல்லர். விரல்விட்டு எண்ணத் தக்க சிலரும் அப் பெருமையை அறியாவண்ணம் அடக்கத்தால் போற்றிக்காத்தார்.

ஏழை மாணவர்களும் அலுவலக ஊழியர்களும் மு. வ.வின் பொருளுதவியை நாடிப் பெற்றது உண்டு. தாமே முற்பட்டு உதவிய நிகழ்ச்சிகளும் உண்டு. ஆயினும் அவற்றைத் தம் நெஞ்சோடு நெஞ்சாக வைத்துக் காத்தார். 'தாங்கள் செய்த உதவி' என்று உதவி பெற்றோர் நன்றியுரைத்த போதும் 'செய்தேனா' என்று மறக்கும் நிலையும் பெற்றார்.

விருந்தோம்பல் :

அறிந்தவர் எவராயினும் அவரை மட்டுமல்லாமல் அவர் குடும்பத்திலுள்ள அனைவரையும் பெயர் சொல்லி நலம் வினவுவது மு. வ. வின் சிறந்த வழக்கம். வீடுதேடி வந்தவர்களை உண்பதற்கு ஏதாவது கொடுக்காமல் அனுப்புவது அவர் வழக்கம் அன்று. எவ்வுணவாயினும் தாமே எடுத்துப் பரிமாறி இன்புறுவார். வந்த விருந்தினர் எவ்வளவு தடுத்துரைத்தாலும் தாமே முந்து நின்று விருந்தோம்புவார். வந்தவர் மாணவர், பெரியவர் பெண்டிர் எவராயினும் மு. வ. வின் அன்பிற்குக் கட்டுப்பட்டு அமைந்துவிடுவர். அத்தகு தாய்மையுள்ளம் அவ்வுள்ளம்!

ஒல்லாதது மறுத்தல் :

"ஒல்லுவது ஒல்லும் என்றலும் ஒல்லாதது
இல்லெனை மறுத்தலும்"

நனி நாகரிகம் ஆகும். அந் நாகரிகம் போற்றியவர் மு. வ. தம் துறையில் நிறை புலமை உடைய மு. வ. வேறு துறைகளிலும் பயிற்சியுடையவராகவே விளங்கினார். ஆனால், தமிழ்த்துறை தொடர்பான நூல்களை அன்றிப் பிறதுறை நூல்களுக்கு எத் தகையவர்கள் வலியுறுத்தினாலும் முன்னுரை வழங்கினார் அல்லர்.

"அதில் எனக்குப் போதிய அறிவும் அனுபவமும் கிடையாது; என்னை விட்டு விடுங்கள்" என்று மறுத்து விடுவார். "கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்" என்னும் பழமொழிக் கருத்து, தமக்கு உடன்பாடு இல்லாமையைத் தெரிவிப்பார். தமிழ் நூல்களுக்கு முன்னுரை வழங்கும் போதும் தம் கருத்து வேற்றுமையினையும், நூலிற் காணப்படும் பிழைகளையும் விடாமல் சுட்டுவார். கருத்துப்பிழை மலிந்த நூலுக்கு முன்னுரை தர மறுத்து விடுவார்.

ஒரு பெருமிதம் :

எவரையும் மதித்துப் பழகுவார் மு. வ. தம்மை அறிமுகப் படுத்தும்போது தம் பெயரைச் சொல்லிப் பின்னர்த் 'தமிழாசிரியர்' என்று சொல்லி மகிழ்வார். தாம் துணைவேந்தர் பதவியில் இருந்துங்கூட, 'துணைவேந்தர்' என்று தம்மை அறிமுகப் படுத்திக் கொள்வது இல்லை. தம் நூல்களின் பதிப்புகளிலும், "மு. வரதராசன், தமிழ்ப் பேராசிரியர், சென்னை-30" என்றே குறிப்பிட்டார். "பதவி இன்று வரும்; நாளை போகும்; ஆனால் தமிழாசிரியர் என்பது என்றும் இருப்பது; அதனைச் சொல்லிக் கொள்வதில்தான் நான் மகிழ்ச்சியடைகிறேன்" என்று சொல்வார்.

கட்டடப் பணி :

பல்கலைக் கழகப் பணி ஏற்ற முதல் ஆண்டு முழுவதும் பல்கலைக் கழகக் கட்டடப் பணிக்கே செலவிட்டார். வெளியூர்களுக்குச் செல்வதையும் தகைந்தார். வெளிநாடுகளில் இருந்து வந்த அழைப்புகளையும் ஏற்க மறுத்தார். தாம் பணியேற்ற நாள் முதல் வாழ்நாள் அளவும் புதுப்புதுக் கட்டடங்களைக் கட்டி உளமகிழ்ந்தார். பிறர்க்குத் தாமே உடன்போய்க் கட்டடங்களையும், அதன் வளாகங்களையும் காட்டுவதிலே பேருவகை உற்றார். குழந்தையைக் கொஞ்சிக் கொஞ்சி ஊட்டி வளர்ப்பதுபோலப் பல்கலைக் கழகத்தை வளர்ப்பதிலும் பொலிவாக்குவதிலும் முழுமையாக ஈடுபட்டார். அதன் முதுகெலும்பு போன்றவை கட்டடங்கள் தாமே! தஞ்சைப் பெரிய கோயிலுக்கும் பெரு

மன்னன் இராச ராசனுக்கும் என்ன தொடர்பு உண்டோ, அன்ன தொடர்பு பேராசிரியர் மு. வ. வுக்கும் மதுரைப் பல்கலைக் கழகக் கட்டடங்களுக்கும் உண்டு என்பதைத் தெளிவுபெற நிலைநிறுத்தினார்.

இயற்கை ஈடுபாடு:

மு. வ. வுக்கு அமைந்த இயற்கை ஈடுபாடு நாம் முன்னரும் அறிந்ததேயாம். இயற்கையோடு இயைந்த வாழ்வுடைய அவர்க்கு, விரிந்து பரந்த பல்கலைக் கழகப் பரப்பு இன்ப மூட்டியது. அமணர் மலை ஒரு பாலும், நாகமலை ஒரு பாலும் அமைய நாகமலைச் சாரலிலே பீடுற எழுந்து நிற்கும் துணைவேந்தர் மாளிகையில் இருந்துகொண்டு மலைக்காட்சியிலே உள்ளம் தோய்வார். இளந்தென்றலிலே உள்ளம் பறிகொடுத்து உவப்புறுவார். புல்லூற்றின் அருமையையும், மலைக்காற்றின் மாண்பையும், பரந்த வெளியின் பாண்மையையும், கதிரோன் ஒளியின் கவினையும் கண்டு களிகூர்வார்.

"கதிரவன் மலைவாயில் வீழும் மாலை நேரம், விண் முழுதும் குடைவிரித்து விண் மீன்கள் மின்னும் இரவு நேரம், எந்நேரமாயினும் திறந்த வெளியில் அமர்ந்துகொண்டு நரிகள் ஊளையொலி தொலைவில் கேட்க அமைதியாக நீண்ட நேரம் பக்கத்தில் அமர்ந்திருப்பவர்களிடம் கூடப் பேசாது இயற்கையின்பத்தில் மூழ்கிக் கிடப்பார்."[1] இஃது இயற்கை ஈடுபாடு பற்றிய ஓவியம்.

பல்கலைக் கழகக் கட்டடங்களைச் சூழவும் இடை இடையேயும் மரம் செடி கொடிகளை நட்டு வளர்க்கும் திட்டத்தை நன்கு நிறைவேற்றினார். பல்கலை நகரின் ஒவ்வொரு தெருவிற்கும் அத் தெருவில் அமைந்துள்ள மரத்தின் பெயரால் வாகைச் சாலை, தென்னஞ் சாலை, வேப்பஞ்சாலை, கொய்யாச் சாலை, மாஞ் சாலை என்று பெயரிட்டமை அவர்தம் இயற்கை ஈடுபாட்டின் முதிர்வில் முகிழ்த்ததேயாகும்.

---

1. செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 49. பரல் ௩. திரு இரா. முத்துக் குமாரசாமி.

எளிமை போற்றல் :

எளிமையின் உறைவிடம் மு.வ. எனின் மிகை ஆகாது. இந் நாளில் குளிர்சாதன அறைகள் அமைப்பது எங்கும் எளிமையாகக் காணக் கூடிய ஒன்றேயாம். அலுவலகங்களிலும் அரங்கங்களிலும் அத்தகைய அமைப்புகள் பல்கியுள்ளன. ஆனால் பல்கலைக் கழகத் துணைவேந்தராகிய மு.வ. அத்தகைய அமைப்பைப் பலப்பலர் வற்புறுத்தியும் ஏற்றுக் கொண்டார் அல்லர். ஆனால், இடைவிடாத வற்புறுத்தலால் துணைவேந்தர் இல்லத்தில் ஒரே ஓர் அறையில் மட்டும் குளிர்சாதன வசதி செய்தற்கு இசைந்தார். அதற்கும் காரணம் உண்டு.

ஆண்டுதோறும் கோடை விடுமுறையில் பெங்களூர்க்குச் செல்வார்; குன்னூர்க்கும் போவார்; அவ்வாறு பழகியவர் கோடை வெயில் கொடுமையைத் தாங்க வேண்டுமே! கோடையிலும் இருந்து பல்கலைக் கழகப் பணியைப் பார்த்து ஆகவேண்டுமே! இந் நிலையால்தான் அன்பர் வலியுறுத்தலுக்கு ஆட்பட்டு ஏற்றுக் கொண்டார் மு.வ.

“காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல், மீக்கூறும் மன்னன் நிலம்” என்னும் பொது மறைக் கருத்து ஆட்சியுரிமையுடைய எவருக்கும் ஏற்கத் தக்கதே அல்லவா? அந் நிலையில் மு.வ. எவரும் தம்மை எளிதில் காணவும், தம் குறைகளைக் கூறவும் வாய்ப்பு அளித்தார். அதற்கென்றே குறித்த நேரமும் ஒதுக்கி வைத்தார். ஒருவர் கூறும் வேண்டுதல் அல்லது கோரிக்கை தக்கதெனத் தமக்குத் தோன்றினால் மீண்டும் நினைவூட்டல் இல்லாமலே நிறைவேற்றிவைத்தார். அத்தகைய குறிப்புகளை அவ்வப்போது எழுதிக் கொண்டதுடன் தம்மிடமே அக் குறிப்புக் கோப்பை வைத்துக் கொண்டு செயலாற்றினார். நினைவு மறதி என்பது அவருடைய ஆட்சி எல்லையில் காணாத ஒன்று ஆயிற்று.

சமயப் பொதுமை :

மு.வ. வின் சமயம், பொதுமையின்பாற்பட்டது. “இராமதீர்த்தரிடமும் தாயுமானவரிடமும் படிந்து, திருவள்ளுவரைப்

பயின்று, திரு. வி. க. விடம் பழகி, காந்தியடிகளின் வழியை நினையும் மு.வ. எத்துறையில் இறங்கினாலும் வேறு எப்படி இருக்க முடியும்?''[1] என்று வினா எழுப்புவது முழுமையான உண்மையாம். இதற்கொரு சீரிய சான்று பல்கலைக் கழகப் புதுமனை புகுவிழாவின்போது கிடைத்தது.

புதுமனை புகுவிழா மிக எளிமையாகக் கொண்டாடத் திட்டமிட்டார் மு.வ. எப்படி? அவரே ஒரு குத்துவிளக்கில் திரிகளை ஏற்றினார்; சுடரவிட்டார்; திருக்குறள் கடவுள் வாழ்த்து அதிகாரத்தைப் பாடினார்! விழாவைச் சுடரொளியுடனும், உலகப் பொது மறை வாழ்த்துடனும் முடித்தார்! எத்தகைய பொலிவு மிக்க—பொருள்மிக்க செய்தி. அம்மட்டோ? அலுவலர் அனைவருக்கும் தாம் எழுதிய திருக்குறள் தெளிவுரை நூற் படியைத் தம் அன்பளிப்பாக வழங்கினார். பொதுப் பொருளை எவ்வாறு போற்றிச் செலவிட வேண்டும் என்பதைச் சொல்லாமல் சொல்லிக்காட்டிய நிகழ்ச்சியன்றோ இது !

பெரும் பொறுப்பில் இருப்பவர்களைப் பற்றிப் பிறர் அறிந்துள்ள செய்திகளைப் பார்க்கிலும் அவர்களை நிழல்போல் தொடரும் அணுக்கர்களே மிகுதியும் அறிவர். நிறையும் குறையும் தெளிவாக அறிவர். அவ்வகையில் மு.வ. அவர்கள் பல்கலைக் கழகத் துணைவேந்தராகப் பணிபுரிந்த காலமெல்லாம் தனித் துணைவராக (P.A.) விளங்கிய திரு. ஆர். ஆர். சத்திய மூர்த்தி அவர்கள் குறிப்பிடும் கருத்துகள் அறிந்து மகிழத் தக்கனவாம்.

**அலுவலகத்தில் :**

"டாக்டர் மு. வ. அவர்கள் தம்மைப் பார்க்க வருவோர்கள், காலை 9 முதல் 10 மணி வரை இல்லத்திலும், மாலை 3 முதல் 4 மணிவரை அலுவலகத்திலும் பார்க்கலாம் என்ற அறிவிப்புப் பலகையைப் பொருத்தச் செய்து அதன்படி பேட்டி கொடுத்து வந்தார். பகல் உணவுக்குப் பிறகு கடிதங்கட்குப் பதில் எழுது

1. பேராசிரியர் ம. ரா. போ. குருசாமி, பேராசிரியர் மு.வ.-பேராசிரியர் அ. மு. ப. கருத்தரங்கக் கட்டுரைகள் பக். 32.

வார். தம்மைப்பார்க்க வருவோரின் குறை நிறைகளைக் குறித்து வைத்துக் கொண்டு அதற்குரிய ஆணைகளைப் பிறப்பித்துவிடு வார். மாலை, வீடு திரும்புமுன்னால் தம் பி.ஏ. (P. A.) வை அழைத்து அன்றைக்குச் செய்து முடித்த கடமைகளையும், செய் யாது விட்ட கடமைகளையும் எவை எனப் பிரித்துச் செய்யத் தவறிவிட்டவற்றை மறுநாள் செய்து முடிக்க வேண்டும் என்று நினைவுக் குறிப்பாக வரைய அவரைப் பணித்தருள்வார்.''

காலம் பொன்னனது :

''அவருடைய அலுவல் நேரம், காலை 11 மணி முதல் பிற் பகல் 1 மணி வரையிலும், மாலை 2-30 மணி முதல் 5 மணி வரைக் கும் என ஒதுக்கிக் கொண்டார். பகல் உணவை அலுவலக அறையிலேயே முடித்துக் கொள்வார். அலுவல் நேரத்திலும் உணவு அருந்தும் நேரத்திலும் காலம் தவறாமையைக் கடைப் பிடித்தார். பகல் 1 மணிக்கு உணவு. 1-30 முதல் 2-30 வரைக் கும் ஓய்வு. ஓய்வு என்றால் கண்ணயர்வது இல்லை. சிந்தனைக் குரிய நேரம் அதுதான். இரவுதோறும் அவர் தூங்கும் நேரம் 6 மணி அளவுதான். அலுவலக நேரத்தில் வீணே நேரத்தைக் கழிக்காமல் ஒவ்வொரு மணித்துளியும் பொன்னனது என்று உணர்ந்து செயலாற்றுவார். பகலுணவிற்குப் பிறகு கழிக்கும் ஓய்வு நேரத்தில்தான் பல செய்திகளைப் பற்றிச் சிந்தித்து மனத்தளவில் செய்து குறிப்புகளை வரைவார். தம்கீழ்ப் பணி யாற்றும் அதிகாரிகட்கு என்னென்ன குறிப்பாணைகள் பிறப் பிக்கப் படவேண்டுமோ அவையெல்லாம் அன்று மதியம் உடனே நடைபெறும்.''

பல்கலை நகருக்கு ஒரு தந்தை :

''அதிகாலையிலும் மாலையிலும் பல்கலை நகர் முழுவதும் சுற்றிவருவார். அவர் தம் திருவடிகள் படாத இடம் பல்கலை நகரில் இல்லை எனலாம். தம் கண்காணிப்பில் வளரும் கட்ட டங்களையும் செடிகளையும் கண்டு பூரிப்பு அடைவதுடன் அவற் றின் வளர்ச்சிகளைக் குறித்துச் சம்பந்தப்பட்டோரிடம் எடுத்துக் கூறி வேண்டியன செய்யப் பணிப்பார். முன் அனுமதியின்றி

யாரேனும் மலர்பறிப்பதைக் கண்டால் பொறுக்கமாட்டார். காரில் சென்று கொண்டிருந்தாலும் வண்டியை நிறுத்திக் குற்ற வாளியைக் கண்டிக்கத் தயங்கமாட்டார். அவர், நாடோறும் உலாவருவதால் பல்கலை நகரில் தங்கியிருக்கும் ஆசிரியப் பெரு மக்களிடத்தும், மாணவ மாணவியர்களிடத்தும், பணியாளர்களி டத்தும் அவருக்கென நன்மதிப்பு உண்டு. கூடவே பயமும் உண்டு எனலாம். துணைவேந்தருக்குத் தெரியாமல் அங்கு ஒன்றும் நடக்க முடியாது. சுருங்கச் சொன்னால் டாக்டர் மு. வ. அவர்கள் பல்கலை நகருக்கு ஒரு தந்தையாக விளங்கினார். அண் மையில் உள்ள கிராமமக்களும் அவர்மீது தனி மரியாதை - அன்பு-பக்தி-கொண்டிருந்தார்கள்.''

## எழுத்துத்துறைக்கும் ஓய்வு :

மு. வ. முழுமையாகப் பல்கலைக் கழக வளர்ச்சிப் பணிகளி லேயே கருத்துச் செலுத்தினார். மிக அரிதாகவே மாநாடு களிலும் மன்றங்களிலும் கலந்துகொண்டார். பல்கலைக் கழகம் தொடர்பான நிகழ்ச்சிகளிலேயே பெரும்பாலும் பங்கு கொண் டார். அதனால் அவர் உயிர்ப்பாகக் கொண்டிருந்த எழுத்துப் பணிக்குக்கூட ஓய்வு தந்து விட்டார். ''என்றும் எழுத்தாளராக இருப்பதையே விரும்புகிறேன்'' என்று வரம்புகட்டிக் கொண் டிருந்த அவருக்கும், அத் துறையையும் ''சற்றே விலகியிரு'' என்று ஒதுக்கிவைக்கும் நிலைமையே ஏற்பட்டது என்றால், பல்கலைக் கழகப் பணி, சுமையே என்பது வெளிப்படையாம்.

## தமிழ் இலக்கிய வரலாறு :

மு. வ. துணைவேந்தராகிய பின்னர் வெளிவந்த நூல்கள் இரண்டேயாம். அவற்றுள் ஒன்று ''தமிழ் இலக்கிய வரலாறு'' என்னும் நூலாகும்.

1956ஆம் ஆண்டில் கலைக் களஞ்சியம் ஐந்தாம் தொகுதி யில் 'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் தலைப்பில் நீண்டதொரு கட்டுரை எழுதினார். அதன் விரிவாக ஒரு நூல் எழுத எண்ணி னார். ஆனால், அவர்தம் மாணவர் சிலர் இலக்கிய வரலாறு படைத்துள்ளதைக் கண்டார். தாம் அப் பணி மேற்கொள்ள

வேண்டா என அமைந்தார். ஆனால் தில்லி சாகித்திய அகா தெமியினர் தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதும் பணியை மு.வ. விடம் ஒப்படைத்து விட்டனர். ஆதலால் வேறு வழியின்றி அப் பணியை ஏற்றுக் கொண்டார். அந் நூல் 1972 ஆம் ஆண்டு வெளிவந்தது.

தமிழ் இலக்கிய வரலாற்றை ''மதிப்பதற்கரிய காணிக்கை'' என்று திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் குறிப்பிடுவது நூல் நிலையைத் தெளிவாக விளக்குகிறது. சாகித்திய அகாதெமியின் திட்டப்படி இந் நூல் மற்ற இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்படும் நிலை பெற்றது. ஆதலால் மற்றை மொழியினர் தத்தம் தாய்மொழி வழியே தமிழ்மொழியின் சிறப்பினை அறிந்து கொள்வதற்கு வாய்ப்பு உண்டாயிற்று.

தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், சங்க இலக்கியம், நீதி நூற் காலம், இரட்டைக் காப்பியங்கள், பக்திப் பாடல்கள், பலவகை நூல்கள், காப்பியங்கள், சமய நூல்கள், சதகம் முதலியன, பத்தொன்பதாம் நூற்றாண்டு, இஸ்லாமிய இலக்கியம், கிறிஸ்தவ இலக்கியம், வெளிநாட்டுத் தமிழ் இலக்கியம், நாடக இலக்கியம், கதை இலக்கியம், கட்டுரை, இக் காலப் பாட்டிலக்கியம் என்னும் பதினெட்டுத் தலைப்புகளில் 376 பக்க அளவில் தமிழ் இலக்கிய வரலாறு நடையிடுகின்றது.

நல்வாழ்வு :

''பழைமை புதுமை இவற்றிடையே என்றும் பயன்தாவல்ல அடிப்படை நெறிகள் சில உள்ளன. அவற்றைப் போற்றினால் வாழ்வில் அமைதியும் இன்பமும் வாய்ப்பதை ஒவ்வொருவரும் உணரலாம்'' என்பதை அறிவுறுத்தும் நோக்கில் எழுந்த நூல் நல்வாழ்வாகும். மு. வ. வின் நல்வாழ்வால் தமிழகம் பெற்ற இறுதி நூல் நல்வாழ்வு என்பதாகும்.

வழிபாடு, நம்பிக்கை, உடம்பைப் போற்றல், எளிமை ஓர் அறம், உரிமையும் கடமையும், புலனடக்கம், மனவலிமை வேண்டும், பண்பாடு, பொதுமை அறம், நீந்துக என்னும் பத்துக் கட்டுரைகளைக் கொண்டது நல்வாழ்வு என்னும் நூலாகும்.

''குறுகி நிற்பது மனத்தின் இயற்கை அன்று; பரந்த நோக்கம் கொண்டு உயர்வதே மனத்தின் இயற்கை. அந்த இயற்கைத் தன்மையை உணர்ந்து வாழ்வது நீந்தக் கற்றுக் கொண்டு குளத்திலும் ஆற்றிலும் நீந்திச் செல்வது போன்றது. குடும்பத்திலும் உலகத்திலும் அவ்வாறு நீந்தி வாழவேண்டும். இல்லையேல் நீந்த அறியாமல் திக்குமுக்காடிச் சாகும் நிலையே வாழ்க்கையிலும் நேர்கிறது. நீந்துவோர்க்கும் நீந்த அறியாத வர்களுக்கும் கைகால்கள் ஒரே வகையாக அமைந்துள்ளன; மூச்சுப் பைகளும் மூளை முதலியவைகளும் ஒரே வகையாக அமைந்துள்ளன. வேறுபாடு என்ன? சில இயற்கை விதிகளை உணர்ந்து உடம்பும் மூளையும் நீரில் ஒத்துழைப்பதால் நீந்தக் கற்றவர் நீரில் மகிழ்ச்சி காண்கிறார்கள். அந்த இயற்கை விதி களின்படி உடம்பும் மூளையும் நீரில் ஒத்து இயங்காமையால் நீந்த அறியாதவர் நீரில் திக்கு முக்காடி மூழ்குகிறார்கள். வாழ்க்கையில் உள்ள இயற்கை விதி, மனம் பரந்து உயர்ந்து நிற்பதே ஆகும். அதை உணர்ந்து வாழ இயலாமையால் பலர் குறுகித் தாழ்ந்து துன்புறுகிறார்கள். நெறி தெளிந்து மனத்தை உயர்த்த வல்ல வர்கள் பிறவிக்கடல் நீந்துவோராய் வாழ்ந்து அமைதியும் இன்பமும் காண்கிறார்கள். அவர்களின் வாழ்வே மற்றவர்கள் பின்பற்றத் தக்க நல்வாழ்வு ஆகும்'' என்று முடிக்கும் மு. வ. வின் வாழ்வு பின்பற்றத்தக்க நல்வாழ்வு என்பதைத் தமிழ் உலகே நன்கு அறிந்து கொண்டுள்ளது அல்லவா!

---

# 9. வெளிநாட்டுச் செலவுகள்

வெளிநாட்டுச் செலவுகள் அறிவை வளர்க்கும்; அனுபவத்தைப் பெருக்கும். தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் எழுதிய 'இலங்கைச் செலவு' என்னும் நீண்டதொரு கட்டுரை, வெளிநாட்டுச் செலவின் பண்பையும் பயனையும் ஒருங்கே விளக்கும். இலக்கியச் சுவை கெழுமிய சிறந்த கட்டுரையாக இலங்கைச் செலவு அமைந்துள்ளது. அதனைக் கற்போர் இலங்கைக்குச் சென்றுவர வேண்டும் என்னும் ஆர்வத்தால் உந்தப்படுதல் உறுதி. எனவே மு. வ. தம் இளமைக் காலத்தே இலங்கைச் செலவைக் கற்று அதனைக் காணும் ஆர்வத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தார். கோவை கிழார் திரு. சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் எழுதிய "கடலின்கண் முத்து" என்னும் கட்டுரை இலங்கைச் செலவின் ஆர்வத்தை மேலும் பெருக்கியது. ஆகலின் 1950 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் இலங்கைச் செலவு மேற்கொண்டார். 'யான்கண்ட இலங்கை' என்னும் நூலைப் பற்றிய குறிப்பில் சிலசெய்திகளை முன்னரே அறிந்துள்ளோம்.

மு. வ. வுடன் வாலாசாபாத் அப்பா திரு. மாசிலாமணி முதலியாரும், பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் அவர்களும் குடும்பத்துடன் சென்றிருந்தனர். கொழும்பு மேட்டுத்தெரு விவேகானந்த சபையில் தங்கியிருந்தனர். இலங்கைத் தமிழர்கள் வாழும் வெள்ளவத்தை, கண்டி, திருக்கோணமலை, கொழும்பு, யாழ்ப்பாணம் முதலிய இடங்களைக் கண்டனர். இக் காட்சிகளும் அனுபவங்களும் 'யான்கண்ட இலங்கை' என்னும் நூலில் இடம் பெற்றுள்ளன. நாமே இலங்கைக்கு நேரில் சென்று கண்டாற் போன்ற சுவையை நூல் வழங்குகின்றது.

**யாழ்ப்பாணத் தமிழர் :**

"யாழ்ப்பாணத்தில் மக்களின்—தமிழ் மக்களின்—அறிவு வளத்தைக் காணலாம்; அன்புப் பெருக்கைக் காணலாம்;

முயற்சிச் சிறப்பைக் காணலாம்; ஒழுக்கச் செல்வத்தைக் காண லாம்''—பக். 111.

''தமிழ் மணமும் சைவ மணமும் யாழ்ப்பாணம் முழுதுமே கமழ்கின்றன''—பக். 112.

''முயற்சித் திறனும் அறிவு வளமும் அவர்களுக்குத் தொன்று தொட்டுவந்த செல்வங்கள். இயற்கைவளம் குறைந்த புன்செய் நிலங்களும் மணல் திடல்களும் சூழ்ந்த நிலப்பகுதியில் வாழ்க்கையை நடத்த வேண்டியிருப்பதால் முயற்சியும் முற் போக்கும் அவர்களுக்கு இயல்பாக அமைந்திருக்கின்றன. இலங்கையின் மூளையே யாழ்ப்பாணத் தமிழர் என்று கூறத்தக்க நிலைமையை எங்கும் கண்டு மகிழலாம்''—பக். 115.

நாடுகாணச் சென்ற இடத்திலும் இயற்கையிலும் செயற் கையிலும் பழக்க வழக்கங்களிலும் மட்டும் தோய்ந்து விடாமல் தமிழ் இனத்தின் நல்வாழ்வில் நாட்டம் செலுத்தி ஆராய்கிறார் மு. வ. அவர்தம் தமிழ்மொழி, தமிழ்நாடு, தமிழர் இனப்பற்று அத்தகையன.

உருசியப் பயணம் :

1962 ஆம் ஆண்டில் இந்திய அரசின் சார்பில் உருசிய நாட்டில் ஏற்பட்டுவரும் மாறுதல்கள், எழுத்தாளர் நிலை ஆகிய வற்றை ஆராய்வதற்குச் சென்றார். மூவர் சென்ற அக் குழுவில் தமிழகத்தின் சார்பில் மு. வ. சென்றார். ஆனால் குடும்பத்த வரும், நெருங்கிய நண்பர் சிலருமே மு. வ. உருசியநாடு செல் வதை அறிந்தனர். ஒலி உண்டாகாமல் புறப்பட்டு அவ் வண்ணமே திரும்புவது மு. வ. வின் இயற்கை.

மு. வ. உருசிய நாட்டில் கண்டறிந்த செய்திகள் பலப்பல. அவற்றுள் சில :

''முதலாவது உருசியர்கள் நல்ல உழைப்பாளிகள்; ஆண் பெண் இருவரும் அலுவலகங்கள் சென்று பணியாற்றுகிறார்கள்; கடுமையாக உழைக்கிறார்கள்; நூறு வயது நிரம்பிய ஒருவரும் தாம் வேலையில் இருந்து ஓய்வு பெற மறுக்கிறார். பெண்கள்

வேலைக்குச் சென்றால் அவர்கள் பெற்ற குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளப் பள்ளிகள் உள. குழந்தைகளைப் பராமரித்துப் படிப்பும் சொல்லித்தரும் நிலையங்கள் அங்கு உண்டு. சில பள்ளிகளில் மதிய நேரத்தில் பார்த்தால் வரிசையாக அமைந்துள்ள தொட்டில்களில் குழந்தைகள் அழகாகக் கண்ணுறக்கம் கொள்வதைக் காணலாம். அரசியலில் பெரும் பங்கு கொண்டவர் மனைவியும் எளிய வேலையை மேற்கொண்டு இருப்பதைக் காணலாம்.

''அங்குத் தக்காளியும், உருளைக்கிழங்கும், பாலும், வெண்ணெயும் நிறையக் கிடைக்கின்றன. சைவ உணவுப் பழக்கம் உள்ளவர்கள் அந்நாட்டில் பயணம் செய்யும்பொழுது புலால் உணவு கொள்ள வேண்டிய தேவை இல்லை. அரசாங்கம் மக்கள் உண்ணும் ரொட்டியை இலவசமாகவே வழங்குகின்றது. தேநீருக்கு மட்டுமே காசு தரவேண்டும். குறிப்பிட்ட அளவுக்கு மேல் சேர்த்துள்ள பணத்திற்கு அங்கு மதிப்பில்லை. அந்தப் பணம் பயன்படுவதும் இல்லை. ஆடம்பரத்திலும் கேளிக்கைகளிலும் அப் பணம் செலவிடப்பட அரசு அனுமதிப்பது இல்லை.''

''எழுத்தாளர்களுக்கென ஒரு பெரிய மாளிகை கடலுக்கு எதிரில் கட்டப்பட்டுள்ளது. அங்கு வார இறுதி விடுமுறையில் சென்று அமைதியாக இருந்து தம் எழுத்துகளைப் படைக்கலாம். எழுத்தாளர் தங்கித் தம் படைப்பில் ஈடுபடுவதற்கென்று சிறந்த வாய்ப்புகள் அம்மாளிகையில் செய்து தரப்பட்டுள்ளன.''

மலேசியப் பயணம்:

டாக்டர் தனிநாயகம் அடிகளார் முயற்சியால் 1966ஆம் ஆண்டில் மலேசியாவில் முதலாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூர். அவ்வூரிலே மாநாடு நடைபெற்றது. சென்னை அரசின் முதல்வர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் அறிஞர் பலர் அம் மாநாட்டுக்குச் சென்றனர். மு.வ. மாநாட்டில் கலந்து

கொண்டு ஆங்கிலத்தில் ஓர் ஆய்வுக் கட்டுரை படித்தார். மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் விரிவாகப் பயணம் செய்தார். பல்வேறு இடங்களில் சொற்பொழிவாற்றினர்.

பாரிசுப் பயணம் :

1970ஆம் ஆண்டில் பாரிசு மாநகரில் மூன்ருவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. அம் மாநாட்டிற்குச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் மு.வ. சென்ருர். "The apostrophes in Tamil" என்னும் தலைப்பில் கட்டுரை படித்தார். அங்கிருந்து இலண்டன் மாநகருக்குச் சென்று திரும்பினர்.

அமெரிக்கப் பயணம் :

1972ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் மு.வ. அமெரிக்காவுக்குச் சென்ருர். துணைவேந்தர் பொறுப்பு ஏற்ற ஓராண்டின் பின்னர்ச் சென்ற செலவு இதுவாகும். இச் செலவின்போது அமெரிக்க நாட்டுப் பல்கலைக்கழகங்கள் பலவற்றைப் பார்வையிட்டார். பல்கலைக் கழகப் பணிமுறைகள், கல்வித் திட்டங்கள், மாணவர் மனப்பான்மை முதலியவற்றை ஆராய்ந்தார். சான் பிரான்சிஸ்கோ, சிகாகோ முதலிய இடங்களுக்குச் சென்ருர். அமெரிக்க நாட்டு ஊஸ்டர் கல்லூரி (College of wooster) டாக்டர் மு.வ. அவர்களுக்கு 'டி. லிட்' பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. 'திறமான புலமையெனில் வெளிநாடும் போற்றும்' என்பதை மெய்ப்பித்தது.

ஊஸ்டர் கல்லூரி வழங்கிய பட்டம் வருமாறு :

The Diploma makes known that

The College of Wooster in recognition of Distinguished Attainment has conferred upon

M. VARADARAJAN

The Degree of Doctor of Letters

and that he is entitled to all the honors, rights and privileges to that Degree appertaining.

Given in the City of Wooster, in the State of Ohio, United States of America, This nineteenth day of April, in the year of our Lord, One thousand nine hundred and seventy two.

In witness whereof the seal of the College and the signature of the President and the Dean are herewith affixed.

President Dean

அமெரிக்காவில் இருந்து திரும்பும் வழியில் சப்பான் நாட்டிற்குச் சென்று 'டோக்கியோ' பல்கலைக் கழகத்தினைப் பார்வையிட்டார். சப்பான் நாட்டு மக்களின் அயரா உழைப்பினைக் கண்டு வியந்தார். இரண்டாம் உலகப் போரில் பேரழிவிற்குள்ளான சப்பான் நாடு, அமெரிக்கநாட்டோடு தொழில் துறையிலும், வாணிகத் துறையிலும் போட்டி போட்டு விரைந்து முன்னேறி வருவதைக் கண்டார்.

எடின்பர்க்குப் பயணம் :

1973ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் காமன்வெல்த் நாடுகளின் பல்கலைக்கழக மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மு.வ. எடின்பர்க்கு சென்றார். ஆங்கு நடைபெற்ற ஆய்வில் கலந்து கொண்டு சிறப்புச் செய்தார். சீரிய கருத்துகளைத் தேர்ந்து சிந்தையில் தேக்கிக்கொண்டு பயன்படுத்த விழைவது மு. வ. வின் கடைப்பிடியாகும். அதற்கு இம் மாநாடும் விருந்தாக அமைந்தது.

இந்திய நாட்டுச் செலவு :

இந்திய நாட்டினுள் நடைபெற்ற பல்வேறு பல்கலைக் கழகக் கருத்தரங்குகளிலும் மு. வ. கலந்து கொண்டார். அவற்றுள் டெல்லி, ஆக்ரா, மைசூர், சிவாசி முதலிய பல்கலைக் கழகங்கள் குறிப்பிடத் தக்கனவாம். மைசூர் மாநிலத் தார்வார் பல்கலைக் கழகக் கருத்தரங்கில் கலந்து கொள்ளச் சென்ற பொழுதில் மு. வ. தமக்கு மிகப் பிடித்தமான எழுத்தாளராகிய காண்டே

கரைக் கண்டு களிப்புற்ருர். அச் செய்தியைக் கலைமகள் இதழில் ஒரு கட்டுரையாக எழுதினர்.

நாட்குறிப்பு எழுதும் நல்ல வழக்கம் உடையவர் மு. வ. நாட்குறிப்புகளை நாவலில் இடம் பெறச் செய்யும் முறையை 'அல்லி' என்னும் நாவலில் கண்டுள்ளோம். மு. வ. வின் நாட்குறிப்புகள் பயன் மிக்கவை. உண்டது, உடுத்தது, உறைந்தது பற்றிய குறிப்புகளை வாளா எழுதிச் செல்வது அன்று. வரலாற்றுக் குறிப்புகளும், பண்பாட்டுக் குறிப்புகளும், இயற்கை எழில்களும், மனப் போக்குகளும், மொழி நலங்களும் ஒருங்கே முகிழ்த்து விளங்குவது மு. வ. வின் நாட்குறிப்பு ஆகும்.

சான்ருக 1970 ஆம் ஆண்டு பாரிசு மாநகருக்குச் சென்ற போது மு. வ. எழுதிய நாட்குறிப்பில் சில பக்கங்களைக் காண்போம்:

நாட்குறிப்பு :

10-7-70 பாரிஸ் பயணம் இரவு 10-55 க்குப் பம்பாயில் இருந்து 12-30 கராச்சி. கோஷா இல்லா நிலை. பிறகு 2-30 Teheran—மணி அடிக்கடி மாறல் 3-20 Bierut. Teheran Air Port அழகு—மகூதிமாடல். Exchange 54 & பம்பாய் 8 டாலர். பீருட்—5 டாலர் =16.

பிச்சைக்காரர் குறைவு—குடிசை சில—பல அடுக்கு மாளிகைகள்—புதியன—அழகியன. ½ மிலியன் மக்கள் தொகை—1955க்குப் பிறகு பதின் மடங்கு-19 நாடுகள் அடிமைப் படுத்தின—எகிப்து, கிரேக், ரோம் ect, கடைசியில் லெபனன் உரிமை. அரபிமொழி—கார் plate ect.

11-7-70 பீருட்—லெபனன் நகர்—பெல்பாக விழா—இறுதி நாள் பிப்ளியோஸ்—பழைய அரங்கு, புதைபொருள், புதை சவக்குழி, புதை கட்டம், கல்சட்டி பானை.

பழைய Venus Arrounds காதல் முதலியன. கடலினுள் நுழைதரையில் கி. மு. 6000 நகர்.

Telephin கம்பி வழி வான் வண்டிகள்—யானும் ஒன்றில் வந்தேன் goeth. குகையினுள் ஆறு—சிற்பம் போன்ற அழகு—குகையாற்றினுள் படகு—இருளை அகற்ற மின் விளக்குகள். குன்றும் புறமும் எதிரொலித்தன...

யானை, முதலை, முள்ளம்பன்றி, தேர் முதலியனபோல் மலை விழுது வடிவு.

பீரூட் கடற்கரை—சுற்றெல்லாம் குன்றெல்லாம் வீடுகள்—வெயிலும் குளிர்காற்றும் பெங்களூர்போல—மணல் இல்லாக் கடற்கரை—கடலோர மெல்லாம் ஓட்டல்கள்.

புதிய கார்கள்—வேகம் பொல்லாதது.

Tips—மறுத்தல் சில காசு என்று. guids—அரபிக் கவிஞர் கவிதைகூறி வந்தார்—கலீல் ஜிப்ரான். கிறிஸ்துவுக்குப் பின் தோன்றிய இரண்டாம் Prophet என்றார். பார்த்திருக்கிறோம்.

12-7-70. பகல் 1-50 ரோம். Roma—பழைய சுவர்கள்—கட்டடங்கள்—சின்னங்கள் எங்கும் Hippies—பூங்காசாலை ஓரமெல்லாம் (டெல்லிபோல், ஆனால் ஒழுங்காக) உணவுக்கடைகள் நூற்றுக் கணக்கில்—மேசைகள்—உண்ணல். முதியோர் பற்பலர் உண்பொருள்.

Vaticon—பெரிய மடத்தமைப்பு—ஆங்கிலம் அறிந்தோர் குறைவு. சீசர், அண்டோனியோ, புரூடஸ் பேசிய போர்க் கட்டடம்—சீசர் கொல்லப்பட்ட சூழல்—

கொலோகம்—அடிமைகளைச் சிங்கங்களுடன் மோதவிட்டுக் கொடுமையைப் பார்த்த கொடுமை—காட்டு மிராண்டித்தனம்—பாதி பச்சையப்பர் கட்டட அமைப்புக்குக் காரணமான ரோம் அமைப்பு.

19-7-70 Varsalls Open Theatre—மரத்தால் 21 மாதத்தில் கட்டப்பட்டது.

விலையுயர்ந்த ஓவியங்கள்—சில சிற்பங்கள். சிற்பம் என்று நினைத்து நெருங்கினோம். ஆனால், ஓவியமாக இருந்தது. இரண்டு சிற்பம் கால் வைத்து இறங்குவது போல.

கண்ணுடிக் கூடம்—நாற்புறமும் அழகிய தோட்டம்—வண்ண மலர்கள்—குளம்—கரையெலாம் சிற்பம்.

ஒரே மரத்தில் மிகப் பெரிய மேசை. பெரிய கடிகாரம்—நாள், சந்திரன் தோன்றும் வளர்ச்சியெல்லாம் வடிவே தெரிதல்—அரசியின் படுக்கையறை—உடையறை—இரத்தக் கறை—முயன்ற தலைகள் உருண்டன—ராணி ஓடினுள்.

21-7-70 ஷேக்ஸ்பியர் பிறந்த வீடு—புதைத்த இடம்—பிறப்பு ஏடு—சிறப்பு ஏடு—1564 மனைவி மகள் மருமகள் பக்கத்தில் Latin school desk—அவரும் படித்தபோது பயன் படுத்தியிருக்கலாம் மிகப் பழைய மரம்.

Tempest எழுதியபோது New place என்ற இடத்தில் ஓய்வு பெற்றிருந்தார். அவர் பெயரால் Theatre புதியதாக—நாள் தோறும் அவர் நாடகம் ஒன்று நடிக்கப்பெறுகிறது. ஆக்ஸ் போர்டு—இங்கிலாந்தின் இரண்டாம் நகரம்—பல தனிக் கல்லூரிகள் பலவும் பழைய கட்டடங்கள்—படிகள் எல்லாம்—படிக்கற்கள் எல்லாம் தேய்ந்தவை—நடந்து நடந்து குழிகள் சாய்வுகள்—சரிவுகள் சுவர்கள் பூச்சு இல்லை—வெளியே உட்காரும் நாற்காலிகள் பழையன. ஆட்களே புதிய நடை உடையில்.

Parking திண்டாட்டம் பச்சை ஒளி இருந்தால் உள்ளே போகலாம். 'full' என்ற பலகையும் சிவப்பு விளக்கும் பெரும் பாலும் பச்சை ஒளிக்குக் காத்திருத்தல். வெளியே வரும்போது 3/- போட்டால் தரையில் உள்ள தடை தானே படிந்து வெளி யேற இடந்தருகிறது பச்சை ஒளியுடன்.

லண்டனில் கார் ஓட்டிச் சென்று ஆர அமரப் பார்க்க முடி யாது. கார் நிற்க இடங்கள் குறைவு—தெருக்களில் நிற்கும் கார்கள் நெடுஞ்சாலையில் ஓடும் கார்கள் Tabe (underground) வழியாகச் சென்று நடந்து நடந்து பார்ப்பதே வழி.

தும்மல் மூக்கு ஒழுகல் இல்லை அறவே. எப்படி நேர்ந்தது லண்டனில்?

28-7-70—பிரமிட் பக்கத்தே pharas வழிபட்ட சூரியன் கோயில் காரைக் கற்களில் வேலைப்பாடுகள் இருந்தன. கவரப்பட்டன—இப்போது காவல்—சிமெண்ட் இல்லாத காலம்—சாந்து இல்லாமல் பொருத்தப் பட்ட 4'×6' கற்கள். வெளியே 25 கிலோ மீட்டர் தொலைவிலிருந்து கொண்டுவரப்பட்டன. உள்ளே செல்லும் வழியிலும் கல் கூரைகள், கல் சுவர்கள் குடைவுகள்—நூறாயிரக் கணக்கானவர்களுக்கு வேலை—பல காலம். ஆனால் பொய்ம்மை—இறந்த பிறகும் நிலைத்திருக்க—உடலுடன் இருக்க விரும்பினர். அரச குடும்பத்தினர் அமைச்சர் முதலானவர்களுக்குச் சாதாரண சவ அறைகள்—குடியிருந்த ஏவலர்க்கு மண் வீடுகள்—மண் சுவர்கள்—இன்னும் உள்ளன.

பொய்ம்மை—உடல் அழியும் என உணராமை. எலும்புகளும் இன்று காணேம். இறந்த பிறகும் வாழும் ஆசை. குழந்தைகளில் தாம் இருத்தலைக் காணும் தசரதர்கள் அதுவும் சிறிது பொய்ம்மையே.

மெய்ம்மை :

வாழும்போதே உடல் சட்டை எனத் தெளிந்து இறைவன் நிழலின்கீழ் வாழப்போவதாக நம்புதல். அல்லது நான் இறைவனின் ஒளிக்கதிர் என உணர்தல் நல்லது. இந்தியத் தத்துவ உயர்வு.

10—7—70 முதல் 28—7—70 முடிய நாட்குறிப்பும் பொதுக் குறிப்பும் தொடர்ந்து வரைந்துள்ளார் மு.வ. அவற்றை அவரே விரித்து எழுதியிருந்தால் மிக அரிய பயணநூலாக வெளிப்பட்டிருக்கும்.

உள்ளங்கவர் கள்வர் :

மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக 1973ஆம் ஆண்டில் எடின்பரோவுக்கு மு.வ. சென்ற செலவு தமக்கு உவகைதந்ததை டாக்டர் ஆர். இ. ஆஷர் குறிப்பிடுகிறார் :

"1973ஆம் ஆண்டில் எடின்பரோவில் காமன் வெல்த்து பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் மாநாடு நடைபெற்றது.

அம் மாநாட்டில் அவர் கலந்து கொண்டது சிறப்பாக எனக்கு மகிழ்வூட்டியது. அதிலும் சிறப்பாக ஸ்காட்லாந்தின் வனப்பு மிகு குன்றுகளுக்கும் எழில்மிகு ஏரிகளுக்கும் சிறப்பு மிகு சிற்றோடைகளுக்கும் என் குடும்பத்தோடு நாங்கள் அவருடன் சுற்றுலா மேற்கொள்ள அவருக்கு நேரம் கிடைத்தமை எனக்குப் பெரு மகிழ்ச்சி அளித்தது. அவ்வின்பப் பயணத்தின்பொழுது தம்முடைய இனிய பண்புகளாலும், நயவுரையாலும், நல்ல நகைச்சுவையாலும் என் இரு புதல்வர்களை அவர் கவர்ந்து விட்டார். அவர்களுடைய மகிழ்ச்சிக்காக அவர் சொல்லிய கதைகளும் அவர்களுடைய மனத்தைக் கொள்ளை கொண்டு விட்டன''[1]

மு.வ. எங்கே சென்றாலும்-இருந்தாலும்-'உள்ளங்கவர் கள்வராகவே' இருந்தார் என்பது தெளிவாம்!

1. செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 50. பரல். ௬. பக். ௨௧௧.

# 10. பெரும் பிரிவு

4—9—74ஆம் நாள் மு.வ. வின் இளைய மைந்தர் பாரிக்குத் திருமணம் நிகழ்ந்தது. திருமண வேலைகளைக் கவனிப்பதற்காக ஒரு வாரத்திற்கு முன்னமே சென்னைக்கு வந்தார் மு.வ. திருமணம் மயிலாப்பூர் இராசேசுவரி திருமண மண்டபத்தில் நிகழ்ந்தது. திருமண வரவேற்பிலும் விருந்தோம்பலிலும் பெரும்பங்கு கொண்டார். தமிழ்நாடு ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்களும், அமைச்சர்களும் கலந்து கொண்ட அவ் விழாவில், ஆளுநர் விடைபெற்றுச் செல்லும்போது "Doctor Varadarajan you must be prepared to serve centre also. Your service should not be restricted to Tamil Nadu alone" என்று கூறினார். மேலும், "உங்கள் வீட்டுக்கு ஒருநாள் வருகிறேன் விருந்து படையுங்கள்" என்று சொன்னார். அப்பொழுது, "என் கடமை முடிந்துவிட்டது" என்றார் மு.வ.

செப்டம்பர் 8, 9ஆம் நாள்களில் மதுரைப் பல்கலைக்கழகச் சார்பில் அகிலன் கருத்தரங்கு நடைபெற்றது. இக் கருத்தரங்கைத் தொடங்கி வைத்து மிக ஆர்வத்துடன் உரையாற்றினார் மு.வ., அப்பொழுது துணைவேந்தர் பொறுப்பிலே இருந்து விரைவில் விடுபெற்று எழுத்துப்பணியில் ஈடுபட்டு உழைப்பதற்குத் தமக்குள்ள ஆர்வத்தை வெளியிட்டார்.

"தமிழ்ப் பேராசிரியர் பதவியில் இருந்து நான் நான்கு ஆண்டுகளுக்கு முன்பே ஓய்வு பெற்றுவிட்டேன். துணைவேந்தர் பதவியில் இருந்தும் இன்னும் சில திங்களிலோ ஓர் ஆண்டிலோ விடுபெற்றுவிடுவேன். பிறகு ஆராய்ச்சிப் பேராசிரியராக இருக்க நேர்ந்தாலும் அதிலிருந்தும் சிலநாட்களில் விடை பெற்று விடுவேன். நான் கடைசி வரையில் ஓய்வுபெற விரும்பாத ஒருபதவி உண்டு என்றால் அஃது எழுத்தாளர் பதவிதான்.

எழுத்து என் உயிருடன் கலந்துவிட்ட ஒன்றாகும். என் கடைசி மூச்சு உள்ளவரையில் ஏதாவது எழுதிக் கொண்டே இருப்பேன். எழுத முடியாதபோது சொல்லிக் கொண்டாவது இருப்பேன்.''

25—9—74ஆம் நாள் பட்டமளிப்பு விழா நிகழ இருந்தது. அதற்கு முதல் நாள் இரவு 11-30 மணிவரை அவர் நண்பர் திரு. யோகசுந்தரம் அவர்களுடன் பேசிக்கொண்டே சான்றிதழ்களில் கையொப்பமிட்டார். அப் பணியில் தாம் உதவிசெய்வதற்கு யோகசுந்தரம் வேண்டியும் மு.வ. ஏற்றுக்கொள்ளாமல் தாமே தாளைப் புரட்டிக் கையெழுத்திட்டார். இரவு இரண்டு மணிக்குப் படுத்து ஐந்து மணிக்கே எழுந்துவிட்டார். பட்டமளிப்பு விழாவில் சிறப்புப் பட்டம் பெறுதற்கு வரும் நடுவணரசுக் கல்வியமைச்சர் பேராசிரியர் நூருல் ஆசன் அவர்களை வரவேற்பதற்காக வானூர்தி நிலையம் சென்றார்.

காலை ஒன்பது மணிக்கு மீனாட்சி மகளிர் கல்லூரி விழாவுக்குத் தலைமை தாங்கினார். அப்பொழுது சோர்வுடன் காணப்பட்டார். பின்னர்ப் பகல் 12 மணிக்கு நாகமலை புதுக்கோட்டை வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் சொற்பொழிவாற்றச் சென்றார். சொற்பொழிவு ஆற்றத் தொடங்கும்போது மார்பில் வலி ஏற்பட்டது; வியர்வை பெருகியது; நின்றுகொண்டு பேச இயலா நிலை உண்டாயிற்று. ஒருவாறு கூட்டத்தை முடித்துக் கொண்டு திரும்பினார்.

மாலை நான்கு மணிக்குப் பட்டமளிப்பு விழாத் தொடங்கியது. உரிய நேரத்தில் படுக்கையில் இருந்து எழுந்து விழா மண்டபத்துக்குச் செல்ல முடியாமல் திண்டாடினார் மு.வ. வலி மிகுந்துகொண்டே சென்றது. ஆயினும் பிறர் அறியாவண்ணம் மறைத்துக் காத்தார்.

நடுவணரசு அமைச்சர் நூருல் ஆசன், தமிழ்நாடு கல்வியமைச்சர் டாக்டர் நாவலர் ஆகியோர் பட்டமளிப்பு விழாமண்டபத்திற்கு வந்துவிட்டனர் என்னும் செய்தியைக் கேள்விப்பட்டதும் ஒருவாறு முயன்று, உரிய உடைகளை அணிந்துகொண்டு விழா மண்டபத்துக்கு வந்தார். மாடிப்படிக்கட்டுகளில் ஏறமுடியாமல் ஒருவர் தோள் துணையாக ஏறினார். பட்டமளிப்பு விழாத்

தொடர்பான உரையையும் நின்றுகொண்டு படிக்க இயலாமல், அமர்ந்தே படித்தார்.

பல்கலைக் கழகப் பதிவாளர், துணைவேந்தர் உடல் நலக் குறைவை மருத்துவருக்கு அறிவித்து உதவி வேண்டினர். தமக்கு ஒன்றும் இல்லை என்றும், களைப்பே உடல் சோர்வுக்குக் காரணம் என்றும் மு.வ. கூறினர். தாமே தம் உடலைச் சரி யாக்கிக் கொள்வதாகக் கூறினர். மறுநாள் பார்க்க வேண்டிய கோப்புகளை எல்லாம் படுத்துக்கொண்டே பார்வையிட்டுத் தக்க ஆணைகளைப் பிறப்பித்தார்.

28—9—74இல் பாண்டியன் விரைவு வண்டியில் புறப்பட்டு 29—9—74 காலையில் சென்னைக்கு வந்தார். வழக்கமாகப் புகைவண்டி, நிலையத்திற்கு வருமுன்னரே தம் இருக்கையில் இருந்து எழுந்து, தம்மை அழைத்துச்செல்ல வந்திருப்பவர் களைக் கைக்குறிகாட்டி அழைப்பது வழக்கம். ஆனால், அன்று அவ்வாறு செய்ய இயலவில்லை. மதுரையில் இருந்து வந்ததும் நேரே வீட்டுப் பின்புறத்துத் தோட்டத்திற்குச் சென்று சுற்றிப் பார்த்த பின்னரே வீட்டினுள் போவது மு.வ. வின் வழக்கம். அன்று அதனையும் அவ்வாறு செய்யவில்லை. முழங்காலைப் பிடித்துக்கொண்டு வீட்டில் இரண்டு படிகளில் ஏறி நேரே படுக்கை அறைக்குச் சென்று படுத்துவிட்டார்.

மூத்தமகனர் டாக்டர் அரசு இரத்த அழுத்தம் பார்த்தார். முழு ஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தினர். இரண்டாம் மகனர் நம்பி 'ஈ.சி.சி' பார்த்து இதயத்தில் ஏற்பட் டிருந்த ஊறுபாட்டைக் கண்டுபிடித்து உணர்த்தினர். இந் நிலையிலும் தம் கடமையை மறந்தார் அல்லர் மு.வ. மறுநாள் அண்ணாமலை மன்றத்தில் நடைபெறஇருந்த கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாமையையும், 2—10—74ஆம் நாளன்று இராம லிங்கர் பணிமனை சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத் தில் கலந்துகொள்ள முடியாமையையும் தெரிவிக்க ஏற்பாடு செய்தார். இராமலிங்கர் பணிமனைக் கூட்டத்திற்கெனப் போக்கு வரவு செலவுத் தொகையாகப் பெற்றுக்கொண்டிருந்த உரூ. 75ஐயும் உடனே திருப்பி அனுப்பிவிடவும் ஏற்பாடு செய்தார்.

தொடர்ந்து உடல்நிலை சீர்கேடாகவே இருந்தது. மனைவி மக்களும், குடும்பத்தவரும், பிறரும் வற்புறுத்தியும் மருந்தும் மாத்திரையும் உண்ண மறுத்துவிட்டார். உரிமையன்பு காட்டி யேனும் மருந்துண்ண வைத்துவிடவேண்டும் என உன்னினார் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன். ஒருதாளை எடுத்து,

முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்

மாத்திரை சாப்பிட்டால் தான் உடல்நலம் கண்டிப்பாகத் தேறும் என மருத்துவ நிபுணர் கூறும்போது ஜனநாயக முறைப்படி எப்போதும் நடந்து கொள்ளும் நீங்கள் எங்கள் கண்ணீரைத் துடைக்கச் சிறிது விட்டுக் கொடுக்கக் கூடாதா?'' என்று எழுதி அவரிடம் தந்தார். ஆங்கில மருத்துவ முறையை மேற்கொள்ள மு. வ. இசையவில்லை. மருத்துவமனைக்குச் செல்லவும் இசைய வில்லை. இயற்கை மருத்துவ நெறியையே கடைப்பிடியாகக் கொண்டார்.

மதுரையில் இருந்து துணைவேந்தரின் நேர்முக உதவி யாளர் திரு. சத்தியமூர்த்தி இரண்டு பெட்டிகளில் கோப்புகளைக் கொணர்ந்து கையெழுத்துப் பெற வந்திருந்தார். அவர் மு. வ. வின் நிலைமை கண்டு இரண்டு கோப்புகளில் மட்டுமே கையெழுத்துப் பெற நினைத்தார். ''இந்த இரண்டு கோப்பு களுக்குத்தானா மதுரையில் இருந்து வந்தீர்கள்; என் உடல் நிலைபற்றிக் கவலைப்பட வேண்டா. எல்லாவற்றையும் எடுத்துப் படிக்க; நான் சொல்லும் குறிப்புக்களை எழுதுக; நான் கையெழுத்து இடுவேன்'' என்று சொல்லி எல்லாக் கோப்பு களையும் முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 2-30 மணி வரை பார்த்து முடித்தார். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தொடர் பான கோப்புகளைப் பார்த்துப் பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு அவர்களிடம் கையொப்பமிட்டுத் தந்தார்.

7-10-74 காலை 10-30 மணிக்கு மு. வ. வின் உடல்நிலை மிகச் சீர்கேடடைந்தது. சென்னை பொது மருத்துவமனைத் தலைவர் டாக்டர் இராமச்சந்திரா மு. வ. வை வந்து பார்த்தார். உடனே மருத்துவமனையில் சேரவேண்டும் என்று கூறினார்.

மற்றவர்களும் வற்புறுத்தினர். அப்பொழுதும் மு. வ. இக் கருத்தினை ஏற்கவில்லை. டாக்டர் இராமச்சந்திரா மு. வ. வைப் பார்த்து "நீங்கள் நல்ல மனிதர்; ஆனால் மோசமான நோயாளி" (Best man but a worst patient) என்று குறிப்பிட்டு விட்டுச் சென்றார்.

பிற்பகல் 3-45 மணிக்கு மேலும் உடல்நிலை சீர் கேடடைந்தது. அனைவரும் மருத்துவமனைக்கு மு. வ. செல்ல இசையவேண்டும் என்று மன்றாடினர்; வற்புறுத்தினர். அப் பொழுது பாரி நிலையம் திரு. செல்லப்பன், தணிக்கையாளர் திரு. சத்தியமூர்த்தி, டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் ஆகியோர் அருகில் இருந்தனர். மு. வ. "நான் இன்னும் ஆறு ஏழு ஆண்டுகள் உயிர் வாழ்வேன்; 46 ஆண்டுகளாக என்னைக் காப் பாற்றிய இயற்கை மருத்துவம் இப்பொழுதும் என்னைக் காப் பாற்றும்; இதய நோய் பற்றியே நான் ஒரு நூலை உடல் நலம் தேறியபின் எழுதுவேன்; அதைப் பாரியே பதிப்பிப்பார்" என்றார். பின்னர்த் தம் வலக்கை நாடியை இடக்கையால் பிடித்துப் பார்த்து "ஒருநாடி பேசவில்லை; அந்த நாடியை நாளைக் காலைக்குள் சரிப்படுத்தி விடுவேன்; கவலை வேண்டா" என்று சொன்னார்.

இரவு 7 மணிக்கு டாக்டர் இரத்தின சபாபதி மு. வ. வைக் காண வந்தார். மு. வ. வைப் பார்த்துச் சில மாத்திரைகள் உட்கொண்டால் போதும்; அதனை ஏற்றுக் கொள்க என்றார். "நான் எழுபது வயது வரை வாழ்வேன்; என்னை என் போக்கில் விட்டு விடுக; மாத்திரை சாப்பிட வற்புறுத்த வேண்டா" என்று தம் கொள்கையிலேயே உறுதியாக நின்றார்.

மறுநாளும் இதே நிலைமை நீடித்தது. டாக்டர் இரத்தின சபாபதி இரத்த அழுத்தம் பார்த்தார். "எவ்வளவு அழுத்தம் உள்ளது?" என மு. வ. வினவினார். மருத்துவர் '120' என்று பதில் மொழிந்தார். ஆனால் உண்மையில் '220' ஆக இருந்தது. இதயத் துடிப்பின் வேகம் உட்சட்டையையும் படபடவென அசையச் செய்தது. ஆயினும் அஞ்சாமல் இருந்தார். திரு.வி.க. உயர்பள்ளியைச் சேர்ந்த திருநாவுக்கரசு அருகில் இருந்து

கடிதங்கள் எழுதினர். தாயுமானவர் பாடல்களையும், இராம தீர்த்தர் பொன் மொழிகளையும் மு. வ. கேட்குமாறு செய்தார். மு. வ. இரவெல்லாம் உறங்கினர் அல்லர்.

உடல் நன்ருக வியர்த்தது; துண்டால் துடைத்துக் கொண்டே இருக்க நேர்ந்தது. 9-10-74 காலை 4 மணிக்கு மு. வ. தம் மனைவியையும் மக்களையும் அழைத்தார். தாம் கடைப் பிடித்து வந்த இயற்கை மருத்துவம் தம்மைக் கைவிட்டு விட்டது என்ருர். மேலும் "நேற்று மட்டும் நான்கு முறை என் மருத்துவத்தைப் பயன்படுத்திப் பார்த்தேன். அது பயன் அளித் திருக்குமேயாளுல் எனக்கு நன்ருக உறக்கம் வந்திருக்கும். மாருக நான் உறங்கவே இல்லை" என்ருர். ஆயினும் மனம் தளராமல் இருந்தார்.

டாக்டர் நம்பி ஒரு மாத்திரையைக் கொண்டுவந்து மு. வ. வின் வாயில் போட்டார். உடனே வாந்தி வந்துவிட்டது. "என் வாழ்வில் நீண்ட காலமாக வாந்தி என்பதே இல்லை. இளமை யில் சிலமுறை கண்டிருக்கிறேன். இப்பொழுது நான் வாந்தி எடுத்தது என் உடம்பு என் வசம் இல்லை என்பதைக் காட்டு கிறது" என்று கூறினர் மு. வ.

மு. வ. வைப் பார்ப்பதற்காக டாக்டர் கோரத் மதுரையில் இருந்து வானூர்தி வழியே வந்தார். டாக்டர் இராமச் சந்திராவும் வந்தார். அவர்கள் இருவரும் உடலை ஆய்ந்து பார்த்து, "உடனே மருத்துவமனையில் சேர்க்கவேண்டும்" என முடிவு செய்தனர்.

மதுரைப் பல்கலைக் கழகப் பதிவாளருக்கு 'Hereafter send no files until further orders' என்று கடிதம் எழுதி அஞ்சலில் சேர்க்கச் செய்து, மருத்துவமனைக்குச் செல்ல ஒருப்பட்டார். மற்றவர்களின் மன அமைதிக்காக இறுதிப் பொழுதில் தந்த இசைவே இஃதாகும். அவர்மனம் சற்றும் இடம் தரவில்லை.

தாமே மருத்துவமனை வண்டியில் உள்ள படுக்கையில் படுத் தார்; கண்ணீர் வழிந்தது. தம் கொள்கைக்கு மாருன செயல் நடைபெறுவதை எண்ணிக் கண்ணீர் வடித்ததாக நம்பி உணர்ந்

தார். வீட்டுக்குத் திரும்பி விடலாமா எனவும் கருதினார். போராட்டமான உள்ளத்துடன் மு. வ. மருத்துவமனையில் சேர்க்கப் பெற்றார்.

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் முன்னின்று ஏற்பாடுகளைக் கண்காணித்தார். கல்வியமைச்சர் டாக்டர் நாவலர் வந்து பார்த்தார். ஊசிபோட்டுக் கொள்ளாத அவர் உடலில் ஊசி போட்டதால் முன்கையில் குருதி கொட்டியது. "அரசு! இந்த மருத்துவத்தை உன் மேற்பார்வையில் வீட்டிலேயே பார்த்துக்கொள்ள முடியாதா?" என்றார். திருப்பதிப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. பொன். சௌரிராசன் வந்தார். அவரிடம் மு. வ.

"வான நாடரும் அறியொ ணாதநீ
மறையி லீறுமுன் தொடரொ ணாதநீ
ஏனை நாடரும் தெரியொ ணாதநீ
என்னை யின்னிதாய் ஆண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடு வித்தவா
உருகி நான்உனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடு வித்தவா
நைய வையகத் துடைய விச்சையே"

என்னும் திருவாசகப் பாடலையும் (திருச்சதகம் 95),

"ஆடலையே காட்டியெம தாடலொழித் தாண்டான்பொற்
றாடலைமேற் சூடித் தழைக்குநாள் எந்நாளோ?"

என்னும் தாயுமானவர் பாடலையும் (எந்நாட் கண்ணி 14 : 22) பாடினார்.

சென்னை பொது மருத்துவமனை மருத்துவர்கள் பலவகையாலும் ஆய்ந்து தக்க மருத்துவம் மேற்கொண்டனர். வேலூர் மருத்துவமனை மருத்துவர்களுடன் தொடர்பு கொண்டனர். அதன்பின் ஒரு முடிவுக்கு வந்து பேஸ் மேக்கர் (Pace maker) என்னும் கருவியினை அவர் மார்பில் வைத்தனர். அதற்கு முன்னே மயக்கம் தந்தனர். மு. வ. வுக்கு மயக்கம் வருவதற்கு

முன்னர், ''மருத்துவர்களே, உங்களுடைய அயராத அரும் பணியினை நீண்ட நேரமாகக் கவனித்து வருகிறேன்'' என்று கூறியதே இறுதிச் சொல்லாகும்.

மு. வ. வின் நாடித் துடிப்பு இயல்பான நிலைக்குத் திரும்பியது. அனைவரும் மகிழ்ந்தனர்.[1] மகிழ்ச்சியோடு அன்பர்களும் புதல்வர்களும் வீட்டுக்குத் திரும்பினர். ஆனால், அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. போனவர்கள் விரைந்து திரும்ப நேர்ந்தது. மு. வ. வின் உடல்நிலை சரிப்படுத்த முடியாத அளவுக்குப் போய் விட்டது! மாலை 5-30 மணி அளவில் (10-10-74) அவர் நல்லுயிர் அமைதியுற்றது!

மு.வ. வின் உடல் மாலை 6-30 மணிக்கு வீட்டுக்குக் கொண்டு வரப்பெற்றது. மனைவி, மக்கள், உற்றார், உறவினர், அன்பர், நண்பர் திரள் திரளாக வந்து கதறிக் கண்ணீர் வடித்தனர். மாணவ மாணவியர் வெள்ளமெனத் திரண்டு வந்தனர். வெளியிடங்களில் இருந்தும் ஆர்வலர்கள் வந்து குவிந்தனர். தமிழக ஆளுநர், முதல்வர், அமைச்சர்கள் பல்வேறு கட்சித் தலைவர்கள் வந்து இரங்கல் தெரிவித்தனர். மாலைகள் மலையெனக் குவிந்தன.

மறுநாள் மாலை 5 மணிக்கு மு.வ. வின் உடல் நன்கு அழகு செய்யப்பெற்ற இராணுவ வண்டியில் கிடத்தப்பெற்று அரும்பாக்கம் சுடுகாட்டிற்குக் கொண்டு செல்லப் பெற்றது. சாலையின் இருபாலும் மக்கள் நின்று தம் இறுதிவணக்கத்தைத் தெரிவித்தனர். கிடைத்த கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு மதுரைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களும் அலுவலர்களும் மிகுதியான அளவில் வந்து சேர்ந்தனர். விம்மல்களுக்கும் தேம்பல்களுக்கும் இடையே 'முயற்சிக்கு ஒருவர் இவரே' என எடுத்துக்காட்டாக வாழ்ந்த பண்பாளர் மு.வ. வின் திருவுடலம் மைந்தர் நம்பியினால் எரியூட்டப் பெற்றது. இருள் கப்பிக் கொண்டு வந்த பொழுதிலே அந்த ஒளி, சுடர்விடத் தொடங்கியது. அகல் விளக்காக வாழ்வைத் தொடங்கிக் கலங்கரை

1. ''அந்த(க் குடும்ப) விளக்கு அணைவதற்கு முன்னே ஒருமுறை அழகாக ஒளி வீசியது''—கள்ளோ? காவியமோ?

விளக்காக வாழ்ந்த மு.வ. குன்றின்மேல் நின்ற ஒளியாக, விண்ணின்மேல் எழுந்த முழுமதியாக ஒளியுருக் கொண்டார்.

"அந்த மலர்கள் என்னோடு பேசுவன போல் இருக்கின்றன. அவைகள் அப்படியே இருக்கட்டும். வாழ்க்கையைப் பற்றி அவைகள் என்னவோ சொல்கின்றன. உணர்த்துகின்றன. இருக்கட்டும்"

—வாடா மலர்

"நீதான் நேராகச் சுடர்விட்டு அமைதியாக எரியும் ஒளி விளக்கு"

—அகல்விளக்கு

"என் வாழ்க்கை சமுதாயத்திற்கு உரிமையானது. ஆகவே சமுதாயத்திற்கு இயன்ற அளவு உழைப்பதே என் கடமை" என்றும், "உயிர் உள்ளவரையில் உழைத்துச் சாக விரும்புகிறேன். உழைக்க உழைக்கத்தான் எனக்கு உயிர்வாழ்வு இனிக்கிறது" என்றும் வாழ்ந்த வாழ்வு அமைதியாய் முடிந்தது...இனி அந்த ஒளியை அவருடைய பற்பல நூல்களும் மங்காமல் பரப்பி வரும் என்பது திண்ணம்"

—அறிஞர் பெர்னட்சா

பின்னிணைப்பு

# கடித இலக்கியம்

## உதவி வேண்டல்

ஓம்

மு. வரதராசன்
வேலம்
29—5—43

அன்புடையீர்,

வணக்கம். நலம். கடிதம் வந்தது. அதற்குள் 'ரேடியோ' அறிக்கையும் இருந்தது. அதற்குமுன் திருமண அழைப்பும் சேர்ந்தது. நன்றி.

தமிழில் எழுதுகின்றேன்; மன்னிக்க.

மழை பெருமழை; ஏரிகள் பல உடைந்தன; உழவர் எண்ணங்களும் உடைந்தன.

அரசு முதலானோர் நலமே. செல்வன் பார்த்தசாரதி உடல்நலம்பற்றிக் கவனித்துக் கொள்ளுங்கள்.

எப்படியாவது சேத்துப்பட்டில் வீடு தேடியுதவுமாறு கோருகின்றேன். தனியே இருக்கவே விருப்பம். மறுபடியும் அந்த வீட்டுக்காரரைக் கேளுங்கள். வேறு வீடு கிடைத்தாலும் பாருங்கள். ரூ 15 முதல் 20 வரைக்கும் கொடுப்பதானாலும் சரி. நண்பர் திரு. துரையரங்கனார்க்குத் தேவையில்லையானால் 'டிரைவர்' வீட்டை எனக்காகப் பேசுங்கள். (அதாவது தங்கள் வீட்டுக்கு எதிர் வீட்டில் ஒரு பகுதி). எதுவுமில்லையானால், இறுதியில் 16-6-43 போல எனக்கு எழுதினால் நான் உடனே சென்னை சென்று பழைய வீட்டைப் பேசி முடிப்பேன். என் பொருட்டுத் தாங்களும் தாயாரும் அன்புடன் செய்யும் முயற்சிக்கு வீடுதேடும் வேலைக்கு - யான் மிகவும் நன்றியுடையேன்.

பிற பின்னர்.

அன்புள்ள,
(ஒ - ம்) மு. வரதராசன்

திரு. வீ. பாஷ்யராமானுசம்.
அவர்கள்,

## நன்றி பாராட்டல்

M. VARADARAJAN, B. O. L.
Lecturer in Oriental Studies,
Pachaiyappa's College

CHETPET,
Madras.
1—3—1944.

அன்பு மிக்க நண்பரே,

''காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தின் மாணப் பெரிது''. ஆனால், தங்கள் உதவி பெரிது. அத்தகைய உதவியைப் பாராட்ட நம் நட்புரிமை இடந்தரவில்லை; பதிலுதவி செய்ய நம் அன்புரிமை இடந்தரவில்லை. ஆயினும் என் மனத்துக்கு ஓர் அமைதி வேண்டும்; ஆதலால் இதனை ஏற்றுக் கொள்ளுங்கள்.

அன்பன்,
(ஒ - ம்) மு. வரதராசன்

திரு. வீ. பாஷ்யராமானுசம்
அவர்கள்.

## சுருங்கச் சொல்லல் (1)

வேலம்,
இராணிப் பேட்டை
5—1—47

அன்புடையீர்,

நினைவூட்டும் கடமையைச் செய்கிறேன்.

அன்புள்ள,
(ஒ - ம்) மு. வ.

## (2)

அம்மூர் கிராமம்,
அம்மூர் போஸ்ட்,
வட ஆர்க்காடு ஜில்லா
18—12—50

அன்புடையீர்,

வணக்கம். நலம். நலந்தானே !

மேலே கண்டதுதான் முகவரி.

அன்புள்ள,
(ஒ - ம்) மு. வரதராசன்.

## அரசினர் மோதல் கூட்டம் வேண்டா

மு. வரதராசன்,
தமிழ்ப் பேராசிரியர்.

செனாய் நகர்,
சென்னை-30.
29—7—1962.

அன்புடையீர்,

வணக்கம்.

தங்கள் 17 மடல் பெற்றேன். யான் பல்கலைக் கழகப் பணியாக வருதலால், அரசியல் அரசினர் மோதல் உள்ள கூட்டங்களில் கலந்து கொள்ளல் இயலாது. அந் நிலை இல்லையாயின், தொடக்க விழாவுக்கு உடன்படுகின்றேன்.

மற்றொன்று: அன்று, இரவு வண்டியில் சென்னைக்குத் திரும்பி வர விழைவதால், கூட்டத்தைச் சுருங்கிய அளவில் நடத்துதல் நல்லது.

தங்கள் அன்புள்ள,
(ஒ - ம்) மு. வரதராசன்

திரு. இரா. இளங்குமரன்.

## நண்பு பாராட்டல்

சென்னை—30.
20—12—67.

அன்புள்ள அண்ணா,

வணக்கம். நலம். கடிதம் பெற்றேன்.

தாங்கள் இரண்டு பேரும் இல்லத்தரசியரோடு வர வேண்டும். அவர்களும் சிலநாள் சென்னையில் இருந்து பார்க்க வேண்டும் அல்லவா? ஆகவே தவறாமல் நீங்களும் அவர்களுமாக வர வேண்டும் (இருவர் இருவராக).

3—1—67 காலையில் இங்கே வரவேண்டும். 2—1—67 காலையில் சிலைத் திறப்புக்கள் நடைபெறும். அதற்கும் வர வேண்டும் என்றால் 2—1—67 காலையிலேயே வரவேண்டும். உண்டி உறக்கம் மற்ற ஏற்பாடுகள் என் பொறுப்பு 11—1—67 திரும்பலாம்.

மாநாடு இருவகை: கல்வி அமைச்சர் நடத்தும் கருத்தரங்கில் ஆட்களைக் குறைக்கிறார்கள். மற்றவர்கள் நடத்தும்

கலை விழாவில் எல்லோரும் போகலாம். டிக்கட் ரூ. 15 வாங்க ஏற்பாடு செய்வேன். உள்ள வசதிகளைக் கவலை இல்லாமல் பகிர்ந்து கொள்வோம். தவறாமல் வந்தருள்க.

அன்புள்ள,
(ஒ - ம்) மு. வரதராசன்.

திரு. மா. அ.

## மாணவர்க்கு உதவி

*4—8—1965*

அன்புள்ள திரு. சி. பா;

நலம்.

இக் கடிதம் கொண்டுவரும் இளைஞர் திரு. A. P. காசி லிங்கம் (P. U. C. II Group) சென்னைக்குப் புதியவர். பச்சையப்பன் விடுதியில் சேர்க்கப் பட்டுள்ளார். புதியவராகையால் இவர்க்கு நல்ல மாணவரைக் கண்டு அறிமுகப் படுத்தி, பார்க்கும் போது உசாவி, உதவிபுரிக. நன்றி.

அன்புள்ள,
மு. வரதராசன்

திரு. சி. பாலசுப்பிரமணியன்.

## குடும்பப் பொலிவு

*மதுரை—2,*
*8—3—71*

அன்புள்ள திரு. சி. பா.,

நலம். மனைவியும் மக்களும் நலந்தானே?

இங்கு நாங்கள் இருவரும் நலம். அரசு குடும்பம் நேற்று வந்து சேர்ந்துள்ளனர். வீடு பொலிவாக உள்ளது.

செய்திகள் எல்லாம் அறிந்து வருகிறேன். பணிகள் நன்றாக உள்ளன; எளிமையாகவும் உள்ளன. நல்ல ஒத்துழைப்பும் உள்ளது.

அன்புள்ள,
மு. வ.

திரு. சி. பாலசுப்பிரமணியன்

## புகழ்ச்சி விரும்பாமை

*மதுரை—625021*
*7—1—74*

அன்புள்ள திரு. சி. பா.,

நலம்.

எங்கும் என்னைப் புகழ்ந்து பேசல் வேண்டா. அது சிலர்க்கு எரிச்சல் புகைச்சலை விளைக்கிறது. மூலையில் ஒடுங்கியிருந்து மறைதலே ஆத்திகர் கடமை.

மு. வ.

திரு. சி. பாலசுப்பிரமணியன்.

## விட்டுக் கொடுத்தல்

*30—1—74.*

அன்புள்ள திரு. சி. பா.

நலம்.

இங்கு நெருக்கடி மிகுந்தது; வேறு வழியின்றிக் கடைசியில் உடன்பட்டேன். என் திட்டத்திற்குப் பெரிய இடையூறுதான். என்ன செய்வது?

அன்புள்ள,
மு. வரதராசன்

திரு. சி. பாலசுப்பிரமணியன்.

## புதியபாதை

அன்புள்ள திரு. இரா. த.,

அறுபதாம் ஆண்டு நிறைவு விழா, மலர் இவை கொண்டாடக் கூடாது. இவ்வளவு காலம் என்னுடன் நெருங்கிப் பழகிய பழைய மாணவர்களே என் உள்ளத்தை உணர முடியாமல் இருக்கிறார்களே, மற்றவர்களைப் போலவே கண்மூடி நடக்க விரும்புகிறார்களே என்று நினைத்து வருந்துகிறேன். ஒரு சிலரையும் முற்போக்காக, துணிவாகப் புதிய பாதையை நோக்கச் செய்ய முடியாமற் போனதால் என் வாழ்க்கை ஒரு வகையில் தோல்விதான். முயற்சி விடுக.

அன்புள்ள,
திரு. இரா. தண்டாயுதம். மு. வரதராசன்

## நூல் முயற்சி

சென்னை—30.
15—10—68

அன்புடையீர்,

நலம். கடிதம் பெற்றேன். 1963-க்குப் பின் ஆங்கிலத்தில் 'இளங்கோவடிகள்'; பற்பல கட்டுரைகள்; குரல் காட்டும் காதலர் என்னும் தமிழ் நூல்.

கடிதங்களுக்கு மறுமொழி எழுத மனம் உண்டு; ஆனால் உழைப்புக்கு நேரமும் வலிமையும் இல்லை.

நூல்கள் ஆய்வுத் துறை முதலியனபற்றி எழுதத் திட்டம் உண்டு; ஆனால் உடல் சோர்ந்து விட்டது. உழைத்தால் நோய் துன்புறுத்த வருகிறது. ஆதலின் இப்போது பல்கலைக் கழகக் கடமைகளோடு நிற்கிறேன். 1971 முதல் ஓய்வு பெற்ற பிறகு ஒரு சில எழுதுவேன். 'இலக்கிய இன்பம்' 'உடலியல்' இரண்டும் எழுத 1960-இல் முயன்றேன். 1974, 75-இல் மீண்டும் முயல்வேன். இரண்டொரு கதைகளும் எழுதுவேன். 'ஓவச் செய்தி' போன்றவை எழுதப் போவதில்லை. படிப்பார் இல்லை.

ஆங்கில மொழிபெயர்ப்புக்கும் செல்வாக்குத் தேவை. யானை முயல்வதில் பயன் இல்லை.

அன்புக்கு நன்றி. செய்வன திருந்தச் செய்து முன்னேறுக. கல்லூரிக் கல்விக்கு முதலிடமும் சில காலங்களில் முழு நேரமும் தருக. வாழ்த்துக்கள்.

அன்புள்ள,
(ஒ - ம்) மு. வரதராசன்

திரு. இரா. மோகன்.

## உயிரன்பு

சென்னை—30
6—7—67

அன்புள்ள திரு. சௌரி,

நலம். கடிதம் பெற்றேன். கவலை வேண்டா. இத்தகைய இடையூறுகள் எல்லாம் சேர்ந்ததே இறைவன் அலகிலா விளை

யாட்டாகும். இவை தவிர்க்க முடியாதவை. அறியாமையைப் படைத்தான் நம் தலைவன்; ஆசையையும் உணர்ச்சிகளையும் படைத்தான். விதைக்கச் செய்கிறான்; விளையச் செய்கிறான்; நுகர்வோம். நுகரவும் செய்தலால் அவன் விளையாடல் நடை பெறுவதாக.

அம்மா வருவார்கள் என்றே நம்புகிறேன். வயது, தளர்ச்சி, ஏமாற்றம்-என்ன செய்வது? மனைவி இல்லாத நேரத்தில் உன் அன்பைச் செலுத்துக. நமக்கு ஓர் உயிரின் அன்பு உண்டு என்று நம்பச் செய்க. அந்த நம்பிக்கை உள்ளவரையிலுமே வாழ்வு. மனைவியையும் சொல்லால் கடிய வேண்டா. பேசா திருக்கும் கடுமையும் வேண்டா. தானே உணர்ந்து திருந்த முடியுமா எனப் பொறுத்திரு. திருந்தா விட்டால் கவலை வேண்டா. நம் பங்கு! வாழ்க்கையை நன்கு உணரும் வாய்ப்பு என எதையும் ஏற்க. கவிதைகள் எழுதுக. அனுபவம் எழுத்தில் வடிந்து போகட்டும்.

அன்புள்ள,

திரு. பி. சௌரிராசன். மு. வரதராசன்

*மு. வரதராஜன், வித்வான் பி. ஓ. எல்.,*
*தமிழ்ப் பண்டிதர்,*
*திருப்பத்தூர், (வட ஆற்காடு)* *7—7—'39*

அன்புடையீர்!

தங்கள் 'செல்வி' இரண்டும் பெற்றேன்; 1-7-39 ல் எழுதிய கடிதமும் பெற்றேன்.

'செல்வி'க்கு ஆற்றுந் தொண்டு சிறந்த தமிழ்த் தொண்டாகும் என்பதை நன்கு அறிவேன்; ஆதலின், இயன்றவரை முயன்று உறுப்பினரைச் சேர்த்தனுப்புவேன்.

'ஊணும் உறக்கமும்' என்னும் தலைப்பமைந்த கட்டுரை ஒன்று வரும். 'செல்வி' இடந்தருமேல், கொள்ளுங்கள்.

இங்ஙனம்,

தங்களன்புள்ள,

(ஒ - ம்) மு. வரதராஜன்

திரு. வ. சுப்பையாபிள்ளை, சென்னை.

சென்னை
23—9—39

அன்புமிக்க ஐய !

வணக்கம். நலம்.

தங்கள் கடிதம் கிடைத்தது. ஓய்வின்மையால் மறுமொழி வரையத் தாழ்த்தது. சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் 25—9—39 முதல் தொழிலேற்றுள்ளேன். குழந்தைப் பாட்டுக்களைக் குறித்து முயலுதற்கு நேரமின்மையால், இன்னும் ஒரு வாரம் பொறுக்குமாறு வேண்டுகின்றேன். தங்களை நேரிற் காண முயல்வேன்.

இங்ஙனம்,
தங்களன்புள்ள,
(ஒ - ம்) மு. வரதராஜன்

திரு. வ. சுப்பையாபிள்ளை, சென்னை.

*மு. வரதராஜன், வித்வான் பி. ஓ. எல்.,*
*தமிழ்ப் பண்டிதர்*
*திருப்பத்தூர், (வட ஆற்காடு.)*

*30—8—39*

அன்புமிக்க ஐய !

வணக்கம். தங்கள் கடிதமும், சில பாட்டுக்களும் வந்து சேர்ந்தன. நேற்று, அப் பாட்டுக்களையும், யான் பாடிய எட்டுப் பாட்டுக்களையும், செல்விக்குரிய கட்டுரையையும் சேர்த்து அனுப்பினேன். இன்று குழந்தைப் பாட்டுக்கள் பதினெட்டு அடங்கிய கையெழுத்துப் படியும், எனது உருவப்படமொன்றும், அனுப்பியுள்ளேன். வந்து சேர்ந்தமை குறித்து அறிவிக்குமாறு வேண்டுகிறேன்.

இப்போது உடல் நலமாக உள்ளது. ஓய்வு கிடைத்த போதெல்லாம் ஏதேனும் எழுத முயல்வேன். கட்டுரைகள் எழுதி வருகிறேன். முடிந்தபின் அனுப்ப எண்ணியுள்ளேன். தங்கள் கருத்தையும் தெரிவியுங்கள்.

இப்போது பாடி அனுப்பியுள்ள 26 குழந்தைப் பாட்டுக்களைக் குறித்தும் தங்கள் கருத்தை அறிவியுங்கள். தாங்கள்

அனுப்பிய கையெழுத்துப் படியில் சில இடங்களில் திருத்தங்களைக் குறித்துள்ளேன். தாங்கள் அனுப்பிய சில பாட்டுக்களின் முறையை மாற்றி அமைத்து வேறு பாட்டுக்கள் எழுதியும், மேற் குறித்த 26 இல் சேர்த்துள்ளேன். ஓவியப் புலவரின் உதவி கொண்டு கருத்துக்கள் நன்கு விளங்குமாறு படம் வரைந்தால், நல்ல நூலாகலாம். சில பழமொழிகளையே கதையாக அமைத்துப் பாடியுள்ளேன். காலத்திற்கேற்ற சில புதுக் கருத்துக்களையும் காணலாம்.

செல்விக்குரிய "ஊணும் உறக்கமும்" என்ற கட்டுரை முடிந்தது. இனி (H. G. Wells-Short Stories) சிறு கதைகள் எழுத எண்ணியுள்ளேன்.

உருவப் படத்தைக் குறித்து எனது வேண்டுகோள் ஒன்று. அச்சிட்டுச் செல்வியில் சேர்க்கும் படமன்றித் தனியாக 15 படங்கள் எனக்கு அனுப்புமாறு வேண்டுகின்றேன். இதனால் இடையூறு ஒன்றும் இராதென எண்ணுகின்றேன்.

எல்லாம் வந்து சேர்ந்தமை அறிவிக்க வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,
(ஒ - ம்) மு.வரதராஜன்

குறிப்பு:

அச்சிட்ட உருவப் படத்தில் 1935-ம் ஆண்டில் வித்வான் தேர்வில் முதன்மையாகத் தேறி ஆயிரம் ரூபாய்ப் பரிசு பெற்றமையுங் குறிப்பீர்கள் என்று எண்ணுகிறேன்.

திரு. வ. சுப்பையா பிள்ளை, சென்னை.

வேலம்,
ராணிப்பேட்டை,
*28—12—48*

அன்புடையீர்,

வணக்கம். நலம். தங்கள் கடிதமும் பதிவஞ்சலில் அனுப்பிய அழகிய நாட்குறிப்பும் வரப்பெற்றேன். நன்றி பல.

வேலூர் மாசிலாமணி முதலியாரின் படத்தின் 'பிளாக்கு' அப்பரச்சகத்தில் சேர்த்து வந்தேன்.

திருக்குறள் தெளிபொருள் எழுதி வருகின்றேன். பொருந்தா இடங்களில் பரிமேலழகரை விட்டு மற்ற உரைகளை நோக்குகின்றேன். வேறு வேலைகளை ஒதுக்கி வைத்தே இதனைச் செய்து வருகின்றேன். பொங்கல் விடுமுறையின்போது முற்றுப் பெறும் என நம்புகின்றேன்.

எல்லாக் கட்சியினரையும் மகிழ்விக்கும் வகையில் எழுதல் அருமை; இயலாது என்றும் கூறலாம். ஆயின், தமிழ் மரபு என்ற ஒரு குறிக்கோளுக்கு மாறாதிருப்பின் அமையுமன்றோ?

அனைவரும் நலம்.

தங்கள் அன்புள்ள,
(ஒ - ம்) மு. வரதராசன்

திரு. வ. சுப்பையாபிள்ளை, சென்னை.

சென்னை—30
27—9—67

அன்புடையீர்,

வணக்கம். நலம்.

பார்த்துத் திருத்தி முடித்தேன். யாரையேனும் அனுப்பினால் கொடுத்தனுப்புவேன்.

நூலை விரைவில் அச்சிடுதல் நல்லது. பலர் கேட்கிறார்கள். திருக்குறள் தெளிவுரை திருத்தி வருகிறேன். இனி பிளாக் எடுத்து அச்சிடுதல் நல்லது.

அன்புள்ள
மு. வரதராசன்.

திரு. வ. சுப்பையாபிள்ளை, சென்னை.

தலைமை நிலையம் :

1/140, பிரகாசம் சாலை, சென்னை-1.

கிளை நிலையங்கள் :

திருநெல்வேலி-6.

மதுரை-1. கோயமுத்தூர்-1.

கும்பகோணம்-1. திருச்சிராப்பள்ளி-2.

அப்பர் அச்சகம், சென்னை-1.